
உ
சிவமயம்

மெய்கண்ட சாத்திரம்
என வழங்கும்

சித்தாந்த சாத்திரம்



ஜீ.ச.முரளி



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட சாத்திரம்

என வழங்கும்

சித்தாந்த சாத்திரம்

பதிப்பாசிரியர்
சதுரா ஜீ.ச.முரளி

சதுரா பதிப்பகம்
66, செங்குந்தர் வீதி,
சோமங்கலம்,
சென்னை - 602109.
☎: 9894190999

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முதற்பதிப்பு : கலியுகம் - விகாரி வருஷம், ஆவணி மாதம்
30 - 5 - 5120 திங்கள். (16 - 9 - 2019)

விலை : 70-00

Laser Typeset, Designed & Printed by :

Sadura J.C. Murali
Somangalam - 602 109.
Cell : 9894190999

சிவமயம்
திருச்சிற்றம்பலம்



"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே"
- திருமூலர்.

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை



"சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்தி சித்தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே".

சைவ சமயத்தின் அரும்பெரும் கண்களாக விளங்குவன தோத்திரங்கள் பன்னிரண்டும், சாத்திரங்கள் பதினான்கு ஆகும். சாத்திரங்கள் பதினான்கையும் "மெய்கண்ட சாத்திரங்கள்" என்னும் பொதுப் பெயரால் குறித்தல் மரபு. இந்நூல்கள் உண்மை காணும் நோக்கில் தோன்றியன ஆதலின், விருப்பு, வெறுப்பு அற்ற ஆய்வு அமைப்பு இவற்றிடையே காணக்கிடக்கிறது.

சைவ சமயம்

ஆருயிரம் வருஷ முன்பு தோன்றிய திருமூலர் திருமந்திரத்தில் சைவம் என்ற சொல்வழக்கு முதன்முதல் காணப்படுகிறது. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார். அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்" எனவரும் அருள்வாக்கு இதனைப் புலப்படுத்தும். இச்சொல் வழக்கைப் பின்வந்த மணிமேகலையும், திருவாசகமும் எடுத்தாளுகின்றன. "இறைவன் ஈசன் என நின்ற சைவ வாதி" என்னும் மணிமேகலை. "ஐயாறதனிற் சைவனாகியும்", "சைவா போற்றி தலைவா போற்றி" என்னும் திருவாசகம். சிவபரம் பொருளையே முதன்மையாகக் கொண்டு

இயங்குவது சைவ சமயமாகும். உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் ஒப்ப நோக்கி அவற்றினிடத்து அன்பு செலுத்துவது சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

தொன்மையும் சிறப்பும்

உலகில் காணும் நாகரிக அமைப்பில் சிந்துவெளி நாகரிகமே தலைமையும் தொன்மையும் வாய்ந்தது என்பர். இங்குக்கண்ட அகழ்வாராய்ச்சிகளின் மூலம் இதன்தொன்மை தெரிய வருகின்றது. கல்லினுல் செய்த சிவலிங்கங்கள், நந்தி உருவங்கள், கோவில் அமைப்புகள், பூஜைக்குரிய பொருள்கள் இவ்வகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. இவற்றில் காணும் எழுத்துக்களும் அமைப்புக்களும் இன்றைக்கு ஆருயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை என அறிஞர் கண்டுள்ளனர். இச்சிவ வழிபாடு உலகெங்கும் பரந்தும் விரிந்தும் அமைந்திருந்தமையை மேனுட்டறிஞர்களும் ஒருபடித்தாக ஒப்புக் கொள்கின்றனர். வேதங்களிலும் இதிகாசங்களிலும் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியும் உள்ளன. இவ்வாற்ருன் இதன் தொன்மை நன்கு விளங்கும்.

தமிழ் நூல்களில் சைவம்

இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மையே சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இவற்றிற்குரிய குறிப்புக்கள் பலவும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகியவற்றில் ஆங்காங்குக் கூறப்பெற்றுள்ளன. "நுதல் விழி நாட்டத்து இறையோன்", "நீலமணிமிடற்று ஒருவன்", "காரி உண்டிக்கடவுள்" என்பன சிவபெருமானைக் குறிக்கும் தொடர்களாகும். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பது அக்காலத் தமிழ் மக்கள் கொண்ட வினை பற்றிய கொள்கையாகும். "இம்மை மாறி மறுமையாயினும்", "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்" என்பன போன்ற குறிப்புக்கள் உயிர், வினை வயத்தால் மாறி உடம்பெடுக்கும் இயல்பின என்பதை விளக்கும். "பால்வரை தெய்வம்", "வகுத்தான்" என்ற தொடர்கள், வினை, உயிர்களைத் தாமே அடைவதில்லை, அவற்றை உயிர்கள் மாட்டுச் செலுத்த ஒருவன் உளன் என்னும் கொள்கையைக் குறிப்பனவாகும். எனினும் இக்கொள்கைகளை இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) என மூவகைப்படுத்தி முதற்கண் குறித்த பெருமை திருமூலர்க்கே உண்டு. "பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப்போல் பசு, பாசம் அனுதி" என்பது திருமந்திரம்.

திருச்சிற்றம்பலம்

சமய நூல்கள்

மேற்கூறியவாறு பரந்தும், விரிந்தும், இருந்த சைவ சமயம் சங்க காலத்தை அடுத்துப் பிற சமயத்தாலும், பிற மதத்தாலும் சற்றுத் தளர நேர்ந்தது. அத்தளர்ச்சியைப் போக்கி சைவ சமயத்தை உயிர்ப்பைக் கொடுத்தவர்கள் 63 நாயன்மார்கள் ஆவர். காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஐயடிகள் காடவர்கோன், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் முதலிய அருளாளர்களின் அரிய தொண்டு பல்லாற்றுனும் பாராட்டிப் போற்றுதற்குரியதாகும். திருமூலர் முதலாகச் சேக்கிழார் ஈருக உள்ள இருபத்தேழு பேரருளாளர்கள் தாம் இறைவன்பால் கண்ட இன்ப நுகர்வைப் பிறரும் பெற இசையொடு கூட்டியும், இயற்றமிழாகத் தனித்தும் பல்வேறு நூல்களை அருளியுள்ளனர். இவைகள் திருமுறைகள் எனப்பெறும். இறைவனை நேராகப் போற்றியும், அவ்வாறு போற்றற்குரிய நெறிகளை விளக்கியும் கூறுதலின் இவற்றைத் தோத்திரம் என்றும் கூறுவர். இவை பன்னிரு திருமுறையில் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ளவையாகும். இவற்றின் பின்வந்தனவே சாத்திர நூல்களாகும். இவை பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையான திருமந்திரம் சாத்திரமாகும். இவற்றின்பின் எழுந்தவை புராணங்களாகும். இவை திருவருள் நெறியில் தோய்ந்து வாழ்ந்தவர்களின் வரலாறுகளைக் கூறுவனுவாகும். இவை பன்னிரு திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறையான சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணமாகும். அடுத்து வந்தவை பிரபந்தங்களாகும். திருக்கயிலாய ஞான உலா உள்ளிட்ட நூல்கள் பிரபந்தங்கள் எனப் பெயர் பெறுமாயினும் பிற்காலத்தில் எழுந்த நூல்களையே பிரபந்தங்கள் என்ற வகையில் அடக்கிக் கூறுதல் மரபாயிற்று. இவ்வகையில் குருஞானசம்பந்தர், குமரகுருபரர், சிவஞான சுவாமிகள், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை முதலியவர்கள் அருளிச் செய்த பிரபந்தங்கள் குறிப்பிடத்தக்கனவாம். இவற்றெடு இறைவன் எழுந்தருளியுள்ள ஸ்தலத்தின் சிறப்பை விளக்கும் முகமாக எழுந்த ஸ்தல புராணங்களும் எண்ணற்குரியனவாகும்.

மெய்கண்ட நூல்கள் அறிமுகம்

இந்தியாவில் தொன்றுதொட்டு நிலவி வரும் சமயங்களுக்கு எல்லாம் மூல நூல்களாகக் கொள்ளப்படுபவை வேதம், சிவாகமங்கள் ஆகும். வேதம், சிவாகமம், தேவார திருவாசகம். சிவஞானபோதம்

எனும் இம்முதல் நூல்கட்கு ஒன்றோடொன்று உள்ள சம்பந்தத்தைப் பின்வரும் வெண்பா இனிது குறிக்கின்றது,

"வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓது தமிழ் அதனின் உள்ளுறுநெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெ மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம்"

என்பது வெண்பா.

இதன்கண் நால்வர் ஓதுதமிழ் என்பது தேவார திருவாசகமே யாயினும், பன்னிரண்டு திருமுறைகளையுமே குறிப்பால் உணர்த்தும் எனக்கொள்ளுதல் பொருந்தும். சிவஞானபோதம் என்பது ஏனைய பதின்மூன்று நூல்களையும் தன்கண் அடங்கக்கொள்வது. அதனை இயற்றியவர் மெய்கண்டதேவ நாயனுர். அவர் திருவவதாரம் செய்த ஊர் திருப்பெண்ணுகடம். அவர் எழுந்தருளி இருந்து சிவநெறியைப் பரப்பிய இடம் திருவெண்ணெய்நல்லூர்.

சிவநெறி என்பது எல்லா நெறிகட்கும் முற்பட்ட பெருநெறி யாகும். எல்லா உயிர்களும் முடிவில் தஞ்சம் என அடைதற்குரிய நெறி முற்பட்ட நெறியாகிய இச்சிவநெறியே ஆகும் எனத் திருநாவுக்கரசர் பின்வரும் பாடல் தொடர்களால் தெரிவிக்கின்ருர்.

"முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணுதல் திண்ணமே"

என்பது அவர்தம் வாய்மொழி. அதுவே என்றும் உள்ள மெய்ந்நெறியாகும். நிலவும் மெய்ந்நெறி சிவநெறியது என்பது சேக்கிழார் சுவாமிகள் திருப்பாசுரத்தின் பேருரையில் முற்படக்கிளந்து உரைப்பது. இத்தகைய சிவமெய்த் நெறிக்கு இக்காலத்துத் தலையாய பிரமாண நூல்களாக உள்ளவை பன்னிரண்டு திருமுறைகளும், பதினுன்கு சாத்திரங்களுமேயாகும்.

சேக்கிழார் சுவாமிகள் தமிழை ஞாலமளந்த மேன்மை தெய்வத்தமிழ் எனச் சிறப்பிக்கும் போது அவர்தம் திருவுள்ளத்தில் நிலவிய உயர்ந்த தமிழ்நூல்கள் தேவர் குறளும் மூவர்தமிழ் முதலாகிய திருமுறைகளுமே ஆகும். இத்திருமுறைகள் வேதாந்தம் என உலகம் போற்றும் உபநிடதப் பொருள்களைச் சிவாகமாந்தம் எனப்படும். ஞான பாதங்களின் பொருண்மையோடு மாறுபடாதவண்ணம் கொண்டு நிற்பவை. இவ்வுண்மையை எடுத்துக்காட்டி மெய்ப்பிக்கும் நூல்களே திருஉந்தியார் முதலாகச்

சங்கற்ப நிராகரணம் ஈருகவுள்ள பதினுன்கு நூல்கள் ஆகும். இவை வேதாந்தத்தின் முடிந்தபொருளை அளவுபடுத்தி அறுதியிட்டுக் கூறுதல் பற்றிச் சித்தாந்த சாத்திரங்கள் என உயர்ந்தோரால் போற்றப்பெற்று வருகின்றன.

"எழுத்தறியார் கல்விப்பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணினிலையாம்"

என்பது ஒரு தமிழ் நல்லாசிரியரது தெளிவுரையாகும். இலக்கண அறிவு இல்லாதவர் எத்துணை இலக்கிய அறிவு படைத்தவராயினும், அவர் இலக்கண அறிவுடையவரைக் காணும்போது தம்முடைய கல்வியின் உண்மையை இழந்தே நிற்பர் என்பது இவ்வடிகளின் பொருள். அதுபோல, எத்துணைச் சமய தோத்திரங்களை ஒருவன் உணர்ந்திருந்த போதிலும் அவற்றில் அடங்கியுள்ள உண்மை அனுபவங்களின் கூறுகளைத் தெளிய மனங்கொள்ளுதல் சித்தாந்த சாத்திர அறிவு படைத்தார்க்கே உளதாவது எனத் துணிந்து கூறலாம். திருமுறைகளையும் உபநிடதங்களையும் சமய இலக்கியம் எனக் கொண்டால், சித்தாந்த சாத்திரங்களே அவற்றின் இலக்கண நூல்களாகும். இத்தகைய நூல்களின் அமைப்பையும் பொருட் கூறுபாடுகளையும் ஓரளவு உணர்ந்து கொள்ளுதல் பயன்தருவதொன்றும்.

சைவ சமயக் கோட்பாடுகளை அளவைகளாலும் பொருந்து மாற்ருனும் விளக்க வந்தனவே மெய்கண்ட நூல்களாகும். இத்தகைய நூல்கள் 43 ஆம் நூற்ருண்டு முதல் தோன்றி விரிவடைந்தன. இவ்வகையில் எழுந்த நூல்களில் பதினுன்கு நூல்கள் சிறப்பாகக் குறித்துப் போற்றப்பெறுவன அவை - 1. திருஉந்தியார், 2. திருக்களிற்றுப்படியார், 3. சிவஞானபோதம், 4. சிவஞானசித்தியார், 5. இருபாஇருபஃது, 6. உண்மை விளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினுவெண்பா, 10. போற்றிப்பஃறொடை, 11. உண்மைநெறி விளக்கம், 12. கொடிக்கவி, 13. நெஞ்சு விடு தூது, 14. சங்கற்ப நிராகரணம் என்பன. இவற்றிற்கு முன்னும், பின்னும் இவ்வகையில் நூல்கள் எழுந்திருப்பினும் உபதேச பரம்பரையால் வந்த சிறப்பு இவற்றிற்கு உண்மையின் இவற்றையே சிறப்பாகப் போற்றினர்.

அருளிய அருளாளர்கள்

இம் மெய்கண்ட நூல்கள் வேதம், ஆகமப் பொருள்களையும், பன்னிரு திருமுறை, திருக்குறள் ஆகிய நூல்களையும் உட்கொண்டு

எழுந்தவையாகும். மெய்கண்ட நூல்களை அருளிய அருளாளர்கள் இறைவனையே குருவாகக் கொண்டு வளர்ந்த உபதேச பரம்பரையில் இவ்வுண்மையால்தான் சைவம் இறைவனையே முதல் குரு மூர்த்தியாகக் கொண்டு வளர்ந்தது எனக் கூறக் காரணமாயிற்று. இறைவன் திருநந்திதேவர்க்கும், அவர் சனற்குமாரருக்கும், அவர் சத்திய ஞான தரிசினிக்கும், அவர் பரஞ்சோதியாருக்குமாக உபதேசித்தனர். இறைவனைக் குருமூர்த்தியாகக் கொண்ட இவ்வுபதேச பரம்பரையில் வந்த நால்வரும் திருக்கயிலையில் வீற்றிருந்தவர்கள் ஆகையால் இவர்களை அகச்சந்தான ஆசாரியர்கள் என்பர். இவர்களில் நான்காமவரான பரஞ்சோதியார் மண்ணுலகில் வாழ்ந்த மெய்கண்டார்க்கும், அவர் அருள்நந்தி சிவாசாரியர்க்கும், அவர் மறைஞானசம்பந்தருக்கும், அவர் உமாபதி சிவாசாரியருக்கும் உபதேசித்தனர். மெய்கண்டார் முதலாக வந்த இந்நால்வரும் இம்மண்ணுலகில் குருவருள் வழிநின்று அருள் உபதேசம் செய்தவர்களாதலின் இவர்களைப் புறச்சந்தான ஆசாரியர் என்பர். இவர்களுள் மறைஞான சம்பந்தர் என்பார் நூலாக ஒன்றும் அருளவில்லை என்பர். எனவே புறச்சந்தான ஆசாரியர்களில் மூவரே நூல் செய்தவராகின்றனர். இவர்கள் அருளிய நூல்கள் பத்தே ஆகும். இவர்களுக்குக் காலத்தால் முற்பட்ட திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரும், திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனாரும் மெய்கண்டாரின் மாணவரான மனவாசகங் கடந்தாரும், சீர்காழி தத்துவநாதரும் ஒவ்வொரு நூல்களைச் செய்ய மெய்கண்ட நூல்கள் பதினான்கு ஆயின.

மெய்கண்ட நூல்களின் பொருளமைப்பு

மெய்கண்ட நூல்கள் பதினான்கையும் நான்கு வகையில் எண்ணலாம். 1. ஒன்றற்கொன்று விளக்கம் தந்து ஒத்தவகையில் அமைந்தவை. 2. வினாவகையிலும் வினாவிடை வகையிலும் அமைந்தவை. .3. மறுப்புவகையில் அமைந்தவை. 4. ஒவ்வொரு நோக்கில் அமைந்தவை.

உயிர்கள் அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயன்களுள் மேலானது - முடிவானது வீடுபேறே. இத்தகைய சிறந்த பேருகிய வீடு, ஞானத்தாலே பெறப்படுவதாகும். "ஞானத்தால் வீடென்றே நான் மறைகள் புராணம் - நல்ல ஆகமம் சொல்ல அல்லவாம் என்னும் - ஊனத்தார் என்கடவர்" என்பது சிவஞானசித்தியார். இந்த ஞானத்தைப் போதிப்பன வேதத்தின் ஞான காண்டம் எனப்படுகின்ற வேதாந்தங்கள் ஆயினும், வேதாந்தத்தால்

தெளிவு உண்டாகாது. சிந்தாந்தத்தாலேயே அஃது உண்டாகும் என்பதை உமாபதி சிவாசாரியார் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் என்பதனுற் கூறினுர்.

சைவ சித்தாந்தம், புறச் சமயத்தவர்க்கு இருளாய், அகச் சமயத்தவர்க்கு ஒளியாய் விளங்கும். அளவை நெறிக்கு அளவையாகத் திகழும். இறைவனையும் உயிர்களையும் பொன்னும் மணியும்போல அபேதம், இருள் ஒளிபோல் பேதம், சொற்பொருள்போல பேதா பேதம் என்று கூறும் பிறசமயங்கள் போலில்லாமல் இறைவன் உயிர்களுடன் உடலும் உயிரும்போல் ஒன்ருகவும் கண்ணும் கதிரவனும் போல் வேருகவும், கண்ணெளியும் உயிரறிவும்போல் உடனுகவும் இயைந்து நிற்றலை இனிது உணர்த்தும். வேதாந்த நூல்களின் பிழிவாகவும் தெளிவாகவும் திகழும் என்று சிவப்பிரகாசம் என்ற நூலில் ஆசிரியர் உமாபதிசிவம் உரைத்தருள்கிருர்.

சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கை நம்பிக்கை அடிப்படையிலன்றி அறிவியல் ஆய்வுநெறிகளுக்கு ஏற்ப அமைந்தது. ஆராய்ச்சியாளர்கள் பலரும் ஏற்றுப் போற்றும் சிறப்பினது. நடைமுறைக்குப் பெரிதும் ஏற்றதாய்த் திகழ்வது. உலகியலைத்தழுவி விளங்குவது. எல்லோருக்கும் ஏற்றதாகும். இந்நூல்கள் விரிந்துள்ளதோடு, இவைபற்றிய பழைய உரைகளும் மிகப் பரந்துள்ளன. இவற்றில் வடசொல் மொழியாயும் தமிழ்மொழியாயும் அமைந்த கலைச் சொற்களும் பல. இவற்றின் சாரமாய் அமைந்த கருத்துக்களைத் திரட்டி எழுதியுள்ள மெய்கண்ட நூல்களிலும், உரைகளிலும் உள்ள பொருள்களும், பொருள் நுணுக்கங்களும் ஒருவாறு தரப்பட்டுள்ளமையால் இந்நூலைக் கற்போர் சித்தாந்த உண்மைகளை ஓரளவு விளங்கிக்கொள்வர் எனலாம்.

சதுரா ஜீ. ச. முரளி
. சோமங்கலம்.

பதினான்கு சாத்திரங்களும்
ஆசிரியர்களும் காலமும்

உந்தி[1] களிறு[2] உயர்போதம்[3] சித்தியார்[4]
பிந்திருபா[5] உண்மை[6] பிரகாசம்[7] - வந்த அருள்8
பண்புவினா[9] போற்றி[10] கொடி[11] பாசமிலா நெஞ்சுவிடு[12]
உண்மைநெறி[13] சங்கற்ப[14] முற்று.

வ எண்	அருளாளர்கள்	அருளிய நூல்கள்	காலம் கி.பி
1.	திருவியலூர் உய்யவந்த தேவர்	திருவுந்தியார்	4249
2.	திருக்கடவூர் உய்யவந்த தேவர்	திருக்களிற்றுப்படியார்	4279
3.	மெய்கண்டதேவர்	சிவஞானபோதம்	4324
4.	அருணந்தி சிவாசாரியர்	1. சிவஞானசித்தியார் 2. இருபா இருஃது	4354 4355
5.	மனவாசங்கடந்ததேவர்	உண்மை விளக்கம்	4356
6.	உமாபதி சிவாசாரியர்	1. சிவப்பிரகாசம் 2. திருவருட்பயன் 3. வினா வெண்பா 4. போற்றிப் பஃறொடை 5. கொடிக்கவி 6. நெஞ்சுவிடு தூது 7. சங்கற்ப நிராகரணம்	4407 4408 4409 4410 4411 4412 4414
7 .	ஸ்ரீகாழி தத்துவநாதர்	உண்மைநெறி விளக்கம்	4451

(கி.பி. *என்பது* கிருஷ்ணர் பின்பு)

சந்தானகுரவர் தோத்திரங்கள்

அகச்சந்தான குரவர்

அருட்குழக னெழிற்கயிலை முழுக்காவல் நந்திபிரான் அடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சனற்குமர முனிவன்இரு திருத்தாள் போற்றி
இருட்டுமலத் தகல்சத்ய ஞானதரிசனி சரண இணைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி யருஞ்சீல குருபரன்கால் மலர்கள் போற்றி.

புறச்சந்தான குரவர்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த அருணந்தி நற்றுள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான சம்பந்தர் நிழற்றுள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார் செம்பதுமத் திருத்தாள் போற்றி.

ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர்

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர் இதயகமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணைமேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர்

முப்பொருளின் ஈரியல்பும் ஓரியல்பா நுவலாது முறைவெவ் வேருய்ச்
செப்புசிவா கமங்களின்றன் பொருளொருமை பெறவுணர்த்து திறமுன் னூலை
ஒப்பவிரி யாப்பதனுற் சித்தியெனும் வழிநூலாய் ஒளிர்பிற் காலத்(து)
இப்புவியோர் தெளிந்துய்ய மொழிந்த அருணந்திசிவன் இணைத்தாள்போற்றி.


ஸ்ரீ மறைஞானசம்பந்த சிவம்

திருவளருஞ் சாமமறை திகழ்பரா சரன்மரபோன்
விரசுநர்பான் மறையுணர்வு விரிந்தொளிரப் புணர்த்துவோன்
மருமமொடு கடந்தையையாள் மறைஞான சம்பந்த
குருவணிதன் மருமலர்த்தாள் குறித்துருகிப் பரசிடுவாம்

ஸ்ரீ உமாபதி சிவம்

அடியார்க் கெளியன் எனத்தில்லை யண்ணல் அருளுந் திருமுகத்தின்
படியே பெற்ருன் சாம்பாற்குப் பரம முத்தி அப்பொழுதே
உடலுங் கரைவுற் றறைந்திடுவான் உயர்தீக் கையினை அருள்நோக்காற்
கடிதிற் புரிகொற் றங்குடியார் கமல மலரின் கழல்போற்றி.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



திருவியலூர் - உய்யவந்ததேவ நாயனர்

அருளிச்செய்த

1. திருஉந்தியார்

திருவியலூர் உய்யவந்ததேவர் வரலாறு

திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இந்நூல்கள் அருளிச் செய்தோர் முறையே திருவியலூர் உய்யவந்ததேவ நாயனரும், திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனரும் ஆவர். இவ்விரு நூலாசிரியர்களின் பெயர்களும் ஒன்ருய் அமைந்திருத்தலின் ஊர்ப் பெயர்களோடு சார்த்திக் கூறப்படுகின்றன. திருவுந்தியார் அருளிய உய்யவந்ததேவர் காலம் கி.பி. 43 ஆம் நூற்ருண்டு ஆகும். இவர் வரலாறு பழமையான நூற்பதிப்புக்களில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவன் ஆன்மாக்களுக்குச் சிவானுபவம் விளேதற் பொருட்டு மானுடச் சட்டைதாங்கி உய்யவந்த தேவர் என்ற திருப்பெயர் கொண்டு திருக்கயிலையிலிருந்து தென்னுடு போந்து திருவியலூரில்

எழுந்தருளினுர். அவ்வூரில் வாழ்ந்த ஆளுடைய தேவநாயனுர் என்பவர் அவரைக் கண்டு வணங்கிப் போற்றினுர். உய்யவந்தார் ஆளுடைய தேவரின் பக்குவ நிலையை அறிந்து தீட்சைகள் செய்து ஞான உபதேசமும் வழங்கித் திருவுந்தியார் என்ற இந்நூலை அருளி உண்மைப் பொருள்கள் உணர்த்தி மறைந்தார்.

உய்யவந்த தேவரிடம் உபதேசம் பெற்ற ஆளுடையதேவ நாயனுர் திருவியலூரில் வாழ்ந்துவரும் நாளில் ஒரு நாள் திருக்கடவூருக்கு எழுந்தருளினுர். அவ்வூரில் ஆட்டு வாணியக் குலத்தில் தோன்றிய ஒருவர் தம்மைக் கண்டு அன்போடு வணங்கியதையும் அவரது மலபரி பாகத்தையும் கண்ட ஆளுடையதேவர் அவரை அழைத்துத் தீட்சைகள் செய்து தம்முடைய ஆசாரியர் திருப்பெயரை அவருக்குச் சூட்டித் திருவுந்தியாரின் தெளிவு பொருள்களை அவருக்கு உணர்த்தித் திரும்பினுர். அதுமுதல் ஆளுடையதேவர் திருக்கடவூர் உய்யவந்ததேவர் எனப் பெயர் பெற்ருர்.

இவர் தில்லை சென்றபோது தம்மைக் கண்டு வணங்கிய சீடர் ஒருவருக்கு உபதேசம் செய்து திருவுந்தியாரின் உண்மைப் பொருளும் பிறவும் விளங்கத் திருக்களிற்றுப்படியார் என்னும் நூலை அருளிச் செய்தார். இவர்தம் குலத்தைக் கருதிச் சிலர் இவர் அருளிய நூலை இகழ்ந்தனர். பெருமான் திருவுளம் அறியுமாறு பெரியோர்கள் அந்நூலை ஸ்ரீ நடராசப் பெருமான் எழுந்தருளும் பீடத்தின் அடியிலுள்ள பஞ்சாக்கரப் படியின் கீழே வைத்தனர். அப்படியின் புறமாகச் செய்திருந்த கல்லானை அந்நூலைத் தம் துதிக்கையால் எடுத்து மேற்படியில் வைத்தது. தில்லைவாழ் அந்தணர்களும், மற்றவர்களும் அந்நூலின் உயர்வை அறிந்து போற்றினர். அதனுல் அந்நூலுக்குத் திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் பெற்றது என இவர்தம் வரலாற்றுச் செய்திகளைப் பழைய நூற்பாயிரங்கள் கூறுகின்றன.

நூலாசிரியர் தம் திருப்பெயரை இந்நூலின் இறுதிச் செய்யுளில் புலப்படுத்தி இருத்தல் அறிதற்குரியது.

உ
சிவமயம்

திருஉந்தியார் ஆராய்ச்சி முன்னுரை

சிவபெருமானே தவமுதிர்ச்சியால் பக்குவம் அடைந்த உயிர்களுக்குக் குருவாக எழுந்தருளி அருள் செய்வான். அத்தகைய திருவருளைப் பெற்றபின் உலகியல் வழிப்பட்ட பழக்கங்களினின்றும் விடுத்துத் திருவருள் வழிப்பட்ட பழக்கமே பழக்கமாகக் கொள்ளுகை வேண்டும். திருவருளால் பெற்ற இன்பம் மாற்றம் மனங்கழிய நின்றது. இவ்வாறு அவன் உயிர்களுக்குச் சுரக்கும் குளிர்ந்த அருளை அவனருளால் உயிர்கள் பெறலாமேயன்றி உயிரின் முனைப்பால் பெற முடியாது. இறைவனை அடைதற்கு உரிய நெறிகளில் யோகநெறி என்பது ஒன்று, அது ஆதாரயோகம், நிராதார யோகம் என இரண்டு வகைப்படும். உடலில் உள்ள ஆறு ஆதாரங்களில் ஒன்றில் இறைவனின் திருவுருவை எழுந்தருளுவித்துக்கொண்டு அப்பரம்பொருளை வழிபட்டு வரும் ஞான முதிர்ச்சியால் ஒன்றுபடும் நிலை ஆதாரயோகம் எனப்படும். காலத்தொடு கற்பனை கடந்த பரம்பொருளே எல்லாப் பொருள்களினூடும் தோய்ந்தும் தோய்வற நின்று விளங்குகிறது என நினைந்து அப்பொருளுடன் ஒன்றுபடல் நிராதாரயோகம் எனப்படும். யோகத்தின் பயனாக உடம்பினுள் உயிர்ப்புக் காற்றும் நாத கலையும் கூடிச் சுழுமுனை வழியாக உச்சியில் சென்று அருள் வெளியை அடையும். அவ்விடத்து நிலைபெறுவோர் முத்திநிலை அடைவர். அவ்வருள் வெளியே இறைவனுக்குரிய இடமாகும். இத்தகைய முத்திநிலையை அடைதற்கு உரிய தகுதியும் உரிமையும் உடையது உயிர். இதனிடத்து ஆணவமாகிய கொடி படர்ந்தமையால் உடம்பாகிய பழம் பழுத்துவிட்டது. அப்பழம், பிறவிக்குப் பகையாகும். ஆதலின் அதன் வழி நுகர்வதை விடுத்துத் திருவருள் இன்பத்தை நுகரவும். அதற்குக் காரணமானவற்றைச் செய்யவும் தலைப்படல் வேண்டும். இக்கருத்துக்கள் திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் என இவ்விரு நூல்களினும் பொதுவாக விளக்கப்பட்டுள்ளன.

திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் இவ்விரு நூல்களும் மெய்கண்டார் காலத்துக்கு முன் தோன்றியவை. இவ்விரு நூற்பெயர்களின் முன்னும் பின்னும் திரு, ஆர் என்னும் சிறப்பு அடைமொழிகள் உள்ளன. உபதேச பரம்பரையில் வந்த இவ்விரு நூல்களும் ஒன்று ஒன்றற்கு விளக்கமாக அமைந்து நிற்கின்றது. 45 பாடல்களை உடைய திருவுந்தியாரின் கருத்தைத் திருக்களிற்றுப்படியார் 100 வெண்பாக்களால் விளக்கி நிற்கின்றது.

திருச்சிற்றம்பலம்

உந்தீ பறத்தல் என்பது மகளிர் விளையாட்டு வகைகளில் ஒன்ருகும். பண்டைக் காலத்தில் சமயப் பற்றுவுடைய மகளிர் விளையாடும் பொழுதும் சிவபெருமானுடைய அருளை நினைந்தே விளையாடினர். "வண்டல் பயில்வன வெல்லாம் வளர்மதியம் புனைந்த சடை, அண்டர்பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று" எனவரும் திருத்தொண்டர் புராணத்தாலும், திருவெம்பாவை, திருச்சாழல் முதலியவற்ருலும் இவ்வுண்மை அறியபெறும்.

மகளிர் பலரும் சேர்ந்து காலில் உள்ள பெருவிரல்கள் ஒன்றையொன்று பொருந்தப் பறவைகள் பறப்பதைப் போன்று கைகளை அசைத்து விளையாடும் விளையாட்டே உந்தீ பறத்தல் என்பதாகும். பெண்கள் விளையாடும் விளையாட்டு என்பதற்கேற்ப இந்நூலில் இரண்டாவது பாடல் "உழப்புவது என்பெணே" என உள்ளது அறியத்தக்கது. இவ்வாறு விளையாடுகின்ற பொழுது உடல் அசைவு ஏற்படும். "கொங்கை குலுங்க நின்று உந்தீபற, இளமுலை குலுங்க நின்று உந்திபற" எனவரும் திருவாசகத் திருவுந்தியார்த் தொடர்கள் இவ்வுண்மையை விளக்கும்.

முதல் இரண்டு அடிகளை ஒரு பெண் கூறுவாள். மூன்ரும் அடியைப் பிறிதொரு பெண் கூறுவாள். உந்தீபற என்னும் சொல் ஏனைய சொற்ருெடர்களோடு தொடர்பின்றிப் புறத்து உறுப்பாய் நிற்பதாகும். இவ்வகையில் அமைவதே இப்பாடல் முழுவதுமாகும். அரிய மெய்ப்பொருளை இவ்வினிய மகளிர் விளையாட்டின் மூலம் விளக்க முற்பட்டிருக்கும் ஆசிரியரின் திருவுள்ளம் எண்ணி மகிழ்தற்குரியது ஒன்ருகும். இவ்வாறன்றி உந்தீபற என்பதை உம்+தீ+பற எனப் பிரித்து உமது பழமையாகவே குற்றங்களை விளைவித்துவரும் மும்மலங்களையும் உடல், உலகு, கரணங்கள் ஆகியவற்றையும் உம்மிடம் விட்டு நீங்குமாறு இஞ்ஞான நூலின் கருத்தையே கருத்தாகக் கொண்டு நிற்பாயாக எனத் தத்துவ உரை காண்டலும் பொருந்துவதாகும்.

இந்நூற்கண் அறியப்படும் உண்மைகள் பல. அவற்றுள் ஓரிரு உண்மைகள் இவ்விடம் குறித்தல் தகும். உயிர், உடல் முதலிய கருவி கரணங்களைப் பெருது ஆணவத்தோடு கட்டுண்ட நிலையைத் தனிநிலை(கேவலநிலை) என்பர். உடல் முதலிய கருவிகளைப் பெற்று உலகில் வினைப் பயன்களை நுகரும் நிலையைக் கலப்பு நிலை(சகல நிலை) என்பர். வினை நீக்கம் பெற்று இறைவனின் அருட்பதிவால் உயிர் முத்தியடைந்து இன்புறும் நிலையைத் தூயநிலை(சுத்தநிலை)

என்பர். முதலிரு நிலைகளையும் விடுத்து உயிர் மூன்றும் நிலையைப் பெறுதற்கு உதவுபவரே குருமூர்த்தியாவர். இவர்தம் பெருமையை,

"மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென்று உந்தீபற
தவத்தில் தலைவர் என்று உந்தீபற"

எனவரும் திருப்பாடலால் ஆசிரியர் விளக்குகிறார்.

உயிருடன் ஒன்றி இருக்கும் திருவருளை உணரச் செய்வதே தீக்கையின் பயனாகும். அவ்வாறு உணரப் பெற்றபின் அத்திருவருளோடு ஒன்றி இருத்தலே உயிர் உய்தி பெறுதற்குரிய வழியாகும், இதனைக்

"கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை உடனே நின்று உந்தீபற
உன்னையே கண்டதென்று உந்தீபற"

எனவரும் பாடல் விளக்குகின்றது.

இறைவனுடைய திருவருளைப் பற்றிப் பாசத்தால் விளையும் உடல் முதலியவற்றைக் கைவிட்டவரே ஞானியராவர். இவரை "வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்" என இந்நூல் குறிக்கும். இறைவனைக் "கள்ளர்" என்றும், விண், மண், நீர், தீ, வளி, மதி, கதிரவன், உயிர் ஆகிய "எண்வகைப் பொருள்களையும் தனக்கு வடிவாக உடையவன்" என்றும் இந்நூல் கூறியிருப்பது இறைவன் உயிர்க்குயிராகவும் உலகெலாமாகவும் நிற்கும் திறத்தைக் குறிக்கும்.

மேலும், சில அரிய தொடர்கள்.

"இரவு பகலில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின்று உந்தீபற"

"கள்ளரோடு இல்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென்று உந்தீபற"

"வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களென்று உந்தீபற"

"வீட்டில் இருக்கில் என் நாட்டிலே போகில்என்
கூட்டில்வாள் சாத்திநின்று உந்தீபற"

"பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந்து உந்தீபற".

திருஉந்தியார் 45 கலித்தாழிசைகளால் ஆக்கப்பட்டுள்ளது.

1 முதல் 6 தாழிசைகள் : உயிர்கள் அறிவரிய சிவம் ஞானாசாரியனாய் வந்து உபதேசத்தால் சிவமாம் தன்மைப் பெருவாழ்வைத் தமக்கு அளித்த இயல்பைக் கூறுகின்றது. ஞானநூல்கள் தமக்கு அளித்த இயல்பைக் கூறுகின்றது. ஞானநூல்கள் அருட்குரவனை இன்றித் தெளிந்த மெய்ப் பொருளை உணர்த்த மாட்டா. குருவருள் வாய்க்கப்பட்டோர் உடம்பின் வயப்படுதலின்றி அருள்வழி நிற்க வல்லவராவர். யான் எனது என்னும் செருக்கற்ற முத்தரது செயல் சிவன் செயலேயாய் நிகழும், சிவபிரான் அவர்க்குத் தன்னையே பேறாக அளிக்கின்றான்.

சிவானந்த இன்ப நுகர்ச்சியை இவ்வாறு இருந்தது என்று சொல்லிக்காட்ட இயலாது. இக்கருத்துக்களே பின்வரு தாழிசைகளால் வகுத்து உணர்த்தப் பெறுகின்றன.

7 முதல் 18 வரை உள்ள தாழிசைகள் : ஆதாரயோகம், நிராதார யோகம், மீதானம் செல்லுதல் முதலிய சாதனங்களை வகுத்துக் கூறுகின்றன. இவற்றால், "உள்ளம் உருகில் உடனாவர்" என்பதும் 'ஞானத்தின் பயன் அன்பு' அன்பின் பயன் இறவாத இன்பம் என்பதும் திருவைந்தெழுத்தே ஞானநெறியைத் தெள்ளிதில் காட்டும் பெரு மொழி என்பதும் கூறப்படுகின்றன.

19 முதல் 22 வரை உள்ள தாழிசைகள் : இன்புறு நிலையை விளக்கி அதனைப் பெறுதற்குரிய உபாயமாகத் தத்துவ உணர்வையும், வாசியோகத்தையும் பின்பற்றலாம் என உரைக்கின்றன.

23 முதல் 28 வரை உள்ள தாழிசைகள் : பாசவீடு, சிவப்பேறு என்பனவற்றை விளக்குகின்றன.

29 முதல் 30வரை உள்ள தாழிசைகள் : பரமுத்தியின் இயல்பு, தன்னிழப்பு. உணர்விறந்து நின்று உணரும் இயல்பிற்று என்பதனையும் அது தன்னிழப்பில் வருவது என்பதையும் தெரிவிக்கின்றன.

31வது தாழிசைகள் : சிவநெறியின் சிறப்பை உணர்த்துகிறது.

திருச்சிற்றம்பலம்

32 முதல் 38 வரை உள்ள தாழிசைகள் : அணைந்தோர் தன்மை உணர்த்துகிறது.

39வது தாழிசை : பரம சித்தாந்தம் உணர்த்துகிறது.

"அதுஇது என்னு வனைத்தறி வாகும்
அதுஇது என்றறிந் துந்தீபற
அவிழ்ந்த சடையாரென் றுந்தீபற".

என்பது அப்பாட்டு.

முதல்வன் அவிழ்ந்த சடையனாய் ஆலின் கீழிருந்து அருந்தவர்க்கு உணர்த்திய அறிவாவது ஆராய்ச்சி நிலையில் பரமான்மா சீவான்மா என ஒன்றன் இலக்கணம் மற்றொன்றன் இலக்கணத்திற் சென்று மயங்காதபடி தெளிய உணர்ந்து, அனுபூதி நிலையில் அதுவும் இதுவும் எனப்பகுத்து உணராது ஒன்றிநிற்கும் அவ்வளவினது என்பது இதன்பொருள்.
இத்திருவுந்தியார்,

அதுவிது வென்ற ததுவல்லான் கண்டார்க்
கதுஇது வென்றதுவு மல்லான் - பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றொழு,

என்னும் சிவஞானபோத உதாரண வெண்பாவிற்குக் காலத்தால் முற்பட்டதாதல் கருதத்தக்கது.

40வது தாழிசை : "அவன் இவன் ஆகின்றான்" என்றாற்போல உபநிடதங்களிலும், தமிழ் மறைகளிலும் வரும் மகாவாக்கியங்களின் பொருளைத் தெளிவுபடுத்துவது

"அவனிவன் ஆன தவனருளால் அல்ல(து)
இவனவன் ஆகா னென் றுந்தீபற
என்றும் இவனேஎன் றுந்தீபற".

இவ்விரு தாழிசைகளின் பொருளைத் திருக்களிற்றுப் படியாரில் வரும், பின்வரும் வெண்பாக்களின் பொருளோடு இணைத்து உணர்தல் நன்று. அவ்வெண்பாக்கள் -

அதுவிது வென்ற மவனானே யென்றும்
அதுநீயே யாகின்றா யென்றும் - அதுவானேன்
என்றுந் தமையுணர்ந் தாரெல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்லுவரோ உற்று.

திருச்சிற்றம்பலம்

ஈருகி யங்கே முதலொன்ரு யீங்கிரண்டாய்
மாருத வெண்வகையாய் மற்றிவற்றின் - வேருய்
உடனு யிருக்கும் உருவுடைமை என்றும்
கடனு யிருக்கின்ருன் காண்.

அவனிவனுய் நின்ற தவனருளா லல்ல
தெவனவனுய் நிற்கின்ற தேழாய் - அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்
யீன்றிடுமோ சொல்லாய் இது.

என்பவையாகும்.

இவற்றுள் ஈருகியங்கே என்னும் வெண்பா திருஞானசம்பந்தர் (தேவாரம் திருவீழிமிழலை, நட்டபாடை) திருமொழியைக் குறிக்கொண்டு எழுந்தது என்பது உணரத்தக்கது. இவற்ருல், மெய்கண்டதேவர் அத்துவிதம் என்னும் சொற்குக் கூறும் பொருள் திருஞானசம்பந்தர் முதலாகத் தமிழகத்தே வந்த அனுபூதிமான்கள் தொல்வரவு பற்றிக் கொண்டிருந்த உரையே என்பதும், மதாசாரியர்கள் தம் அறிவுத்திறங் கொண்டு கூறும் உரைகளெல்லாம் பொய்யுரையே என்பதும் எளிதின் விளங்கும் "பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ" என்னும் தாயுமான அடிகளார் சொல் பொருட் செறிவு உடையது என்பதும் இதனுல் விளங்கும்.

41 முதல் 43 வரை உள்ள மூன்று தாழிசைகள் : பிறப்பின் காரணமும், அது நீங்குமாறும் ஆன்மமலமும் தொகுத்துக் கூறுகின்றன.

44வது தாழிசை : ஞானுசாரியனை வாழ்த்துகின்றது.

45வது தாழிசை : நூற்பயன் முடிக்கின்றது. கூறி அதன் பொருள் உய்ய வந்தான் உரைத்த இந்நூல் தன்னைக் கேட்டுணரும் உலகத்தில் உள்ள அனைவருக்கும் பாச நீக்கத்தையும் சிவப்பேற்றினையும் செய்யும் தன்மையுடையது. இதனைக் கேட்டுச் சிந்திப்போர், மெய்ப்பொருளை உணர்ந்தோர் ஆதல் திண்ணம், என்பது இத்தாழிசையில் வரும் மலக்கயம் (மலக்ஷயம்) என்பது மல சத்திகளின் தேய்வு என்னும் பொருளைத்தரும்.

உ
சிவமயம்

திருவியலூர் - உய்யவந்ததேவ நாயனர்
அருளிச்செய்த

1. திருஉந்தியார்

1. உபதேசம்

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தாஞகத் தந்ததென் றுந்தீபற. 1

விளக்கவுரை : *இயல்பாகவே மலமற்றதாய் யாரும் அறிதற்கரியதொரு பரம்பொருளாகிய சிவபெருமான் தவமுதிர்ச்சியால் பக்குவமடைந்த உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டு ஆசிரியனுய்த் திருமேனிகொண்டு எழுந்தருளிவந்து பரஞானத்தைக் கொடுத்து அவைகளைத் தன் தன்மை எய்தும்படி செய்தருளுவன்.*

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
உழப்புவ தென்பெணே யுந்தீபற
ஒருபொரு ளாலேயென் றுந்தீபற 2

விளக்கவுரை : *திருவடிப்பேரறிவு பெற்ற பின்னும் நெடுநாட் பழகிய பழக்கத்தால் ஏற்படும் மல வாசனையை, ஒப்பற்ற திருவருள் வயமாய் நின்று ஒழிக்கப் பழகுதல் வேண்டும்.*

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற. 3

விளக்கவுரை : *ஆசிரியனுய் வந்த கடவுள் நல்கிய ஞானத்தைக் கொண்டு, நிட்டைநிலை கைகூடப் பெற்றவர் மீண்டும் பிறவார் என்றறிக.*

இங்ங னிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ங னிருந்ததென் றுந்தீபற
அறியும் அறிவதன் றுந்தீபற. 4

விளக்கவுரை : *சிவானந்தமானது இவ்வாறிருந்ததென்று சொல்ல முடியாது, ஏனெனில், அது சுட்டறிவினுல் அறியத்தக்க தன்று.*

ஏகனு மாகி அநேகனு மானவன்
நாதனு மாஞனென் றுந்தீபற
நம்மையே ஆண்டானென் றுந்தீபற. 5

விளக்கவுரை : *ஒரே பரம்பொருளாகிய பெருமான் பல்லுயிருக்கும் உயிராய் நின்றும் ஐந்தொழில் நடாத்தியும் தலைவனாய் நிற்கின்றனன். அவனே நமது ஆண்டவன்.*

நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற. 6

விளக்கவுரை : *நம் செயலென்பதும் நாமென்பதும் அற்றபின் எல்லாச் செயலும் இறைவன் செயலென்பது விளங்கும். அவன் தன்னையே நமக்குத் தந்தானென்று மகிழ்வோமாக.*

உ. சாதனம்

உள்ள முருகி யுடனாவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற.
சிற்பரச் செல்வரென் றுந்தீபற. 7

விளக்கவுரை : *உள்ளம் உருகினால் அவர் உடனிற்பது விளங்கும், அல்லாத இடத்து அவரைத் தெளிந்தறிதல் இயலாது. அவர் கரணங்கடந்த மேலான ஞானச் செல்வரென்றறிக.*

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற. 8

விளக்கவுரை : *சுட்டிஅறியும் ஆறு ஆதாரங்களில் அவனை வழிபட்டு யோக சமாதியடைந்தபின் சுட்டற்ற மேலிடத்தே செல்க, அதுதான் பாசமற்ற பெருமானுக்கு இடம் என்று அறிக.*

ஆக்கில்அங் கேயுண்டாய் அல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் பரமதன் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற. 9

விளக்கவுரை : *நினைத்தபோது தோன்றியும் நினையாதபோது தோன்றமலும் இறைவன் இருக்கப்பெறும் நிலை மேலான ஞான நிலையன்று. அதுபாவனை நிலை. அந்நிலைக்கு அப்பாற்பட்டவன் கடவுள் என்றறிக.*

அஞ்சே யஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற. 10

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *ஐந்தெழுத்தின் வைத்து இறைவனை வழிபடும் ஞான முறையைப் பின்பற்றித் தனது அறிவைச் சிவஞானத்தோடு இரண்டறத் தொடர்புபடுத்தித் தூய அறிவுடைய முதல்வனைக் காண்க.*

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கிற் குழையுமென் றுந்தீபற
நோக்காமல் நோக்கவென் றுந்தீபற. 11

விளக்கவுரை : *உலக அறிவோடு கலந்தும் கலவாதும் நின்ற கடவுள் ஆராய்ச்சியறிவிற்குப் புலனுகான், சுட்டறிவால் பாராமல் திருவருட் கண்ணுல் அவனைப் பார்த்தல் வேண்டும்.*

3. மீதானம்

மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்தில் தலைவரென் றுந்தீபற. 12

விளக்கவுரை : *மூலையாகிய உடம்பினிலிருந்தவரை அருள் வெளியாகிய முற்றத்தில் விட்டவர் எப்பொருளிலும் பெரிய இறைவரென்றுணர்க. தவத்திற்குத் தக்க பயனளிக்கும் தலைவர் இவரே என்றுணர்க.*

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவம் உந்தீபற
தேடும் இடமதன் றுந்தீபற. 13

விளக்கவுரை : *போக்குவரவின்றி ஒழிவற நிறைந்த ஞானமாகிய ஊரினையடைந்து, ஆராய்ச்சி ஒழிந்து நிற்கும் நிலையில் சிவம் விளங்கும். அந்நிலையில் ஆராய்ச்சி நிகழ இடம் இல்லை.*

கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை யுடனேநின் றுந்தீபற
உன்னையே கண்டதென் றுந்தீபற. 14

விளக்கவுரை : *பாசத்தோடு கூடியிருந்த காலத்தில் மறைந்து கிடந்த அருட்சத்தியை, உன்னை ஆட்கொள்ளும்படி செய்யும் தீக்கையினுலே, ஆசிரியர் விளக்கியவுடன் அச்சத்தியோடு உடனுய் நின்று அருள்வழி ஒழுகுக.*

பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை அறுப்பரென் றுந்தீபற
பாவிக்க வாராரென் றுந்தீபற. 15

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *எல்லாவகை உலகப் பற்றுக்களையும் அறுக்கவல்ல திருவருட்பற்றினைப் பற்றினால், அத்திருவருள் பிற பற்றுக்களை ஒழிக்கும். அங்ஙனம் பற்றொழியாது பாவிப்பதனால் இறைவன் வெளிப்படான்.*

உழவா துணர்கின்ற யோகிகள் ஒன்றோடுந்
தழுவாமல் நிற்பரென் றுந்தீபற
தாழ்மணி நாவேபோ லுந்தீபற. 16

விளக்கவுரை : *உலகப் பற்றிலழுந்தாது மெய்ப்பொருளை உணர்கின்ற யோகிகள், தொங்குகின்ற மணியின் நாவைப்போல ஒன்றினும் பற்றாமல் அசைவற நிற்பர்.*

திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற. 17

விளக்கவுரை : *உள்ளத்துள்ளே இறைவரை நினைந்து அசைவற நிற்கும் யோகிகட்குத் திருச்சிலம்போசையாகிய நாத தத்துவம் தோன்றும். அதன்வழியே சென்று ஐந்தொழிலை நடாத்தும் இறைவனைக் கண்டு வணங்குக. அங்கிருந்தும் பிறழாமல் நேர்பட ஒழுகுக.*

மருளுந் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே யுந்தீபற
அதுவேயிங் குள்ளதென் றுந்தீபற. 18

விளக்கவுரை : *இறைவன் அருளை மறவாது நிற்பின், மயக்கமும், திரிபுணர்ச்சியும் தொலையும். அவ்வருளைப்பற்றி நிற்பதொன்றே ஈண்டுச் செயற்பாலது.*

4. இன்புறுநிலை

கருது வதன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன அரியனென் றுந்தீபற. 19

விளக்கவுரை : *அங்ஙனம் அருள்வழி உறைத்து நிற்பின் ஒப்பற்ற அருட்சத்தியின் கணவராகிய பெருமான் தன்னைக் கருதுமுன் சுட்டறிவு ஒழியும்படி அறிவிற் பதிந்து நிற்பன். அவன் பிறவழியால் நினைத்துப் பெறமுடியாதவன் என்று அறிக.*

இரவு பகலில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற. 20

விளக்கவுரை : *ஆணவத்தோடு கூடிய நிலையாகிய இரவும், மாயையுடன் கூடிய நிலையாகிய பகலும் இல்லாத தூய ஞானத்தோடு கூடிய இன்ப வழியிலே இடைவிடாது, வினைக்கு அஞ்சி விரைந்து சென்று பொருந்துக.*

5. வேறு உபாயங்கள்

அ. தத்துவ ஞானம்

சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்(கு)
அல்லனாய் ஆனனென் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற. 21

விளக்கவுரை : *தன்னியல்பில், இறைவன் நூல்களால் பேசப்படும் பொருள்களும் பேசப்படாத பொருள்களும் அல்லாதவனாயிருந்தும், உயிர்களின் பொருட்டு அவையாய் நிற்கின்றான். அதற்குக் காரணம் அவன் கருணையாகிய சத்தியோடு கூடியிருத்தல் ஆகும்.*

ஆ. வாசி யோகம்

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவ தாற்றலென் றுந்தீபற
அல்லாத தல்லலென் றுந்தீபற. 22

விளக்கவுரை : *வெளிச்செல்லும் மூச்சுக்காற்றினை உள்ளே சென்று அடங்கும்படியாக மாற்றி, புறத்தே செல்லுங் கருத்தினைக் கருத்துக்குக் கருத்தாகிய கடவுள்பால் பதிவிப்பதே ஆற்றல் என்றறிக. பிற செயல்கள் துன்பந்தருவன ஆகும்.*

6. பயன்

அ. பாசவீடு

கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடும் எளிதாமென் றுந்தீபற. 23

விளக்கவுரை : *சிவபெருமானாகிய கள்ளரோடு உடம்பாகிய வீட்டையுடைய உயிர் கலந்துவிட்டால் அதிலுள்ள சரக்காகிய வினைகளெல்லாம் அறவே ஒழியும். வீடும் எளிதாம் என்றறிக.*

திருச்சிற்றம்பலம்

எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்ருர்
விட்டா ருலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற. 24

விளக்கவுரை : *ஐம்பூதமும் மதியும் கதிரவனும் உயிரும் ஆகிய திருமேனிகள் எட்டுங்கொண்டாராகிய இறைவர் திருவடியை இடைவிடாது தொட்டுக்கொண்டே நின்றவர் உலகத்தை விட்டார் ஆவர். விட்ட இடத்தே அவர் திருவடியே வீடா மென்றறிக.*

சித்தமுந் தீய கரணமுஞ் சித்திலே
ஒத்ததே யொத்ததென் றுந்தீபற
ஒவ்வாத தொவ்வாதென் றுந்தீபற. 25

விளக்கவுரை : *தன்னுணர்ச்சியும் கருவிகளினுணர்ச்சியும் திருவருளிலே அடங்கி ஒத்தநிலே ஏற்படுதலே வீடடைதற்கு ஒத்த நிலே என உணர்க. ஒவ்வாத நிலே வீட்டு நெறிக்குப் பொருந்தாத நிலே என்றுணர்க.*

ஆ. சிவப்பேறு

உள்ளும் புறம்பும் நினேப்பறில் உன்னுள்ளே
மொள்ளா அமுதாமென் றுந்தீபற
முளேயாது பந்தமென் றுந்தீபற. 26

விளக்கவுரை : *அகவழிபாடும் புறவழிபாடும் ஒழிந்த அகண்ட வழிபாட்டிலே உலவாத இன்பம் உண்டென்றறிக. அந்நிலேயிலே பந்தம் முளேயாது.*

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்(கு)
அவிழுமிவ் வல்லலென் றுந்தீபற
அன்றி அவிழாதென் றுந்தீபற. 27

விளக்கவுரை : *தன்னுணர்ச்சி நழுவிப் போதற்குரிய ஞானநெறி நின்றவர்க்குத் துன்பம் அகன்றெழியும். அல்லாதவர்க்குத் துன்பம் அகலாது.*

7. ஞானமாவது இறவாத இன்ப அன்பே

வித்தினேத் தேடி முளேயைக்கை விட்டவர்
பித்தேறி ஞர்களென் றுந்தீபற
பெறுவதங் கென்பெணே யுந்தீபற. 28

விளக்கவுரை : *எவற்றிற்கும் வித்தாகிய திருவருளே நாடிப் பெற்றுப் பாசமுளேயைக் கைவிட்டவர்கள் பேரன்பு மிகுந்தவர்களாவார்கள். பேரன்பைப் பெற்றபின் பெறுதற்குரியது யாது?*

திருச்சிற்றம்பலம்

8. பரமுத்தியின் இயல்பு

சொல்லும் இடமன்று சொல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற. 29

விளக்கவுரை : *சிவனைக் கூடுகின்ற இடம் இன்னதென்று குறித்துச் சொல்ல முடியாது. அறிவாசான் உணர்த்த உணரும் ஞானமே அவனுக்கு எல்லை. அவ்வெல்லையைக் கூடினால் யான் எனதென்னும் செருக்கு அறும்.*

9. தன்னிழப்பு

வீட்டில் இருக்கிலென் நாட்டிலே போகிலென்
கூட்டில்வாள் சாத்திநின் றுந்தீபற
கூடப் படாததென் றுந்தீபற. 30

விளக்கவுரை : *இல்லறத்திலிருக்கினும் துறவறத்திற் புகுந்து அலைந்து திரியினும் ஞானமாகிய வாளினை உயிரின் பாதுகாப்புக்குத் துணையாகக் கைக்கொள்க. அங்ஙனங் கொள்ளாவிடின் வீடடைய முடியாது.*

10. சிவநெறியின் சிறப்பு

சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்(று)
ஆவி யருதேயென் றுந்தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற. 31

விளக்கவுரை : *வீட்டினை நேராக அடைதற்குப் பயன்படாத வழிகூறும் பிற சமயங்களிற் புகுந்து நின்று உயிர்க்குறுதியை இழத்தல் கூடாது. பிறசமய உரைகளை மெய்யென்று நம்புதல் கூடாது.*

11. அணைந்தோர் தன்மை

துரியங் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரந்
துரியமாய் நின்றதென் றுந்தீபற
துறந்தார் அவர்களென் றுந்தீபற. 32

விளக்கவுரை : *உலக உணர்ச்சியும் தன்னுணர்ச்சியும் கடந்த தொண்டர்க்கு நனவிலேயே தூய மேல்நிலை உணர்ச்சி நிகழும். அவர்களே உண்மைத் துறவிகள் என்றறிக.*

திருச்சிற்றம்பலம்

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற. 33

விளக்கவுரை : *அத்தகைய ஞானிகட்கு ஊழினால் எய்தும் சிற்றின்பம் திருவருட் கண்ணால் உணரப்படுவதாகலின் பேரின்பமாகவே முடியும். ஆதலால் மேல் வினையின் காரியமாக வரும் உடம்பெடுத்தல் நிகழாது.*

பேரின்ப மான பிரமக் கிழத்தியோ(டு)
ஓரின்பத் துள்ளானென் றுந்தீபற
உன்னையே ஆண்டானென் றுந்தீபற. 34

விளக்கவுரை : *அவர் பேரின்பமான பெருந்தலைவியோடு கூடி ஒப்பற்ற இன்பத்தை நுகர்ந்துகொண்டிருத்தலினாலே, அதன்கண் விளங்கும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பிற இன்பத்தை உணரார் என்றறிக.*

பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டாரென் றுந்தீபற
காணாதார் காணாரென் றுந்தீபற. 35

விளக்கவுரை : *பேய்க்கோட்பட்ட பெண்டிர் போல உயிரையும், பேய் போல நாயகனான கடவுளையும் கண்டறிந்தோர்களே கடவுளைக் கண்டவராவர். அங்ஙனம் தன்னை மறந்து திருவருட் பதிவுறாதவர்கள் குருடர்களே.*

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாமென் றுந்தீபற
நாதற் கிடமதென் றுந்தீபற. 36

விளக்கவுரை : *உடம்பினுள் பிராணனும் நாதகலையுங் கூடிச் சுழுமுனை வழியே உச்சியிற் சென்று சேரப்பெற்று அருள் வழியில் நிலையுறுவோரே நாலாம் நிலையாகிய வீட்டினை எய்துவர். அவ்வருள் வெளியே நாதனுக்கு இடமென்றறிக.*

சென்ற நெறியெல்லாஞ் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற
நீசெயல் செய்யாதே யுந்தீபற. 37

விளக்கவுரை : *சென்ற வழியெல்லாம் சிவன் வழி என்ற உணர்ச்சியோடு தன்செயலற்று நிற்கவேண்டும்.*

திருச்சிற்றம்பலம்

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ண முந்தீபற. 38

விளக்கவுரை : *பொன்னினாலமைந்த கொழுவைக்கொண்டு வரகு விளையும் நிலத்தில் உழுவதால் பயனென்? அக்கொழுப்போல்வதாய திருவருளின் தன்மையறிந்து உலகவாழ்விலே ஈடுபடாமல், சுட்டற்ற நிலையில் நிற்கவேண்டும்.*

12. பரம சித்தாந்தம்

அதுவிது வென்னா தனைத்தறி வாகும்
அதுவிது வென்றறிந் துந்தீபற
அவிழ்ந்த சடையானென் றுந்தீபற. 39

விளக்கவுரை : *சுட்டியறியாது பொருள்களையெல்லாம் ஒருங்கேயறியும் பேரறிவுடைய பெருமான் உயிரோடு கலந்து நின்று உதவுகிறானென்பதை யறிந்து, அவனைச் சுட்டற்ற நிலையில் நின்று அறியவேண்டுமென உணர்க.*

13. பெரும்பெயர்ப்பொருள்

அவனிவ னான(து) அவனருளா லல்ல(து)
இவனவ னாகானென் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற, 40

விளக்கவுரை : *இறைவன் உயிரோடு கலந்தது தனது அருள்மிகுதியால் என்க. தன்னியல்பில் அவன் உயிரின் வேறாவனாதலின், உயிர் இறைவனாய் விடுமென்ற கருத்தை விட்டொழிக. உயிர் முத்தியை யடைந்தாலும் உயிரேயென்றறிக.*

14. சிவநெறியின் அறிவழிப்படை

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்(து)
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழ முண்ணாதே யுந்தீபற. 41

விளக்கவுரை : *முத்திபெறுவதற்குரிய முதன்மையுடைய உயிரின்பால் ஆணவமான மயக்கக்கொடி படர்ந்து, உடம்பாகிய பழம் பழுத்துப் பிறவி ஏற்பட்டது. அது முத்திக்குப் பகையாகலின், அப்பழத்தை நுகர்தற்கிட மில்லாதபடி திருவருளிலே உறைத்து நிற்க.*

திருச்சிற்றம்பலம்

15. ஆன்மலாபம்

அண்ட முதலாம் அனைத்தையும் உட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே யுந்தீபற
குறைவற்ற செல்வமென் றுந்தீபற. 42

விளக்கவுரை : *எல்லாவகைப் படைப்பையுமுள்ளடக்கிய மாயையினைப் பற்றி நில்லாதே. அதற்கு மேலான பூரணப் பொருளாகிய சிவமே பற்றத்தக்கது.*

16. உயிர்க்களுக்கு இரங்கல்

காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற. 43

விளக்கவுரை : *உடம்பினுள் வாழும்போதே இறைஞானத்தின் பயனுன பேரின்பத்தை நுகராது, உடம்பால் வரும் மயக்கமிக்க சிற்றின்பத்தை உண்டவர்கள் பயன்படாத உயிர்களென உணர்க.*

17. வாழ்த்து

சிந்தையி னுள்ளுமென் சென்னியி னுஞ்சேர
வந்தவர் வாழ்கவென் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற. 44

விளக்கவுரை : *திருவடி சென்னிமேற் சூட்டி மெய்ஞ்ஞானம் நல்கியும், உள்ளத்தாமரையில் ஞானபூசையேற்றும் என்னை ஆட்கொள்ள வந்தவர் தமது திருவருட் சத்தியோடு வாழ்க.*

18. நூற்பயன்

வைய முழுதும் மலக்கயங் கண்டிடும்
உய்யவந் தானுரை யுந்தீபற
உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற. 45

விளக்கவுரை : *உலகினர் யாவர்க்கும் பாச நீக்கத்தைச் செய்யவல்ல உய்யவந்ததேவ நாயனுரது நூலினை உணர்ந்தார் உண்மை உணர்ந்தாராவர்.*

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

திருக்கடவூர் - உய்யவந்ததேவ நாயனுர்
அருளிச்செய்த

௨. திருக்களிற்றுப்படியார்



இதன் பெயர்க்காரணம் சுவையுடையது. ஆசிரியர் தாழ்ந்த இனத்தவர் என்பதால் இந்நூலேப் பலரும் ஏற்றுக் கொள்ளக் மறுத்தனர். மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற வகையில் ஏற்றுக்கொண்டசிலர். இந்நூலேத் தில்லேயில் கூத்தப்பெருமான் எழுந்தருளியுள்ள பஞ்சாட்சரப்படியில் எடுத்துச்சென்று வைத்தனர். அவ்வாறு வைத்த அளவில் அப்படியிலுள்ள கல்லானே தன் துதிக்கையால் எடுத்து மேற்படியில் கொண்டு அந்நூலே வைத்தது. இதனேக்கண்ட பலரும் இந்நூலின் பெருமையை உணர்ந்தனர். இதனுல் இந்நூல் இப்பெயர் பெற்றது. 45 பாடல்களே உடைய திருஉந்தியாரின் கருத்தைத் திருக்களிற்றுப்படியார் 100 வெண்பாக்களால் விளக்கி நிற்கின்றது. இந்நூல் திருஉந்தியாரின் பொருளே வகுத்து விளக்குகின்றது. இஃது இல்லேயாயின் திருஉந்தியாரின் பொருளே உணர்ந்து கொள்ளுதல் மிகவும் கடினமாக இருக்கும்.

இந்நூலின் பல்வேறு அரிய குறிப்புகள் உள்ளன. குருவருள், குருவடிவின் இன்றியமையாமை, அடியவர் வரலாறு முதலியன

இந்நூல் மிக ஆழமாக எண்ணப்பட்டுள்ளன. கடல்நீரை நேரே பயன்படுத்தற் கியலாது. மேகம் அந்நீரை முகந்து மழையாகப் பொழியின் அதனை நாம் அனைவரும் பயன்படுத்தலாம். அதைப்போன்றே மெய்ந் நூற்பொருளையும் நேரே உணர்தல் அருமை உடையதாகும். அதனை முன்னமேயே உணர்தல் அருமை உடையதாகும். அதனை முன்னமேயே உணர்ந்து அனுபவப்பயனுகக் கொண்டிருக்கும் ஞானுசிரியனைக் கொண்டு உணரமுற்படின், எளிதிலும் இனிதிலும் உணரலாம் என இந்நூல் கூறுவது எண்ணற்குரியது. பசுவின் மலம் ஏனைய மாசுக்களைப் போக்குவது போல இறைவனும் குருவாக உருக்கொண்டு வந்தே ஏனைய உயிர்களின் வினைவயத்தாலாய உடம்புகளை அழிப்பன். குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கொண்டே உயிர் தனது வினைகளைப் போக்கிக் கொளல் வேண்டும். அவ்வாறு போக்கிக்கொண்ட உயிர் அவன் யாண்டும் நீக்கமற நிற்கும் நிலையை அனுபவத்தால் கண்டு மகிழும். இறைவனை அவன் ஒன்றியிருக்கும் பொருளின் அடையாளத்தைக் கொண்டுதான் அறிய முடியும். அதுவன்றி அவனுக்கெனத் தனித்த ஓர் அடையாளம் இல்லை. ஆதலின் அவனுக்கு ஒப்பாக யாதொரு பொருளுமில்லை. அவ்வருள் வழிநிற்கும் தவமுடையார் தம் ஒப்பின்மை கொண்டு இதனையும் அறிய இயலுமாதலின் அவரே இதற்குச்சான்ருவர். இறையுணர்வோடு அவனைக்காண முயலின் அவன் தெளிவாக அறிய நிற்பன். தன் உணர்வோடு காணமுயலின் அவன் காணலாகான்.

சாதனங்களைத் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்துள்ள சிவபுரத் திருப்பதிகம்பற்றி இந்நூல் சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என மூன்ருகக் கொள்ளுகின்றது. சிவதன்மத்தை மெல்வினை, வல்வினை என இரண்டாகப் பிரித்துரைத்து உணர்த்துவது பெரிய புராணத்தில் கூறப்படும் நாயன்மார்களது சமய அனுபவங்களை உண்மையாக உணர்தற்குத்துணை செய்வதாய் உள்ளது. இதன்கண் உள்ள எல்லா வெண்பாக்களும் உயர்ந்த கருத்துக்களை உடையனவாய் விழுமிய ஓசையும் சொல்லும், பொருளும் செறிந்தவை.

அவ்வெண்பாக்கள் எல்லாம் மனப்பாடம் செய்து போற்றத் தக்கவை. அரிய சிந்தாந்தக் கருத்துக்களை எளிய பொருத்தமான உவமைகளால் விளக்கும் தன்மையில் இந்நூலுக்கு இணையாக வேறென்றைக் கூறுதல் இயலாத தொன்ருகும்.

"நங்கையினால் நாமனைத்துஞ்செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினாள் செய்தளிக்கும் நாயகனும்".

"உன்னுதரத்தே கிடந்த கீட முறுவதெல்லாம்
உன்னுடைய தென்னாய்நீ யுற்றனையோ - மன்னுயிர்கள்
அவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்ற சிவன்பால்".

"கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றும்
கடலளக்க வாராதாற்போலப் - படியில்
அருத்தி செய்த அன்பரை வந்தாண்டதுவுமெல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்".

என்னும் வெண்பாக்கள் இந்நூலின் அருமையை ஒருவருக்கு எளிதின் உணர்த்தும்.

முதல்வன் தானும் தன் அருளும் எனத்தாதான்மியத்தால் இயைந்து நிற்பன் என்னும் உண்மை அவன்சொரூப நிலையினும் உண்டு தடத்த நிலையினும் உண்டு. சொரூப நிலையில் தன்சத்தி இன்பசத்தியாகத் தான் இன்பம் தருவோனாக உளன். தடத்த நிலையில் தன் சத்தி அம்மையாகத் தான் அப்பனாக உளன். ஆதலால் ஞானிகளும் இறைவனை அம்மையப்பராக வழிபடுதல் தான் உண்மை நெறியாகும். அங்ஙனமன்றி முதல்வன் கேவலம் சின்மாத்திரமாக அறிவைக் கடந்து நிற்கின்றான் எனக்கூறுவது அனுபவமின்றித் தன் அறிவு பற்றியே பேசும் வெறும் பேச்சேயாகும் என்னும் உண்மையைப் பின்வரும் வெண்பாவால் இந்நூல் விளக்குகின்றது.

"அகளத்தி லானந்தத் தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றோன்றி - நிகளத்தைப்
போக்குவதுஞ்செய்தான்றன் பொன்னடியென் புன்றலைமேல்
ஆக்குவதுஞ் செய்தான் அவன்".

இதில் அகளம் என்றது உருவமில்லாத கடந்த, ஆனால் அனுபவப்படும் நிலையை, சகளம் என்றது இறைவன் உருவாய்த் தோன்றி அருள்புரியும் நிலையை, அகளம் எனினும் நிட்களம் எனினும் பொருந்தும். நிகளம் பாசமாகிய விலங்கு.

சிவ தன்மத்தை வல்வினை, மெல்வினை என வகைப்படுத்தி விளக்கியிருப்பது இந்நூற்குரிய சிறப்புக்களில் ஒன்றாகும்.

சிவதன்மம் - இது இருவகைப்படும். ஒன்று மென்மையான செயல்களால் இறைவனை அடைய முயல்வது. பிறிதொன்று செய்தற்கரிய வன்மையான செயல்களால் இறைவனை அடைய முயல்வது. இவற்றை முறையே மெல்வினையென்றும், வல்வினையென்றும் கூறுவர்.

மெல்வினை - திருக்கோவிலுக்குச் சென்று அலகிடல், மெழுகுதல், திருவிளக்கிடுதல், திருமாலை தொடுத்து அணிவித்தல், போற்றிப் புகழுதல், வணங்கல் முதலிய செயல்களைச் செய்வதும், அடியவரை வழிபடுவதும் திருவைந்தெழுத்தை ஓதுவதும் முதலான செயல்களெல்லாம் மெல்வினையெனப்படும்.

வல்வினை - வைரவர்க்குத் தன் மகவரிந்து ஊட்டிய சிறுத்தொண்டர் செயலும், சிவபூசைக்குத் தடையாய் இருந்த தன் தாதையின் தாளைத் தடிந்திட்ட சண்டீசர் செயலும், வயல் பிளவில் இறைவற்கென எடுத்துச்சென்ற உணவு சிந்திவிடத் தன் கழுத்தையே அறுக்கத் துணிந்த அரிவாட்டாயர் செயலும், போல்வன வல்வினை எனப்படும். இத்தகையோர் தாம் செய்யும் செயல்கள் அனைத்தும் இறைவர்க்கே உரியவாகக் கொண்டு தம் உணர்வையும் முழுமையாக அப்பெருமானிடத்து ஆட்படுத்தி விடுவதால் இவை அறமாயின. உழவும் தனுசும் வேருகின் பயனளியாது. ஒன்ருயின் பயன்தரும். அதைப் போன்றே இச்செயல்களும் நினைவும் வேருயின் அறன் எனப்படா. ஒன்ருய் அமைதலின் அறன் எனப்பட்டது.

சிவயோகம் - இது இருவகைப்படும். ஒன்று ஆதாரயோகம் என்பது. பிறிதொன்று நிராதாரயோகம் என்பது. இவை இரண்டும் இறைவனின் திருவடியை அடைவிக்கும்.

ஆதாரயோகம் - உடம்பின்கண் உள்ள ஆறு ஆதாரங்களிலும் இறைவர் தம் திருவுருவங்களை எழுந்தருளுவித்துக் கொண்டு படிப்படியாகச் சென்று பரம்பொருளில் ஒன்றுபடுவது ஆதாரயோகம் ஆகும். இவ்விடங்களில் வைத்து வழிபடும் தெய்வங்கள் திருவைந்தெழுத்தின் குறியீடாக எண்ணத்தக்கராவர் இந்நிலையைக் குருவருள் வழி நினைந்து எண்ணின் இறைவனும் அம்மையப்பராக எழுந்தருளி மலமகற்றித் தானுக மலரடிக்கீழ் வைப்பர். இவ்ஆறு இடங்களிலும் வைத்து பழிபடும் பயிற்சி மேலீட்டால் தன்னுணர்வு அழியும். அப்பொழுது இறைவனேடு ஒன்றுபடும் பேறும் கிட்டும்.

திருச்சிற்றம்பலம்

நிராதாரயோகம் - யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை அவனருளால் அவனருள்வழி நினைந்து அதனோடு ஒன்று படுவது நிராதாரயோகம் ஆகும். திருவருள் வயப்பட்டு அதனையே கண்ணுகக்கொண்டு காண்பவரே இறைவனைக் கண்டவர் ஆவர். தான்வேறு இறைவன்வேறு என நினைந்து வேறுபடுத்திக் காண்பவர் இறைவனைக் காணுதவர் ஆவர். இத்தகைய யோகம் கைவருவதற்கு உயிர் உலகியற்பொருள்களுடன் சார்ந்து அசைவுறுதல் இன்றி, மனஒருமை பெற்று நிற்க வேண்டும். அவ்வாறு மனம், மொழி, மெய்கள் அலைதலின்றித் திருவருளிலேயே ஒன்றும் யோகியர் தம் உள்ளத்தில் இறைவனும் நீங்காது நிற்பன். இந்நிலை கைவருவதற்குச் செய்யத்தக்க வழிவகை உண்டு. அவையாவன - பொருளல்லவற்றைப் பொருளெனக் கருதி அவற்றில் மயங்கலாகாது. அவற்ருல் வரும் பற்றுக்கொண்டு அவற்ருல் அழுந்திவிடல் ஆகாது. நன்ருங்கால் நல்லவாக் காண்டலும் அன்ருங்கால் அல்லற்படுதலுமாகாது. தன் அறிவைப் பற்றுதல் ஆகாது. மாருக இறையருளைப் பற்றி நிற்றலும் வேண்டும். இவை ஒன்றி நிற்றற்கு வழியாம். இவ்யோகத்தின் முதிர்ச்சியுடையார்க்கு நடராசப் பெருமானின் திருச்சிலம்பு ஓசை கேட்கும். தன் முனைப்பற்ற நிலையில் அவ்வோசைவழிச் செல்லின் அப்பெருமான் உமையுடன் தோன்றி அருளுவன். '*சார்புணர்ந்து சார்வுகெட ஒழுகின்*' எனத் திருவள்ளுவர் கூறியுள்ளமையால் தனக்குச் சார்பாக இருக்கும் செம்பொருளை உணர்தலே தியானமாகும். அத்தியானத்தின் வழி அகப்புறப்பற்று நீங்கின் அதுவே நிட்டை கூடுதலுமாகும். அதன் விளைவாக இறைவன் விரைந்து வந்து அருளுவன்.

இவ்வாறே தாம் எடுத்துக்கொண்ட அரிய பல உண்மைகளை விளக்குதற்கு அடியவர்களின் அருட்செயல்களை ஆங்காங்கு கூறியிருப்பதும் இந்நூற்கே உள்ள தனிச்சிறப்பாகும். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், மங்கையர்க்கரசியார், அரிவாட்டாயர், சிறுத்தொண்டர், சண்டீசுவரர், திருக்குறிப்புத் தொண்டர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்க்கர், மூர்த்தியார், கண்ணப்பர், சேந்தனுர் ஆகியோரின் அருட்செயல்களும், வரலாறுகளும் இவ்வகையில் இடம்பெற்றுள்ளன. அடியவர்களின் வரலாறுகளேயேன்றி அவர்களின் அருள் மொழிகளும் இந்நூற்கண் பொன்னேபோல் போற்றப் பெற்றுள்ளன. "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" "ஈருய் முதலொன்ருய்", "சிவனென யானும் தேறினன் காண்க" என்ற அருள்மொழிகள் இவ்வகையில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறே "சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின், வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்ற திருக்குறட்பாக்களும் கொண்டெடுத்து மொழியப்பெற்றுள்ளன.

மேலும், ஆசிரியர் தாம் எடுத்துணர்த்தும் மெய்ப்பொருளை இனிதாகவும் செவ்விதாகவும், உணர்த்துதற்குத் தக்க உவமைகளைக் கையாண்டுள்ளார். அவை குறிக்கத்தக்கன.

1. ஆர்த்த கடல் தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ (6). 2. இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில் நின்ற மலமனைத்தும் நீக்குவது (7). 3. ஆற்றால் அலைகடற்கே பாய்ந்த நீர் அந்நீர்மை மாற்றி அவ்வாற்றான் மறித்தாற்போல் (11). 4. தூங்கினரைத் தூயசயனத்தே விட்டதற்பின் தாங்களே சட்ட உறங்குவார்கள் - ஆங்கதுபோல் (13). 5. உழவும் தனுசும் ஒருமுகமேயானால் இழவுண்டோ சொல்லாய் இனி (21). 6. தாழ்ந்த மணி நாவேபோல் (32). 7. வடம் அடக்கி நிற்கும் வடவித்தே போல (48). 8. வித்தும் அதன் அங்குரமும் போன்று (57). 9. மன்னன் அருள் எவ்வண்ணம் மானுடர்பால் மாணவக அன்ன வகையது. (75). 10. கடலுயிர்த்த இன்னமுதம் உண்டவரே உண்டார் சுவை (77). 11. நங்கையினால் நாமனைத்தும் செய்தாற்போல் (78). 12. பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல் (79). 13. உன்னுதரத்தே கிடந்த கீடம் உறுவதெல்லாம் உன்னுடைய தென்னாய் நீ உற்றனையோ? மன்னுயிர்கள் அவ்வகையே காண் (87). 14. கடலலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும் கடலளக்க வாராதாற்போல் (90). 15. அவனிதனில் தோன்று மரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய் ஈன்றிடுமோ சொல்லாய் இது (92).



உ
சிவமயம்

திருக்கடவூர் - உய்யவந்ததேவ நாயனுர்
அருளிச்செய்த

உ. திருக்களிற்றுப்படியார்

1. கடவுள் வாழ்த்து

அம்மையப்ப ரேஉலகுக் அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் - அம்மையப்பர்
எல்லா உலகிற்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர். 1

விளக்கவுரை : ***அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக.*** *அம்மையாகிய சத்தியும் அப்பராகிய சிவனும் பிரபஞ்சத்துக்குக் காரணம் என்று அறிக,* ***அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்*** *- அம்மையப்பராகிய சிவன் அந்தச் சத்தி வழியாக வந்து மோட்சத்தைக் கொடுப்பார்,* ***அம்மையப்பர் எல்லா உலகிற்கும் அப்புறத்தார்*** *- சிவன் ஆறத்துவாவினும் பொதுவியல்பாற் கலந்திருப்பினும் தன்னியல்பால் அப்பாற்பட்டவர்,* ***இப்புறத்தும் அல்லாற்போல் நிற்பர் அவர்*** *- இப்படிக் கலந்திருப்பினுங் கலவாதாரைப் போன்ற சுட்டிக் காணப்படார்.*

உ. அனுபவம் பெரும் முறை

தம்மிற் றலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மிற் றலைப்படுத ருமுணரின் - தம்மில்
நிலைப்படுவ ரோரிருவர் நீக்கிநிலை யாக்கித்
தலைப்படுவர் தாமத் தலை. 2

விளக்கவுரை : ***தம்மில் தலைப்பட்டார் பாலே தலைப்பட்டு*** *- சிவனுலே சிவனைச் சேர்ந்த ஞானவான்களை மற்ருேர் ஆன்மா சென்றணுகி,* ***தம்மில் தலைப்படுதல் தாம் உணரில்*** *- அந்த ஞானவான்களைப்போலே பேரின்பத்தைப் பொருந்துதலை விசாரிக்குமிடத்து,* ***தம்மில் நிலைப்படுவர் ஓரிருவர்*** *- பதியும் பசுவுந் தங்களிலே சுட்டி நிலைபெற்றிருப்பார்கள்,* ***நீக்கி நிலையாக்கி*** *- அவ்விடத்து ஆன்மா சிவன் ஞானத்தையுந் தனது ஞானத்தையும் நீக்கி முன்னே பாசத்தினின்று நீங்கினது போலச் சிவனிடத்திலே நின்று நீங்காமல் நிலைமைப்படுத்தி,* ***தலைப்படுவர் தாம் அத்தலை*** *- தலையாகிய பேரின்பத்தைத் தலைப்படுவார். இதனுள், ஞானவான்களையின்றி ஞானம் பிரசேவியாதென்பதும் முத்தியிற் பதியும் பசுவுமொழிந்து மூன்ருவது ஒரு முதலில்லை என்பதும் சிவனைப் பொருந்திஞல் ஒருகாலும் மீளார்களென்பதும் அறிந்துகொள்க.*

திருச்சிற்றம்பலம்

3. நூல் வழி

என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி
என்னறிவி லாரறிக வென்றொருவன் - சொன்னபடி
சொல்லக்கே ளென்றொருவன் சொன்ன னெனக்கதனைச்
சொல்லக்கே ளுனக்கச் சொல். 3

விளக்கவுரை : ***என்னறிவு சென்றளவில் யான் நின்று அறிந்தபடி*** - *என்னுடைய போதங் கழன்றவிடத்து யான் மாத்திரம் நின்று சிவஞானத்தை யறிந்த முறைமை யெப்படி என்னில்,* ***என்னறிவிலார் அறிக என்று ஒருவன் சொன்னபடி சொல்லக்கேள் என்று ஒருவன் சொன்னன் எனக்கதனை*** - *என்னறிவென்கிற தன்மையில்லாதவர்களே கேட்பீராக என்றொருவன் சொன்ன முறையே அந்த உபதேசத்தை எனக்குச் சொல்லக்கேள் என்றொருவன் சொன்னன்,* ***சொல்லக் கேள் யான் உனக்கு அச்சொல்*** - *அந்த உபதேசத்தை யான் உனக்குச் சொல்லுகிறேன் கேட்பாயாக.*

இதனுள், குருபரம்பரை இல்லாமற் சிவஞானம் பிரவேசியாதென்பதும் இந்நூல் குருபரம்பரை உபதேசத்தைப் பெற்றுப் பாடின நூலென்பதுங் கண்டுகொள்க.

4. உபதேசம்

அகளமய மாய்நின்ற வம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி - நிகளமாம்
ஆணவ மூல மலமகல வாண்டனன்காண்
மாணவக வென்னுடனய் வந்து. 4

விளக்கவுரை : ***அகளமயமாய் நின்ற அம்பலத்தெங் கூத்தன்*** - *அருபியாய் நின்ற சிவஞனவன்,* ***சகளமயம்போல் உலகில் தங்கி*** - *சரீர மெடுக்கிறர்களைப் போல இந்தப் பூமியிலே திருவுருக் கொண்டு,* ***நிகளமாம் ஆணவ மூலமலம் அகச ஆண்டான் காண் மாணவக என்னுடனய் வந்து*** - *என்னுடனே கூடியிருந்து விலங்குபோதும் ஆணவமாகிய மூலமலமானது என்னைவிட்டு நீங்கும்படிக்கு அடிமையாகக் கொண்டான், சீடனே, இந்த அதிசயத்தை அறிவாயாக.*

ஆணவம் அகலவே கன்மமும் மாயையும் அகலுதல் கூற வேண்டா மென்பது கருத்து. இதனுள் சிவன் திருமேனி கொண்டாலொழிய ஆன்மாக் களுக்கு முத்தியில்லை என்பது கண்டுகொள்க.

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே - பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு. 5

விளக்கவுரை : ***ஆகமங்கள் எங்கே அறுசமயந் தானெங்கே யோகங்கள் எங்கே உணர்வெங்கே*** - இருபத்தெட் டாகமங்களையும் ஆரறிவார், ஆறு சமயங்களினுடைய நீதியையும் ஆரறிவார், யோகப் பயிற்சியையுஞ் சிவனுடனே கூட்டத்தையும் ஆரறிவார், சிவஞானத்தினுடைய முறைமையையும் ஆன்மபோதத்தினுடைய முறைமையையும் ஆரறிவார்; ***பாகத்து அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப் பெருவடிவை யாரறிவார் பேசு*** - மலபரிபாகத்திலே அருளாகிற திருமேனியுந் தானுமாக வந்து அடிமை கொள்ளாதே போனால் முடிவாகிற பேரின்பத்தை ஒருவராலும் அறியக்கூடாது; கூடுமாயிற் சொல்லுவாயாக.

புறச்சமயமாறெனினும் பக்கத்தருளெனினும் அந்தப் பேரின்ப மெனினுமாம். இதனுள், சிவன் திருமேனி கொள்ளாதே போனால் ஆகம முதலாகிய கலைகளையும் அன்னிய சமயங்களினுடைய இழிபையும் யோக முதலிய கிரியைகளையும் அறியக்கூடா என்பது கண்டு கொள்க.

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமோ - ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு. 6

விளக்கவுரை : *மேகத்தின் வாய்ப்பட்ட தண்ணீரைச் சிறிது குடித்தாலும் தாகம் தணிகிறதுபோலச் சமுத்திரத்து நீரைப் பெருகக் குடித்தாலும் தாகந் தணியாது; இதுபோல, நல்ல குருவினுடைய சில வார்த்தைகளினாலே உள்ளந் தெளிகிறதுபோல வெகு நூல்களைக் கற்றாலும் உள்ளந் தெளியாது; தெளியுமானால், தெள்ளிய அறிவினையுடைய சீடனே, சொல்லுவாயாக.*

இதனுள், குருவையின்றி நூல்களைக் கற்கிற் பயனில்லை என்று கண்டுகொள்க.

இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்து நீக்குவதிங் - கென்றால்
உருவுடையா னன்றே யுருவழியப் பாயும்
உருவருள வல்லா னுரை. 7

விளக்கவுரை : ***இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில் நின்ற மலமனைத்தும் நீக்கினது*** - இப்பொழுது கோமயமல்லவோ இப்பூமியின் கண்ணுள்ள பல விகார முதலிய ஆசூசங்களை நீக்குவது; ***ஆங்கென்றால்*** - ஆசாரியர் திருமேனி கொண்டு பிறவியறுக்கிறதும் அதுபோலவானால்; ***உருவுடையான் அன்றே உருவழியப் பாயும் உருவருள வல்லான் உரை*** - சிவன் நம்மைப்போல சரீரத்தை உடையவனல்லவே, நம்முடைய பிறவி அழியும்படிக்குத் தோன்றுந் திருவருளாகிய திருமேனி எடுக்கவல்லவனே, இதற்கு மாறுபாடுண்டாகிற் சொல்லுவாயாக.

இதனுள், ஆசாரியர் திருமேனி இருமாயையிலே உண்டான சரீரமல்ல என்பது உவமையினாலே கண்டுகொள்க.

திருச்சிற்றம்பலம்

கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவரே
யண்டத்தி னப்புறத்த தென்னுதே - யண்டத்தின்
அப்புறமு மிப்புறமு மாரறிவுஞ் சென்றறியும்
எப்புறமுங் கண்டவர்க ளின்று. 8

விளக்கவுரை : ***கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவரே*** - கண்ணிலே காணப்பட்ட ஆசாரிய மூர்த்தத்தைக் கொண்டு தங்களுடைய போதத்தொழிலைக் கெடுத்தவர்களே, ***அண்டத்தின் அப்புறத்த தென்னுதே*** - சீவன்முத்தித் தன்மையுடையதிது பரமுத்தித் தன்மையினையுடையதிது என்று இரண்டு தன்மையையு மிடையிட்டுக் காணுமல்; ***அண்டத்தின் அப்புறமும் இப்புறமும் ஆர் அறிவுஞ் சென்றறியும் எப்புறமுங் கண்டவர்கள் இன்று*** - பரமுத்தியையுஞ் சீவன் முத்தியையும் எல்லா ஞானவான்களுடைய அறிவும் பொருந்தி யறியுந் திரிபதார்த்தங்களையும் (=பதி பசு பாசங்களையும்) இப்பொழுதே மயக்கமற அறிந்தவர்கள். இதனுள், ஆன்மபோதம் இறந்தாலொழியச் சுபாவதெரிசன முண்டாகாது என்பது கண்டுகொள்க.

அன்றுமுத லாரேனு மாளா யுடனுகிச்
சென்றவர்க்கு மின்னதெனச் சென்றதிலை - யின்றிதனை
எவ்வா றிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது. 9

விளக்கவுரை : ***அன்று முதல் ஆரேனும் ஆளாய் உடனுகிச் சென்றவர்க்குள் இன்னதெனச் சென்றதிலை*** - அனுதி தொடுத்துக் கர்த்தாவுக் காளாய்த் திருவருளுடனே கூடிப் பின்பு நேயத்திற் சென்றவருக்குள் ஒருவரானுலும் சிவானுபவம் இப்படியிருந்தென்று சொல்ல இதுவரையும் உவமை பொருந்தினதில்லை ஆகையால்; ***இன்று இதனை இவ்வாறிருந்ததென்று எவ்வண்ணஞ் சொல்லுகேன் அவ்வாறிருந்ததது*** - இப்போது இந்தச் சிவானுபவத்தை இப்படியிருந்தது என்று எப்படிச் சொல்லப்போகிறேன், அந்தச் சிவானுபவம்போல இருந்தது. இதனுள், சிவானுபவத்துக்கு வேருேர் உவமை சொல்லக்கூடாது என்பது கண்டுகொள்க.

ஒன்றுங் குறியே குறியாத லாலதனுக்
கொன்றுங் குறியொன் றிலாமையினு - லொன்றோ
டுவமிக்க லாவதுவுந் தானில்லை யொவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று. 10

விளக்கவுரை : ***ஒன்றுங் குறியே குறியாதலால் அதனுக்கு ஒன்றுங் குறியொன்றிலாமையினுல்*** - நேயத்தைப் பொருந்து முறைமையே யனுபலவுண்மை ஆதலால் அந்த அனுபவத்துக்குப் பொருந்தும் அடையாளமில்லாதபடியினுலே, ***ஒன்றோடு உவமிக்கலாவதுவுந் தானில்லை ஒவ்வாத்தவம் மிக்காரே இதற்குச் சான்று*** - ஒரு பொருளோடு உவமை பண்ணிச் சொல்லவும்படாது, தவத்தினுலே ஒப்பற்ற பெரியோர்களே இந்த

திருச்சிற்றம்பலம்

அனுபவத்துக்குச் சாட்சி. இதனுள், அனுபவத்தைத் தவத்தினுலன்றிக் காணப்படது என்பது கண்டு கொள்க.

ஆற்ரு லலைகடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை
மாற்றியவ் வாற்ருன் மறித்தாற்போற் - ரேற்றிப்
புலன்களௌனப் போதம் புறம்பொழியி னந்தம்
மலங்களற மாற்றுவிக்கும் வந்து. 11

விளக்கவுரை : ***ஆற்ருல் அலைகடற்கே பாய்ந்த நீர் - அந்நீர்மை மாற்றி அவ்வாற்ருன் மறித்தாற்போல்*** *- திரையையுடைய சமுத்திரத்தினிடத்திலே ஆறென்கிற பூமிவழியாக வந்து பாய்ந்த இனிமைத் தன்மையையுடைய நீரானது அந்த இனிமைத் தன்மையைவிட்டு உவர்த்தன்மை பெற்று ஆற்றின்வழியே மீண்டாற்போல,* ***தோற்றிப் புலன்களௌனப் போதம் புறம்பொழியில் நந்தம் மலங்களற மாற்றுவிக்கும் வந்து*** *- ஞானவான்கள் போதம் நேயத்திலே பொருந்திய பின்பு பெத்தான்மாக்கள் போதம்போலப் பிரபஞ்சத்திலே சென்ருல் நம்மைப் பொருந்தியிருக்கிற மலமாயை கன்மங்கள் நீங்கும்படிக்கு நீக்குவிக்கும்.*

ஒழியிலென்னுமெச்சம் ஒழியாதென்பது தோன்ற நின்றது. வந்தென்பதை ஆற்ருலென்பதனேடு கூட்டுக. உவமை யுவமேயங்களை விரித்துணர்ந்து கொள்க. இதனுள், முத்தருடைய போதம் பெத்தருடைய போதம்போல வல்லவென்பது கண்டுகொள்க.

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போல் அல்லாமை காண். 12

விளக்கவுரை : *பாலை நிலம் நெய்தல் நிலமாகப் பாடிய தன்மையையும் பாம்பு விடந்தீரும்படிக்குப் பாடிய தன்மையையும் முன்பு முதலை விழுங்கின சிறுபிள்ளையுடைய மரணத்தைப் பின்பு காலனை யேவித் தீர்த்த தன்மையையும் அறிந்து, அந்தத் தெய்வத்தன்மை உடையவர்களுக்கு நம்முடைய கருவிகள்போல வல்லாமையைத் தெரிவாயாக.*

பாம்பு ஆகுபெயர், அறிந்தென்னும் எச்சம் வருவிக்க, இதனுள், முன்னூற் ருத்திரத்திற் ரெுகையை விரித்தது கண்டுகொள்க. இக்கதையைப் பெரிய புராணத்திற் கண்டுகொள்க, (பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும் சம்பந்தர்; கராங்கொண்ட பாலன் மரணந் தவிர்த்தது சுந்தரர்)

தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
தாங்களே சட்ட உறங்குவர்கள் - ஆங்கதுபோல்
ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதற்பின் அப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார். 13

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *நித்திரை வந்தவர்களை நல்ல மெத்தையிலே கிடத்தின் பின்பு தாங்கள் தானே சீக்கிரத்தில் உறங்குவார்கள்; அதுபோல ஞானாசாரியருடைய கிருபாகடாட்சம் அடிமைகொண்ட பின்பு அந்த அருள் வந்து பொருந்திக் கிரமத்திலே நேயமும் வந்து பொருந்துமென்றறிவாயாக.*

சட்ட: திசைச்சொல். உவமையுவமேயம் உய்த்துணர்ந்து கொள்க, இதனுள், ஆசாரியருடைய தீட்சையில்லாமல் ஞானம் வாராதென்பது கண்டுகொள்க.

5. சாதனம்

உள்ள முதலனைத்து மொன்ற வொருவவரில்
உள்ள முருகவந் துன்னுடனுந் - தெள்ளி
உணருமவர் தாங்க ளுளராக வென்றும்
புணருமவ னில்லாப் பொருள். 14

விளக்கவுரை : *உள்ள முதலனைத்தும் ஒன்ருய் ஒருவவரின் உள்ளம் உருகவந்து உன்னுடனும்* *- பிருதிவி முதல் நாதமீருகிய தத்துவங்களைப் பொருந்து முறைமையை யன்னியமாக்க வந்தால் ஆன்மாவாகிய அரக்கு நெகிழும்படிக்கு நேயமாகிய அக்கினி வந்து உன்னுடனே கூடி நிற்கும்; இப்படியன்றி;* ***தெள்ளி உணருமவர் தாங்கள் உளராக என்றும் புணருவானில்லாப் பொருள்*** *- கருவிகளுடனே கூடி விசாரித்தறிகிற பேருண்டானுல் எக்காரணம் விட்டு நீங்காமல் நிற்கிற கர்த்தா வில்லாத பொருள்போல மறைந்து நிற்பன்.*

இதனுள், கருவிகளினுலே சிவனைக் காணப்படாதென்பது கண்டுகொள்க.

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் ஞனழிய - வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரெனுங் காணு அரன். 15

விளக்கவுரை : *நல்ல சிவத்தன்மமான சரியையை உடையவன் கிரியையை உடைவன் நல்ல சிவயோக தன்மத்தை உடையவன் நல்ல சிவஞானத்தை உடையவன் இவர்களில் யாவராலும் நானென்கிற தன்மை கெட்ட வல்லமையினுலே அன்பு செய்தார்களாயின் அவர்களிடத்திலே, ஆன்மபோதமுள்ளவர்களுக்குள்ளே ஒருவராலுங் காணுதற்கரிதான சிவன் அப்பொழுதே வந்து கூடுவான் என்று அறிவாயாக.*

இதனுள்ளே, ஆன்மபோதங் கெட்டவர்கள் எந்தப் பாதத்திலே நின்ருலும் ஞானபாதமென்பது கண்டுகொள்க.

திருச்சிற்றம்பலம்

மெல்வினையே யென்ன வியனுலகு ளோர்க்கரிய
வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் - சொல்லிற்
சிவதன்மம் ஆமவற்றிற் சென்றதிலே செல்வார்
பவகன்மம் நீங்கும் படி. 16

விளக்கவுரை : *மெல்வினை என்று சொல்லவும் விசாலம் பொருந்திய பூமியினுள்ளார் செய்தற்கரிதாகிய வல்வினை என்று சொல்லவும் வரப்பட்ட இரண்டும் ஆகமத்திலே சொல்லப்பட்ட சிவன்தன்மமாம்; அவையிரண்டிலே அவரவர் மனம் பொருந்தினதிலே போவார், செனனமும் அந்தச் செனனத்துக் காரணமாகிய கன்மமும் நீங்கும்படிக்கு. எழுவாய் வருவிக்க, இதனுள், ஞானமானது மெல்வினை என்றும் வல்வினை என்றும் இருவகைப்படும் என்பது கண்டுகொள்க. பத்திவைராக்கிய மெனினுமாம்.*

ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவுஞ் செய்வனவும் - வேதியனே
நல்வினையாம் என்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே யென்றதுநாம் வேறு. 17

விளக்கவுரை : *கர்த்தாவை வழிபடுதற்கு அங்கமான அந்தரியாக பூஜையையும் பகிரியாக பூசையையும் அந்தந்த அவசரங்களிலே செய்யும் பஞ்ச சத்தி முதலான கூறுபாட்டையுடைய குற்றமற்ற பல கிரியைகளையும் அனுட்டான முதலான கிரியைகளையும் நான் வேறுபடுத்தி மெல்வினை என்று சொன்னது, சித்தசித்துக்களோடு கலந்திருக்கிறவனே, அரிய தொழில் செய்யப்படாத நமக்கும் எளிதாய் இருக்கிற இவற்றை நல்வினையா மென்று கருதி. இதனுள், மெல்வினைக்கு வகை சொன்னது கண்டுகொள்க.*

வரங்கடருஞ் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினு லன்றுகறி யாக்க - இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று. 18

விளக்கவுரை : *பலன்களைத் தரப்பட்ட சிறப்பாக வயிரவ வேடத்தைப் பூண்ட சிவனுக்கு கறியமுது சமைக்கும் பொருட்டுத் தயவில்லாமல் ஆதியிலே மாதா பிதாக்கள் தங்கள் கைகளினுலே பிள்ளையை யறுத்தலைச் செய்யுங் கொடிய வினையையே நான் வல்வினை என்று சொன்னது.*

மற்று - அசை. செய்யப்படுபொருள் வருவிக்க.

பாதகமே யென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் - சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலாற் தான். 19

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *சண்டீசுரர், ஒருவர் ஏவாமல் தம்முடைய பத்தியினுலே கொலைத்தொழிலென்றுந் தோடமென்றும் விசாரியாமல் தகப்பனுகிய பிராமணனுடைய காலிரண்டையுஞ் சிவத்துரோகத்தினுலே வெட்டிப் போடுதலைக் கர்த்தாவானவர் கண்டு சிவனுயிருக்கிற முறைமையைக் கொடுத்தார். இந்தப் பத்தியை அறிவாயாக.*

செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐய இதுவமுது செய்கென்று - பையவிருந்
ஊட்டி யறுத்தவர்க்கே ஊட்டி யறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னே நாம். 20

விளக்கவுரை : *நாம் பத்தி பண்ணினவர்களுக்குள்ளே மேம்பட்டவரென்று நாட்டிச் சொல்லுவது யாரையென்ருல், கமர்நிலத்தின் கண்ணே கொட்டுதலாலே மாறிப்போன படிக்கட்டளையை "ஐயனே இப்படிச் சோர்ந்துபோனதை அமுது செய்வாயாக" என்று மனதிலே பயமில்லாமல் தம்முடைய கழுத்தையறுத்து அந்தக் கர்த்தாவுக்குப் புசிப்பித்து மூன்று பாசத்தையும் விடுத்தவரையே. இவை மூன்று செய்யுளில் வல்வினைக்கு வகை சொன்னது. இப்படிப் பலபல வகை உண்டென்பது கருத்து. அவையெல்லாம் பெரியபுராணத்தறிக. (அரிவாட்டாய நாயனுர் புராணம்)*

செய்யுஞ் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டா - ஐயா
உழவுந் தனிசும் ஒருமுகமே யானுல்
இழவுண்டோ சொல்லா யிது. 21

விளக்கவுரை : *சீடனே, உழவுத் தொழில் செய்கிறவனுக்கும்; அதனை ஏவுகிற கர்த்தாவுக்கும் புத்தி ஒருபடித்தாய் இருந்ததேயானுல் அந்தத் தொழில் செய்கிறவனுக்கு ஒருகாலும் குறைவாராது; இதுபோலத் தாங்கள் செய்யுஞ் செயலிலே கர்த்தாவினுடைய செயலாகப் பொருந்தித் தங்களைக் கிரமத்திலே கர்த்தாவுக்குக் கொடுத்தவர்களே ஆன்மபோதமாகிற சுமையை இறக்கிச் சுகமாய் இருப்பார்கள். உழவுக்குப் பெயர் தனிசு; திசைச் சொல். இதனுள், ஆன்ம போத மிறந்த அறுபத்துமூவர் முதலான பெரியோர்களைப் பொதுப் படக் கூறி வல்வினைக்கு விரிவு சொன்னது கண்டுகொள்க.*

ஆதார யோகம் நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே - யாதாரத்
தாக்கும் பொருளாலே யாக்கும் பொருளமொன்
ருக்காப் பொருளேயொன் ரும். 22

விளக்கவுரை : *மேம்பட்ட சுகத்தை அனுபவிக்கிற முறைமை ஆதார யோகம் என்றும் நிராதார யோகம் என்றும் இருவகைப்படும்; அதே தென்னில்,*

பிரபஞ்சத்தை உண்டாக்கப்பட்ட திருவருளாலே கொடுக்குஞ் சுகமொன்று திருவருளினுலே கொடுக்கப்படாமற் சிவனுலே கொடுக்குஞ் சுகமொன்று என்றறிவாயாக.

ஆக்கி ஒருபொருளை ஆதாரத் தப்பொருளை
நோக்கி அணுவில் அணுநெகிழப் - பார்க்கில்
இவனுகை தானெழிந்திட் டேகமா மேகத்
அவனுகை ஆதார மாம். 23

விளக்கவுரை : *பிரபஞ்சத்திலே உண்டான விடயங்களை விசாரித்தறிந்து இவை எல்லாம் பலபல வல்ல மாயை யொன்றுமே என்று அன்னியமாக்கித் தன்னிலே தன்னை விளங்க விசாரித்தாளுகில், நம்முடைய போதத்தினுலே சீவித்தோமென்கிற தன்மை கெட்டுத் திருவருளோடே யொன்ருவன்: அப்படி யொன்ருகிற தன்மையே ஆதாரமாம்.*

இதனுள் ஆதாரயோகத்துக்கு உபாயஞ் சொன்னது கண்டு கொள்க.

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற்
கொண்டதுவும் அப்பரிசே கூறுபடுங் - கொண்ட
இருபொருளும் இன்றியே இன்னதிது வென்ஞ
ஒருபொருளே யாயிருக்கு முற்று. 24

விளக்கவுரை : *தான் பொருந்தப்பட்ட ஒப்பற்ற திருவருளைப் புதுமை உண்டாக நீக்கினுனுயில் திருவருளும் வந்த முறையை விட்டு நீங்கும்: அப்பாற் பொருந்தின சிவனுந் தானும் இரண்டென்கிறதுயின்றி இந்தக் கூட்டம் இன்னதுபோல விருந்ததென்று சொல்லப்படாமல் ஒரு பொருளாகப் பொருந்தி இருக்கும்.*

ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினிலுந்
தாக்கித்தா னென்ருேடுந் தாக்காதே - நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனுய்
நிற்கை நிராதார மாம். 25

விளக்கவுரை : *ஒருவராலே உண்டாக்கப்படாத பொருளாய் எல்லாவற்றினுந் தோய்ந்துந் தோயாமல் தனக்கு அன்னியமாக நீக்கிக் கூடிநிற்குந் திருவருளுடனே பொருந்துஞ் சிவனைக் கூடிநிற்குந் தன்மையே நிராதாரமாம். இவை இரண்டு செய்யுளானும் நிராதார யோகத்துக்கு உபாயஞ் சொன்னது கண்டுகொள்க.*

அஞ்செழுத்து மேயம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை யாருகப் பெற்றறிந்தே - அஞ்செழுத்தை
ஓதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள். 26

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *பஞ்சாட்சரமே சத்தியையுஞ் சிவனையும் காட்டுகிறபடியினாலே அந்தப் பஞ்சாட்சரத்தைப் பேரின்பத்துக்கு வழியென்று கொண்டு, ஒரு தானத்திலே அசைவற்றுத் தியானத்தோடே இருந்து பஞ்சாட்சரத்தைச் செபிக்கத் தொடுத்தால், ஆன்மபோதங் கெடும்; கெட்டவுடனே கர்த்தாவந்து குற்றமறக் கிருபை பண்ணுவன்; இந்த உண்மையைக் கேட்பாயாக.*

இதனுள், முன்சொன்ன உபாயங் கூடாதே போனால் வேறோர் உபாயங் கூறியது கண்டுகொள்க.

காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக் - காண்கின்றார்
காண்பானுங் காணப் படும்பொருளும் இன்றியே
காண்கையினாற் கண்டனரே காண். 27

விளக்கவுரை : *காணுந் தொழிலை உடைய ஆன்மாவைத் தெரிவித்த பெரியோர்களே சிவனைக் காணாமற் காண்பார்கள்; காணாமற் காண்கின்ற தெப்படியென்னில், காண்கின்ற பேர்கள் காண்கின்றவனுங் காணப்பட்ட பொருளுமென்கிற இரண்டு தன்மையு மில்லாமற் காண்கையினாலே காணாமற் காண்பர்களென்று அறிவாயாக. இதனுள் நேயத்தழுந்தல் சொன்னது கண்டுகொள்க.*

பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் - பேசாதே
எண்ணொன்றும் வண்ண மிருக்கின்ற யோகிகள்பா
உண்ணின்றும் போகா னுளன். 28

விளக்கவுரை : *பேசாமையாகிய அருளைப் பெற்று அந்த அருளாலே பேசாமையாகிய சிவனைக் கண்டவர்களுக்குப் பேசாமையை உண்டாக்குங் கர்த்தாவானவன் பேசாம லுனுபவம் பொருந்தும்படிக்கு இருக்கிற பெரியோர்களிடத்திலே நின்று நீங்காமல் நிற்பன். இதனுள் சிவனுக் கிருப்பிடம் பெரியோர்களௌன்பது கண்டுகொள்க.*

ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற விடஞ்சிவமாம் - நாட்டற்று
நாடும் பொருளனைத்து நானா விதமாகத்
தேடுமிட மன்று சிவம். 29

விளக்கவுரை : *சலனமில்லாமலிருக்கிற திருவருளாகிய பதியைப் பொருந்தி அப்பால் தேட்ட மில்லாமலிருக்கிற இடம் சிவமாம். ஞானக்கண் இல்லாமல் நானாவிதமாக விசாரிக்கும் பொருளெல்லாவற்றையுந்*

தேடுமிடமல்ல சிவம். இதனுள், திருவருளைக் கூடிநிற்கு முறைமை சொன்னது கண்டுகொள்க.

பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிருந்து
பற்றைப் பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றதனைப்
பற்றுவிடி லந்நிலையே தானே பரமாகும்
அற்றமிது சொன்னே னறி. 30

விளக்கவுரை : *ஐம்பொறிகளினின்றுஞ் சீவிக்கப்பட்ட பஞ்ச இந்திரியங்களை நீக்குகிற ஒப்பற்ற திருவருளை யறிந்து அந்த அருளை இன்பமாகக் கொண்டிருந்து அப்பாற் பார்க்கின்ற சிவத்திலே பொருந்திப் பற்றுவிடாதிரு. அப்பொழுதே பேரின்பந் தோன்றும். இந்த உபதேசத்தை முடிவாகச் சொன்னேன் அறிவாயாக. இதனுள், திருவருளைக் கழன்றுநிற்கு முறைமை சொன்னது கண்டுகொள்க.*

உணராதே யாதும் உறங்காதே உன்னிற்
புணராதே நீபொதுவே நிற்கி - உணர்வரிய
காலங்கள் செல்லாத காத லுடனிருத்தி
காலங்கள் மூன்றினையுங் கண்டு. 31

விளக்கவுரை : *சிவானுபவத்தின்கண் வேறொன்றையும் உணராமல் நிருவிகாரி யாகாமலும் உன்னுடைய பெந்தத்தோடுங் கூடாமற் சிவத்துக்கும் அனுபவத்துக்கும் பொதுவாக நிற்பாயாகில், பாசம் ஆன்மா அருள் இவை மூன்றினுடைய அதிகார காலங்களை விசாரித்தறிந்து இந்தக் காலங்கள் செல்லாத பெத்தரால் அறிதற்கரிதாகிய விருப்பத்தோடுங் கூடியிருப்பை.*

அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்
அறிவின் அறிவவிழ்த்துக் கொண்ட - அறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான். 32

விளக்கவுரை : *சீடனே, மானிடரில் நாவையிழந்த மணியைப்போலப் பிரபஞ்சத்தை விட்டவர்கள் ஆன்மா ஆன்மபோதத்தின் வழியாய் நின்றால் அறிவு பலவகைப்படுமென்றறிந்து, திருவருளினாலே ஆன்மபோதத்தையிழந்த அறிவினராய்ச் சிவானுபவத்தோடுங் கூடி வாழ்ந்திருப்பர்.*

ஓசையெலாம் அற்றால் ஒலிக்குந் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென் றொத்தொடுங்கி - ஓசையினின்
அந்தத்தா னத்தா னரிவையுட னம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து. 33

விளக்கவுரை : *ஆன்மபோதமெல்லாமற்ருல் உண்டாக்கப்பட்ட அருளின் பிரகாசத்தின் வழியே சென்று அந்நத் திருவருளிலே பொருந்தி யொடுங்கில், ஆன்மபோதத்தின் முடிவிலே ஆனந்தத்தைக் கொடுக்கப்பட்ட சிவன் மகிழ்ந்து அம்பலமாகிய ஆன்மாவினிடத்திலே வந்து பொருந்தி, அருளோடுங்கூடி யானந்த நிருந்தத்தைப் பண்ணுவன்.*

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையாற்
சார்புணர்தல் தானே தியானமுமாஞ் - சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று. 34

விளக்கவுரை : *திருவருளை உணர்ந்து திருவருள் நீக்கும்படிக்கு ஒழுகினுலென்று திருவள்ளுவர் உரைத்தபடியினுலே, திருவருளை உணருகிறதே தியானமுமாம்; திருவருள் நீங்கும்படிக்கு ஒழுகினுல் அதுவே நல்ல சமாதியுமாம். இவை கைகூடினுல் நாம் துன்பப்படும்படிக்கு வினை பாசம் நம்மை வந்து பொருந்துவதில்லை.*

6. இன்புறு நிலை

அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ் - சென்று
கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயும்
ஒருமகடன் கேள்வ னுனக்கு. 35

விளக்கவுரை : *உனக்கு ஆவசியகமன்றி வரும் பஞ்சேந்திரியங்களும் உன்னுடைய போதமுஞ் சலனமில்லாமல் ஒருபடித்தாய் நிற்கவே சென்று நினைக்கிறதற்கு முன்னே அந்த நினைவழியும்படிக்குப் பொருந்தும் ஒப்பற்ற திருவருளுக்கு முதன்மையாகிய சிவன் உனக்கு முன்னிற்கும்.*

உண்டென்னில் உண்டாகும் இல்லாமை இல்லையெனில்
உண்டாகு மானமையி லோரிரண்டா - உண்டில்லை
என்னு மிவைதவிர்ந்த வின்பத்தை யெய்தும்வகை
உன்னிலவ னுன்னுடனே யாம். 36

விளக்கவுரை : *அனுபவமுண்டென்னில் அனுபவிப்பானுமுண்டாகும், அது இல்லையெனில் அனுபவமில்லை, ஆகையால் ஒன்றென்றும் இரண்டென்றுஞ் சொல்லப்படும் உண்டில்லையென்னும் முறைமை தவிர்த்த இன்பத்தைப் பொருந்தும் வகை விசாரிக்கில் கர்த்தா உன்னுடனே கூடி ஒன்ருயிருப்பன்.*

திருச்சிற்றம்பலம்

7. தத்துவ ஞானம்

தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாம் முதல்ஞன்கும் - மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் பார். 37

விளக்கவுரை : *தூல சரீரமாகிய அசுத்த மாயையில் உண்டாகிய முப்பத்தொரு தத்துவமும் அதற்கு மூலசரீரமாகிய முதல் நான்கு தத்துவமும் அதற்கு மேலாகிய சிவதத்துவமும் இப்படியாகப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களினுடைய முறைமைகளையும் விசாரித்தறிந்தார் இதுவரையும் பொருந்தி வந்த பிறவியாகிற பேற்றை அறுப்பார்; இதை உண்மையாக அறிவாயாக.*

இதனுள், பிறவியறுத்தற்கு ஏது தத்துவ விகாரமென்பது கண்டுகொள்க.

எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர்கோட் பாடுடைய
அத்தனையுஞ் சென்றங் களவாதே - சித்தமெனுந்
தூதுனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார். 38

விளக்கவுரை : *தத்துவங்கள் எவ்வளவோ தெரியாது, ஒவ்வொரு தத்துவங்கள் எந்தெந்தக் கோட்பாட்டை உடையதோ தெரியாது. அத்தனையும் பொருந்தி அளவிடாமற் சத்தாதிகளிடத்திலே தூது சொல்லுகிற உன்னுடைய போதத்தை விட்டாயாஞல், விசாரிப்பற்ற திருவருளிடத்திலேபோய் அதற்குப் பாதியாயிருக்கிற சிவனைத் தரிசிக்கலாம். அதை உண்மையாக அறிவாயாக. இதனுள், தத்துவ விசாரத்திலே தானே முழுதும் நிற்க வேண்டாமென்பது கண்டுகொள்க.*

சாம்பொழுதும் ஏதுஞ் சலமில்லை செத்தாற்போல்
ஆம்பொழுதி லேயடைய வாசையறிற் - சோம்பிதற்குச்
சொல்லுந் துணையாகுஞ் சொல்லாத தூய்நெறிக்கட்
செல்லுந் துணையாகுஞ் சென்று. 39

விளக்கவுரை : *ஆன்மபோதம் ஆணவ மலத்தோடே கூடும்பொழுது ஆன்மாவுக்குச் சற்றும் விசாரமில்லை, அப்படி ஒடுங்கினதுபோலக் கருவிகளுடனே கூடும்பொழுது நன்ருக ஆசையறவேணுமாஞல் அப்படி ஆசையறுதற்கு விருப்பு வெறுப்பற்றிருக்கிற சோம்பைத் துணையென்று ஆகமங்கள் சொல்லும். அதற்கு மாத்திரமோ துணை, உரையிறந்த மோட்சத்திலே செல்லுதற்குப் பொருந்தித் துணையாகும்.*

திருச்சிற்றம்பலம்

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது - வேண்டினது
வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால். 40

விளக்கவுரை : *வேண்டுமிடத்துப் பிறவாமையையே வேண்டவேணுமென்று திருவள்ளுவர் சொன்னபடியினாலே, வேண்டுமானால் அந்தப் பிறவாமை யொன்றுமே வேண்டுவது; விரும்பாமையை விரும்ப விரும்பினது வருமென்றும் அவர் சொன்னபடியினாலே, நம்மை விரும்பின கர்த்தா வினிடத்திலே விரும்பாமையை விரும்பிக் கேட்பாயாக. இதனுள், அவாவறுத்தலே பிறவாமைக்குக் காரணமென்பது கண்டுகொள்க.*

8. அருள்வழி நிற்றல்

அரண உணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றிற்
கரணமுங் காலுங்கை கூடும் - புரணமது
கூடாமை யுங்கூடும் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து. 41

விளக்கவுரை : *அரணாகிய திருவருளினிடத்திலே நின்று ஆன்ம போதத்தை நீக்கில் தத்துவங்களும் பிராணவாயுவும் இவன் வசமாகக் கைகூடும். இதுவரையுங் கூடாதிருக்கிற பரிபூரணமான கர்த்தாவும் வந்து கூடுவன். அவன் கூடினவுடனே அவனுக்குக் கூடாகிய ஆன்மாவுக்கு வாடாமையுங் கூடும். (புரணம் - பூரணம்; பரிபூரணமான கர்த்தா)*

இன்றிங் கசேதனமா இவ்வினைகள் ஓரிரண்டுஞ்
சென்று தொடருமவன் சென்றிடத்தே - என்றுந்தான்
தீதுறுவ ளுனாற் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று. 42

விளக்கவுரை : *இப்பொழுது இவ்விடத்தில் சீவன்முத்தனானவன் செய்யப்பட்ட சடமாகிய இவ்விருவினையும் அந்தமுத்தனெனப் பொருந்தின நேயத்திலே சென்று பொருந்தும்; எக்காலமுந் தன்னுடைய போதத்தையுந் தன்னையும் இழப்பாகக் கண்டவனானால் சிவனாகிய பதி கைவிடாமல் ஏற்றுக்கொள்ளுவன்; ஒன்றிலுந் தோய்வில்லாத கர்த்தா இவனோடு கலப்பானோவென்னில் திருவருளோடே கலந்திருக்கிறவனல்லவோ, ஆகையாற் கலப்பன். இதனுள், ஞானிக்கு வினையில்லை என்பது கண்டுகொள்க.*

அநாதி சிவனுடமை யால்எவையும் ஆங்கே
அநாதியெனப் பெற்ற அணுவை - அநாதியே

திருச்சிற்றம்பலம்

ஆர்த்த துயரகல வம்பிகிகையயோ டெவ்விடத்துங்
காத்தல் அவன்கடனே காண். 43

விளக்கவுரை : *எல்லா ஆன்மாக்களும் அனுதியே தொடுத்துச் சிவனுக்கு உடைமையாகையால் சிவனைப்போல அனுதித்தன்மை பெற்ற ஆன்மாவை அனுதியே பெந்தித்த மலமாயை கன்மமென்கிற துன்பம் நீங்கும்படிக்குத் திருவருளுடனே கூடிப் பெத்தத்திலும் முத்தியிலுங் காத்துக்கொள்ளுதல் சிவனுக்குக் கடனே என்றறிவாயாக.*

இதனுள், பெத்தத்திலும் முத்தியிலும் ஆன்மாவுக்குச் செயவில்லை என்பது கண்டுகொள்க.

தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டித் - தம்மையொரு
பூவாக்கிப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றை யுளன். 44

விளக்கவுரை : *தம்மிடத்திலே அருளாகிய சிவலிங்கத்தைக் கண்டு அந்தச் சிவலிங்கத்தைத் தாம் பணிந்து தம்முடைய பத்தியாகிய திருமஞ்சனத்தை அபிஷேகம் பண்ணித் தம்மை ஒப்பற்ற திருப்பள்ளித் தாமமாக்கித் தாமென்கிற முதலழியாமல் சாத்திப் பூசித்தால் அப்பொழுதே இடைவிடாமல் உன்னிடத்திலே நேயம் பொருந்தும். இதனுள், ஞானபூசை கண்டுகொள்க.*

தன்னைப் பெறுவதன்மேற் பேறில்லைத் தானென்றுந்
தன்னைத்தான் பெற்றவன்ரு ஞரென்னில் - தன்னுலே
எல்லாந்த னுட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கு மிவன். 45

விளக்கவுரை : *பல பேறுகளுக்குள்ளேயுந் தன்னைப் பெறுதற்கு மேற்பட்ட பேறு ஒன்றுமில்லை, தன்னைப் பெற்றவன் ஆரென்னில் தன்னுலே எல்லாமாகிய திருவருளைத் தன்னிடத்திலே பெற்று முன்னே கொண்ட ஆன்மபோதத்தை விட்டு எக்காலமும் எவ்விடத்தும் வியாபித்து நிற்பன்; இப்படிப்பட்டவனே தன்னைப்பெற்றவன்.*

இதனுள், இந்த நிலைமையை ஆன்மாவுக்குள்ளே தன்னியல் என்பது கண்டுகொள்க.

துன்பமாம் எல்லாம் பரவசனுய்த் தான்றுவளில்
இன்பமாந் தன்வசன யேயிருக்கி - லென்பதனுல்
நின்வசனு யேயிருக்கின் நின்னுடனும் நேரிழையாள்
தன்வசனு யேயிருப்பன் ரூன். 46

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *ஆன்மா மலமாயை கன்மங்கள் வசமாய்த் துவண்டானுனல் இவனுக்கு வருகிறதெல்லாந் துன்பமேயல்லாமல் இன்பஞ் சற்றுமில்லே, தன்வசமாயிருந்தானுனல் இவனுக்கு வருகிறதெல்லாம் இன்பமேயல்லாமல் துன்பஞ் சற்றுமில்லேயென்று வேதாகமங்கள் சொல்லுகையால், நீ மலவசத்தனல்லாமல் உன்வசத்தனுயிருந்தாயானுல் அருள் வசமாய் இருக்கப்பட்ட கர்த்தா உன்னுடனே வந்து பொருந்துவன்.*

செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனே
ஒத்தாரே யோகபர ரானவர்க - எத்தாலும்
ஆராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் செல்வரதன் பின். 47

விளக்கவுரை : *கருவிகளே விடுகிறதே முத்தியென்னில் அவர்கள் அனுபவத்தை இழந்தவர்களே, கருவிகளுடனே பொருந்தி இருக்கச் செய்தே அந்த நேயத்திலே பொருந்தி இருக்கிறவர்களே அத்துவிதத்திலே மேம்பட்டவர், எந்த விதத்தாலும் இவன் வசமாகப் பொருந்தாத கருவிகளினுலே கட்டப்பட்டு நேயத்திலே பொருந்தாதவர்கள் இடைவிடாமற் கருவிகளின் வழியே சென்று செனனமரண துக்கப்படுவர். இதனுள், பெத்தத்துக்கும் முத்திக்குங் கருத்து வேறுபாடல்லாமற் கருவியொன் றென்பது கண்டுகொள்க*

கண்ணும் கருத்தும் கடந்ததொரு பேறேயுங்
கண்ணுங் கருத்துங் களிகூர - நண்ணி
வடமடக்கி நிற்கும் வடவித்தே போல
உடனடக்கி நிற்பார்கள்கா ணுற்று. 48

விளக்கவுரை : *இந்திரியங்களுக்கும் அந்தக்கரணங்களுக்கும் அப்பாற்பட்ட பொருளானுலும் தங்கள் ஞானத்தாலும் சிவஞானத்தாலும் மகிழும்படிக்கு நேயத்தைப் பொருந்தி, ஆலமரத்தை அடக்கிநிற்கும் ஆலவித்துப்போல, சிவானுபவத்தைத் தங்களிடத்திலே அடக்கி நிற்பர்கள் ஞானவான்கள். இந்த உண்மையைச் சிவஞானத்தை பொருந்தி அறிவாயாக.*

இதனுள், சிவானுபவம் ஞானவான்களிடத்திலே யன்றி மற்றிடங்களிலே நில்லாதென்பது உவமையாற் கண்டுகொள்க.

வானகமும் மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளே
ஊனகத்தே யுன்னுமதெ என்றனேயேல் - ஏனகத்து
வாதனேயை மாற்றும் வகையதுவே மண்முதலாம்
ஆதனமே அன்றே அதற்கு. 49

விளக்கவுரை : *வானினிடத்தும் மண்ணினிடத்தும் வியாபித்திருக்கிற கர்த்தாவை ஏகதேசப்பட்டவனேப்போல ஊனுகிய சரீரத்திலே தியானிப்பானேன் என்பையாகில், அவன் வியாபித்திருக்கினும் சரீரத்திலே*

பெந்தித்திருக்கிற வாதனை நீக்கும் பொருட்டுத் தியானிக்கவேணும்; அதன்றியும் பிருதிவிமுதல் நாதமீருகிய தத்துவங்கள் கர்த்தாவுக்கு ஆசனமல்லவோ, ஆகையாலும் தியானிக்க வேணும். இதனுள், நேயத்தை உள்ளபடி பெற்றிருந்தாலும் இடைவிடாமல் தியானசமாதிகளுடனே கூடியிருக்கவேணுமென்பது கண்டுகொள்க.

கல்லிற் கமரில் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் - சொல்லும்
அகமார்க்கத் தாலவர்கண் மாற்றினர்கா ணையா
சகமார்க்கத் தாலன்றே தான். 50

விளக்கவுரை : *சீடனே, மலவாதனை கெடுகிற நீதியைச் சொல்லுமிடத்து, கல்லினிடத்தும் கமர் நிலத்தினிடத்தும் பிரகாசம் பொருந்திய வாளினிடத்தும் சந்தனச் சாணையினிடத்தும் பெலத்த பலகையினிடத்தும் திருக்குறிப்புத் தொண்டரும் அரிவாட்டாய நாயனுரும் கோட்புலி - நாயனுரும் மூர்த்தி நாயனுரும் மூர்க்க நாயனுரும் சரீரத்தொண்டினுலே மலவாதனையைக் கெடுத்தார்கள், சகமார்க்கமாகிய யோக பாதத்தாலல்லவே.*

(கல் - கலந்தவறியதால் திருக்குறிப்புத் தொண்டர் கல்லில் தலையை மோதிக்கொண்டார்; கமர் - அரிவாட்டாயர் நிவேதனப் பொருள் கமர்நிலத்தே சிந்தியதனுல் தம் கழுத்தை யரிந்தார்; வாள் - சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரைக் கோட்புலி - வாளால் கொன்ருர்; சாணை - சந்தனக்கல்லில் மூர்த்தி தம் கையை அரைத்தார்; வல்லுப் பலகை - சூதாட்டத்தாற் பொருள் பெற்று மூர்க்கர் அடியாரை வழிபட்டார்; வல் - சூதாடு கருவி) இதனுள், யோகத்தைப் பெற்றிருந்தாலும் சரியை கிரியையாகிய திருத்தொண்டு செய்யவேணுமென்பது கண்டுகொள்க.

9. சிவப்பேறு

உள்ளும் புறம்பும் நினைப்பொழியில் உன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினொடுந் - தெள்ளி
அறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய். 51

விளக்கவுரை : *நீ எங்கும் ஒருபடித்தாய் வியாபித்திருக்கையால் உள்ளென்றும் புறம்பென்றும் நினையாதிருந்தால் உன்னிடத்திலே திருவருளோடுங் கூடிச் சிவன் பொருந்துவன். நினையாமைக்கு உபாயமே தென்னில் ஞானசாத்திரங்கள் ஆராய்ந்தறிந்து நினைவை யொழிதலல்லாமலும் அன்புண்டானுல் அறுபத்துமூவரைப் போலத் திருத்தொண்டிலே பொருந்தி நினைவை யொழி. இவையிரண்டுங் கூடாதென்ருல் இயன்றமாத்திரஞ் சிவபணிவிடைகளைச் செய்வாயாக. இதனுள், ஆன்மா விகாரமற்றிருத்தற்கு மூவகை உபாயஞ் சொன்னது கண்டுகொள்க.*

திருச்சிற்றம்பலம்

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக் - கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
யாமறியும் அன்பன் றது. 52

விளக்கவுரை : *கண்ணப்பருடைய அன்புபோல ஓரன்பு இல்லை என்று மாணிக்கவாசக மூர்த்தி திருவுளம்பற்றின படியினாலே கண்ணப்பரன்பு போன்ற அன்பைக் கண்ணப்ப நாயனாரறிதலுங் காளத்தியாரறிதலு மல்லாமல் நாமறியப்பட்ட அன்பல்ல அந்த அன்பு.*

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தா லவிழ்க்க - அவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல். 53

விளக்கவுரை : *நைந்து குழிந்த சீலையிலே நழுவக்கட்டி அருவருக்கத்தக்க சோற்றைப் பாவனைகழன்ற மனதினாலே யவிழ்க்கத்தக்கதாகத் தாழ்ந்த சடையினையுடைய சிவனுக்கு அந்தச் சோறு நல்லமுதாக இருந்தது. இது ஆருடைய செய்தியென்னின் மெய்யன்பினையுடைய சேந்தனார் செய்த செயல். இக்கதையை ஐதிகத்தாற் கேட்டறிக.*

சுரந்த திருமுலைக்கே துய்ய சிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி வாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு. 54

விளக்கவுரை : *திருஞானசம்பந்தப் பிள்ளையார் கண்ணிலே நீர்சுரந்து பரமேசுவரியுடைய திருமுலையினிடத்திலே சுரந்த தூய்மையாயிருக்கிற திருஞானமாகிய பாலைக் குடித்தாரென்று அவரவரே சொல்லத் தக்கதாகப் பாவனைகழன்ற மனமுடையாளாகிய தென்பாண்டிமா தேவி யன்பிருந்தபடி யினாலே பால் சுரந்த தனத்தை உடையவளானாள்.*

அன்பேயென் அன்பேயென் றன்பா அழுதரற்றி
அன்பேயன் பாக அறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான். 55

விளக்கவுரை : *சிவனை அன்பே என்னன்பே என்று அன்பினாலேயழுது கூப்பிட்டு அந்தச் சிவனாகிய அன்பே தனக்கன்பாகத் தன்னுடைய போதங் கெடுகிறதே தனக்கன்பு. இதல்லாமல் தீர்த்தமாடுகிறதும் சிவார்ச்சனை முதலாகப் பல பணிகள் செய்கிறதும் அன்பாகிய மரம் வளருகிறதற்குச் சொல்லப்பட்ட வித்தல்லவோ. இதனுள், சரியை கிரியா யோகங்களெல்லாம்*

அன்பு வருகிறதற்குக் காரணமென்பது கண்டுகொள்க. இது நான்கு செய்யுனினும் அன்பின் இலக்கணங் கண்டுகொள்க.

எல்லார் அறிவுகளின் தாற்பரிய மென்னறிவு
செல்லு மிடத்தளவுஞ் சென்றறிந்தேன் - வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவெ மற்றவற்றுள்
ஏதமறக் கண்ட திது. 56

விளக்கவுரை : *பன்னிரண்டு சமயத்தாருடைய அறிவுகளின் முடிவை என்னுடைய அறிவு செல்லுமிடமட்டும் யான் சென்று விசாரித்தறிந்தேன். அந்தச் சமயங்களுக்குள்ளே எந்த விதத்தினுலும் பல வாதனையை நீக்கிக்கொள்ளுகிற முறைமை யொன்றுமே குற்றமறக் கண்ட கொள்கை. மற்றக் கொள்கையெல்லாம் குற்றமுடைத்தாயிருக்கும்.*

10. ஞானமும் அன்பும்

வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம்
வித்துமத னங்குரமு மெய்யுணரில் - வித்ததனிற்
காணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலற்ருர் பேறு. 57

விளக்கவுரை : *ஆன்மாக்களுக்கு மெய்ஞ்ஞானம் பிரவேசித்தவிடத்துச் சிவனும் ஆன்மாக்களும் எப்படியிருப்பார்களென்னில் வித்தும் வித்தினிடத்திலே அடங்கி யிருக்கப்பட்ட அங்குரமும் போன்றிருப்பார்கள். வித்தையும் அங்குரத்தையும் விசாரிக்குமிடத்து வித்தினிடத்திலே அங்குரமென்ெருரு முதல் காணுதபடியினுலே சிவனிடத்திலே தம்மை ஒருமுதலாகக் காணுர்; தம்மை ஒரு முதலாகக் கண்டவர் சிவனைப் பேணுராகையாலே சிவானுபவத்தை இழந்தவர்கள். இதனுள், நேயத்திலே தான் பொருந்தியிருந்தாலும் தானென்ெருரு முதலாகாமலிருக்க வேணுமென்பது உவமையாற் கண்டுகொள்க.*

11. பரமுத்தியின் இயல்பு

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானென்று - நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான். 58

விளக்கவுரை : *சிவனும் ஆன்மாவுங் கூடி நிற்கிற நிலைமை எப்படியென்னில் ஒன்றுமல்ல இரண்டுமல்ல உள்ளதுமல்ல இல்லதுமல்ல நன்றுமல்ல தீதுமல்ல ஆன்மாவென்று சொல்லிநின்ற நிலையுமல்ல சிவனுமல்ல*

சிவஞானமுமல்ல ஆதியுமல்ல அந்தமுமல்ல. இந்த வகையெல்லாம் அல்லவென்றல் நாசமோ வென்னில் உரைக்கப்படா(த) தென்றது கருத்து.

செய்யாச் செயலையவன் செய்யாமற் செய்ததனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினு - லெய்யாதே
மாணவக வப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கும்
ஆணவமு மற்ற தறி. 59

விளக்கவுரை : *ஒருவராலுஞ் செய்யாத செயலைச் சிவன் செய்யாமல் நீயாகச் செய்து சாதித்துப் பின்பு அந்தச் செயலை நீ செய்யாத செயலினுலே சிவனிடத்திலே செலுத்தினல் அப்பொழுதே ஆசையை வளர்க்கும் ஆணவமலம் அறும். அற்றால் சீடனே இவைவிடாமற் சிவானுபவத்தை அறிவாயாக.*

ஏதேனும் காலமுமாம் ஏதேனும் தேசமுமாம்
ஏதேனுந் திக்கா சனமுமாம் - ஏதெனுஞ்
செய்தா லொருவலுமாஞ் செய்யாச் செயலதனைக்
செய்யாமற் செய்யும் பொழுது. 60

விளக்கவுரை : *ஒருவராலுஞ் செய்யப்படாத செயலைத் தான் செய்யமற் செய்தானுயில் அவனுக்கு எந்தக் காலமுமாம் எந்தத் தேசமுமாம் எந்தத் திக்குமாம் எந்த ஆசனமுமாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் விடுதலுமாம். இந்த முறைமை பெத்தரிடத் துண்டாகிற் பதிதராவரென்பது கருத்து.*

செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துபலர்
எய்தற் கரியதனை யெய்தினுர்கள் - ஐயோநாஞ்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு. 61

விளக்கவுரை : *ஆன்மபோதத்தால் செய்தற்கரிய செயல்கள் பலவற்றையுஞ் செய்து திருநீலகண்டக் குயவனுர் முதலாகிய சில நாயன்மார் பெறுதற்கரிய பேற்றைப் பெற்ருர்கள். சீடனே, நாம் அவர்களைப்போலே ஆன்மபோதத்தால் செய்யாமற்செய்து வினையையறுக்கலாயிருக்க நாம் செய்யாதிருத்தலாகாத முறைமை. அறுபத்துமூவர் செயல் செய்து பெற்ருர்கள்.*

இப்பொருள்கள் யாதேனும் ஏதெனினும் ஒன்றுசெய்தல்
எப்பொருளுஞ் செய்யா தொழிந்திருத்தன் - மெய்ப்
பொருளைக் கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலாம்
உண்டிருப்ப தென்னே வுரை. 62

விளக்கவுரை : *உலகத்திலே காணப்பட்ட மனிதரெல்லாந் தமக்குள்ள பதார்த்தங்களுக்குள்ளே எந்தப் பதார்த்தமானுலும் அதிலே சிறிதானுலும் ஒருபொழுதானுலும் குருலிங்க சங்கமத்துக்குச் செய்தல் - ஒருபதார்த்தமுந் தான் தேடாமல் துறந்திருத்தல் - சிவனைக் கண்டிருத்தல் இவை மூன்றுஞ்*

செய்யாதே, உண்டு சரீரத்தைப் பேணி வாழ்ந்திருக்கிறது ஏது காரிய நிமித்தமோ சொல்லுவாயாக மாணாக்கனே.

12. தன்னிழுப்பு

வீட்டிலே சென்று வினையொழிந்து நின்ருலும்
நாட்டிலே நல்வினைகள் செய்தாலுங் - கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேற் றக்கனர் வேள்விசெய்த
மாத்திரமே யாங்கண்டாய் வந்து. 63

விளக்கவுரை : *துறவறத்திலே சென்று தீவினைகளை யொழித்து நின்ருலும் நாட்டிலே வந்து பொருந்தி நல்வினைகளைச் செய்தாலுங் கூடாகிய சிவனிடங்களாகிய உன்னை யடக்காதேபோனல் அந்தக் கிரியைகளெல்லாம் தக்கன் செய்த வேள்வி தீவினையாவதுபோலத் தீவினையா மென்றறிவாயாக.*

சிவன்முதலே அன்றி முதலில்லை என்றுஞ்
சிவனுடைய தென்னறிவ தென்றுஞ் - சிவனவன
தென்செயல தாகின்ற தென்று மிவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான். 64

விளக்கவுரை : *சிவனுடைய இச்சையன்றி நமக்கிச்சை யில்லையென்றும் சிவனுடைய அறிவன்றி நமக்கறிவில்லை யென்றும் சிவனுடைய கிரிமையன்றி நமக்குக் கிரியையில்லையென்றும் இவைகளைத் தன்னுடைய செய்தியாகக் கொள்ளாமையே சீவன்முத்தித்தன்மை.*

13. சிவநெறியின் சிறப்பு

இன்றிச் சமயத்தின் அல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார் -இன்றிங்கே
அங்க முயிர்பெறவே பாடு மடியவரார்
எங்குமில்லை கண்டா யிது. 65

விளக்கவுரை : *இந்தக் கலியுகத்துக்குள்ளே சைவசமயத்தி லல்லது திருவம்பலத்திலே ஊமைப் பெண்ணைப் பேசுவித்து அவளுடனே வார்த்தை சொல்லிநின்ற பேருண்டோ, அல்லாமலும் இந்தப் பூமியிலே எலும்பு உயிர் பெறும்படிக்குத் தமிழ் பாடினவர்கள் எந்தச் சமயத்திலுமில்லை. இந்த உண்மை அறிவாயாக. இதனுள், சைவசமயமே சிறப்பென்பது கண்டுகொள்க.*

விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கள் மீண்டுந்
தெரிந்துந் தெரியாது நிற்பர் - தெரிந்துந்
தெரியாது நிற்கின்ற சேயிழைபா லென்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று. 66

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *வியாபித்து நின்றுஞ் சரீரத்திலே நின்றுங் கர்த்தாவை உள்ளடக்கிக்கொண்டு நிற்பர், அல்லாமலும் விடயங்களை யறிந்து மறியாதிருப்பர், பிரபஞ்சத்தை யறிந்தும் விகாரமற்றிருக்கிற திருவருளைப் பிரியாத சிவனைப் பெற்று.*

ஆதனமும் ஆதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச் - சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்பர்
ஏதமறக் கண்டவர்க ளின்று. 67

விளக்கவுரை : *ஆதனமாகிய ஆன்மாவும் ஆதனியாகிய தானுமாய் வியாபித்து நின்ற கர்த்தாவாகிய எல்லா ஞானமுடையவனாலே நன்றாய்த் தெளிந்து ஆன்மாவைச் சிவனிடத்திலே பொருத்தி மேலாகிய சிவனாயிருப்பார் ஆரென்னில் இப்போது திரிபதார்த்தங்களைக் குற்றமறத் தெரிசித்தவர்கள்.*

தாமடங்க இந்தத் தலமடங்குந் தாபதர்கள்
தாமுணரி லிந்தத் தலைமுணருந் - தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து. 68

விளக்கவுரை : *ஞானவான்கள் இந்திரிகளை அடக்கினார்களானால் இப்பூமியிலுள்ள பக்குவான்மாக்களும் இப்படியடங்குவார்கள். தாம் ஏதொரு பொருளை விசாரித்தார்களானால் பக்குவரும் அப்பொருளை விசாரிப்பார்கள். தாம் வெறுத்தார்களானால் செல்வமும் புகழுங் கலைஞானமும் விரும்பி நில்லாது.*

14. அணைந்தோர் தன்மை

துரியம் கடந்தசுடர்த் தோகையுட என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும்
ஆக்குவிப்ப னன்பர்க் கவன். 69

விளக்கவுரை : *நின்மல துரித்தைக் கடந்த திருவருளோடே கூடியிருக்கிற கர்த்தா தன்னையடைந்த அன்பர்க்குச் சாக்கிரத்திலே துரியத்தைக் கொடுத்துத் தன்னுடைய கிருத்தியங்களையுங் கொடுப்பன்.*

ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் - ஏடெதிர்வெப்
என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைகாண் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல். 70

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *ஓடங் கரையேற்றுதல், முத்துச் சிவிகையேறுதல், உலவாக்கிழி பெறுதல், திருமறைக்காட்டில் கதவடைத்தல், ஆண்பனையைப் பெண்பனையாக்குதல், பொற்றுளம் பெறுதல், பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்குதல், ஆற்றில் ஏடு எதிரேறப் பண்ணுதல், பாண்டியனுக்கு வெப்புத் தவிர்த்தல், எலும்புக்குயிர் கொடுத்தல் இந்தக் கிரியைகளெல்லாம் மிகுந்த புகழையுடைய சம்பந்தப் பிள்ளையார் செய்தி.*

கொல்கரியின் நீற்றறையின் நஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாக் கடனீந்தல் - நல்ல
மருவார் மறைக்காட்டின் வாசல்திறப் பித்தல்
திருவாமூ ராளி செயல். 71

விளக்கவுரை : *யானையினாலேயும் நீற்றறையினாலேயும் நஞ்சினாலேயும் உண்டான கொலையை நீக்குதல் கல்லுத் தெப்பமாகக் கடலை நீந்துதல் வாசனை கமழப்பட்ட திருமறைக்காட்டிலே வாசலைத் திறப்பித்தல் இவையெல்லாந் திருநாவுக்கரசருடைய செய்தி.*

மோகம் அறுத்திடின்நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்வே னியான். 72

விளக்கவுரை : *ஆசையற்றால் நாம் மோட்சங் கொடுப்போமென்று ஆகமங்கள்தோறுஞ் சொன்ன கர்த்தாவைப் பெண்களிடத்தில் தூதாளாக அனுப்பின சுந்தரமூர்த்தி தொண்டினை நான் நன்றென்று சொல்வேனோ தீதென்று சொல்வேனோ.*

பாய்பரியோன் அந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன். 73

விளக்கவுரை : *பரமேசுவரன் கொடுக்கப்பட்ட மேலாகிய ஆனந்தமாகிய பிரயோசனத்தைத் தூய தாமரைமலர் போன்ற திருவாக்கினாலே செய்யுளாக்கி மாயமாகிய கருக்குழித்துன்பத்தை நாமறியாத படிக்கு அனுக்கிரகம் பண்ணினான் காண் தேன்போன்ற மாணிக்கவாசகன். இவை நான்கு செய்யுளினினும் ஞானவான்களுடைய மகத்துவங் கண்டுகொள்க.*

அம்மையிலும் இம்மையிலும் அச்சந் தவிர்த்தடியார்
எம்மையுமாய் எங்கும் இயங்குதலான் - மெய்ம்மைச்
சிவயோக மேயோக மல்லாத யோகம்
அவயோக மென்றே அறி. 74

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *பரமுத்தியினிடத்திலுஞ் சீவன்முத்தியினிடத்திலும் உண்டான அச்சங்களையுந் தீர்த்துச் சிவனடியாருக் கடிமையுமாய் எங்கும் வியாபித்திருக்கையால் உண்மையாகிய சிவனோடே பொருந்துதலே நல்ல பொருத்தம். இல்லாத கன்மயோகங்களெல்லாம் அவயோக மென்றறிவாயாக.*

மன்னன் அருள் எவ்வண்ணம் மானுடர்பால் மாணவக
அன்ன வகையே யரனருளு - மென்னில்
அடியவரே எல்லாரும் ஆங்கவர்தாம் ஒப்பில்
அடியவரே எல்லாம் அறி. 75

விளக்கவுரை : *(மாணவனே) மனிதரிடத்திலே நன்மை தீமைகளையறிந்து (மன்னன் அருள் செய்யுமாறுபோலக்) கர்த்தாவுங் கிருபை பண்ணுவன். அப்படி உவமை சொன்னாலுஞ் சர்வான்மாக்களுங் கர்த்தாவுக்கே அடிமை. அப்படியானாலுங் கர்த்தாத் திருமேனி கொண்டு நம்மைப் போல்வரானாற் பெத்தர் நீங்கிலாக முத்தான் மாக்களே அடிமை என்றறிவாயாக. இதனுள், சிவன் பெத்தருக்கு அருவமாயும் முத்தருக்கு உருவமாயும் இருப்பனென்பது கண்டுகொள்க.*

உடம்புடைய யோகிகள் தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத் தாக்கத் - தொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
இளைப்பதுமொன் றில்லை இவர். 76

விளக்கவுரை : *உடம்புடனே கூடின சீவன்முத்தர்கள் தங்களிடத்திலே பொருந்தின விஷயமடங்கலையுந் தமக்குப் பேரின்பமாகிய சிவனிடத்திலே கொடுத்தலினாலே, அவர்கள் ஆகாமியத்திலே பொருந்தி மேற்சரீர மெடுப்பதுமில்லை ஆணவமலத்திலே யொடுங்குகிறதுமில்லை தத்துவச் சேட்டைகளிலே யினைக்கிறதுமில்லை. ஒன்றென்பது சற்றென்னும் பொருள்பட நின்றது. இதனுள், பரமுத்தித்தன்மை சீவன்முத்தியிலே பெறுவர்களென்பது கண்டுகொள்க.*

15. சத்தி சிவமாதல்

பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை யுள்ளபடி - பேரின்பங்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த வின்னமுதம்
உண்டவரே யுண்டார் சுவை. 77

விளக்கவுரை : *பாற்கடலிலே உதிக்கப்பட்ட அமுதத்தை உண்டவர்களே அதனுடைய சுவையை அறிந்தவர்கள். அதுபோல, இன்பமான சத்தியுடனேகூடி ஒப்பற்ற இன்பத்தை உடைய சிவனை உள்ளபடி தரிசித்தவர்களே பேரின்பத்தை அடைந்தவர்கள்.*

திருச்சிற்றம்பலம்

நங்கையினுன் நாமனைத்துஞ் செய்தார்போல் நாடனைத்து
நங்கையினுற் செய்தளிக்கு நாயகனும் - நங்கையினும்
நம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிதுகாண்
எம்பெருமா ஞர்த மியல்பு. 78

விளக்கவுரை : *நம்முடைய கையினுலே நாம் எல்லாத் தொழிலையுஞ் செய்தாற்போல, ஆறத்துவாவையுஞ் சத்தியினுலே உண்டாக்கப்பட்ட சிவனும் அந்தச் சத்திக்கு நடுவே இருப்பனென்று நாட்டப்படுவன். எம்முடைய கர்த்தாவினியல்பு இப்படி. சிவன் கிருத்தியம் பண்ணுனென்பது கருத்து.*

பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்ருர்போல்
அந்நிற மண்ணலு மம்பிகையுஞ் - செந்நிறத்தள்
எந்நிறத்த ளாயிருப்ப ளெங்கள் சிவபதியும்
அந்நிறத்தனு யிருப்ப ணுங்கு. 79

விளக்கவுரை : *பொன்னிறம் போன்ற கர்த்தாவுஞ் சத்தியும் எப்படி இருப்பார்களென்னில், பொன்னிறம் பொறகட்டியிடத்தும் பொற்பூணினிடத்தும் ஒரு தன்மையா நின்றதுபோல சிவந்த நிறத்தையுடைய சத்தி எவ்வண்ணமாயிருந்தாலும் எம்முடைய (கர்த்தாவாகிய சிவன் அந்த இடங்கள்தோறும் அவ்வண்ணமாகவே இருப்பன். திருவருளாகிய சத்தியையன்றிச் சிவனுகிய) கர்த்தாவுமில்லை என்பது கருத்து.*

தாரத்தோ டொன்ருவர் தாரத்தோர் கூருவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர் - தாரத்தின்
நாதாந்தத் தேயிருப்பர் நற்ருனத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு. 80

விளக்கவுரை : *சிவன் சத்தியோடே ஒன்ருக இருப்பன், சத்திக்கு ஒருகூருக இருப்பன், சத்தியோடே ஆறத்துவாவிலும் வியாபித்து நிற்பன். சத்தியினுலே இன்பத்தின் முடிவிலே யிருப்பன், நல்ல தானமாகிய ஆன்மாவிடத்திலே யிருப்பன், வேதத்தின் முடிவிலே யிருப்பன். இப்படியிருப்பினும் அவற்றுக்கெல்லாம் வேறுமாயிருப்பன்.*

எண்ணிறந்த லீலையையுடைய னென்பது. இவை மூன்று செய்யுளினினும் பஞ்சகிருத்தியம் நடத்து முறைமை கண்டுகொள்க.

ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்க ளொன்ருக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் - இன்றுரைக்க
என்னு லியன்றிடுமோ வென்போல்வா ரேதேனுஞ்
சொன்னுல்தா னேறுமோ சொல். 81

விளக்கவுரை : *ஒரு நூல் சொல்லப்பட்ட பொருளை ஒரு நூல் சொல்லாது; சாத்திரங்கள் பலவும் நியமமாகப் பூமியின் கண்ணேநின்று இது பொருளென்று*

நிச்சயித்துச் சொல்லமாட்டா; ஆகையால், என்னாலே இது பொருளென்று சொல்லப்படுமோ, படாது. என்னைப் போன்றவர்களாய் யாதானுமோர் சொல்லைச் சொன்னார்களாயினும் அந்தச் சொற்பொருளினாலே சொல்லுமோ சொல்லாதோ, இதற்கு உத்தரமுண்டாகிற் சொல்லுவாயாக.

இதனுள், சாத்திரங்களாலே கர்த்தாவை அறியப்படாதென்பது கண்டுகொள்க.

யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாக னிலச்சினையே - ஆதலினாற்
பேதமே செய்வா யபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின். 82

விளக்கவுரை : *எல்லா உலகங்களிலும் எந்த ஏதுவிலே யானாலும் நடக்கிற கிரியைகளெல்லாம் எல்லாவிடங்களிலும் பொருந்தியிருக்கிற கர்த்தா வினுடைய ஆக்கினையே ஆகையால் சடசித்துக்களிரண்டுக்குஞ் செய்தியில்லை. இந்த தன்மையறிந்து பின்பு சிவனைப் பேதமாக்கித் தியானத்தைச் செய். அதுவன்றியும் ஐக்கியமாக்கி அவையன்றியும் நீக்கம் ஐக்கியம் இரண்டுமாக நிற்பாய். நீ இவை மூன்றிலே ஒன்றினைச் செய்வாயாக.*

நீ சுட்டற்று நிற்கவே நிலைமை கூடுமென்பது கருத்து.

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுணின் றுடன் மகிழ்ந்தானுஞ் - சென்றுடனே
எண்ணுறுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்றானும்
பெண்ணுறநின் றாடும் பிரான். 83

விளக்கவுரை : *அருட்சத்தியோடுங்கூடி ஊனக்கூத்து ஞானக்கூத்து நடிக்கப்பட்ட கர்த்தா ஞானாசாரியன் கற்பித்த நிலையிலே நின்றவர்களுக்கல்லாமல் நிலைத்தப்பினவர்களுக்கு வெளிப்படான். திருவம்பலத்திலே நிருத்தத்தைப் பண்ணினவனும் எண்ணப்பட்ட பஞ்சபூத முதலாக அட்டமூர்த்தமாகப் பொருந்தி அவையிற்றிலே வியாபித்து நின்றானும் அந்தக் கர்த்தாவே. காணப்பட்ட ரூபங்களெல்லாம் கர்த்தாவின் வடிவே யென்பது கருத்து.*

16. உணர்விறந்து உணர்தல்

சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச் - சிவமென்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி. 84

விளக்கவுரை : *பெத்தத்திலே ஆன்மபோதஞ் சீவித்தாற்போலச் சிவமொன்றுமே பொருளாக அந்தப் பொருளாகிய யிருத்தலல்லாமல்*

சிவமென்றொருபொருளைப் பாவிக்கிறவர்களும் ஆன்மபோதங்கெடப் பொருளிலே சென்று பொருந்துகிறவர்களும் பூமியின் கண்ணேயுண்டோ.

இவையிரண்டுங் கேவலசகலக் குற்றமென்பது கருத்து.

17. பரம சித்தாந்தம்

அதுவிது வென்றும் அவனானே என்றும்
அதுநீயே யாகின்று யென்றும் - அதுவானேன்
என்றுந் தமையுணர்ந்தா ரெல்லா மிரண்டாக
ஒன்றாகச் சொல்வரோ வுற்று. 85

விளக்கவுரை : *அதுவென்றும் இதுவென்றும் அவனென்றும் நானென்றும் அது நீ யாகின்று யென்று அது நானாகின்றேனென்றும் இப்படி இரண்டாயிருக்கவும், ஆன்மதெரிசனைப்பட்ட பெரியோர்களெல்லாம் மனம்பொருந்தி ஒன்றென்று சொல்லுவார்களோ, சொல்லார்கள்.*

ஈருகி யங்கே முதலொன்று ஈங்கிரண்டாய்
மாருத வெண்வகையாய் மற்றிவற்றின் - வேருய்
உடனு யிருக்கு முருவுடைமை யென்றுங்
கடனு யிருக்கின்றான் காண். 86

விளக்கவுரை : *சங்கார காலத்திலே நிட்களமாயும் சிருட்டி காலத்திலே நிட்களசகளமாயும் அட்டமூர்த்தியாயும் இவற்றுக்கெல்லாம் வேருயும் இவற்றுக்கெல்லாம் உடனுயும் இருக்கின்ற அருள் வடிவுடைமையைக் கர்த்தா எக்காலமும் முறைமையாகக் கொண்டிருப்பன்.*

உன்னுதரத் தேகிடந்த கீடம் உறுவதெல்லாம்
உன்னுடைய தென்னுநீ யுற்றனையோ - மன்னுயிர்கள்
அவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்றசிவன் பால். 87

விளக்கவுரை : *உன் வயிற்றிலே பிறந்த புழுக்கள் சுகந் துக்கமெல்லாம் உன்னுடைய சுகதுக்கமென்றுஞ் சொல்லாய்; அந்தச் சுகதுக்கத்தை நீ பொருந்தினவனுமல்ல, செவ்வையாக வியாபித்துநின்ற சிவனிடத்திலே நிலைபெற்ற உயிர்கள் பிறப்பதும் இறப்பதுஞ் சுகதுக்கப்படுவதும் இப்படிப்போல.*

அவனே அவனிமுத லாகிநின் றானும்
அவனே அறிவாய்நின் றானும் - அவனேகாண்
ஆணுகிப் பெண்ணு யலிகாகி நின்றானுங்
காணுமை நின்றானுங் கண்டு. 88

விளக்கவுரை : *கர்த்தாப் பிருதிவி முதலாகிய தத்துவங்களாயிருந்தாலும் ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியைகளா யிருந்தாலும் ஆண் பெண் அலியாயிருந்தாலும் நீ அவனைக் காணுதபடிக்கு உன்னை அவன் கண்டு நிற்பன்.*

**இன்றுதான் நீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
அன்றித்தா ஞனுன்னைக் கண்டேனே - என்ருல்
அருமாயை யீன்றவள் தன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து. 89**

விளக்கவுரை : *சீடனே, இப்போது நீ உன்னைக்கண்டு பின் என்னைக் கண்டாயோ அல்லது நான் என்னைக் கண்டு பின்பு உன்னைக் கண்டேனே என்று சொல்லுவாயாஞல் அரிய திரோதான சத்தியை யீன்ற பராசத்தியையுடைய பாகனை யார் காணப்போகிருர், பெரிய மாயையாலே மறைக்கத்தக்க மறைப்பையெல்லாந் தப்பி.*

கர்த்தா காண்பிக்க ஆன்மா காண்பன் என்பது கருத்து.

**கடலலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப் - படியில்
அருத்திசெய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லாங்
கருத்துக்குச் சேயனுய்க் காண். 90**

விளக்கவுரை : *கடலானது அலையினுலே ஒருவன் முழுகுகிறதற்கு அளவுபட்டு நின்ருலும் அக்கடல் அளவைக் கடங்காதாற்போல, பூமியின் கண்ணே பத்தி பண்ணின அடியாருக்குக் கர்த்தா கிருபை பண்ணுகிறதும் அவர்கள் அளவைக் கடங்காதவனுய்க் கிருபை பண்ணுவன்.*

கர்த்தா முத்தியிலும் அளவுபடான் என்பது கருத்து.

**சிவனெனவே தேறினன்யான் என்றமையால் இன்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பில் - அவனிதனில்
உப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டா யவன். 91**

விளக்கவுரை : *மாணிக்கவாசகமூர்த்தி சிவனெனவே தேறினன் யான் என்று ஆசாரியமூர்த்தத்தைச் சிறப்பித்துத் திருவுளம் பற்றினபடியினுலே (அண்டப்பகுதி - வரி 92), இப்போது சிவன் ஆசாரிய மூர்த்தமாக்கப் பூமியின்கண்ணே எழுந்தருளின முறைமையைச் சொல்லில் உப்பானது கூர்த்தற் சுவையாகிய அருவப்பொருளென்று பெயர்பெற்று உருவமாய் வந்ததுபோலக் காணப்படாத கர்த்தாவுமாகிருரென்று பெயர்பெற்றுக் காணப்பட்டு வருவன்.*

திருச்சிற்றம்பலம்

18. மகாவாக்கியப் பொருண்மை

அவனிவனுய் நின்ற தவனருளா லல்ல
தெவனவனுய் நிற்கின்ற தேழாய் - அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகி லம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லா யிது. 92

விளக்கவுரை : *ஆன்மா சிவமாய் நிற்கிறது சிவன் கிருபையினுலே யல்லாமல் வேறே எந்த எதுவினுலே நிற்கும், மாணாக்கனே, சொல்லுவாயாக. அன்றியும் மாமரத்திலே புல்லூரி முளைத்தால் அது மாமரத்தின் பழத்தைப் பழுக்க மாட்டாததுபோல ஆன்மாக்களுஞ் சிவனை யடைந்தால் பிற ஆன்மாக்களுக்கு இன்பங் கொடுக்க மாட்டார்கள். இதனுள், ஆன்மா தன் முயற்சியினுலே சிவானுபவந் தேட மாட்டான் என்பதும் ஆன்மாக்களுக்குச் சிவானுபவங் கொடுக்க மாட்டானென்பதுங் கண்டுகொள்க.*

19. பிறப்பின் காரணம்

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளென்னுங் - கத்தியினுன்
மோகக் கொடியறுக்க முத்தி பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்கா ணின்று. 93

விளக்கவுரை : *முத்தியைப் பெறுவதற்கு முதலாகிய ஆன்மா வென்னுங் கொடியிலே அனுதியே மறைக்கத்தக்க பாசமென்னும் கொடி தழைத்து வளர்ந்து அத்திமரம்போல மிகுதியாகப் பழுத்தது. ஞானசத்தியாகிய திருவருளென்னும் சத்தியினுலே அந்தப் பாசமென்னுங் கொடியின் வேரை யறுக்க அது சோர்ந்தொழிந்து, ஆன்மாவினிடத்திலே சிவானந்தக் கனி மேன்மேலும் பழுக்கும். சிவமென்றும் ஆன்மா வென்றும் இரண்டல்லாத ஒரு நீர்மையான கொடி அப்பொழுதே தோன்ரு நிற்கும்.*

20. ஆன்ம லாபம்

அகளத்தில் ஆனந்தக் தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றேன்றி - நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் புன்றலைமேல்
ஆக்குவதுஞ் செய்தா னவன். 94

விளக்கவுரை : *அகளத்திலே ஆனந்தமாகிய கர்த்தா சகளத்திலே (திருமேனியு)டையவர்களைபோலக் கிருபையோடுங்கூடி ஆசாரிய மூர்த்தமாக வெளிப்பட்டு மலமாயா கன்மங்களைப் போக்கினுன் தனது திருவடியை என் தலை மேலேயும் வைத்தான்.*

திருச்சிற்றம்பலம்

குற்றமறுத் தென்னியாட் கொண்டருளித் தொண்டனேன்
உற்ற தியானத் துடனுறைவர் - முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பரியான் மற்ருென்றைக் கண்டிடினக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து. 95

விளக்கவுரை : *ஆசாரியன் என்னைப் பொருந்தின மூன்று மலங்களையும் அறுத்து என்னையும் அடிமையாகக் கொண்டு நான் நினைத்த தியானத்துடனே என்னிதயத்திலே பொருந்துவன்; (இந்த நிலை முதிர வருகின்ற நேயத்திலே தான் பேரின்பமாய் நிற்பன்;) இது வன்றியும் நான் விடயங்களைப் பற்றினுல் அந்த விடயமாய் நிற்பன்.*

21. வாழ்த்து

ஆளுடையான் எந்தரமு ஆளுடையா னேயறியுந்
தாளுடையான் ருெண்டர் தலைக்காவல் - நாளுந்
திருவியலூ ராளுஞ் சிவயோகி யின்றென்
வருவிசையை மாற்றினுன் வந்து. 96

விளக்கவுரை : *பக்குவான்மாக்களை யாளப்பட்டவன் என்னைப்போன்ற அசத்தியரையும் (அசத்தரையும்) ஆளப்பட்டவனே. நானறிதற் கேதுவாகியிருக்கப்பட்ட தாளாகிய திருவருளையுடையவன். எக்காலமும் அடியார்க்கெல்லாம் மேம்பட்ட காவலாளன், திருவியலூரிலே எழுந்தருளியிருக்கப்பட்ட சிவயோகி போன்றவன் இப்போது என் முன்னே வந்து நான் தத்துவங்கள் தோறுந் திரிகிற விசையை மாற்றினுன்.*

தூலத் தடுத்த பளிங்கின் துளக்கமெனத்
தூலத்தே நின்று துலங்காமற் - காலத்தால்
தாளைத்தந் தென்பிறவித் தாளை யறவிழித்தார்க்
காளன்றி யென்மா றதற்கு. 97

விளக்கவுரை : *தூலமாகிய பஞ்சவன்னங்களை யடுத்த படிகத்தினுடைய சலனம்போலத் தூலமாகிய தத்துவங்கள் தோறுஞ்சென்று நான் சலனப்படாமல் (இருவினை யொப்பும் மலபரிபாகமும் உண்டான காலத்து) தனது தாளாகிய திருவருளை எனக்குத் தந்து என் பிறவி வேர் அறும்படிக்கு அருட்பார்வை பார்த்த ஆசாரியர்க்குக் கைம்மாறு அடிமையாயிருத்தலன்றி வேறே கைம்மாருென்றுமில்லை.*

இக்கணமே முத்தியினை எய்திடினும் யான்நினைந்த
அக்கணமே ஆனந்தந் தந்திடினும் - நற்கணத்தார்
நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை யெப்பொழுது
ஆயிருத்த லன்றியிலே னியான். 98

திருச்சிற்றம்பலம்

விளக்கவுரை : *நான் இப்பொழுதே மோட்சத்தைப் பெற்ருலும் நான் விரும்பினபொழுதே பேரானந்தத்தைத் தந்தாலும் நல்ல சிவயோகிகளுக்கும் சிவனுக்கும் திருவருளுக்கும் நந்திதேவர்க்கும் நான் அடிமையாயிருத்தலன்றி வேறே கைம்மாறு ஒன்றுஞ் செய்யமாட்டேன்.*

என்னை உடையவன்வந் தென்னுடாளு என்னளவில்
என்னையுந்தன் ளுளாகக் கொள்ளுதலால் - என்னை
அறியப்பெற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று. 99

விளக்கவுரை : *அனுதியே என்னை அடிமையாக உடையவன் இப்போது மானிடனுய் வந்து எனக்கு நட்பாகி எனது போதம் நீக்கி யான் மாத்திரம் நின்றளவில் ஒரு பணியுஞ் செய்யாத என்னையும் தனக்கடிமையாகக் கொள்ளுகையால் என்னுடைய சுபாவத்தை யறிந்தேன், சிவயோகிகள் கூட்டத்திற் சென்று அவர்களுக்கு ஆளாய் அவர்களுடனே கூடியிருக்கப் பெற்றேன்.*

சிந்தையிலும் என்றன் சிரத்தினுலுஞ் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமல் - தந்தவனை
மாதினுட னெத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவே னின்று. 100

விளக்கவுரை : *எனது இதயத்திலும் தலையிலுந் தனது திருவடியை வைத்து நாமினிப் பிறவாவண்ணம் தனது ஞானத்தைத் தந்தவனைத் திருவருளுடனே கூடி எக்காலமும் வாழ்ந்திருக்கக்கடவனென்று வாழ்த்துவதேயல்லாமல் வேறே எந்த வார்த்தை சொல்லி வாழ்த்தப் போகிறேன் யான்.*

(இவ்விரு பாடல்களும் பிற்காலத் தான்ருேர் வாக்கு)

ஆதார மாகி அருளோடு நிற்கின்ற
சூதான இன்பச் சுகவடிவை - ஓதாமல்
உள்ளவர்கள் கூடி யுணர்வொழிய நிற்பதலால்
தெள்ளவா ராதே சிவம். 101

பொருளு மனையு மறமறந்து போக மறந்து புலன்மறந்து
கருவி கரண மவைமறந்த கால மறந்து கலைமறந்து
தரும மறந்து தவமறந்து தம்மை மறட்ந்து தற்பரத்தோ
டுருகி யுருகி ஒருநீர்மை யாயே விட்டார் உய்யவந்தார். 102

திருக்களிற்றுபடியார் முற்றும்.

திருவுந்தியார் கருத்துள்ள திருக்களிற்றுப்படியார் திருவெண்பாக்கள்

உந்தியார்	-	களிற்றுப்படியார்
1	-	4 - 5
2	-	6 - 7
3	-	8
4	-	9 - 10
5	-	11
6	-	12 - 13
7	-	14 - 21
8	-	22
9	-	23 - 24
10	-	25
11	-	26
12	-	27 - 28
13	-	29
14	-	30
15	-	31
16	-	32
17	-	33
18	-	34
19	-	35
20	-	36 - 37
21	-	38 - 40
22	-	41
23	-	42 - 43
24	-	44 - 45
25	-	46 - 50
26	-	51 - 52
27	-	53 - 56
28	-	57
29	-	58 - 62
30	-	63 - 64
31	-	65 - 68
32	-	69 - 75
33	-	76
34	-	77
35	-	78 - 79
36	-	80 - 81
37	-	82 - 83
38	-	84
39	-	85 - 91
40	-	92
41	-	93 - 94
42	-	95 - 96
43	-	97 - 99
44	-	100

உ
சிவமயம்

திருவெண்ணெய்நல்லூர் - ஸ்ரீ மெய்கண்ட தேவர்

அருளிச்செய்த

3. சிவஞானபோதம்

மெய்கண்ட தேவ நாயனூர் வரலாறு

திருப்பெண்ணுகடத்தில் அச்சுதகளப்பாளர் என்பவர் வேளாண்மரபினர் இவர். திருத்துறையூரில் வாழ்ந்த சகலாகமபண்டிதர் அருணந்தி சிவாசாரியர் என்பார் இவர்தம் குலகுரு ஆவார். தமக்குப் பன்னுட்களாக மகப்பேறு இன்மையை இவரிடம் தெரிவித்தார். அவரும் தேவார அடங்கன் முறையில் கயிறு சாத்திப் பார்த்து அதன்வழி இறைவன் திருவுள்ளத்தை உணர்த்தி அருளினூர். "*பேயடையா பிரி வெய்தும்*" எனத்தொடங்கும் திருஞானசம்பந்தர் தம் திருவாக்கின்வழி, களப்பாளரும் அவர்தம் மனைவியாரும் திருவெண்காடடைந்து முக்குள நீராடி இறைவனிடத்துப் பாடு கிடந்தனர். இறையருளால் மகப்பேறு வாய்த்தது. அவ்வருமை மகவைத் திருவெண்காடர் (சுவேதனப் பெருமான்) எனப் பெயரிட்டு அழைத்தனர். தாய்மாமனின் ஊராகிய திருவெண்ணெய்நல்லூரில் வளர்ந்த இக்குழந்தைக்கு ஈராண்டு தொடங்கியது.

திருக்கயிலையில் இறைவனிடத்திருந்து வழிவழியாக அருளுபதேசம் பெற்றவர்களில் நான்காமவரான பரஞ்சோதி முனிவர் தம் தவநெறியால் விண்வெளிச்செல்லும் பொழுது, திருவெண்ணெய்நல்லூரில் இக்குழந்தை விளையாடிக் கொண்டிருப்பதை கண்டார். மெய்யுணர்வு கைவரப்பெறும் பக்குவமுடைய அக்குழந்தையிடம் வந்து அதற்கு உபதேசம் செய்து சைவ சிந்தாந்த மெய்ப்பொருளை அனைவர்க்கும் விளங்குமாறு நூல்வடிவில் செய்தருளப்பணித்துத் தம்குருவின் பெயரான "சத்தியஞான தரிசினி" என்ற பெயரினையும் சூட்டினூர். சத்தியஞானதரிசினி என்பதன் தமிழ்வடிவமே மெய்கண்டார் என்பதாகும். சிவஞானம் பெற்ற குழந்தையிடம் சிவஞானம் சித்திக்கப் பெற்றது. சிவம் பிரகாசிக்கவும் செய்தது. ஆதலின் குரு மூர்த்தியால் பெற்ற மெய்யுணர்வை அனைவருக்கும் கூறியருளும் கடப்பாட்டில் நின்றூர் மெய்கண்டார். இவர் தம் மரபிற்குக் குலகுருவாக இருந்த சகலாகம பாண்டிதர் என்பார் இவர் தந்தையாரைக் காணவந்தார். இக்குழந்தை பாடம் சொல்லிவருவதையும் கேள்விப்பட்டு அவ்விடத்திற்கு வந்தார். அதுபொழுது மெய்கண்டார் ஆணவ மலத்தின் இயல்பை விளக்கிக்கொண்டிருந்தார். சகலாகமபண்டிதர் அக்குழந்தையை நோக்கி ஆணவ மலத்தின் வடிவம் யாது? எனக் கேட்டார். அருளுணர்வில் தோய்ந்திருந்த அக்குழந்தை தம் வலக்கைச் சுட்டு விரலால் வினவியவரையே காட்டியது. அவ்வளவில் அருளுணர்வு கைவரப்பெற்ற சகலாகமபண்டிதர் இக்குழந்தை தம்மை ஆட்கொள்ளும் குருமூர்த்தியே என்றெண்ணி இவரை வணங்கினூர். சிறிய பெருந்தகையாராக இருந்த இவரும் அவரை மாணக்கராக ஏற்று அருளுபதேசம் செய்தருளினூர். இவரிடம் மாணவராக இருந்தவர்கள் நாற்பத்து ஒன்பதின்மர் ஆவர். தமக்குப்பின் சைவ சந்தான குருபரம்பரையை வளர்த்து வரும் பணியை அருள்நந்திசிவாசாரியரிடம் வழங்கினூர். பின் ஒரு ஐப்பசிச் சுவாதியில் அண்ணலார் சேவடிக்கீழ் அணைந்தருளினூர்.

உ

சிவமயம்

சிவஞானபோதம்

கி.பி. 44 நூற்ருண்டின் தொடக்கத்தில் சிவஞானக் கதிரவனுக விளங்கிய மெய்கண்ட முதல்வரால் அருளிச் செய்யப்பெற்றது சிவஞானபோதம். இதுசிவநெறியின் வரலாற்றில் ஒரு திருப்பு மையமாக அமைந்துள்ளது. சிவநெறி தொன்று தொட்டுவரும் திருவருள் நெறியே ஆயினும், தமிழகத்தே (கி.பி. - கிருஷ்ணர் பின்பு) கி.பி. 34 முதல் 38 நூற்ருண்டுவரை புத்த சைன சமய முனிவர்களால் அது பெரிதும் ஒளிகுன்றிப்பல இடையூறுகளைத் தாங்கி நிற்பதாயிற்று. அந்நிலையில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் திருவருட் செல்வர்கள் முதல்வன் திருவருளால் தமிழுலகில் தோன்றிச் சிவ நற்பயிரைப் பர சமயக்களைகளால் நலியாதபடி, அக்களைகளைக் கடிந்து, செம்மையாக வளரச் செய்தார்கள். அவ்விருவர்களால்தான் வைதீகநெறி விளக்கம் பெற்றது. ஒருபக்கம் ஸ்ரீசுந்தரர், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் என்னும் அருளாசிரியர்களால் சைவப்பயிர் வளர்ந்தோங்கித் திருவருட் கதிர்பரப்பிச் சிவபோகத்தைச் சத்திநிபாதர்க்கு விளக்கி வந்தது; மற்ருெரு பக்கம் வைதிக சமயம் சங்கரர் முதலியோரால் வளர்ந்தது, 'நான் பிரமம்' என்னும் ஒரு பொருட் கொள்கை ஆராய்ச்சியாளர்கள் உள்ளத்தைப் பிணிப்பதாயிற்று. பிரமசூத்திரம் சொல்லாராய்ச்சி பற்றிய விவாதங்களுக்கு இடங்கொடுத்துப் பலவகையான மதங்கள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. அந்நிலையில் மெய்கண்டதேவர் வேதம், ஆகமம், பிரமசூத்திரம் முதலியவற்றில் சாரமாகக் கொள்ளத்தக்க பொருள்களை 39 முடிவுகளில் அடக்கிப் பன்னிரண்டு சூத்திரங்களால் சிவஞானபோதம் என்னும் உபதேசநூலை அருளிச்செய்து தக்க அறிஞர்களுக்குப் போதித்தார்.

அந்நூற் பொருள் பிற்காலத்தார்க்கு மாறுபடாது விளங்குதற்பொருட்டு அச்சூத்திரங்களுக்கு வார்த்திகம் என்னும் பொழிப்புரையும் அருளிச் செய்தார். அவர், தம் வழியில் ஞான ஆசிரியர்கள் இவ்வுபதேசநூலைக் கைக்கொண்டு தொன்று தொட்டுவரும் சமய ஒழுக்கம், கோட்பாடு, தத்துவம் என்பவற்றைப் பாதுகாத்து வருதற் பொருட்டுச் சைவசந்தானத்தையும் பிரதிஷ்டை செய்தருளினர். இப்பொழுது தமிழகத்தில் உள்ள எல்லாச் சைவ ஆதீனங்களும் சைவத் திருமடங்களும் மெய்கண்டதேவர் திருவருட் சந்தானத்தைச் சேர்ந்தவை எனப்பொதுவாகக் கூறலாம். மெய்கண்ட தேவருடைய மாணுக்கருள் தலை சிறந்தவர் அருணந்தி சிவாசாரியர். அவர் சிவஞான போதத்தை முதன்மையான பிரமாண நூலாகக்கொண்டு சிவாகமார்த்தங்களை முறைப்படுத்திச் சிவஞானசித்தியார் என்னும் வழிநூலை அருளிச்செய்தார். அவரே தாம் மெய்கண்டதேவரிடத்து ஆட்பட்ட காலத்தில், தான் அதற்கு முன் கற்றுணர்ந்திருந்த வடமொழி, தென்மொழிக் கலை ஞானங்களில் தமக்கு இருந்த ஐயங்களைத் தெரிவித்துக் கொண்டு அவற்றிற்கெல்லாம் தக்க விடைகளை மெய்கண்டதேவர்பால் கேட்டுணர்ந்தார். அவ்வாறு தாம் வினுவிய வினுக்களையும் அவற்றிற்கு மெய்கண்டதேவர் அருளிய விடைகளையும் அமைத்து இருபாஇருபஃது என்னும் மற்ருெரு நூலையும் அருளிச் செய்துள்ளார்.

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவருக்குத் திருவதிகை மனவாசகம் கடந்தார் என்னும் மற்றொரு மாணவர் இருந்தார். அவர் மெய்கண்ட சந்தானத்தில் கைக்கொள்ளப்பட்ட தத்துவங்கள், பதி, பசு, பாச இலக்கணங்கள், திருவைந்தெழுத்தின் உண்மை, திருநடனத்தினியல்பு, வீடுபேற்றினியல்பு அணைந்தோர்தன்மை என்னும் இப்பொருள்களைத் திரட்டி வினாவிடை வடிவத்தில் 53 வெண்பாக்களில் ஒரு நூலை அருளிச்செய்தார். அஃது உண்மை விளக்கம் என்னும் பெயரை உடையது. அருணந்தி சிவாசாரியரின் மாணாக்கர் பல்லோருள்ளும் மறைஞானசம்பந்தர் தலைசிறந்த முதல்வராக விளங்கினர். இவர் நூல் ஒன்றும் இயற்றியதாகத் தெரியவில்லை. சதமணிக்கோவை என்னும் ஞானநூல் இவரால் இயற்றப்பட்டதாகலாம் என்று இக்காலத்துச் சிலர் கருதுகின்றனர். மறைஞான சம்பந்தர் மாணாக்கர் பல்லோருள்ளும் தலைசிறந்தவர் உமாபதிசிவம் என்னும் அருளாசிரியர். இவர் சிவஞானபோதத்தின் சார்புநூலாகச் சிவப்பிரகாசம் என்னும் உபதேச நூலையும் திருவருட் பயன்முதலாகச் சங்கற்பநிராகரணம் இறுதியாக எண்ணப்படும் வேறு ஏழு நூல்களையும் இயற்றியுள்ளார். மெய்கண்டதேவர், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் என்னும் நால்வரும் சைவ சந்தான ஆசாரியர் எனப் போற்றப்பெறுவர். இவர்கள் வழிவந்தவை தாம் இப்போதுள்ள பெரும்பாலான சைவ ஆதீனங்களாகும். உமாபதி சிவாசாரியார் சங்கற்ப நிராகரணத்தை அருளிச்செய்த ஆண்டு கி.பி. 4413 என்பது தெரிகின்றது. இவ்வாசிரியரே பௌஷ்கர ஞானபாத விருத்தியையும், சதரத்ன சங்கிரகத்தையும் செய்துள்ளார். மேலும் இவ்வருளாசிரியர் தேவாரத் திருப்பதிகங்கள் பெரியபுராணம் என்பவற்றை நன்கினிது ஆராய்ந்து சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருப்பதிகக் கோவை முதலிய ஆய்வு நூல்களையும் கோயிற்புராணத்தையும் அருளிச் செய்துள்ளார்.

சிவஞானபோதம் பன்னிரு நூற்பாக்களை உடையது. 40 வரிகளைக் கொண்டது. தொடக்கத்தில் பொல்லாப் பிள்ளையாருக்கு வணக்கம் கூறப் பெற்றுள்ளது. வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகிய மூன்றற்கும் பொருந்த இவ்வணக்கம் அமைந்திருப்பது போற்றற்குரியது. பின்வரும் நூற்பாக்களைப் போலவே இவ்வணக்கமும் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளக்கும் பெற்றியது. அடுத்துள்ள அவையடக்கப் பாடலும் தனிச் சிறப்புடையது. தம்மையும் தம் தலைவனையும் உணர்ந்தவர்களுக்குரிய சிறப்பையும், அவ்வாறு உணராதவர்களுக்கு உரிய சிறப்பின்மையையும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது. இறை, தளை, உயிர் ஆகிய மூன்றும் உள்பொருளே என்பதை முதல் மூன்று நூற்பாக்களும் நிறுவுகின்றன. ஆதலின் இவற்றைப் பிரமாண இயல் என்பர். அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் இவற்றின் இலக்கணங்களை விரித்துரைப்பன. ஆதலின் அவற்றை இலக்கண இயல் என்பர். இம்முப் பொருள்களில் உயிர் இறையருள் வழிநின்று ஏனைய இரண்டையும் உணர்தற்குரியது. ஆதலின் அவ்வுயிர் தவத்தால் குருவருளைப் பெற்று உய்திபெற வேண்டுமென்பதை அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் கூறுகின்றன. ஆதலின் அவற்றைச் சாதன இயல் என்பர். அச்சாதனத்தால்

உயிர் பாச நீக்கமும் சிவப்பேறும் பெற்று அச்சிவப்பேற்றினின்றும் வழுவாது இருத்தற்குரிய அருமையும் பெற்று வாழும், வாழவேண்டும் என்பதை அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் கூறுகின்றன. ஆதலின் அவற்றைப் பயனியல் என்பர். தாம் எடுத்துக்கொண்ட கருத்துக்களை ஏதுக்களானும் எடுத்த மொழியானும் ஆராய்ந்து உணர்தற்கு ஏதுவாக முப்பத்தொன்பது அதிகரணங்களையும், எண்பத்தொரு வெண்பாக்களையும் ஆசிரியர் அருளியுள்ளார். நூற்பாக்களும் வெண்பாக்களும் சுவையுடையன. 'அமைச்சு அரசு ஏய்ப்ப, 'விளங்கிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்து அறியா ஆங்கவை போல, 'உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ,' 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்' எனவரும் உவமைகள் மிக எளிமையும் இனிமையும் உடையன. இவை நூற்பாக்களில் உள்ளன. இவை போன்றே 'பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும்போல்,' அரக்கொடு சேர்த்திய ணைத்த அக்கற்போல்', 'பசித்துண்டு பின்னும் பசிப்பானையொக்கும்' என்பன போன்ற உவமைகள் வெண்பாக்களிலும், 'ஊசல் கயிறற்ருல் தாய் தரையேயாந்துணையான்' 'வேம்பு தின்ற புழுப்போல' என்பன போன்ற உவமைகள் அதிகரணங்களிலும் இருந்து அணி செய்கின்றன. தத்துவக் கூறுகளை இத்தகைய உவமைகளின் மூலம் விளக்கும் ஆசிரியரின் அருளுள்ளம் அறிதற்குரியது. 'ஐம்புல வேடர், 'தண்ணிழலாம்பதி' எனவரும் உருவகங்கள் மிகவும் நுட்பம் வாய்ந்தன.

நூற்பாயிரமாக மங்கல வாழ்த்தில் கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளியிருந்து நான்கு முனிவர்களுக்கும் நந்தியெம் பெருமானுக்கும் மலைவைத் தீர்த்தருளிய சிவபெருமானது திருவருளை யாவரும் பெறுதல் வேண்டும். அவர் திருவருளைப்பெறுதற் பொருட்டு நல்லவர்கள் திருவெண்ணெய் நல்லூர் திருவருட்டுறையில் உள்ள பொல்லாப் பிள்ளையாருடைய இரண்டு திருவடித் தாமரைகளைத் தங்கள் முடிமேல் சூடிக்கொள்வர் என்னும் பொருளையுடையது.

இதனுல் உணர்தற்குரிய கருத்துப் பின்வருமாறு:- இறைவன் இயற்கை முற்றுணர்வினன். அவன் உணர்த்த உணர்வனவே உயிர்கள். நூல்களைக் கற்றலினுல் குழப்ப உணர்வு உண்டாகும்; அக்குழப்பம் நீங்கித் தெளிவு பெறுவதற்கு மெய்யுணர்வு நல்கும் சிவபிரான் திருவருள் வேண்டும். தம்மை வழிபடுவார்க்கு இடையூறுகளை நீக்கித் திருவருளை எளிதில் கைகூடுமாறு செய்பவர் மூத்த பிள்ளையார் எனப்படும் விநாயகப் பெருமான் ஆவார்.

அவையடக்கத்தின் பொருள்:- முதற் பொருளாகிய சிவத்தைத் தலைப்பட்டுணரும் உணர்வே மெய்யுணர்வாகும். அவ்வுணர்வு முதல்வனுக்கு என்றும் கடப்பாடுள்ள உயிரின் இயல்பை உணர்ந்தார்க்கே வரக்கூடியது. இவ்வாறு முதற்கண் உயிர்களாகிய தம்மியல்பை உணர்ந்து அதன் பயனுக யான் எனது எனும் செருக்கற்று நிற்போரே முதல்வனேடு ஒற்றுமைப்பட்டு நின்று அவன் தன்பேரின்ப இயல்பை உணரவல்லவராவர். இங்ஙனம் சிவமாம் தன்மைப் பெருவாழ்வு உடையோரே எம்மாற் செய்யப்படும் சிவஞானபோதம் என்னும் இந்நூலின் அருமையை உணர்வர். உயிர்களாகிய தம்மியல்பையே

உணராதவர் முதல்வன் இயல்பை உணரமாட்டார் என்பது தெளிவு. அன்னோர் முதல்வன் இயல்பை உணர்ந்தேன் எனல் குருடர்கள் யானையின் ஒவ்வொரு உறுப்பைத் தடவி, உணர்ந்து அதன் இயல்பைக் கூறிக்கலாம் விளைத்ததனோடு ஒக்கும். அத்தகையோர் எமது நூலைக் கூறும் மொழிகளை யாம் பொருட்படுத்தோம். அவையடக்கச் செய்யுளின் பின்னிரண்டு அடிகளின் பொருளே சிவஞான சித்தியாரில் பரபக்கம் என வைத்து உலகாயதம், பௌத்தம், சைனம், ஏகான்மவாதம், மீமாஞ்சை, சாங்கியம் பாஞ்சராத்திரம் என்னும் மதங்களும் அவற்றின் மறுப்புமாக முந்நூறு திருவிருத்தங்களால் விரித்து உரைக்கப்பட்டது.

முதற் சூத்திரம்

உலகம் தம் அறிவால் சுட்டியறியப்படுவது. அறிவினால் அறிந்த யாவும் தோன்றி நின்று மறைவதே ஆகும். ஆதலால் இவ்வுலகம் முற்றும் ஒரு காலத்தில் தோன்றி, இப்போது இருப்பதாய்ப் புலனாகி, பின் ஒரு காலத்தில் தன் காரண நிலையில் மறைந்துபோகக்கூடியது. இங்ஙனம் மாற்றமடையும் உலகை நியமித்து ஒழுங்குபட நடத்துதற்கு இயற்கை முற்றுணர்வுடைய முதல்வன் ஒருவன் இருத்தல் வேண்டும். அவன் சுட்டி அறியப்படாதவனாய் எவ்வகையான மாறுதலும் உருதசெம்பொருளாய் எல்லா உலகையும் ஒருங்கே தோற்றி, நிறுத்தி, ஒருங்கே ஒடுக்கவல்லவனாய் இருத்தல்வேண்டும். உயிர்களுக்கு அறியாமையை விளைத்து நிற்கும் மூலமலத்தின் வலி குறைதற்பொருட்டு உலகப் படைப்பையும், அவற்றின் இளைப்பாறுதல் போன்ற, கன்மமல பரிபாகத்தின் பொருட்டு அதன் ஒடுக்கத்தையும், கால வட்டத்துட்படுத்தி, அவன் செய்கின்றான். முதல்வன் தன்செயல்களைக் கரணங்களை அவாவாது தன் சத்தி சங்கற்பத்தால் செய்தலின், அவன் எத்தகைய மாறுதலும் அடைவதில்லை. முதல்வனே எல்லாருடைய செயலையும் தன் முதன்மைக்கண் அடங்கக் கொள்ளும் ஒருவனேயாய் எல்லாவற்றிற்கும் முடிநிலைச் சார்பாக உள்ள வினை முதலாக உள்ளவன் எனக்கருதுதல் வேண்டும்.

இரண்டாஞ் சூத்திரம்

முதல்வன், இவ்வுலகைத் தொழிற் படுத்தும்போது, இரும்புத் துண்டைத் தன் ஈர்ப்பு ஆற்றற் சூழலில் அகப்படக் கொண்டு இயக்கும் காந்தக்கல்லைப் போல, உயிர்களைத் தன் அருள் வெளிக்குள் அகப்படுத்தித் தொழிற்படுத்துகின்றான். இந்நிலையில் அவன் உயிர்களிற்கலந்து ஒன்றாய், பொருட்டன்மையால் தான் உயிர்களுக்கு வேறான பொருளேயாய், அவற்றை உள்நின்று செலுத்தும் தன்மையால் அவற்றோடு உடனாய் நிற்கின்றான். இங்ஙனம் முதல்வனால் ஒன்றி உடனாகிச் செலுத்தப்பெறும் உயிர்கள், தமக்குத் தோன்றாத் துணையாயுள்ள முதல்வன் செயலை அறியாது, தாமே எல்லாஞ் செய்வதாக உணர்ந்து முயலுதலினால், அம்முயற்சியே அவற்றின் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்தும் வினையாக அவற்றைப்பற்றும். இங்ஙனம்

அறியாமை காரணமாக இருசேர் இருவினைக்கு ஏற்றவாறு, இறந்தும் பிறந்தும் வரும்படி அவற்றை முதல்வன் தான் செய்யும் ஐந்தொழிலில் அகப்படுத்தி நடத்துவன். இஃது உயிர்களின் பிறப்பு நிலையில் உள்ளது. இங்ஙனம் தனக்கு வேறான உயிர்களைப் பற்றி நின்று நடத்துதல் பற்றி, முதல்வன் தானும் தன் சத்தியும் எனத் தன்னுள் இருவேறு வகைப்பட நின்று உலகை நடத்துவன் என்பது கருதுயுணர்தற்கு உரியது.

குறிப்பு:- ஞாயிறு தன்னைச் சுற்றிவரும் கோள்களைத் தன் ஈர்ப்பு ஆற்றல் சூழலிலும் பேரொளியிலும் அடங்கக் கொண்டு, அவற்றைத் தொழிற் படுத்துதல் போல இறைவன் உலகுயிர்களைத் தன் அருளாற்றலில் அகப்படுத்தி ஐந்தொழிற்படுத்துவன் எனக்கொள்க. ஞாயிறுபோல முதல்வன் உளன்; ஞாயிற்றின் ஒளியை அல்லது ஈர்ப்பு ஆற்றலைப் போல அவன்றன் அருளாற்றல் அல்லது சத்தி உள்ளது. இதனால் தான் முதற் பொருளை அம்மையப்பராகக் கருதுகின்றனர். மெய்யுணர்ந்தோர், முதல்வனுக்கு உலகு உயிர்களோடு உள்ள சம்பந்தம் அத்துவிதம் (இருமையின் ஒருமை) எனப்படும். முதல்வனுக்கும் அவன்றன் சத்தியாகிய அருளாற்றலுக்கும் உள்ள சம்பந்தம் தாதான்மியம் (ஒருமையின் இருமை) எனப்படும். முன் இரண்டு சூத்திரங்கள் இவ்வாறு இறைவன் உண்மையினையும் இயல்பினையும் காணப்படும் உலகைக் காட்டி உய்த்துணர வைக்கின்றன. இஃது அண்டத்தில் வைத்து உணர்த்துவது. இனி, அடுத்து வரும் சூத்திரங்கள் உயிரின் இயல்பை நம் உடம்பில் நிகழ்ந்துவரும் உணர்வு நிகழ்ச்சிகளை நோக்கி உணரவைத்து (பிண்டத்தில் வைத்து) விளக்குகின்றன.

மூன்றாம் சூத்திரம்

உடம்புதோறும் காணப்படும் ஒழுங்குபட்ட அறிவு செயல்களுக்கு மூலமாய், யான் என்னும் உணர்வுவடிவில் விளங்குவதே உயிர் அல்லது ஆன்மா எனப்படும்.

1. ஆன்மா சூனியம் அன்று; பல வகையால் எது ஆன்மா என ஆராய்ந்து முடிவில் சூனியமே ஆன்மா எனத்துணியும்போது, அவ்வாறு துணியும் அறிவு உள்ளது அல்லவா? அவ்வறிவே ஆன்மா என உணரத்தக்கது.

2. பருஉடல் ஆன்மா அன்று; என் ஊர், என் வீடு, என் மனைவி என ஊர் வீடு மனைவி முதலிய உடைமைகளை நமக்கு வேறாக உணர்கிறோம் அல்லவா? அதுபோல என்கை என்தலை என்உடம்பு என இந்த உடம்பு நமக்கு வேறாக உணரப்படுகிறது. ஆதலால் யான் என்னும் உணர்வு வடிவில் விளங்கும் ஆன்மா இவ்வுடம்புக்கு வேறாக உள்ளது.

3. ஐம்பொறிகள் ஆன்மா அல்ல; கண் காணும் ஆனால் கேளாது. செவி கேட்கும், ஆனால் காணாது இங்ஙனம் ஐம்பொறிகளுள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறிவதில்லை. ஆயின், ஒரு பழத்தைக் கண்டு வாங்கி முகர்ந்து, சுவைத்து நுகரும் போது கண்ட யானே வாங்கினேன், பின் அதனை முகர்ந்தேன், பின் சுவைத்து உண்டேன் - எனச் சுவை, ஒளி, ஊறு, ஓசை,

திருச்சிற்றம்பலம்

நாற்றம் ஆகிய ஐம்புலன் உணர்வும் ஒரே அறிவின்கண் இணைந்து தொடர்புபட நிகழ்தலின், இவ்வாறு அறிவதாகிய ஆன்மா ஐம்பொறிகளுக்கும் வேருதல் வேண்டும்.

4. கனவுடலாகிய நுண் உடம்பு ஆன்மா அன்று; கனவின்கண் கண்டவற்றை நனவின்கண் தெளிய உணர மாட்டாது மயங்கி, அரை குறையாகவும், வேறுபடவும் உணர்கின்ருேம். கனவுடம்பே ஆன்மா ஆயின் நனவின் கண் இம் மருட்கை உளதாகாது. நனவில் பருவுடம்பிற் பட்டும் கனவில் நுண்ணுடம்பிற் பட்டும் உணர்தல்பற்றி, உடம்பு வேறுபாடு, கரண வேறுபாடு - இருத்தலால்தான் ஈரிடத்தும் அறிவு வேறுபாடு நிகழ்கின்றது. ஆதலின் கனவில் நுண்ணுடம்பைப் பற்றுவதாகவும் உள்ள அறிவு (ஆன்மா) அவை இரண்டிற்கும் வேறேயாம்.

5. பிராணவாயு ஆன்மா அன்று; நனவு, கனவு, உறக்கம் மூன்றிலும் பிராணவாயு ஒருபடித்தாக இயங்குதலைக் காண்கிருேம். நனவில் பருவுடம்பு தொழிற்படுகிறது; இன்பத்துன்ப நுகர்ச்சிக்குக் காரணமாக அது நிகழ்கின்றது; ஆனுல் உறக்கத்தில் பருவுடம்பின் கண் தொழிற்பாடும் இன்பத்துன்ப நுகர்ச்சியும் நிகழவில்லை. பிராணவாயுவே ஆன்மாவாயின் நனவு, கனவு, உறக்கம் மூன்றிலும் இன்பத் துன்பத் நுகர்ச்சியும் தொழிற்பாடும் பருவுடம்பில் ஒரே மாதிரி நிகழ வேண்டும். அவ்வாறு நிகழாமையின், பருவுடம்பு, கனவுடம்பு, மனம், புத்தி, அகங்காரம் என்னும் அகக்கருவிகள் - என்பவற்றுடன் கூடியும் பிரிந்தும் அவத்தைப்படும் ஆன்மா பிராணவாயுவுக்கு வேறேயாம்.

6. பிரம்மம் ஆன்மா அன்று; முதற்பொருளாகிய பரப்பிரம்மம் இயற்கை முற்றுணர்வுடையது, எக்காலத்தும் எல்லாப் பொருள்களையும் ஒருபடித்தாக அறிந்து நிற்பது. ஆயின் உடம்புதோறும் யான் என நிகழும் உணர்வு உணர்த்த உணரும் சிற்றறிவாக உள்ளது. இஃது உடம்பில் உள்ள கருவிகளால் அறிவு விளங்கப்பெறுவது, நனவு நிலையிலும், நூல் ஆசிரியன், உடன் பயில்வோர், உலக அநுபவம் - என்னும் உதவிகளால் படிமுறையில் ஐயமும் மருட்கையும் நீக்கி அறிவு வளரப்பெறுவது. ஆதலால் பரப்பிரம்மத்திற்கு வேருக அதன் உதவியைப் பெறுவது ஆன்மா என்பதே உண்மை நூல்களின் துணிவு.

7. உடம்பு முதலாகவுள்ள கருவிகளின் கூட்டமே ஆன்மா என்ருலும் பொருந்துவதன்று; அகக்கருவிகளெல்லாம் கலை முதலாக நிலம் வரை 31 பெயர் பெறும். அவற்றைத் தொகுத்துக் காணும்போது பருவுடம்பு, நுண்ணுடம்பு, பரவுடம்பு எனப் பெயர் பெறுவதன்றி ஆன்மா எனப் பெயர் பெறுவதில்லை. ஆதலின் “இது” எனச் சுட்டப்படும் பொருள்கள் அனைத்திற்கும் வேருய், அவ்வாறு, பிறபொருள்களைச் சுட்டி உணர்ந்து அவற்றில் அழுந்தியும், “இது நான் அன்று” என அவற்றின் நீங்கியும் அவத்தைப் பட்டுவரும் உணர்வே ஆன்மா. அது கண்ணுக்குக் கண்ணுடிபோல நின்று உதவும் மாயா காரியமாகிய பொருள்களுள் ஒன்றும் அன்று; முதல்வன் மாயையைக் கடந்து நிற்பவன் ஆதலின், முதல்வன் ஆதலும் இன்று; மாயா காரியத்திற்கும் முதல்வனுக்கும் வேருய் அவ்விரண்டாலும் பயன்கொள்ளும் மூன்ருவது பொருளாகும்.

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:- ஊன்றி நோக்கின் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை, வேதாந்தம் என்னும் ஆறு தரிசனங்களிலும், உலகாயதம், பௌத்தம், சமணம் என்னும் புறச்சமயங்களிலும் கூறப்படும் பதார்த்த நியமனம் எல்லாம் இச்சூத்திரங்களால் மறுப்புண்டு போதல் விளங்கும்.

நான்காஞ் சூத்திரம்

உயிர்க்கு நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப் படக்கம் என்னும் ஐந்து உணர்வு நிலைகள் அன்ருடம் முறையே ஏறுவரிசையிலும் (மேலாலவத்தை) பின் இறங்கு வரிசையிலும் (கீழாலவத்தை) நிகழக் காண்கிறோம். ஏறுவரிசையில் பொருள் உணர்வு மென்மேலும் விளக்கமுற்று வருதலும், இறங்குவரிசையில் அவ்வுணர்வுமங்கி அறியாமை மேம்பட்டு நிகழ்தலும் நம் அனுபவமாக உள்ளன. ஆதலினுல், உயிர்க்கு அறியாமையை விளைவிப்பதாக இயற்கை மலம் ஒன்று உண்டென்பது உணரப்படும். மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்னும் அகக்கரணங்கள் அவ்வறியாமையை விலக்கி, உலகப் பொருள்களை உணர்ந்து தக்கபடி எதிர்இசைவு புரிய உதவுகின்றன என்பதும் உணரப்படும்.

"யான் இதனை அறிகிறேன்" என நிகழும் உணர்வில் யான் என நிகழ்வது தன்நோக்கு உணர்வு. (தற்பிரகாசம்) இதனை அறிகிறேன் எனப் புறப்பொருளை நோக்கும் உணர்வு, பொருள் உணர்வு, (பரப்பிரகாசம்). ஆன்மா பொருள் உணர்வோடு தன்னேக்கு உணர்வும் உள்ளது. அதற்கு உதவியாக உள்ள அந்தக்கரணங்கள், ஐம்பொறிகள் முதலியவை ஆன்மா உடனுகி நிற்கும்போது பொருள் நோக்கு உடையவையாய்த் தோன்றும், ஆயினும் தன் நோக்கு, தற்சோதனையால் உணர்ந்து, அந்தக் கரணங்களைத் தனக்கு வேறு என்று அறிக என்கிருர் மெய்கண்டதேவர்; அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான் என ஏதுவைக் கூறுகிருர் அவர். அந்தக்கரணங்கள் பரப்பிரகாசமாகிய பொருள் நோக்கு உடையவையாயிருந்தே தற்பிரகாசம் (தன்நோக்கு உணர்வு) இல்லாதவை ஆதலால் எனப் பொருள்படும். அந்தக் கரணம் உட்கருவிகள். இங்குக் காட்டிய அநுபவம் பற்றி மேலும் தற்சோதனை உள்நோக்கு நெறியில் நின்று நோக்கின், உயிர்க்கு மூன்று அடிப்படை உணர்வு நிலைகள் உள்ளன என்பது விளங்கும். அவை கேவலம், சகலம் சுத்தம் எனப்படும். கேவலம் அறியாமையில் அழுந்தும் நிலை; இது நூல்களில் இரவு எனப்படும். சகலம் - உலகப்பொருளில் அழுந்தும்நிலை. இது பகல் எனப்படும். சுத்தம் முதல்வன் திருவருளில் அழுந்தும்நிலை; இதுவே நூல்களில் இராப்பகலற்ற இடம் எனப்படும். கேவலத்திலிருந்து சகலத்தைத் தலைப்படும் நெறியில் மேலேகாட்டிய உயிர்ப் படக்கம், பேருறக்கம், உறக்கம், கனவு, நனவு என்னும் ஐந்து ஆக்கநிலைகளும் இவ்வாறு ஏறுவரிசையில் நிகழும். இவைபோலவே சகலத்தில் ஐந்து ஆக்க நிலைகளும்; சுத்தத்தில் ஐந்து ஆக்க நிலைகளும் உள்ளன. தன்னை உணரப்புகுவார் இந்நிலைகளை எல்லாம் சகலத்தில் நின்று முன்னும் பின்னும் கூட்டி உணர்தல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

ஐந்தாஞ் சூத்திரம்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் தத்தமக்குரிய ஊறு, சுவை, உரு, நாற்றம், ஓசை, என்பவற்றை அறியும்போது, மேலே சொல்லிய உயிரால் செலுத்தப்பட்டே அறியும், ஆயினும் அவை புறநோக்கு ஒன்றே உடையவை. ஆதலால், தம்மையும் அறிவதில்லை; தம்மைச் செலுத்தி நிற்கும் உயிரையும் அறிவதில்லை. இவற்றைப்போன்ற இயல்புதான் உயிர்களாகிய நமக்கு உள்ளது. உயிர் ஒரு பொருளை அறியும்போதும், ஒரு செயலைச் செய்யும்போதும், முதல்வனால் அறிவிக்கப் பெற்றும், செலுத்தப்பெற்றுந்தான் அறிகிறது; செய்கிறது. ஆயினும் அது பொருள் நோக்கு உடையதாகவே இருத்தலின் தன்னையும் அறிவதில்லை; தன் உணர்வின் முதலாக இருந்து தொழிற்படுத்தும் முதல்வனையும் அறிவதில்லை. காந்தம், தான் அசைவின்றி இருந்தே, இரும்பைத்தன் ஆற்றலால் இயக்குமாறுபோல, இறைவன் உயிர்களைத் தொழிற் படுத்துகிறான் . ஆதலின் அவன் எல்லா உயிர்களுக்கும் உபகரிப்பவனாக இருந்தும், தான் சிறிதும் விகாரப் படுவதில்லை. இஃது உயிர்க்கு அறிவு செயல்கள் மாயையின் சார்பால் விளங்குவன; எனினும், அவ்விளக்கம் முதல்வனது உபகாரம் இன்றி உளதாகாது என உணர்த்திற்று. முதல்வனது உண்மையை அவன் நம் உணர்வுக்கு முதல் எனக்கண்டு உணர்தல் வேண்டும் என்பதும் இதனால் விளங்கும். அத்துவிதம் என்பதன் மெய்ப்பொருளை இரண்டாஞ் சூத்திரத்தில் தோற்றுவாய் செய்த ஆசிரியர். இச்சூத்திரத்தில் மேலும் விளக்கிப் பதினொன்றாஞ் சூத்திரத்தில் அதன்முழு இயல்பையும் பயனையும் கூறி முடிக்கின்றார். பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் திருவேடம் ஆலயம் என்பவற்றைச் சிவனெனக் கண்டு தொழுவதற்கும் அத்துவித உணர்வே துணையாதலைத் தெரிவிக்கின்றார்.

ஆறாஞ் சூத்திரம்

முதல்வன் நம் அறிவால் அறியப்படுபவனா? அல்லனா? அறியப்படுபவன் என்றால், அறியப்படும் பொருள்கள் எல்லாம் அறிவில் பொருள்களாகவும் அழிவனவாகவும் இருத்தலின், முதல்வனும் அறிவில் பொருளாய், அழியும் பொருளாய் முடிவன்; எவ்வாற்றானும் அறியப்படாதவனே எனின், நம் உணர்வில் தட்டாத பொருளால் நமக்கு எப்பயனும் உளதாகாது. ஆதலினால், அவனை இல்பொருள் என்றே கொள்ளநேரும். இங்ஙனமாகலின், அவன் நம் சுட்டறிவுக்கு அப்பாற்பட்டவன் எனவும், பாசங்களினீங்கி, சுட்டாது ஒற்றித்து நின்று உணரும் அநுபவ உணர்வுக்கு விடயமாகுவன் எனவும் கொள்ளுதலே பொருத்தம் ஆகும். இதனால் அவன் சித்தாகவும் செம்பொருளாகவும் உளன் என்பதையும் உணரலாம். எனவே முதல்வனைச் சிவசத்து எனக் கூறலாம். சிவம் - சித்து; சிவசத்து - சித்துச்சத்து; அறிவு வடிவாய் உள்ள செம்பொருள்.

இச்சூத்திரம் மேலே "அளந்தறிந்தறியா" என்றமை பற்றிவரும் ஐயம் நீக்கித் தெறிவிக்கின்றது. உயிர் அறியாமையில் அழுந்தி நிற்கும் கேவல

நிலையிலும் மாயையின் காரியங்களால் அவ்வறியாமை ஓரளவு நீங்கிப் பொருளறிவு பெற்று நிற்கும் சகல நிலையிலும் முதல்வனை அறியாது எனினும், இருளும் மருளும் நீங்கி முதல்வன் திருவருளைத் தலைப்பட்டு நின்று வரும் மாசறு காட்சியில் (சுத்த நிலையில்) அம்முதல்வனை அறிவின்பச் செம்பொருளாய்ச் சார்ந்து உணர்ந்து இன்புறும் என்பது இதனுல் உணர்த்தப்பட்டது. "இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி மாசறு காட்சி யவர்க்கு." "தூய்மை என்பது அவாவின்மை" என்னும் திருக்குறட் பகுதிகள் புடைபட வைத்து நோக்குதற்கு உரியன.

ஏழாஞ் சூத்திரம்

சத்தாகிய சிவத்தின்முன் அசத்தாகிய உலகம் முனைந்து தோன்ருது; ஞாயிற்றின் ஒளிமுன் விளக்கொளி முனைந்து தோன்ருதன்ரே, அதுபோல, ஆதலால் சிவம் உலகத்தை நுகராது; அதாவது சிவம் உலகத்தை அதுவதுவாய் அழுந்தி நின்று அதன் தன்மையை ஏற்றுக் கொள்ளாது. அசத்தாகிய உலகமும் அறிவில் பொருள் ஆதலால் சிவத்தை அனுபவியாது. பின்னர் இவற்றை அறிந்து பயன் உறுவது எது என்னில், ஆன்மாவே இரண்டனையும் அழுந்தி அறிந்து பயன்கொள்ளும். அதுசத்து, அசத்து என்ற இருதிறனையும் இருதிறனுலும் அறிவதாய், அவ்விரண்டனையுஞ் சார்ந்து அவற்றின்பால் உள்ளதாய் விளங்கும். இஃது அதன் சிறப்பியல்பு.

சத்து - செம்பொருள் - எவ்வகை மாறுதலும் எய்தாதது; அசத்து - தோன்றி நின்று மறைவதாகிய மாற்றம் உடையது.

விளக்கம்:- பிறப்பு நிலையில் ஆன்மா, அசத்தாகிய முக்குண வடிவில் உள்ள உலகப்பொருள்களை அறிந்து நுகரும். அந்நுகர்ச்சி தனு கரணங்களாகிய அசத்தால் அதற்கு உளதாவது. அந்நிலையில், ஆன்மா தனுகரணங்களேதான் என உணர்ந்து அவற்றின் மயமாய் இருக்கும்.

வீட்டு நிலையில், சத்தாகிய சிவத்தை அதன் திருவருளாகிய சத்தாற்கண்டு உணர்ந்து, சத்தாகிய அதன் எண்குணங்களும் தன்பால் மேம்பட்டு விளங்கச் சிவமாய் நிற்கும். இதுபற்றி ஆன்மா என ஒன்றில்லை; சிவனே ஆன்மா என்றல் அடாது.

முன் அசத்தைச் சார்ந்து அசத்தாய் நின்ற ஆன்மா, பின் சத்தைச் சார்ந்து அசத்தினீங்கிச் சத்தாய் நிற்றலின் அது சதசத்து எனப்படும்.

"சேர்வார் தாமே தானுகச் செய்யுமவன்" - திருஞானசம்பந்தர்

"தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகில் சிவகதிவிளையும் அன்றே" - அப்பர்

இவ்வநுபவ வாய்மொழிகள் உடன்வைத்து நோக்குதற்குரியவை.

திருச்சிற்றம்பலம்

எட்டாஞ் சூத்திரம்

முற்பிறவிகளில் பயன் கருதாது செய்துவந்த சரியை கிரியா யோகங்களாகிய தவமுதிர்ச்சியினுல் உயிர்க்குயிராக இருந்து உணர்த்திவரும் முதல்வன் ஞானுசிரியனுகவும் தோன்றி மெய்யுணர்வை அளித்தருளுவன் மன்னவன் மகன் வேடரிடத்தே தங்கித் தன் பெருந்தன்மையை மறந்து வாழ்வது போல, சிவாநந்தப் பெருஞ் செல்வத்தைப் பெற்று வாழ்வதற்குரிய சிவகுமாரனுகிய உயிர் ஐம்பொறிகள் முதலிய தத்துவக்கூட்டங்களுடன் சேர்ந்து, தன்பெருந்தன்மையையும் சிவத்தோடு தனக்குள்ள சம்பந்தத்தையும் அறியாது, பிறப்பிறப்புட்பட்டு உழலும் இவ் உண்மையை ஞானுசிரியன் பக்குவமுதிர்ச்சியுள்ள உயிர்க்கு உணர்த்தியருளுவன். இவ்வுண்மையைக் கேட்டவுடன், தத்துவக் கூட்டங்களினின்று நீங்கி முதல்வன் திருவடியில் பிரிப்பின்றி ஒன்றி இன்புறு நிலையை எய்தும்.

எட்டாஞ் சூத்திரப் பொருள் "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாராநெறி" என்னும் திருக்குறளின் விரிவுரையாக அமைதல் காண்க.

ஒன்பதாஞ் சூத்திரம்

அசத்தாகிய தத்துவங்களோடு கூடுவதால் உயிர்க்கு உண்டாகும் சுட்டுணர்வு பாசஞானம் எனப்படும். மூன்ருஞ் சூத்திரத்திற் கூறியவாறு நான் யார்? என உயிர் தன் உண்மையை ஆய்ந்துணரின் அதுமாயா காரியமாகிய கருவி கரணங்களின் தொடர்பு நீங்கித்தன் வியாபக நிலையை உணரும். அவ்வாறு உணரும், நிலையில் பாசம் நீங்கினும் அதன் வாதனை காரணமாகத் தன்னை "நான் பரம்பொருள்" என உணரும். இவ்வுணர்வு பசு ஞானம் எனப்படும்.

பகற்பொழுதில் அளப்பரிய ஆகாயத்தை காணலுறும் போது, ஆகாயத்தின் அவ்வளப்பரிய விளக்கம் அதன் கண் கலந்து விளங்கும் ஞாயிற்றின் பேரொளி காரணமாக உளதாதல்போல, பாசநீக்கத்தில் உயிரின் கண் விளங்கும் வியாபகம், முதல்வன் திருவருட்சார்ப பற்றிய விளக்கமாகும் எனத் தெறிந்து, அத்திருவருள் ஒளியில் "யான் எனது" என்னும் செருக்கு அற அடங்கி நிற்பின் அவ்வருளுக்கு முதலாக உள்ள சிவம் பேரின்பவடிவாய்த் தோன்றி ஆன்மாவை தன் வயப்படுத்தி இன்பூட்டும். இவ்வாறு திருவருளே கண்ணுகக்காணும் காட்சியே மெய்யுணர்வு அல்லது சிவஞான எனப்படும் பாசக்கூட்டம் எல்லாம் கானல் நீர்போல் சடுதியில் தோன்றி மறைவன என, அவற்றைத் தனக்கு வேருகக் கண்டுபற்றுச்செய்யாது நிற்ப, அவ்வாறுநிற்கும் உயிரின் அறிவின்கண் திருவருள் ஞானம் பிறவி வெப்பத்திற்குத் தண்ணிய நிழல்போல வெளிப்படும். பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் பற்றமுடியாத பேரின்ப முதல்வனை அத்திருவருள் ஞானத்தால் தன் அறிவின்கண் ஒருவன் நாடுதல் வேண்டும். இவ்வாறு சிந்தித்துக் காணும் காட்சி சலியாதிருத்தற் பொருட்டு முத்தி பஞ்சாக்கரம் சுத்தமானமாக

எண்ணப்படும். ஒன்பதாஞ் சூத்திரப்பொருள் "ஓர்த்துள்ளம் உள்ளதுணரின் ஒருதலையாப் - பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்னும் திருக்குறளின் விரிவுரையாக அமைதல் காண்க.

பத்தாஞ் சூத்திரம்

பிறப்பு நிலையில் உயிரின் அறிவு செயல்கள் நிகழும் போது முதல்வனும் உடனாகி நின்றே அவ்வாறு நிகழுமாறு பணித்து வருகின்றான்; இங்ஙனம் முதல்வன் உடனிற்பினும் உயிர் யான் எனது என்னும் செருக்கோடு முயலும். அதனால் முதல்வன் தன் இருப்பைச் சிறிதும் அவ்வுயிர்க்குக் காட்டாது, தான் பின்நின்று அதன் வழியிலே அதனைச் செல்லுமாறு விடுகின்றான். உயிர் முதல்வன் உபகாரத்தை மறந்து செய்யும் செயல்களுக்குத் தானே பொறுப்பு ஆதலின், இருவினை அதைப்பற்றுகின்றது.

இங்ஙனம் பிறப்பு நிலையில் முதல்வன் தான் எனத் தன்னைக் காட்டாது உயிரின் செயலில் மறைந்துவந்தாற் போல, முதல்வனிருப்பை உணரும் வீட்டு நிலையில் ஆன்மா தான் என ஒரு முதல் காணப்படாதபடி எல்லாம் முதல்வன் செயலே என்னும்படி அவன் வியாபகத்தில் அடங்கி ஒன்றாகி, அவன் அருளால் அல்லது ஒன்றையும் அறிதலோ செய்தலோ இன்றி அருள் வழி நிற்றல் வேண்டும். இங்ஙனம் முதல்வனோடு ஒன்றுதலால் இயற்கைமலம் எனப்படும் ஆணவத்தின்வாதனை பற்றறக் கழியும்; அருள்வழி நிற்றலால் அருளே காட்சிப்பட்டு உலகம் காட்சிப்படாது. அதாவது மாயையின் செயல் பற்றறக் கழியும்; ஆதலினால் இருவினைகளும் ஆன்மாவைப் பற்றமாட்டா.

இச்சூத்திரத்தால் குறிக்கப்படும் மெய்யுணர்வு நிலை "அருணிலை" எனப்படும். இச்சூத்திரம் "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரு நோய்" என்னும் அருமைத் திருக்குறளை ஒத்தது.

பதினொன்றாஞ் சூத்திரம்

கண் பொருள்களைக் காணும் இயல்பு உள்ளது. ஆயினும் உயிரின் அறிவு உடனிருந்து செலுத்திக் காட்டினால் அன்றி அதற்குக் காட்சி நிகழாது. ஆதலினால் பொருள்களைக் கண் காணும்போது உயிரின் உதவியைக் கொண்டேகாணும்.

இவ்வாறே உயிர் பொருள்களை அறிந்து அவற்றில் அழுந்தி நின்று அநுபவிக்கும் இயல்பு உள்ளது. ஆயினும் முதல்வன் திருவருள் உடன் கலந்து செலுத்திப் பொருள்களைக் காட்டினாலன்றி அது பொருள்களைக் காணாது.

மேலும் கண் பொருள்களைக் காணும்போது உயிரின் அறிவு அதற்குப் பொருள்களைக் காட்டித்தானும், காணும் உயிரின் அறிவுக்குக் காட்சி இல்லையென்றால், கண்ணிற்கும் காட்சி இல்லைதான். இவ்வாறே உயிர்பொருள்களை அறிந்து அனுபவிக்கும்போது உயிர்க்கு அவ்வனுபவம்

நிகழ்தற் பொருட்டு முதல்வன் அவ்வுயிர்க்குப் பொருளைக் காட்டித் தானும் அவற்றில் அழுந்தாது காண்பன். இவ்வுபகாரம் முதல்வனால் எல்லாவுயிர்களுக்கும் பிறப்பு வீடு என்னும் இருநிலைகளிலும் எஞ்ஞான்றும் செய்யப்படுகின்றது . பிறப்பு நிலையில் உயிர்கள் அசத்தாகிய உலகப் பொருள்களைத் தம் அறிவிச்சை செயல்களால் விடயித்து இன்பத் துன்ப மயக்கம் என்னும் மூவகை வேதனைப்படும். வீட்டு நிலையில் முதல்வனையே தன் அறிவு இச்சை செயல்களுக்கு விடயமாகப் பற்றி அழுந்திப் பேரின்பம் துய்க்கும்.

தாய்ப்பால் அருந்தும் குழவிக்குத் தாய் அணைத்துத் தன்னிடம் சுரக்கும் பாலை உண்ணக்கொடுத்து உபகரிப்பது போலவே வீட்டுநிலையில் முதல்வன் உயிர்களுக்கு உபகரிக்கிறான். இக்கருத்தை மாணிக்கவாசகர் "தாயாய் முலையைத் தருவானே" என்று அருளிச் செய்துள்ளார்.

இவ்வாறு பிறப்பு வீடு இரண்டினும் முதல்வன் செய்யும் உபகாரத்தைச் சிவஞானத்தாற் சிவனைக்காணும் சிவஞானிகள் முன் சூத்திரங்களிற் கூறியபடி கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து உணர்வர். அவ்வாறு முதல்வன் உபகாரத்தை உண்மையாக உணரும் மெய்யுணர்வின் பயனாக அவர்களுக்கு இடையறாப் பேரன்பு கரைகடந்து எழும்; அந்த நிலையில் அவ்வன்பே இன்பமாய்ச் சிவம் வெளிப்பட அதன் கண் அழுந்தி அன்பே சிவமாய் அமர்ந்திருப்பார். இதுவே பரமுத்தி நிலையில் ஆன்மா சிவமாந்தன்மைப் பேரா இயற்கை பெற்று வாழும் நிலை. இது சுத்தத்தின் கண் நிகழும் அதீதநிலை எனவும், இன்புறுநிலை எனவும் கூறப்படும்.

பன்னிரண்டாஞ் சூத்திரம்

இன்புறுநிலையைத் தலைப்பட்ட பெருமக்கள் முதல்வன் திருவருளால் உந்தப்பட்டும் பிராரத்தவாதனை காரணமாகவும் சிற்சில சமயங்களில் அதீதநிலையின் நீங்கி உலகமுகப்படுவர். அந்நிலையில் மலவாதனை காரணமாக "யான் எனது" என்னும் செருக்குத் தம் உணர்வில் தோன்றாதபடி ஞானநீரால் வாதனை மாசுகழுவுவர்; தம்மோடு ஒத்த மெய்யன்பரோடு கூடிநிற்பர். திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்களையும் திருவேடத்தையும் சிவன் எனவே தெளியக்கண்டு தொழாநிற்பர்.

இச்சூத்திரம் அணைந்தோர் தன்மை எனப்படும் சீவன் முத்தர் இயல்பு கூறுவது. இவ்வியல்பைத் திருஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகளில் காணலாம்.

சிவஞான போதத்தைப்பற்றி இன்னும் ஒருகருத்தைத் தெரிவிக்க வேண்டும். அதன் வார்த்திகத்தில் உதாரணச் செய்யுட்களாக மொத்தம் 81 வெண்பாக்கள் மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டன. முதற்கண் உள்ள அவையடக்க வெண்பாவும் இறுதியில் உள்ள நூலைப் பெறுதற்குரிய அதிகாரியை உணர்த்தும் வெண்பாவும் உட்பட மொத்தம் 83 வெண்பாக்கள் ஆகும்.

திருச்சிற்றம்பலம்

அவையடக்கத்தின் முன்னிரண்டு அடிகளால் வாழ்க்கையின் குறிக்கோள், தன்வயமில்லாத தனது இயல்பை முன் உணர்ந்து அதன்பயனுக முதல்வனது உண்மையை உணர்ந்து இன்புறுதல் என்பதும், அவ்வாறு உணர்வோர் சிவத்தைச் சோகம் (அவன் நான்) என ஒன்றி நின்று உணர்வோர் ஆதலின், அவர் சிவமே ஆவர் என்பதும் உணர்த்தப்படுகின்றன.

"தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை (யின்)"

என்பது அப்பகுதி.

இனி ஆசிரியர் முதற்கண் உலகம் முத்தொழில் உடையது என உணர்த்துகின்ருர். அதனை, மேற்கோள் ஏது என்பவற்றைக் கூறிய அளவிலே உணரமாட்டாத மாணுக்கனை, பேதாய் என விளித்து உதாரண வெண்பாவால் அவ்வுண்மையை மேலும் விளக்கி உணர்த்துகின்ருர்.

"பூதாதி ஈறும் முதலும் துணையாகப்
பேதாய்! திதியாகும்"

என்பது மெய்கண்டார் வாய்மொழி. பேதாய் என விளித்தற்குரிய இத்தகைய மாணுக்கனுக்கு உணர்வைப் பெருகச் செய்து மேலும் 38 உண்மைகளை உணர்த்திக் கொண்டுபோகிருர். அவர் அருள்வழி நின்று மாணுக்கன் நூற்பொருள் முழுவதையும் உணர்ந்து தெளிந்து இறுதியிற் சிவமாய் நிற்கின்ருன். அந்த நிலையில் தான் அம்மாணுக்கனைத் தம்நூலைப் பக்குவர்களுக்கு உணர்த்தும் தகுதி உடையவனுகக் கருதுகிருர். உணர்த்தும் தகுதியுடையவனை ஒண்குரு எனவும் குறிக்கின்ருர். முதலில் பேதாய் என அழைத்த மாணவனையே இறுதியில் "சிவமென்னும் அந்ததர" என அழைக்கின்ருர். இறுதிவிளியின் பொருள் "சீவன் என்ற பெயர் நீங்கிச் சிவம் என்னும் தகுதிவாய்ந்த சித்தாந்தியே" என்பது. அந்தம் என்பது வேதாந்தம்; தரம் என்பது அதனின் மேம்பட்டதாகிய சிவாகம ஞானபாதத் துணிவாகிய சித்தாந்தம். இவற்ருல் பேதையாக வரும் ஒருவன் இந்நூலை உள்ளவாறு உணரப் பெற்ருல் சிவமாந்தன்மைப் பெருவாழ்வை எய்துவன் என்பது குறிப்பிக்கப்படுகிறது. சகலாகம பண்டிதர் என வந்த முதல் மாணுக்கர் அருள்நந்தி சிவம் ஆனுர். மெய்கண்ட சிவம், மறைஞானசம்பந்த சிவம், உமாபதி சிவம் என ஆசிரியர்களை நாம் வழங்கி வரும் மரபின் உட்கருத்து இன்னது என்பதை இதனுல் உணரல் ஆகும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவெண்ணெய்நல்லூர் - மெய்கண்ட தேவர்

அருளிச்செய்த

3. சிவஞானபோதம்

சிறப்புப் பாயிரம்

நேரிசை ஆசிரியப்பா

மலர்தலை உலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள்தீர்ந்து
அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வுஅற நந்தி முனிகணத்து அளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

மங்கல வாழ்த்து

கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

அவையடக்கம்

தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்குஇயைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்

1. பொதுவதிகாரம்

(இந்நூல் நான்கு இயலாகப் பிரித்து உணர்த்தப்படுகிறது அவை பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன்இயல் என்பன.)

க. பிரமாணவியல்

இறை, தளை, உயிர் ஆகிய முப்பொருள்களும் என்றும் உள்ளனவாம். அவற்றை ஆய்வு வகையான் ஏற்றுக் கொள்ளுமாறு இவ்வியலில் கூறுதலின் இது பிரமாண இயல் எனப்பட்டது. ஒரு பொருளை உறுதிப்படுத்துதற்குக் காண்டால், கருதல், உரை எனும் மூவளவைகள் வேண்டும், இம்மூவகை அளவைகளானும் முப்பொருண்மையை ஆசிரியர் இவ்வியற்கண் காட்டுகின்ருர். பிரமாணம் - அளவை.

முதல் சூத்திரம்

அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனுர் புலவர்.

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், சங்கார காரணனுய் உள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம் என்பது உணர்த்துதல் நுதலிற்று. (குறிப்பு : - *சூத்திரமும், வார்த்திகப் பொழிப்பும் மெய்கண்டார் இயற்றியதாகும். வார்த்திகம் - சூத்திரக் கருத்தை விளக்கும் ஓர் உரைவகை.)*

உரைவகை : *அவன், அவள், அது எனப் பகுத்துப் பலவாய் உணரப்படும் இவ்உலகம் தோன்றுதல், நிலைத்தல், ஒடுங்குதல் எனும் முத்தொழில் உடையது. உலகு அறிவற்றதாகலின் இம்முத்தொழில் களைத் தானே செய்து கொள்ளும் தகுதியுடையதன்று. ஆதலின் அது அவ்வாறு முத்தொழிற்படுதற்கு ஒரு முதல்வன் வேண்டப்படும். அம்முதல்வனுல் ஒடுக்கப்பட்ட உலகமே மீளத் தோற்றுவித்தற்குக் காரணம் உயிர்களிடத்திலுள்ள மலமாசினை அகற்றுதற்காம். எனவே ஒடுக்கியும் தோற்றுவித்தும் தொழிற்படுத்தும் ஒரு ஒப்பற்ற அழித்தற் கடவுளாய சிவபெருமானே உலகிற்கு முதற் கடவுளாவர் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இந்நூற்பா மூன்று அதிகரணங்களால் விளக்கப்படுகிறது.*

திருச்சிற்றம்பலம்

1. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசம் உடைத்து என்றது.

ஏது : தோற்றமும் மீறும் உள்ளதன்பாலே கிடத்தலின்

உதாரணம் :

பூதாதி ஈறும் முதலும் துணையாக
பேதாய்! திதி ஆகும் பெற்றிமையின் - ஓதாரோ
ஒன்று ஒன்றின் தோன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றுஎன்றும் உண்டு என்ன ஆய்ந்து 1

2. இரண்டாம் அதிகரணம்.

மேற்கோள் : இனி, ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை என்றது

ஏது : இல்லதற்குத் தோற்றம் இன்மையின், உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையின்.

உதாரணம்.

இலயித்த தன்னில் இலயித்ததாம் மலத்தால்
இலயித்தவாறு உளதா வேண்டும் - இலயித்தது
அத்திதியில் என்னின் அழியாது அவையழிவது
அத்திதியும் ஆதியுமாம் அங்கு 2

வித்துண்டாம் மூலம் முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால்- வித்தகமாம்
வேட்டுவனும் அப்புழுபோல் வேண்டுருவைத் தான் கொடுத்துக்
கூட்டானே மண்போல் குளிர்ந்து 3

நோக்காது நோக்கி நொடித்து அன்றே காலத்தில்
தாக்காது நின்று உளத்திற் கண்டு இறைவன் - ஆக்காதே
கண்ட நனவு உணர்விற் கண்ட கனவு உணரக்
கண்டவனின் இற்று இன்றும் கட்டு 4

3. மூன்றும் அதிகரணம்.

மேற்கோள் : இனி, சங்காரமே முதல் என்றது.

ஏது : சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வு இன்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

உதாரணம் :

ஒன்று அலா ஒன்றில் உளது ஆகி நின்றவாறு
ஒன்று அலா ஒன்றில் ஈறுதல் - ஒன்றலா
ஈறே முதல் அதனின் ஈறு அலா ஒன்று பல
வாறே தொழும்பு ஆகும் அங்கு

இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கு மன்றே.

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோவெனின், புனருற்பவம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரைவகை : *உலகின் முதல்வனாக விளங்கும் சிவபெருமான் உயிர்களின் பொருட்டு உலகைத் தோற்றுவிப்பன். உடல் இருத்தற்கு உயிர் அதனோடு கலந்து நின்று அவ்வுடலேயாய் நிற்பது போல, உயிர்கள், (உடலொடு) நிலைத்தற்கும் அவ்உயிர்களிடத்து அம்முதல்வன் கலந்து நின்று அவ்உயிர்களேயாய் நிற்பன் இது ஒன்றாய் நிற்றல் எனப்படும். கண் காண்பதற்குத் துணையாய் நிற்கும் கதிரவன் அக்கண்ணினின்றும் வேறாதல் போல உயிர்களிடத்து அறிதற் தொழில் நிகழ்த்தற்குத் துணையாய் நிற்கும் இறைவன் அவ்வுயிர்களின் வேறாய் நிற்பன். இது வேறாய் நிற்றல் எனப்படும். கண் ஒளி பொருளைக் காண்பாற்கு உயிர் அறிவுடன் நின்று கண்ணொளியோடு கூடப் பொருளிற் செல்லுமாறுபோல, உயிர்கள் இன்பதுன்பங்களைத் துய்த்தற்கு அவ்வின்ப துன்பங்களுக்கு இடனாக நிற்கும் பொருள்களில் உயிரோடு கூட இறைவன் செல்லுதலின் அவ்வுயிர்களோடு உடனாய் நிற்பன். இது உடனாய் நிற்றல் எனப்படும். இவ்வாறு உயிர்களோடு இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று தனது ஆணை என்னும் அறிவாற்றலால் இயக்கப்பட்டு வரும் இருவினைகளால் அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும். அவ்வாறாக அவ்வாணையோடு பிரிவின்றி ஒற்றுமைப்பட்டு நிற்பன் இறைவன் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இது நான்கு அதிகரணங்களை உடையது.*

திருச்சிற்றம்பலம்

4. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும் என்றது.

ஏது : அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு.

உதாரணம்.

கட்டும் உறுப்பும் கரணமுங் கொண்டுள்ள
இட்டதொரு பேர் அழைக்க என் என்றுங்கு - ஒட்டி
அவன் உளம் ஆகில்லான் உளம் அவன் ஆ மாட்டாது
அவன் உளமாய் அல்லனுமாம் அங்கு. 6

ஒன்று என்றது ஒன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்று என்ற நீ பாசத்தோடு உளேக் காண் - ஒன்று இன்றுல்
அக்கரங்கள் இன்றும் அகர உயிர் இன்றேல்
இக்கிரமத்து என்னும் இருக்கு. 7

பண்ணேயும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போல் எங்குமாம் - அண்ணல்தாள்
அத்துவிதம் ஆதல் அருமறைகள் ஒன்று என்னுது
அத்துவிதம் என்றறையும் ஆங்கு 8

அரக்கொடு சேர்த்தி அணேத்த அக்கற்போல்
உருக்கி உடங்கு இயைந்து நின்று - பிரிப்பு இன்றித்
தானே உலகாம் தமியேன் உளம் புகுதல்
யானே உலகு என்பன்இன்று 9

5. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினே முதல்வன் ஆணேயின் வருமென்றது

ஏது : ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவல் இட்டாங்கு அவை அவனது ஆக்கினே ஆகலான்

உதாரணம் :

உள்ளதே தோற்ற உயிர் அணேயும் அவ்வுடலின்
உள்ளதாம் முற்செய்வினே உள் அடைவே - வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன் விளேக்குஞ் செய்யேபோல்
செய்வன், செயல் அணேயா சென்று. 10

திருச்சிற்றம்பலம்

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம் சென்றங்கு
அவ்வினையைக் காந்த பசாசம் போல்- அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு. 11

நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும்
சொல்லின் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலால் பொன்வாள்
அலர்சோகம் செய் கமலத் தாம். 12

6. மூன்ரும் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மாக்கள் மாறி பிறந்து வரும் என்றது.

ஏது : தோற்றமும் ஈறும் உள்ளதற்கு அல்லது உளதாதல் இன்மையான்.

உதாரணம் :

கண்ட நனவைக் கனவு உணர்வில் தான் மறந்து
விண்படர்ந்து அத்தூடு வினையினுல் - கண்செவிகெட்டு
உள்ளதே தோற்ற உளம் அணுவாய்ச் சென்றுமனம்
தள்ள விழும் கருவில் தான். 13

அரவுதன் தோல் உரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வரும் அப்பண்பும் - பரவில்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டம் என்பது
அடாது உள்ளம் போமாறு அது 14

7. நான்காம் அதிகரணம்

மேற்கோள் : இனி, நீக்கமின்றி நிற்குமன்றே என்றது

ஏது : அவன் ஏகன் அநேகன் இரண்டும் இன்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

உதாரணம் :

எங்குமுளன் என்ற அளவை ஒன்று அன்று இரண்டென்னில்
எங்கும் உளன் அன்று, எவற்று எவனும் - அங்கண்
அவை அவன் அன்றில்லை பொன்ஞெளிப்போல் ஈசன்
அவையுடமை ஆளாம் நாம் அங்கு. 15

திருச்சிற்றம்பலம்

மூன்றும் சூத்திரம்

உளதிலது என்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படி
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திரத் தனுவினுள் ஆன்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ வெனின், ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று.

உரைவகை : *இலது என்றலினானும், எனது உடல் என்றலினானும், ஐம்புலன்களை அறிதலினாலும், ஐம்புலன்களும் ஒடுங்கிக் காணும் கனவு நிலையை நனவின்கண் மயங்கி அறிதலினானும், உறக்கத்தில் இன்பத்துன்பத்துய்ப்பும் உடல் தொழிற்படுதலும் இல்லாமையானும், உயிர் அறிவிக்க அறிதலாலும், மாயையின் விளைவாகிய உடல் முதலியவற்றுக்கு வேறுவேறு பெயர் இருத்தலானும், உயிர் இல்லை என்றோ, அதுவே உடல் என்றோ, அதுவே ஐம்பொறி என்றோ, அதுவே பிரமம் என்றோ, அதுவே உடல்பொறி உயிர்க்காற்று முதலியவற்றின் கூட்டமென்றோ கூறலாகாது. இவ்வனைத்தினும் வேறாய் உயிர் உண்டு என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இது ஏழு அதிகரணங்களை உடையது.*

8. முதல் அதிகரணம்.

மேற்கோளும் ஏதுவும் : ஈண்டு , இலது என்றலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : எவற்றினையும் அன்று அன்று எனவிட்டு, ஆன்மா இலது என்று நிற்பது உளதாகலின் அதுவே அவ் வான்மாவாம் என்றது.

உதாரணம் :

அன்று அன்று எனநின்று அனைத்தும்விட்டு அஞ்செழுத்தாய்
நின்றஒன்று உளதுஅதுவே நீ அனைத்தும் - நின்றுஇன்று
தர்ப்பணம்போல் காட்டலால் சார்மாயை நீயல்லை
தற்பரமும் அல்லை தனி. 16

திருச்சிற்றம்பலம்

9. இரண்டாம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, எனது உடல் என்றலின் ஆன்மா உளது என்றது

பொழிப்புரை : என்பதி என்மனை என்ருற்போல என்கை என்கால் என நிற்பது உளதாகலின் அதுவே அவ் வான்மாவாம் என்றது.

உதாரணம் :

எனதுஎன்ற மாட்டின் எனது அலாது என்ஞது
உனதலாது உன்கைகால் யாக்கை - எனதென்றும்
என்னறிவது என்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னில் அவை வேரும் உணர். 17

10. மூன்ரும் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது என்றது

பொழிப்புரை : ஐம்புலஞகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்று அறிந்து ஒன்று அறியாமையின் இவ் ஐந்திஞலும் ஐம்பயனும் அறிவது உளதாகலின், அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.

உதாரணம் :

ஒன்று அறிந்தது ஒன்று அறியா தாகி உடல்மன்னி
அன்றும் புலஞய அவ் அஞ்செழுத்தை - ஒன்று அறிதல்
உள்ளதே ஆகில் அதுநீ தனித்தனி கண்டு
உள்ளல் அவை ஒன்றல்லை ஓர். 18

11. நான்காம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும்: இனி, ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : நனவின்கண் கனவு காண்டாம் என்றும் கண்டிலம் என்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலிற் சென்று அடங்கி- அவ்வுடலின்
வேறெென்று கொண்டு விளையாடி மீண்டு அதனை
மாறல், உடல் நீ அல்லை மற்று 19

திருச்சிற்றம்பலம்

12. ஐந்தாம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனிக் கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருத்திக்கு இன்மையின், ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியா நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

கண்டறியும் இவ்வுடலே காட்டு ஒடுங்கக் காணுதே
உண்டிவினை இன்றி உயிர்த்தலால்- கண்டறியும்
உள்ளம்வேறு உண்டுஆய் ஒடுங்காது உடல்நண்ணில்
உள்ளதாம் உண்டிவினை ஊன். 20

13. ஆறும் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம்.

அறிந்தும் அறிவதே யாயும் அறியாது
அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி- அறிந்தது
எது அறிவும் அன்ருகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுஅதுதான் னென்னு மகம். 21

14. ஏழாம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

உதாரணம் :

கலையாதி மண்அந்தம் காணில் அவை மாயை
நிலையாவாம், தீபமே போல - அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்
தானத்தின் வேருகுந் தான். 22

2. இலக்கணவியல்

மேற்கூறிய முப்பொருள்களிலும் இறுதியாகக் கூறியது உயிராம். எதிர் நிரல்நிறை முறையில் அவ்வுயிரையே முதலாகக் கொண்டு உயிர், தளே, இறை ஆகிய முப்பொருள்களேயும் 4,5,6 நூற்பாக்கள் விளக்குகின்றன. மேல்உண்டு என்று அறிந்த முப்பொருட்கும் இலக்கணம் கூறலின் இவ்வியல் இலக்கணவியலாயிற்று.

நான்காம் சூத்திரம்

அந்தக் கரணம் அவற்றினென்று அன்று அவை
சந்தித்தது ஆன்மாச் சகச மலத்து உணராது
அமைச்சுஅரசு ஏய்ப்பநின்று அஞ்ச அவத்தைத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், இதுவும் அது.

உரைவகை : *உயிரானது அகக்கருவிகளாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கனுள் ஒன்று அன்று. ஆயினும் அரசன் நுண்மாண் நுழைபுலம் மிக்க துணேவராகிய அமைச்சரோடு கூடி நின்று தன்னுட்சிச் செயலே நடத்துமாறுபோல, காலப்பழமைக்கு எட்டாத காலத்தேயே இயல்பாகக் கூடியிருக்கும் ஆணவமலத்தினுல் அறிவின்றிக் கிடக்கும் உயிர்க்குச் சட்டைபோன்ற கலே முதலிய தத்துவங்களினுல் பொது வகையால் உணர்வு நிகழினும் சிறப்பு வகையால் உணர்வு நிகழாமையின் அது நிகழுதற்குச் சூழ்ச்சித் துணேயாகிய அவ் அகக்கருவிகளோடு கூடிநின்று நனவு முதலிய ஐம்பாட்டினேப் (ஐந்தவத்தை) பொருந்து கின்றது என்பது இதன் பொருளாகும். இது மூன்று அதிகரணங்களே உடையது.*

15. முதல் அதிகரணம்.

மேற்கோள் : ஈண்டு, இவ்வான்மாவாவது அந்தக் கரணங்களாய் உள்ள மனே புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்று அன்று என்றது.

ஏது : அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம்.

மனமாதி யால்உணர்தல் மன்னு புலன்கள்
மனமாதி மன்புலனின் அல்லன் - மனமேல்
உதித்து ஒன்றை உள்ளம் உணர்தல் அதனில்
உதிக்குங் கடல்திரையை ஒத்து 23

சிந்தித்து ஆய்ச் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப் - பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்து உள்ளம் இவ்வேரும்
அவ்வேரும் போதுபோல் ஆங்கு 24

அகாரம் உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம் சித்தம் விந்து - பகாது இவற்றை
நாதம் உளவடிவாம் நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று 25

எண்நிலவு ஓங்காரத்து ஈசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்து - கண்ணில்
பகர் அயன்மா லொடு பரமன் அதிதெய்வம்
மகரஉக ரம்அகரத் தாம் 26

16 . இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மாச் சகச மலத்தினுல் உணர்வு இன்று என்றது.

ஏது : அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துகொடு நிற்றலான்

உதாரணம் :

மாயா தனுவிளக்காம் மற்று உள்ளம் காணுதேல்
ஆயாதாம் ஒன்றை அதுவதுவாய் - வீயாத
வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்ரும் காட்டம்போல்
தன்னை மலம் அன்றணைதல் தான் 27

17. மூன்ரும் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மா, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீமாயுள்ள பஞ்ச அவத்திதனுய் நிற்கும் என்றது.

ஏது : அதுதான் மல சொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

உதாரணம் :

ஒன்று அணையா மூலத்து உயிர் அணையும் நாபியினில்
சென்றணையும் சித்தம் இதயத்து - மன்றவே
ஐயைந்தாம் நல்நுதலில் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டு அகன்று வேறு 28

இலாடத்தே சக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும் - இலாடத்தே
அவ்வவ் இந்திரியத்து அத்துறைகள் கண்டு அதுவே
அவ்வவற்றின் நீங்கல் அது ஆங்கு 29

ஐந்தாம் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா ஆங்குஅவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், இவ்வான்மாக் களிடத்துத் தமது முதல் உபகாரம் உணர்த்துதல் நுதலிற்று.

உரைவகை : *மேற்கூறப்பட்ட உயிரால் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளும் தத்தம் புலன்களை அறியும். ஆனால் அவ்வாறறியும் தம்மையும் அறிதற்கேதுவாய உயிரையும் அவை அறிவதில்லை. அதுபோலவே உயிர்களும் தம் அறிவிற்குத் துணையாகிய முதல்வனின் அறிவாற்றலால் ஐந்தவத்தைகளில் நின்று வினைப் பயன்களை அறிந்து துய்க்கும். அவ்வாறு துய்ப்பினும் துய்க்கும் தம்மையும் தாம் துய்த்ததற்கு ஏதுவாக உதவும் மறைப்பாற்றலையும் அறியமாட்டாவாம். பொறிகளைச் செலுத்தி நிற்கும் உயிர் அப்பொறிவழி அறியப்பட்ட பொருள்களால் வேற்றுமைப்படும். அதுபோல உயிரைச் செலுத்தும் முதல்வனும் அவ்உயிர்ச் செயல்களால் வேற்றுமைப்படுவனோ எனில் படான் முதல்வன் உயிரைச் செலுத்துவதெல்லாம் கருவியாலன்று, நினைவு மாத்திரையினாலேயாம். ஆதலின் காந்தத்தின் முன் இரும்பு இழுத்துக்*

கொள்ளப்படுமாறுபோல நினைவு மாத்திரையின் உய்க்கும் முதல்வனின் திருமுன்பும் உயிர் செயல்படுதற்கு ஏதுவாக நிற்கும். அவ்வளவின்றி முதல்வன் வேற்றுமை அடையான் என்பது இதன் பொருளாகும். இது இரண்டு அதிகரணங்களை உடையது.

18. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, ஐ உணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது.

ஏது : அவற்றினுன் ஆன்மா ஒன்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா ஆகலான்

உதாரணம் :

ஐம்பொறியை ஆண்டு அங்கு அரசாய் உளம்நிற்ப
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்-ஐம்பொறியில்
காணுதேல் காணுது காணும் உளம் காணுதேல்
காணுகண் கேளா செவி 30

19. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இதுவும் தமது முதலாலே உணரும் என்றது.

ஏது : அவ் ஆன்மாத் தன்னுலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானும் தன்னை உணராது நிற்றலான்.

உதாரணம் :

மன்னுசிவன் சந்நிதியில் மற்று உலகம் சேட்டித்தது
என்னும் மறையின் இயல்மறந்தாய் - சொன்ன சிவன்
கண்ணு உளம்வினையால் கண்டு அறிந்து நிற்கும்காண்
எண்ணுன் சிவன் அசத்தை இன்று 31

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல- மெய்யவனில்
கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனைக்
கண்டு உடனுய் மன்னுதலைக் காண் 32

அருளுண்டாம் ஈசற்கு அதுசத்தி அன்றே
அருளும் அவன் அன்றி இல்லை - அருளின்
அவன் அன்றே இல்லை அருட்கண்ணுர் கண்ணுக்கு
இரவிபோல் நிற்கும் அரன் ஏய்ந்து 33

திருச்சிற்றம்பலம்

ஆறும் சூத்திரம்

உணருரு அசத்து எனின் உணராது தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தாம் என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : சத்தும் அசத்தும் வரைசெய்து உணர்த்துதல் நுதலிற்று

உரைவகை : *உயிர்களது அறிவிற்குத் துணையாய முதற்பொருள் அளவைகளால் அறியப்படும் தன்மையது எனின் அவ்வாறு அறியப்படும் உலகம்போல் அதுவும் அழிபொருளாம். எவ்வாற்ருனும் அறியப்படாத தன்மை உடையதெனின் அவ்வாறறியப் படாத முயற்கொம்புபோல இல்பொருளாம். ஆதலின் அறியப்படுதல் அறியப்படாமை ஆகிய இவ்விருபகுதியுமின்றி ஒருவாற்ருனறியப் படாமையும் ஒருவாற்ருன் அறியப்படுதலுமாகிய இருவகை இயல்பினையுடைய சிவசத்தே முதற்பொருளாகும் என மெய்யுணர்வில் நிலைபெற்ற உயர்ந்தோர் கூறுவர் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இந்நூற்பா இரு அதிகரணங்களைக் கொண்டது.*

20. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, அறிவினுல் அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது.

ஏது : அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்

உதாரணம் :

அசத்து அறியாய் கேள்நீ அறிவு அறிந்த எல்லாம்
அசத்தாகும் மெய்கண்டான் ஆயின்- அசத்தலாய்!
நீரில் எழுத்தும் நிகழ் கனவும் பேய்த்தேரும்
ஓரின் அவை இன்று ஆம் ஆறு ஒப்பு 34

21. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்விரண்டு தன்மையும் இன்றி வாக்கு மனுதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவன் என்றது

திருச்சிற்றம்பலம்

ஏது: பிரகாசத்திினுக்குப் பிரகாசிக்க வேண்டுவது இன்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசம் இன்மையானும்.

உதாரணம் :


எண்ணிய சத்தன்று அசத்தன்று ஆம் என்ருல் என்
கண்ணி உளது என்றல், மெய்கண்டான்- எண்ணி
அறிய இரண்டு ஆம் அசத்து ஆதல் சத்தாம்
அறிவு அறியா மெய்சிவந்தாள் ஆம் 35

உணர்ப அசத்தாதல் ஒன்று உணராது ஒன்றை
உணருநீ தான் உணராய் ஆயின் - உணரும் உனில்
தான் இரண்டாம் மெய்கண்டான் தன்ஞல் உணர்தலால்
தான் இரண்டாய்க் காணுன் தமி 36

பாவகமேல் தான் அசத்தாம், பாவஞ அதீதம் எனில்
பாவகமாம் அன்றெனில் பாழ் அதுவாம் - பாவகத்தைப்
பாவித்தல் தான் என்னில் பாவகமாம் தன்னருளால்
பாவிப்பது பரம் இல் பாழ் 37

அறிய இரண்டு அல்லன், ஆங்கு அறிவு தன்ஞல்
அறியப் படான், அறிவின் உள்ளான் - அறிவுக்குக்
காட்டு ஆகி நின்ருனைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டாது அறிவு அறிந்து கண்டு 38

அதுவென்னும் ஒன்றுஅன்று அதுவன்றி வேறே
அதுவென்று அறி அறிவும் உண்டே - அதுவென்று
அறிய இரண்டல்லன் ஆங்கு அறிவுள் நிற்றல்
அறியும் அறிவே சிவம் ஆம் 39



2. உண்மையியல்பு

3. சாதனவியல்

முப்பொருள்களின் இலக்கணத்தை அறிந்த விடத்து உயிர் இதுகாறும் தொடக்குற்றிருந்த மலப்பிணிப்பினின்றும் நீங்கி இறையருளை அடைவதே உய்தி தருவது என அறியும். அவ்வாறான நிலையில் உயிர் யாது செய்தல் வேண்டும் என்பதையும் அவ்வாறு செய்தலால் கிட்டும் குருவருளையும் அதன்வழிப் பெற்ற உணர்வை நிலைபெறுத்தற்குரிய வழிவகையினையும் 7,8,9 ஆம் நூற்பாக்கள் கூறுதலின் இவ்வியல் சாதனஇயல் ஆயிற்று.

ஏழாம் சூத்திரம்

யாவையுஞ் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே யறியாது அசத்துஇலது அறியா
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ வெனின், மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று

உரைவகை : *சிவசத்தாகிய முதல்வனின் திருமுன்னிலையில் அசத்தாகிய நிலையில் பொருள்களெல்லாம் பாழ் ஆகலின் சத்தாகியசிவம் அசத்தாகிய பாசத்தையறிதல் செய்யாது. பாசம் அறிவிலதாதலின் நிலையுடைய சிவத்தை அறிதல் செய்யாது. இவ்விரண்டும் ஒன்றையொன்று அறியதாகவே இவ்விரண்டையும் அறியும் அறிவுடைய பொருள் ஒன்று உண்டு என்பதும், அது மேற்கூறப்பட்ட முப்பொருள்களில் எஞ்சிநின்ற உயிரே என்பதும், அவ்வாறுதல் ஒழிந்தவற்றால் உணர்தற்குரிய பாரிசேட அளவையாலாம் என்பதும் பெறப்படும். அது நிலையுடைபொருள் நிலையில் பொருள் ஆகிய இரண்டுமின்றி அவ்விரண்டனையுமறியும் உரிமையால் சதசத்து என்னும் பெயர் பெறும் என்பது இதன் பொருளாகும். இது மூன்று அதிகரணங்களை உடையது.*

22. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது.

ஏது: மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

அன்னியம் இலாமை அரற்கு ஒன்று உணர்வு இன்றும்
அன்னியமிலான் அசத்தைக் காண்குவனேல் - அன்னியமாக்
காணுன் அவன்முன், கதிர்முன் இருள்போல்
மாணு அசத்து இன்மை மற்று 40

23. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, அசத்தினுக்கு உணர்வு இன்று என்றது

ஏது : அதுதான் நிரூபிக்கில் இன்ருகலான்

உதாரணம் :

பேய்த்தேர் நீர் என்றுவரும் பேதைக்கு மற்று அணைந்த
பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின் - வாய்த்து அதனைக்
கண்டுணர்வார் இல்வழியின் காணும் அசத்தின்மை
கண்டுணர்வார் இல்லது எனக் காண் 41

24. மூன்ரும் அதிகரணம்

மேற்கோள்: இனி, இருதிறன் அறிவு உளது இரண்டலா ஆன்மா என்றது.

ஏது : இவ்விரண்டனையும் அறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டன் பாலும் உளதாயுள்ள அதுவே அவ் ஆன்மாவாம் என்றது

உதாரணம் :

அரு உருவம் தான் அறிதல் ஆய் இழையாய் ஆன்மா
அரு உருவம் அன்று ஆகும் உண்மை - அரு உருவாய்த்
தோன்றி உடன் நில்லாது தோன்ருது நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் தொக்கு 42

மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும்
பெயர்த்து உணர் நீ சத்து ஆகாய் பேசில் - அசத்தும் அலை
நீ அறிந்து செய்வினைகள் நீ அன்றி வேறு அசத்துத்
தான் அறிந்து துய்யாமை தான் 43

மெய்ஞானந் தன்னில் விளையாது அசத்தாதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண்- மெய்ஞ்ஞானம்
தானே உள அன்றே தண் கடல்நீர் உப்புப்போல்
தானே உளம் உளவாய்த் தான் 44

திருச்சிற்றம்பலம்

எட்டாம் சூத்திரம்

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே**

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துதல் நுதலிற்று

உரைவகை : *உயிரானது தான் முற்பிறவிகளில் செய்த புண்ணியப் பேற்றின் பயனாக இதுகாறும் உள்நின்று புற அக ஒன்றிய வழிபாடுகளைச் செய்யுமாறு உணர்த்தி வந்த பரம்பொருளே. இதுபொழுது அறிவு நெறியை அருளும் பொருட்டுக் குருவடிவு கொண்டு எழுந்தருளிவந்து தன்னைப் பார்த்து, 'அரசன் மகனாகிய நீ ஐம்பொறிகளாய வேடர் வழிப்பட்டு வளர்ந்து நின் பெருமைகளை அறியாது மயங்கி இடர்பட்டாய் நின்பெருந்தன்மை இத்தகையது' என்று அறிவிக்க அவ்வுண்மையறிந்து அறிந்த அப்பொழுதே வேடரைவிட்டு நீங்கி முதல்வனாகிய அரசனோடு பிரிவின்றி இயைந்து அம்முதல்வன் திருவடிகளை அணையும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இது நான்கு அதிகரணங்களை உடையது.*

25. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முன்செய் தவத்தால் ஞானம் நிகழும் என்றது

ஏது : மேற் சரியை கிரியா யோகங்களை செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்.

உதாரணம் :

தவம்செய்வார் என்றும் தவலோகம் சார்ந்து
பவஞ் செய்து பற்று அறுப்பார் ஆகத் - தவஞ் செய்த
நற்சார்பில் வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றோர்சூழ் சொல்லுமாம் கண்டு 45

பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையில் இன்பம் - இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவன் ஆம் ஞானத்தை வந்து 46

திருச்சிற்றம்பலம்

26. இரண்டாம் அதிகரணம்.

மேற்கோள் : இனி, இவ் ஆன்மாக்களுக்கு தமதுமுதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது.

ஏது : அவன் அன்னியம் இன்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

உதாரணம் :

மெய்ஞ்ஞானம் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு
அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்தும் தான் குருவாய் முன் 47

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்
செறியுமாம் முன்பின் குறைகள் - நெறியில்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடுஎன்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு 48

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல் - இல்லா
அருவாகி நின்றானை ஆரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று 49

27. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ் ஆன்மாக்கள் ஐயுணர்வுகளால் மயங்கித் தம்மை உணரா என்றது.

ஏது : அவைதாம் பளிங்கில் இட்ட வன்னம்போல் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

உதாரணம் :

பன்னிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து- பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய் கண்டான்
மெய்பொருட்குத் தைவமாம் வேறு 50

28. நான்காம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ் ஆன்மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

ஏது : ஊசல் கயிறு அற்ருல் தாய்தரையேயாம் துணையால்.

உதாரணம் :

சிறைசெய் நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலனுணர்வில் தீர்ந்து - சிறைவிட்டு
அலைகடலில் சென்று அடங்கும் ஆறுபோல் மீளாது
உலைவுஇல் அரன் பாதத்தை உற்று 51

எவ்வுருவும் தானென்னில் எய்துவார் இல்லைதாள்
இவ்வுருவின் வேறேல் இறைஅல்லன் - எவ்வுருவும்
கண்போல் அவயவங்கள் காணுஅக் கண் இல்லார்
கண்பேறே காண் அக் கழல் 52

ஐம்பொறியின் அல்லை எனும் அந்த தர சிவனை
ஐம்பொறியை விட்டு அங்கு அணைசகலன் - ஐம்பொறியின்
நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்கும் நினைந்து. 53

ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண் நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ் செழுத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்ரோ எனின், ஆன்மசுத்தி பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று

உரைவகை : *யாதொரு துணையுமின்றி அறிய முடியாத குறையுடைய உயிரறிவானும், துணையாகிய கருவிகரணங்களின் வழி உண்டாகும் ஒருவழியறியும்(ஏகதேசமாகிய) பாச அறிவானும், முதல்வனை அறிய இயலாது. அவ்விரண்டானும் அறிய இயலாத முதல்வனை அவனுடைய திருவடி ஞானத்தால் உயிராகிய தன்னறிவின் கண்ணே ஆராய்ந்தறிக. அவ்வாறு அறிவதோடு நிலம் முதலாக உள்ள பாசக் கூட்டத்தை மிக விரைந்து செல்லும் கானல் நீரெனக் கண்டு அதனின்றும் நீங்கவே அத்திருவடி ஞானமாகிய பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அவ்வாறு கண்ட காட்சி சலியாது நிலைத்தற் பொருட்டு அப்பொருளை அடைதற்காகத்*

திருவைந்தெழுத்தை முறையாக எண்ணவேண்டும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். இது மூன்று அதிகரணங்களை உடையது.

29. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, அம்முதலை ஞானக் கண்ணினலேயே காண்க என்றது.

ஏது : அவன் வாக்கு மன அதீத கோசரமாய் நிற்றலான்.

உதாரணம் :

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி எனையறியேன் தேர்ந்தவகை - நாடி அரன்
தன்னலே தனையும் கண்டு தமைக்காணர்
என்னும் என அறிவார் இன்று 54

காட்டிய கண்ணே தனைக்காண கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண் காண - காட்டிய
உள்ளம் தனைக்காண உள்ளத்தின் கண்ணய
கள்வன்தான் உள்ளத்திற் காண் 55

30. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்து என்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபம் என்று உணரற்பாற்று

ஏது : இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபம் என்றது வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்பு என்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிக சொரூபமாம் துணையான்

உதாரணம்:

நிர்க்குணனய் நின்மலனய் நித்தியா னந்தனய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் - அற்புதம்போல்
ஆன அறிவாய் அளவிறந்து தோன்றுனே
வானே முதல்களையின் வந்து 56

சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
சட்ட இனியுளது சத்தேகாண் - சுட்டி
உணர்ந்த நீ சத்து அல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனல் பொய்விட்டுப் போம் 57

திருச்சிற்றம்பலம்

கண்டதை யன்றன் எனவிட்டுக் கண்டு அசத்தாய்
அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப் - பண்டு அணைந்த
ஊனத்தை தான்விடுமாறு உத்தமனின் ஒண்கருட
சானத்தின் தீர்விடம்போல் தான் 58

31. மூன்றும் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை (திருவைந்தெழுத்தை) விதிப்படி உச்சரிக்க என்றது.

ஏது : இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு எனக் கொள்க.

உதாரணம்:

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டு அரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில் - அஞ்செழுத்தால்
குண்டலினியிற் செய்து ஓமம் கோதண்டம் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு 59

இந்துவிற் பானுவில் இராகுவைக் கண்டுஆங்குச்
சிந்தையில் காணில் சிவன் கண்ணும் - உந்தவே
காட்டாக்கின் தோன்றி கனல்சேர் இரும்பென்ன
ஆள்தானும் ஓது அஞ்செழுத்து 60

மண்முதல் நாளம் அலர் வித்தை கலாரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமாம் - நண்ணில்
கலை உருவாம் நாதமாம் சத்தி அதன் கண்ணும்
நிலைஅதில் ஆம் அச்சிவன்தாள் நேர். 61



திருச்சிற்றம்பலம்

4. பயனியல்

மேற்கூறிய சாதனையால் உயிர்பெறும் பேறு மலநீக்கமும் சிவப்பேறும் ஆம் என்பதையும், அப்பேறு பெற்ரோர் மேற்கொண்டு ஒழுகத்தக்க முறைறையும், பெற்ரோர் தம் இயல்பையும், 10,11,12 ஆம் நூற்பாக்கள் கூறுதலின் இவ்வியல் பயனியல் ஆயிற்று.

பத்தாம் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்ஞெடு வல்வினை இன்றே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்ரே வெனின், பாசக்ஷயம் பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரைவகை : *மேற்கூறியவாறு ஞானக்கண்ணல் காணப்படும் அம் முதல்வன் கட்டுநிலையில் உயிரோடு உடனாய்நின்று உயிர் அறியும் வண்ணம்தான் அறிந்தும் அவ்வுயிருக்கு முதல்வன் இருக்கிருன் என வேறு காணப்படாமல் உயிர் தானே அறிந்ததாக எண்ணுமாறு அவ்வுயிரொடு ஒற்றுமைப்பட்டு நின்றவாறு போல, வீட்டு நிலையில் உயிர் அம்முதல்வஞெடு உடஞய் நின்று இன்பத்தைத் துய்ப்பினும் துய்க்கின்றதான் உண்டென வேறு காணப்படாமல் அம்முதல்வஞெடு ஒற்றுமைப்பட்டு அம்முதல்வனேயாய் அவன் அருள்வழியில் வழுவாது நிற்றல்வேண்டும். அவ்வாறு நிற்கவே ஆணவம் மாயை ஆகிய இருமலங்களோடு வலிய கன்மமலமும் ஒழியும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இந்நூற்பா இரு அதிகரணங்களை உடையது.*

32. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டுப் பரமேசுவரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகஞகி நிற்க என்றது.

ஏது : அவ்வாறு நிற்கவே யான் எனது என்னும் செருக்கு அற்று அவனது சீபாதத்தை அணையும் ஆகலான்.

திருச்சிற்றம்பலம்

உதாரணம் :

நான் அவன் என்று எண்ணினர்க்கும் நாடும் உளம் உண்டாதல்
தான் என ஒன்று இன்றியே தானதுவாய் - நான் எனவொன்று
இல்லென்று தானே எனும் அவரைத் தன்னடிவைத்து
இல்லென்று தான் ஆம் இறை 62

33. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இறைபணி வழுவாது நிற்க என்றது.

ஏது : அவன் அருளால் அல்லது ஒன்றையும் செய்யான் ஆகவே அஞ்ஞான கன்மம் பிரவேசியா ஆகலான்.

உதாரணம் :

நாம் அல்ல இந்திரியம் நம்வழியின் அல்ல, வழி
நாம் அல்ல நாமும் அரனுடைமை - ஆம் என்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்கு இல்லைவினை
முற்செய்வினையும் தருவான் முன் 63

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்
சார்ந்தாரைக் காத்தும் சலமிலனுய்ச் - சார்ந்தடியார்
தாந்தானுச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு 64

இங்குளி வாங்கும் கலம்போல ஞானிபால்
முன்செய் வினை மாயை மூண்டிடினும் - பின்செய்வினை
மாயையுடன் நில்லாது மற்றவன்தான் மெய்ப்பொருளே
ஆய அதனுல் உணரும் அச்சு 65

நண் அனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண் அமர மாச்செலுத்தும் பாகரினும் - எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனில் சென்றும்
அவர்திறல் நீங்கார் அதற்கு 66

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக் - கதமிக்கு
எரிகதிரின் முன்னிருள்போல், ஏலா அசத்தின்
அருகு அணையார், சத்து அணைவார் ஆங்கு 67

திருச்சிற்றம்பலம்

பதினொன்ரும் சூத்திரம்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்ரோ எனின், பரமேசுரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல் நுதலிற்று

உரைவகை : *காட்டக்காணும் தன்மையுடைய கண்ணுக்கு அப் பொருளைக் காட்டித் தானும் காண்கின்ற உயிர்போல, உணர்த்த உணரும் தன்மையுடைய உயிர்க்கு முதல்வனும் அப்பொருளை அறியுமாறு செய்து தானும் அறிந்து வருவன். அவ்வாறு ஒன்றுபட்டுநின்று உதவிவரும் முதல்வனது கருணையை மறவாது உறுதியாகப்பற்றி அன்புசெய்ய வேண்டும். அவ்வன்பினுன் முதல்வன் திருவடியாகிய சிவப்பேற்றை உயிர் எய்தும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இஃது இரண்டு அதிகரணங்களை உடையது.*

34. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது

ஏது : இவ்வான்மாக்கள் அவனையின்றி அமைந்து ஒன்றையும் விடயியா ஆகலான்

உதாரணம் :

ஐந்தையும் ஒக்க உணராது அவற்றுணர்வது
ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான் - ஐந்தினையும்
ஒன்ருென்ருப் பார்த்துணர்வது உள்ளமே எவ்வுலகும்
ஒன்ருென்ருப் பார்க்கும் உணர்ந்து 68

ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான் விளைந்த பொற்பினுல் - ஏகமாய்
உள்ளத்தின் கண்ணுளுன் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தாற் காணுனே உற்று 69

திருச்சிற்றம்பலம்

35. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனிப் பத்தியினுன் மறவாது ஏத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது.

ஏது : அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

உதாரணம் :

அருக்கன் நேர் நிற்பினும் அல்லிருளே காணுர்க்கு
இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன் - அருட்கண்ணுல்
பாசத்தை நீக்கும் பகல் அலர்த்தும் தாமரைபோல்
நேசத்தின் தன்னுணுர்ந்தார் நேர். 70

மன்னும் இருளை மதிதுரந்த வாறு அன்பின்
மன்னும் அரனே மலந் துரந்து - தன்னின்
வலித்து இரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரி அலன் தான் 71

நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்ரு
நசித்திலதேல் ஒன்ருவது இல்லை - நசித்துமலம்
அப்பணைந்த உப்பின் உளம் அணைந்து சேடமாங்
கப்பு இன்ரும் ஈசன் கழல் 72

பொன்வாள்முன் கொண்மூவிற் புக்கு ஒடுங்கிப்போய் அகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல் - முன்வாள்
மலத்துள் மறைந்து உள்ளம் மற்று உலகை உண்ணும்
மலத்து இரித்துச் செல்லும் வரத்து 73

பன்னிரண்டாம் சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தாமும் அரன் எனத் தொழுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்ரோ வெனின், அசிந்திதனுய் நின்ற பதியைச் சிந்திதனுகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

திருச்சிற்றம்பலம்

உரைவகை : *மேற்கூறியவாறு அயரா அன்பின் அரன்கழல் அடைந்தகட்டு நீங்கியோன்(மூத்தன்) வினைப்பயனைத் துய்க்கப் புறத்துச் செல்லுங்கால் சீவன் முத்தன் எனப்படுவான். அன்னோன் புறத்துச் செல்லுங்கால் செந்தாமரை போல விரிந்து விளங்கிய முதல்வனுடைய, யாவற்றையும் தாங்கும் தகைமையதாய திருவடியை அணைய ஒட்டாது அதனை மறுக்குமாறு மும்மலங்களும் செய்விக்கும். அம்மலங்களை ஞானம் என்னும் நீரினால் கழுவி இறைவனிடத்து அயரா அன்புசெய்யும் மெய்ஞ்ஞானிகளொடு கலந்து கூட மலம் நீங்கும். மலம் நீங்க அம்மெய்யுணர்வுடையோரது திருவேடத்தையும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலையும் அம் முதல்வன் எனவே கண்டு வழிபடுவன் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இந்நூற்பா மூன்று அதிகரணங்களை உடையது.*

36. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, ஆணவம் மாயை கான்மியம் எனும் மலங்களைக் களைக என்றது.

ஏது : அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான்.

உதாரணம் :

புண்ணிய பாவம் பொருந்தும் இக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும் - கண்ணிய
அஞ்ஞானம் காட்டும் இவ் ஆணவமும் இம் மூன்றும்
மெய்ஞ்ஞானிக் காகா விடு. 74

37. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனிச் சிவபத்தர்களோடு இணங்குக என்றது.

ஏது : அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவார் ஆகலான்.

உதாரணம் :

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தம்திறத்துச் சேர்வை - அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரன் உணர்வினால் உணரும்
மெய்த்தவரை மேவா வினை 75

திருச்சிற்றம்பலம்

38. மூன்றும் அதிகரணம்

மேற்கோள் : இனிப் பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக என்றது.

ஏது : அவன் மற்று இவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

தன்உணர வேண்டித் தனது உருவைத் தான்கொடுத்து
தன் உணரத் தன்னுள் இருத்தலால் - தன் உணரும்
நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போல்
பாசத்தார்க்கு இன்றும் பதி 76

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தில் அங்கிவேறு
உண்டல்போல் நின்று அங்கு உளதாமால் - கண்ட உருத்
தான் அதுவாய் அன்று ஆனுன் தான் அதுவாய்த் தோன்ருனே
தான் அதுவாய்க் காணும் தவர்க்கு 77

39. நான்காம் அதிகரணம்

மேற்கோள் : இனி இவ்விடங்களில் வழிபடுக என்றது.

ஏது : நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனும் ஆகலான்.

உதாரணம்:

அது இது என்றது அதுஅல்லான் கண்டார்க்கு
அது இது என்றதையும் அல்லான் - பொது அதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே
அத்திவிதி அன்பின் தொழு 78

வினையால் அசத்து விளைதலால் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா - வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பின் தொழு. 79

தன்னை அறிவித்துத் தான் தானுய்ச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையல் அது - முன்னவனே
தானே தானுச் செய்தும் தைவமென்றும் தைவமே
மானே தொழுகை வலி 80

திருச்சிற்றம்பலம்

நூற்கு அதிகாரிகள்

சிவமென்றும் அந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவமின்ரும் கண் வாசகத்தின் - சிவன் உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு இங்கு ஒண்குருவால்
இன்று இந்நூல் மும்மை மலர்க்கு

சிறப்புப்பாயிரம்

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்
நந்தி உரைத்து அருளும் ஞானநூல் - சிந்தை செய்து
தான் உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாம் உணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

சிவஞானபோதம் முற்றும்.

சூர்ணிக்கொத்து

முதல் சூத்திரம் : 1. சகம் பிறப்பு இருப்பு இறப்பாகிய முத்தொழிலேயுடையது. 2. அது அரனுலே உடையது. 3. மற்ற இருவரும் முத்தொழில் படுவர்கள்.

இரண்டாம் சூத்திரம் : 1. அரன் உயிர்களின் இரண்டற நிற்பன். 2. உயிர்களுக்குக் கன்மப்பலனே அரனே கொடுப்பன். 3. உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும். 4. அரன் சருவ வியாபகன்.

மூன்ரும் சூத்திரம் : 1. இல்லை என்கிற அறிவுடனே செல்லுகையினுலே அறி உயிர் உண்டு. 2. எனது உடல் என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினுலே, உடற்கு வேருய் உயிர் உண்டு. 3. ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கும் வேருய் உயிர் உண்டு. 4. கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினுலே அக் கனவுடற்கு வேருய் உயிர் உண்டு. 5. நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவும் சரீரத்துக்குப் புசிப்பும் தொழிலும் இல்லாதபடியினுலே, பிராண வாயுவுக்கு வேருய் உயிர் உண்டு. 6. மறந்து மறந்து நினைக்கிறபடியினுலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேருய் உயிர் உண்டு. 7. எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினுலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேருய் உயிர் உண்டு.

திருச்சிற்றம்பலம்

நான்காம் சூத்திரம் : 1. அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினு லன்றித் தொழில் இல்லாதபடியினுலே, அந்தக்கரணங்களுக்கு வேருய் உயிர் உண்டு. 2. மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லே. 3. உயிர் மூன்று அவத்தைப்படும்.

ஐந்தாம் சூத்திரம் : 1. உயிராலே தத்துவங்கள் எல்லாம் தொழில் செய்யும். 2. அரனுலே உயிர்களெல்லாம் அறியும்.

ஆரும் சூத்திரம் : 1. உயிர் அறிவினுலே அறியப்பட்டதெல்லாம் அழியும். 2. அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

ஏழாம் சூத்திரம் : 1. அரன் பாசத்தை அனுபவியான். 2. பாசம் அரனே அனுபவியாது. 3. உயிர் அவ் அரனே அடையும்; அனுபவிக்கும்.

எட்டாம் சூத்திரம் : 1. உயிருக்கு நல்லறிவு தவத்தினுலேயே வரும். 2. உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே. 3. உயிர் பஞ்சேந்திரியங்களேப் பற்றுகையினுலே தன்னேயும் அறிய மாட்டாது. 4. உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்ருல் தன்னேயும் அறியும்.

ஒன்பதாம் சூத்திரம் : 1. உயிர் அரன் ஞானத்தினுலேயே அரனேக் காணும். 2. உயிர் பாசத்திலே பற்றற்ருல், அரன் வெளிப்படுவன். 3. பஞ்சாக்ஷரசெபம் பண்ணினுல் வாசனுமலம் போம்.

பத்தாம் சூத்திரம் : 1. அரனுடன் ஒன்ருகி நில். 2. உன்தொழி லெல்லாம் அரன் பணி என்று கொள்.

பதினென்ரும் சூத்திரம் : 1. ஞானிக்கு வருகிற விடயங்களே அரனே அனுபவிப்பன். 2. அரனே மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கியமாய்ப் போவன்.

பன்னிரண்டாம் சூத்திரம் : 1. மும்மலங்களேயும் களேக. 2. சிவஞானிகளுடனே கூடுக. 3. சிவஞானிகளேயும் சிவலிங்கத்தையும் சிவனெனவே தேறி வழிபடுக. 4. வழிபடாமையை ஒழிக.

ஆகச் சூத்திரம் 12க்கு சூர்ணிக்கொத்து 39 முற்றும்.

உ
சிவமயம்

திருத்துறையூர் - ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார்

அருளிச்செய்த

4. சிவஞானசித்தியார்

ஸ்ரீஅருணந்தி சிவாசாரியார் வரலாறு

ஸ்ரீஅருள்நந்தி சிவாசாரியரின் பிற்பகுதி வரலாறு மெய்கண்டார் வரலாற்ருேடு இயைபுடையது. அது முன்னர்க் கூறப்பெற்றது. அவர்தம் முற்பகுதி வரலாறே ஈண்டுக் காணத்தக்கது.

இவர் நடுநாட்டில் உள்ள தேவார திருப்பதிகம் பெற்ற திருத்துறையூரில் வாழ்ந்தவர். சிவாசாரியர் மரபில் தோன்றியவர். இளமையிலேயே வேத ஆகமங்கள் அனைத்தையும் ஓதி உணர்ந்தவர். ஆதலின் இவரைப் பலரும் சகலாகம பண்டிதர் என்றே அழைத்தனர். இச்சிறப்புப் பெயரே காலப்போக்கில் இவர்தம் இயற்பெயரையும் மறக்கச்செய்தது. வேத சிவாகமங்களில் தோய்வுடையராதல் போலவே திருமுறைகளிலும் இவர் மிகவும் தோய்வுடையராய் இருந்தார். மகப்பேறு இன்றி வருந்திய களப்பாளருக்குத் திருமுறைவழி உய்தி கண்ட திறத்தால் இவ்வுண்மை விளங்கும்.

அச்சுத களப்பாளருக்கு மெய்கண்டார் தோன்றத் திருவருள் இவரைக் கருவியாகக் கொண்டமையும், அத்திருவருள் வழித்தோன்றிய மெய்கண்டாரே இவருக்குக் குருவாய் அமைந்தமையும் திருவருட் செயலே ஆகும்.

ஸ்ரீகாழியில் தம் மாணுக்கரோடு சிலகாலம் தங்கி யிருந்தமையின் இவரைச் சண்பையர் தலைவர் எனவும் அழைத்தனர். ஸ்ரீகாழிக்கு உரிய பன்னிரு பெயர்களுள் சண்பை என்பதும் ஒன்று.

இவரிடம் மாணுக்கராக இருந்த பலருள் ஸ்ரீமறைஞானசம்பந்தர் என்பாருக்கு ஞாஞசாரியத் தலைமை நல்கி ஒரு புரட்டாசி பூர நாளில் இவர் சிவானந்தப் பெருவாழ்வு அடைந்தார்.

சிவஞானசித்தியார்

திருவருள் சமயகுரவர்களைக்கொண்டு சைவ சமயத்தைப் பரவச்செய்ததைப் போன்றே, அதன் தலையாயதும் நிலையாயதுமாய ஒப்பற்ற கொள்கைகளையும் சந்தான குரவர்களைக் கொண்டு பரவச்செய்தது. அவ்வருள்வழிநின்று சமயக் கொள்கைகளை அளவைகளானும் பொருந்துமாற்றானும் தெளிவாக எடுத்துக்கூறிய முதற்குரவர் மெய்கண்டாரே ஆவர். வேத ஆகமப்பொருள்களிலும் திருமுறைகளிலும் காணும் கருத்துக்கள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஐயந்திரிபிற்கு இடனின்றி எடுத்துரைத்த முதல் நூலும் இதுவேயாகும். மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம் சுழித்தடித்து ஆர்த்து மக்களை எங்கோ திசை திருப்பி அழைத்துச்செல்லும் சமயத்தில் ஞானக் கதிரவன் எனத் தோன்றி, மலைவுற்றிருந்த மக்களை மலைவறத் திருப்பிய பெருமை மெய்கண்டாருக்கே உரியதாகும். "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ?" எனப் பின்வந்த அருளாளராய தாயுமானர் உளங்கொண்டு போற்றுவது இத்திருப்புமையத்தை நினைவுகூரக் கூடியதே ஆகும். சைவசிந்தாந்தச் சாத்திரத் திருமரபு மெய்கண்டாரையே முதன்மையாகக் கொண்டுவளர்ந்து வருகின்றது. இதன்வழி நூலாகத் திகழ்வதே சிவஞான சித்தியாராகும். 'மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்', என அருணந்தி சிவாசாரியார் கூறுவது தம் வழிநூல் அமைப்பைக் குறிப்பதாகும். இந்நூல் சிவஞானபோதக் கருத்தை முழுமையாகத் தழுவிச் செய்யப்பெற்றதாகும் 'சிவத்திற்குமேல் தெய்வமில்லை சித்திக்குமேல் நூலில்லை' என வரும் பழமொழியானும், 'பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்' என வரும் குருஞானசம்பந்தர் திருவாக்கானும், 'வள்ளுவர் நூல் அன்பர் மொழி வாசகமே' என வரும் பழம்பாடலானும் இந்நூலின் பெருமை விளங்கும்.

இந்நூல் இருபிரிவுடையது. ஒன்று சுபக்கம், பிறிதொன்று பரபக்கம் என்பது. பரபக்கம் என்ற பகுதியில் கூறப்பெறும் கருத்துக்கள், மறுப்பு வகையில் அமைந்த நூல்கள் என்ற பகுதியில் விளக்கப்பெறும். சுபக்கம் என்பது தமது கொள்கை ஒன்றையுமே எடுத்துக்கொண்டு ஆராய்வதாகும். சிவப்பிரகாசம் என்பது இவ்விரு நூல்களையும் தழுவி எழுந்ததொன்றாகும். இதனைத் தெரித்த குருமுதல்வர் எனத்தொடங்கும் அவர் திருவாக்கினால் உணரலாம். இவ்விரு நூல்களையும் தழுவிச் செய்யப்பட்டதேனும் இந்நூலின் அமைப்பு முறை அவற்றினும் ஒருவாற்றான் தனித்தன்மை பெற்றதே ஆகும். ஆதலின் இதனைச் சார்பு நூல் என்பர். சிவஞானபோதமும் சிவஞான சித்தியாரும் பொது, உண்மை என இரு அதிகாரங்களாகப் பிரித்துக் கொண்டதைப் போலவே, இந்நூலும் பிரித்துக் கொள்கிறது. எனினும் அந்நூல்கள் பிரமாணஇயல், உண்மைஇயல், சாதன இயல், பயனியல் எனப் பிரித்துக்கொண்டு பேசியதைப்போன்று இந்நூலில் பேசப்பெறவில்லை. எனினும் முப்பொருள் உண்மைப்பற்றிக் கூறிய கருத்துக்கள் முழுமையும் ஒத்தவை.

திருச்சிற்றம்பலம்

ஆதலின் இம்மூன்று நூல்களினும் பொதுவாகவும் ஒத்ததாகவும் கூறப்பெறும் முப்பொருள் உண்மையை கீழ்க்கண்டவாறு சுருக்கிக் காணலாம்.

இறை (பதி)

உலகம் தோன்றி நின்று அழியுந் தன்மையது. அது இவ்வாறு தோன்றி நின்றழியினும் அதில் ஒரு நெறிமுறை அமைந்துள்ளது. ஆதலின் அது ஒருவனுல் தோற்றுவிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வொருவனே அழித்தற் கடவுளாய சிவபெருமானுவன். அவன் அரு, உரு, அருவுரு ஆகிய மூவகைத் திருமேனிகளேயும் கொண்டு உயிர்களே ஆட்கொள்வன். அவனது பேராற்றலே சத்தி எனப்பெறும். அது விருப்பு(இச்சை), அறிவு(ஞானம்), செயல்(கிரியை) ஆகிய முத்திறப்படும். இறைவன் அவற்றின் மூலம் உயிர்களேத் தொழிற்படச் செய்வன். இறைவன் உயிர்களேக் காத்தற்காக ஐந்தொழில்களேயும் ஐவரைக் கொண்டு நிகழ்த்துவன். அவ்வைந் தொழில்களாலும் உயிர்கள் பக்குவமடைந்து வீடுபெறும். இதனுல் இத்தொழில்களே அவன் செய்விப்பது தன் பொருட்டன்று, உயிர்களின் பொருட்டே என்பதும் விளங்கும். அயன் முதலிய ஐவராலும் அத்தொழில்களே அவன் செய்தலின் அவற்ருல் தான் வேறுபடுதல் இலன். இறைவன் உயிர்களிடத்து ஒன்ருயும், வேருயும், உடனுயும் இருந்து உதவுவன். உயிர்களுக்கு இறைவன் அறக்கருணே கொண்டும் மறக்கருணே கொண்டும் இன்பத் துன்பங்களே நுகர்விப்பன், மறக்கருணே என்பது மருத்துவன் அறுவை சிகிச்சை செய்வது போலவும், பெற்ருேர் தம் இன்புதல்வரைத் திருத்த ஒறுப்பது போலவும் ஆகும். அவன் அருளின்றி உயிர்கள் உணரவோ உய்யவோ வழியில்லே.

உயிர் (பசு)

உயிர்கள் எண்ணிலாதன; அழிவற்றன; ஆணவத்தோடு பிணிப்புற்று நிற்பதால் அறியாமை உடையனவாய் விளங்குகின்றன. இம்மல வேறுபாட்டால் உயிர்களே மூவகைப் படுத்தலாம். ஆணவமலம் மட்டும் உடையவரை விஞ்ஞானகலர் என்பர். ஆணவம், கன்மம் ஆகிய இரு மலமும் உடையவரைப் பிரளயாகலர் என்பர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களேயும் உடையவரைச் சகலர் என்பர். இவருள் முன்னவர்க்கு இறைவனே உள்நின்று அருள்வன். இரண்டாமவர்க்கு நாற்ருேளும் முக்கண்ணும் மானும் மழுவும் கொண்டு தெய்வவடிவில் எழுந்தருளி வந்து வீடுபேறு அளிப்பன், மும்மலமுடையார்க்கு மானுடவடிவம் தாங்கிக் குருவாகவந்து அருள்பாலிப்பன். உயிர் ஆணவத்தால் செய்யும் இருவினேகளின் தன்மைக்கேற்ப இறைவன் உடல் நல்குவான். அவற்றின் வாயிலாக அவை நுகருங்கால் மேலேக்கு வித்தாகிய இருவினேகளேப் புரிந்து பிறப்புப், பிணி, மூப்பு, இறப்பு ஆகியவற்றைப் பெற்றுக் காற்ருடி போலவும், சுழலும் வண்டிச் சக்கரம் போலவும் பல பிறவிகள் எடுத்துத் திரியும். அப்பிறப்புக்கள் நால்வகைத் தோற்றத்தன. அவை முட்டையில் தோன்றுவனவும், வியர்வையில் தோன்றுவனவும், வித்து வேர்

முதலியவற்றில் தோன்றுவனவும், கருப்பையில் தோன்றுவனவுமாம். இந்நால்வகைத் தோற்றத்தினுள்ளும் உயிரினங்கள் எழுவகைப் பிறப்பினை எடுக்கும். அவையாவன 1. தாவரம், 2. ஊர்வன, 3. நீர்வாழ்வன, 4. விலங்கு, 5. பறவை, 6. மனிதர், 7. தேவர் என்பன. இவை 34 நூருயிரம் பிறப்பு வேற்றுமை உடையன. தாவரம் 19 நூருயிரம் பிறப்பு வேற்றுமை உடையன. ஊர்வன 15 நூருயிரம் பிறப்பு வேற்றுமை உடையன. நீர்வாழ்வன, பறவை, விலங்கு ஆகியன ஒவ்வொன்றும் 10 நூருயிரம் பிறப்பு வேற்றுமை உடையன. மனிதர் 9 நூருயிரம் பிறப்பு வேற்றுமை உடையர். தேவர் 11 நூருயிரம் பிறப்பு வேற்றுமை உடைவர். 'உரை சேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனி பேதம்' என்னும் திருஞானசம்பந்தர் திருவாக்கு இவ்உண்மையை உணர்த்தும்.

தளை (பாசம்)

நெல்லினிடத்து உமியும், செம்பினிடத்துக் களிம்பும் தொன்றுதொட்டே உளவாதல்போல உயிரினிடத்தும் ஆணவ மலம் தொன்றுதொட்டே இருந்து வருகிறது. இவ்வாணவம் இருளினும் கொடியது. இருள் பிற பொருளைக் காட்டாதாயினும் தன்னையேனும் காட்டும். இது தன்னையும் காட்டாது ஆதலின் அதனினும் கொடியதாம். இவ்வாணவ மலத்தால்தான் உயிர் அறியாமையைப் பெறுகிறது. அதனல் துன்பமும் அடைகின்றது. இதனை நீக்கவே இறைவன் உடல் முதலிய கருவி கரணங்களைத் தருகின்ருன். இவற்றை இறைவன் மாயையினின்றும் தோற்றுவிக்கின்ருன். இவற்றை இறைவன் தருவது உயிரை மேலும் மயக்குதற்கன்று. விடியுமளவும் விளக்கினைக் கொள்வது போல, வினை தீங்குமளவும் இவற்றைக் கொள்ளவேயாம். இதனை மாயா மலம் என்பர்.

இவ்வாறு உயிர் உடலோடு கூடி வாழுங்கால் முன்செய்த வினைக் கீடானவற்றை நுகர்வதோடு மேலும் சில நல்வினை தீவினைகளையும் செய்து விடுகின்றன. அவற்ருல் மேலும் மேலும் பிறவியில் கட்டுண்ணும் நிலை உயிர்க்கு ஏற்படுகின்றது. இவ்வாறு வரும் நல்வினை தீவினைகளையே கன்மம் என்பர். இவ்வினைப்பயனை இறைவன் ஒரே பிறவியில் நுகரவைப்பதுமுண்டு. அடுத்துவரும் பிறவிகளில் நுகரவைப்பதுமுண்டு. உயிர்களால் அளவின்றி ஈட்டப்பெற்ற வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான நுகர்ந்தனவும், பிறந்த உடம்புகளான முகந்து நின்றனவும் ஒழியப்பின்னும் நுகர்தற்குரியனவாய்க் கிடக்கும் வினைகளைப் பழவினை(சஞ்சிதம்) என்பர். பிறந்த உடம்பால் முதந்து நின்றவற்றை நுகர்வினை(பிராரத்துவம்) என்பர். நுகர்ந்து வரும்பொழுது மேலும் ஈட்டப்பெறும் வினைகளை ஏறும் வினை(ஆகாமியம்) என்பர். இவற்றுள் பழவினை குருவின் அருள்நோக்கத்தால் நீங்கும். வருவினை குருவருள் வழிநின்று முனைப்பின்றிச் செய்யப்படும் சிவ புண்ணியத்தால் வாராது ஒழியும். எனவே பிறந்த உடம்பால் முகந்து நின்ற வினை ஒன்றே நுகர்ந்து ஒழிப்பதற்குரியதாகும். இறையருள் வழிநின்று உலகினில் என்செயலெல்லாம் உன்விதியே நீயே உள்நின்றும் செய்வித்தும் செய்கின்ருய் என்றும், நிலவுவதோர் செயல் எனக்கு இன்று உன் செயலே

என்றும் நினைந்தும் வாழ்ந்தும் வரின் இவ்வினைப் பயனாலும் துன்புறாது வாழலாம். இம்மூவகை மலங்களோடு மறைப்பாற்றல்(திரோத மலம்), மாயேயம் என்ற இரண்டையும் கூட்டிப் பஞ்சமலம் என்றலும் உண்டு. இறைவனிடமாகத் தோன்றும் இம்மறைப்பாற்றல் உயிர் வினைப் பயனை நுகர்ந்து தீர்க்குமளவும் உண்மையை உணரவொட்டாமல் மறைக்கும். அவ்வாறு செய்வது உயிர் வினையினின்றும் நீங்குதற்காகவேயாகும். எனினும் வினைப்பயனை நுகருமளவும் உண்மை உணராது மறைத்தல்பற்றி இவ்வருட் சத்தியையும் மலமென்பர். இதுவே மறைப்பாற்றலாம் (திரோதான சத்தியாம்). உயிர்மலநீக்கம் பெறும் அளவும் மறைத்துநின்ற இம்மறைப்பாற்றலே, அம்மலம் நீங்கிய வழி இறைவனிடத்துச் சேர்த்தற்கும் அருள்செய்வதாகும். எனவே, ஒரு கால எல்லையில் மலம் எனப் பெயர் பெற்றது பின் அருள்சுரக்கும் தாயாக நின்றருளும். இறைவன் நேரே ஐந்தொழில் நடத்துதற்கு இடமாக இருக்கும் மூலப்பொருளைச் சுத்தமாயை என்பர். அப்பொருமான் உயிர்வினை மாசு நீங்குதற்கு உதவும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், மாயை ஆகியவற்றைக் கூட்டுதற்கு உரிய நிலைக்களன் அசுத்தமாயை எனப்படும். இவற்றோடு கூட்டுவிக்கப்பட்ட உயிர் புருடன் எனப்பெறும். இப்புருடனுக்கு வினைவழிப்பெற்ற இன்ப துன்பங்களை இயைந்து அனுபவித்தற்குரிய உடல், கருவி, உலகு, நுகர்வு ஆகியவற்றைப் பெற்று அவற்றான் அவ்வினையைத் தொலைத்தற்குரிய நிலைக்களன் பிரகிருதிமாயை எனப்படும். மாயையின் விளைவாகத் தோன்றிய இவ்வுடல் கருவி முதலியனவே மாயேயம் எனப்படும். இவை உயிர் ஆணவக்கட்டினின்றும் நீங்குதற்கு உதவி செய்யினும் தம்வழிப்பட்ட உயிரை மயக்கவும் செய்தலின் இவற்றையும் மலம் என்றனர். மையல் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டு அருள் செய்க எனவரும் சேக்கிழார் வாக்கும் இவ்வுண்மையை விளக்கும்.

சிவஞான சித்தியார் - பரபக்கம்

பரபக்கம் - பிறருடைய கொள்கை. இப்பகுதியுள் 14 சமய வாதிகளின் கொள்கைகள் எடுத்துக்கூறப்பெற்று மறுக்கப் பெறுகின்றன. ஆதலின் இப்பகுதி இப்பெயர் பெற்றது. அச்சமயவாதிகள் உலகாயதர், சௌத்திராந்திகர், யோகசாரர், மாத்யமிகர், வைபாடிகர், நிகண்டவாதி, ஆசீவகர், பட்டாச்சாரியர், பிரபாகரர், சத்தப் பிரமவாதி, மாயாவாதி, பாற்கரியன், நிரீச்சுரசாங்கியர், பாஞ்சராத்தியர் என்போராவர். இவர்களுள் முன்னைய எழுவரும் புறப்புறச்சமயத்தவராவர். சமணருள் நிகண்டவதி ஆசீவகர் என இருவகையினர் உண்டு. அவ்விருவர் கொள்கையும் தனித்தனியே எடுத்து இங்கு மறுக்கப்பட்டுள்ளன. அடுத்துக் கூறப்பெறும் எழுவரும் புறச் சமயத்தவர்களாவர். இவர்களுள் பட்டன், பிரபாகரன் ஆகிய இருவரும் மீமாம்சை மதத்தைத் தழுவியோராவர். நிரீச்சுர சாங்கியமதம் என்பது சாங்கிய மதத்தைத் தழுவியதாகும். இவர்களின் கொள்கைகள் விரிவாகக் கூறப்பெற்று மறுக்கப் பெற்றுள்ளன. பாஞ்சராத்திரியரின் மதத்தின் கொள்கையும் மறுப்பும் ஏனையவைபோலத் தர்க்கரீதியாக இன்றிப் புராணக் கதைகளைக்கூறி மறுப்பதாக உள்ளது. இப்பகுதி 301 பாடல்களையுடையது.

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் - சுபக்கம்

சிவஞானபோதத்தின் விரிவுரையே இப்பகுதியாகும். விருத்தப்பாவால் ஆகிய 328 பாக்களையுடையது. இப்பகுதிக்கு முன்னர் இரு தலைப்புக்கள் உள்ளன. ஒன்று பாயிரம், பிறிதொன்று அளவையியல் என்பது, பாயிரம் ஆறு பாடல்களையுடையது. என்னை இப்பவத்தில் சேரா வகையெடுத்து எனத் தொடங்கும் பாடல் இந்நூலாசிரியர் தம் குருமூர்த்தியாய மெய்கண்டாரிடத்துக்கொண்ட பேரன்பின் ஆழத்தை உணர்த்துவதாகும். கண்டநூல் ஓதி வீடு காதலிக்கும் நம்மவர்க்கே இத்தகைய ஞானநூல்கள் தேவை என ஒரு பாடல் கூறுகின்றது. இதனுல் ஞானசம்பந்தர், கண்ணப்பர் போன்ற அருளாளர்கள் எத்தகைய மெய்ந்நூல்களைக் கற்று வீடுபேறு பெற்ருர்கள் என வினவுவார்க்கு விடையும் கிடைத்து விடுகின்றது. அடுத்துள்ள அளவையியல் பதினுன்கு பாடல்களையுடையது. ஒரு பொருளை உண்டென்று தெளிவதற்குத் துணையாயினவற்றை அளவை என்பர். அவை காண்டல், கருதல், உரை முதலாகப் பலவகைப்படும். சைவசித்தாந்தத்துள் கூறப்பெறும் முப்பொருள்களும் உண்டென உணர்தற்கும் தெளிதற்கும் இவை கருவியாய் இருத்தலின் ஆசிரியர் இவற்றைக் கூறுவாராயினர். அடுத்துள்ள பகுதியே சுபக்கம் என்பதாகும். ஒரு வழிநூல் முதல் நூற்கருத்துக்களை எவ்வெவ்வாறு முகந்து நின்று விளக்கம் தரவேண்டும் என்பதற்கு இலக்கணமாக அமைந்தது இப்பகுதியாகும். சிவஞானபோத விளக்கவுரையாகவும், சுவை ததும்பும் ஓர் இலக்கியமாகவும் இப்பகுதி விளங்குகின்றது பல பாடல்கள் படிப்போரை ஆழ நினையச் செய்து இறைவனிடத்து ஆற்றுப்படுத்தும் தகையன. இறைவன் உருமேனி தரித்துக் கொண்டு உய்விப்பதை விளக்கும் பகுதியும், அவையெல்லாம், 'நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுகாணே' எனக் கூறும்பகுதியும், 'அண்டசம் சுவேதசங்கள்', 'நரர்பயில் தேயந்தன்னில்', 'வாழ்வெனும் மையல் விட்டு', 'மானுடப் பிறவிதானும்', 'கருவினுள் அழிவதாயும்', 'அரிசனம் பூசிமாலை', 'பிணத்தினை ஒத்து வாழ்வோர்' என்றற் தொடக்கத்தனவாய முதற்குறிப்புடைய பாடல்கள் பலவும் இவ்வுண்மையை விளக்கும். 'வானிடத்தவரும் மண்மேல் வந்து அரனதனை அர்ச்சிப்பர்', 'ஊனெடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ' என்பது போன்ற பகுதிகள் ஆசிரியரின் கழிவிரக்க மீதூர்வைக் காட்டுவனவாகும். உயிர் கருவிகளோடு கூடி ஐந்தவத்தைப் படுமாற்றிற்கு, 'அமைச்சு அரசு ஏய்ப்ப' என முதல் நூலில் கூறியிருக்கும் உவமையை இவர் 'படை கொடு பவனி போதும்' எனத் தொடங்கும் திருப்பாடலில் விளக்கியிருக்கும் திறன் பன்முறையும் எண்ணி மகிழ்தற்குரியது. இதைப் போன்றே 'ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனை' என முதல் நூற்கண் உள்ள எட்டாம் நூற்பாவை, இவர் 'மன்னவன் தன் மகன் எனத் தொடங்கும்' திருப்பாடலால் விளக்கியிருக்கும் திறமும் எண்ணி மகிழ்தற்குரிய தொன்ருகும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருத்துறையூர் - ஸ்ரீஅருணந்திதேவ நாயனூர்

அருளிச்செய்த

4.(க) சிவஞானசித்தியார் பரபக்கம்

கணபதி வணக்கம்

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய் ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்,
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே இரவுபகல் உணர்வோர் சிந்தைத்,
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன் ருேஎன்னைச் செய்யும் தேவே.

மங்கல வாழ்த்து

சிவபெருமான்

ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற,
மாதி னேயும் ஒருபாகத் தடக்கி வானோர்
மகுடசூ ளாமணியாய் வையம் போற்றப்,
பாதிமதி யணிபவளச் சடைகள் தாழப்
படரொளிஅம் பலத்தாடும் பரனூர் பாதத்,
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம். 1

சத்தி

ஈசனருள் இச்சைஅறி வியற்றல் இன்பம்.
இலயமொடு போகமதி கார மாகித்,
தேசருவம் அருவுருவம் உருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்,
பேசரிய உயிரையெலாம் பெற்று நோக்கிப் பெரும்போகம்
அவைய ளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்(டு),
ஆசகலும் அடிய ருளத் தப்பனுட னிருக்கும்
அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். 2

திருச்சிற்றம்பலம்

விநாயகக் கடவுள்

இயம்புநூல் இருந்தமிழின் செய்யு ளாற்ருல்
இடையூறு தீர்ந்தினிது முடிய வேண்டித்,
தயங்குபேர் ஒளியாகி எங்கு நின்ற
தலைவனுர் மலைமாது தன்னே டாடிப்,
பயந்த ஐங் கரநாற்ருேள் முக்கண்இரு
பாதப் பரியதொரு நீள் கோட்டுப் பெரிய பண்டிக்,
கயந்தன்அடிக் கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்திலுற விருத்திமிகக் காதல் செய்வாம். 3

சுப்பிரமணியக் கடவுள்

அருமறைஆ கமம்அங்கம் அருங்கலைநூல்
தெரிந்த அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருளை,
திருமறைமா முனிவர்முனி தேவர்கள்தந் தேவன்
சிவனருள் சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்,
பொரும்அறையார் கழல்வீரர் வீரன் கையில்
பூநீர்கொண் டோவாது போற்றும் அடி யார்கள்,
கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந் தன்
கழலிணைக ளெஞ்சிரத்திற் கருத்தில் வைப்பாம். 4

மெய்கண்டதேவ நாயனர்

பண்டைமறை வண்டாற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந் தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்,
கண்டஇரு தயகமல முகைக லெல்லாங்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்,
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய்
மேவு மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்,
புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும் பொற்பாதம்
எப்போதும் போற்றல் செய்வாம். 5

அவையடக்கம்

மாலயன்மா மறைஅறியா ஆதி மார்க்கம்
வையகத்தா கமம்வேத மற்று முள்ள,
நூலையெலாம் உணர்ந்திறைவன் கழலே
நோக்கு நோன்மைஅருந் தவர்முன்யான் நுவலு மாறு,
வேலையுலா வுந்திரைகள் வீசி யேறி
வேறேழு மொன்ருகி நின்ற போது
சாலவுமான் குளப்படியிற் றங்கி நின்ற
சலமதுதா னேரென்னுற் றன்மைத் தாலோ. 6

திருச்சிற்றம்பலம்

நீடுபுகழ் உலகுதனில் மைந்தர் மாதர்
நேயமொடு தாம் பயந்த புதல்வர் வாயில்,
கூடுமொழி மழலையொடு குழறி ஒன்றும்
குறிப்பரிதா யிடினுமிகக் குலவிப் போற்றி,
மாடு நமக் கிதுவென்று கொண்டு வாழ்வர்
அதுபோல மன்னு தமிழ்ப் புலமை யோரென்,
பாடுகவிக் குற்றங்கள் பாரார் இந்நூல்
பாராட்டா நிற்பர் அருட் பரிசி ஞலே. 7

நூற்சிறப்பு

சுத்தவடி வியல்பாக வுடைய சோதி
சொல்லியஆ கமங் களெலாஞ் சூழப் போயும்,
ஒத்துமுடி யுங்கூட ஓரி டத்தே ஒருபதிக்குப்
பலநெறிக ளுளவா ஞற்போற்,
பித்தர்குண மதுபோல ஒருகா லுண்டாய்ப்
பின்ஞெருகால் அறிவின்றிப் பேதை யோராய்க்,
கத்திடுமான் மாக்களுரைக் கட்டிற் பட்டோர்
கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார். 8

நூற்கு அதிகாரியும் நூல்வழியும் - நூற்பெயரும்

போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே
பொருந்திஞே ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல,
ஏதுநெறி யெனுமவர்கட் கறிய முன்ஞு
ளிறைவனரு ணந்திதனக் கியம்ப நந்தி,
கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக் குவல
யத்தின் அவ்வழியெங் குருநாதன் கொண்டு,
தீதகல எமக் களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே. 9

நூற்கருத்து

இறைவனையும் இறைவஞல் இயம்பு நூலும்
ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி,
முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லா
மூதுலகில் எமக்கியன்ற முயற்சி யாலே,
சிறையுலவும் புனல்நிலவித் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோ லுண்டாய பொய்கொள் மார்க்கத்
துறைபலவுங் கடாவிடையாற் சொல்லிப் போக்கித்
துகள்தீர இந்நூலிற் சொல்ல கிற்பாம். 10

திருச்சிற்றம்பலம்

நூல்

உலகாயுதன் மதம்

இந்திர புரோகிதன் இயம்பும்ஒரு நூலின்
தந்திர மெனுதறிவி னேட்ருளி லாமல்
சந்தணை புயத்துமண மாலைகள் தயங்க
உந்தியுல கத்திலுல காயத னுரைப்பான். 1

ஈண்டளவை காட்சிமன மாதிஇரு மூன்றுய்
வேண்டும்அனு மானமுத லானபல வேண்டா
பூண்டபொருள் பூதமவை புகழ்கடின சீதந்
தீண்டரிய வெம்மைசல னத்திஞெடு சேர்வே. 2

சாற்றுபெய ரானவை தலம்புனல் கனற்பின்
காற்றுமென லாம்இவை கலந்தகுண மோதின்
நாற்றம்இர தம்உருவம் நற்பரிச மாகும்
போற்றுமிவை நித்தஇயல் பாமிவை புணர்ப்பே. 3

ஒத்துறு புணர்ச்சியின் உருக்கள்பல வாகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மாபோற்
புத்திகுண நற்பொறி புலன்களிவை யெல்லாம்
இத்தில்வரும் நீரினில் எழுங்குமிழி ஒத்தே. 4

பூதமதின் ஒன்றுபிரி யப்புலன் இறக்கும்
நீதியினின் நிற்பன நடப்பனவும் முற்போல்
ஓதும்வகை யாகிஉறு காரியம் உலந்தால்
ஆதியவை யாம்இதனை யறிவதறி வாமே. 5

இப்படி யன்றிக் கன்மம் உயிர்இறை வேறுண் டென்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர் செய்திடுங் குற்ற மென்னே
ஒப்பிலா மலடி பெற்ற மகனெரு முயற்கொம் பேறித்
தப்பில்ஆ காயப் பூவைப் பறித்தமை சாற்றி ஞரே. 6

செய்திடும் கன்ம மெல்லாம் செய்தவர் தம்மைப் பற்றி
எய்திடு மென்னில் இங்கே மாய்ந்திடும் ஏய்வ தெங்ஙன்
மெய்தரு தூலங் கெட்டுச் சூக்கமாய் மேவு மென்னில்
ஐயனே தீபம் போனுல் அதனெளி யாவ துண்டோ. 7

மாய்ந்துபின் வயலி லிட்ட வைதழை பலிக்கு மாபோல்
ஏய்ந்திடும் கன்ம மென்னில் இட்டிடத் திசையும் மேனி
ஒய்ந்துவந் தவரை உண்ணப் பண்ணுஞ்சோ றுதரத் தற்ருல்
வாய்ந்திடும் மலம் வயிற்றிற் கொண்டிடும் வழக்கு வைத்தாய். 8

திருச்சிற்றம்பலம்

உருவமும் உணர்வும் செய்தி ஒத்திரா கன்மம் என்னின்
மருவுகை விரல்கள் தம்மின் வளர்வுடன் குறைவுண் டாகி
வருவதிங் கென்ன கன்மம் செய்துமுன் மதியி லாதாய்
பெருகுபூ தங்கள் தம்மின் மிகுகுறைப் பெற்றி யாமே. 9

இன்பொடு துன்ப மெல்லாம் எய்துவ கன்ம மென்னில்
நன்புனல் சந்த ஞதி நணுகவும் அணுக வொண்ணு
மின்பொலி அழலி ஞேடு மேவுவ நன்மை தீமை
என்செய்த தியம்பி டாய்நீ இவையெலாம் இயல்ப தாமே. 10

காயத்தின் குணம தன்றிக் கண்டதான் மாவுண் டாயின்
மாயத்திற் சொல்லி டாதே மனமுதல் ஆறி னுக்கும்
நேயத்த தாக வேண்டும் அன்றியே நிகழ்த்து முண்மை
தேயத்தின் முயற்கொம் பெல்லே செப்பு வோர்செய் தியாமே. 11

அருவமே இறைவ ஞகில் அறிவின்ரு காய மாகும்
உருவமே யென்னிற் பூதக் கூட்டத்தில் ஒருவ ஞகும்
மருவிய இரண்டுங் கூடி நிற்பவன் என்னின் மண்மேல்
இருவிசும் பொருகல் லேந்தி நிற்குமோ இயம்பி டாயே. 12

பூதத்தே அன்ன மாகி அன்னத்தால் உடம்பு புத்தி
பேதித்தே மனமு மாகிப் பிரிந்தமை திருந்த இன்று
வேதத்தே யுரைக்க என்ஞே மேதினி யோர்க ளெல்லாம்
கேதத்தே வீழ்ந்து வேறு நெறியல் கேட்கு மாறே. 13

போகத்தை மண்ணிற்கண்டு விட்டுப்போய் விண்ணிற்கொள்ள
மோகத்த ராகி அல்லல் முயன்றுழல் மூட ரெல்லாம்
தாகத்தில் தண்ணீ கண்டு விட்டுப்போய்த் தண்ணீர் கேட்டுச்
சோகித்தே உண்ண வெண்ணித் துயருறு வார்க ளந்தோ. 14

வாழவே வல்லே வாமி வலக்கைதா வென்னு யிர்க்குத்
தோழனீ யுன்னே யொப்பார் சொல்லிடி னில்லே கண்டாய்
கோழைமா னுடர்தீ தென்னுங் கொலேகள வாதி கொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றி ஞயே. 15

ஈசஞர் அயஞர் மாலோ டிந்திரன் தெரிவை மார்பாற்
பேசொஞ வகைக ளெல்லாஞ் செய்தன்ரே பெரியயோராஞ
ஆசையால் அவர்போல் நாமும் ஆகவே வேண்டு மாயின்
வாசமார் குழலா ரோடும் வல்லவா கூடி வாழ்மின். 16

தையலார் ஊட லாடத் தாமவ ரோடுங் கூடிச்
செய்யதா மரையை வென்ற சீறடி செம்பஞ் சூட்டி
மெய்யெலாம் பாதஞ் சூடும் வேடத்தார் மெய்யிற் கூடா
மையல்மா னுடர்பொய் மார்க்க வேடத்தே மாய்கின் ருரே. 17

வாசமார் குழலி னூர்கள் மணிஅல்குல் தடத்தே மூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய் அமுதினை நிறைய உண்டு
தேசுலா மணிமென் தோள்மேற் சேர்ந்துவீற் றிருந்திடாதே
மாசுலா மனத்தோரெல்லாம் மறுமைகொண் டழிவர் மன்னே. 18

மதிநிலா நுதலா ரோடு மணிநிலா முன்றி லேறி
முதிர்நிலா வெறிப்பச் செவ்வாய் இளநிலா முகிழ்ப்ப மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கள்மார் பகலமூழ்கும்
புதுநிலா வியநன் போகம் விடுவர்புன் சமயத் தோரே. 19

ஊடுவ துணுவ துற்ற கலவிமங் கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின் முத்தி யித்தில்நின் ருர்கள் முத்தர். 20

வீட்டினை உளதென் ரேடி மெலிவதிங் கென்னை வீடு
காட்டினோர் கண்டோர் கேட்டோர் கரியவை உண்டேல் காட்டீர்
நாட்டினில் அரச ஞணைக் கிசையவே நடந்து நாளும்
ஈட்டிய பொருள்கொண் டிங்கே இன்பத்துள் இசைந்தி டீரே. 21

உலகாயதன் மத மறுதலை

உள்ள தாவது கண்ட தென்றுரை கொண்ட தென்னுல கத்துநீ,
பிள்ளை யாய்வளர் கின்ற நாளுனைப் பெற்ற தாயொடு தந்தையைக்,
கள்ள மேபுரி கால ஞருயி ருண்ண வின்ரெரு காளையாய்,
மெள்ள வேயுள ரென்று கொண்டு விரும்பு மாறு விளம்பிடே. 1

இடித்து மின்னி இருண்டு மேக மெழுந்த போதிது பெய்யுமென்,
றடுத்த தும்அகில் சந்த முந்தி அலைத்து வார்வுனல் ஆறுகொண்,
டெடுத்து வந்திட, மால்வ ரைக்க ணிருந்து கொண்டல் சொரிந்த தென்று,
முடித்த தும்இவை காட்சி யன்றனு மான மென்று மொழிந்திடே. 2

காண்ட லோஅநு மான மாவதும் காட்சி முன்னதும் காட்சியேல்,
பூண்ட பூத உடம்பி னுள்எழு போத மென்கொடு கண்டனை,
மாண்ட வாயின் மனங்கொள் ஞான முணர்ந்த தும்அநு மானமென்,
றீண்டு பூத மியைந்த திவ்வுடன் என்ப தென்பிர மாணமே. 3

பழுதி லாமறை கண்ட நூல்பழு தின்றி யுண்டது பாரின்மேன்,
மொழிவர் சோதிட முன்னி யின்னது முடியு மென்பது முன்னமே,
அழிவி லாதது கண்ட னம்அவை யன்றி யுஞ்சில ஆகமங்களின்,
எழுதி யோர்படி என்று கொண்டிரு நிதியெ டுப்பதும் எண்ணிடே. 4

பூத மானவை நித்த மென்று புகன்ற தென்னை உருக் களாய்,
ஆத லோடழி வாகு மாதலி ஞக்கு வோரவர் வேண்டிடும்,

காத லோடு கடாதி மண்கொ டியற்று வோருளர் கண் டனம்,
சீத நீரி லெழுந்த கொப்புள் நிகழ்ந்த மாருதச் செய்கையே. 5

நீரின் வந்தெழு கொப்புள் நீரது வாயெ ழும்நிகழ் பூதமும்
ஓரின் வேறுணர் வாயெ ழாஅவை பூத மாகி உதித்திடும்
தேரின் நூறடை காய்செ றிந்தவை சேர வேறு சிவப்பெழும்
பாரி னிற்பிரி யாது புந்தி பழிப்பு டம்பு கிடக்கவே. 6

கூறு சேர்வையின் வந்த போது சிவப்பெனும் குணம் ஒன்றுமே,
வேறு வேறு புலன்கு ணங்கள் உடற்கண் வந்து விளைந்ததென்,
நூறு காயடை கூடும் வேறொரு வன்ற னுலென நோக்கிநீ,
தேறு பூத செயற்கும் வேண்டும் ஒருத்த னென்று தெளிந்திடே. 7

ஆன ஐம்பொறி உண்டி நித்திரை அச்சம் மைதுனம் ஆதியாய்,
ஊனில் வந்திடு முன்பி லாதவை யென்று ரைக்கின் உலூதைபோல்,
வானின் வந்திடும் மாதர் ஆண்அலி யாகி மானுடர் ஆதியாய்,
யோனி பன்மையும் இன்று பூதம் உறும்பு ணர்ச்சியொர் தன்மையே. 8

ஐந்து நான்கொரு மூன்றி ரண்டுடன் ஒன்ற தாய்உட லங்களின்,
வந்தி டாவுணர் விந்தி யங்களும் வன்ன பன்மையும் இன்மையாம்,
புந்தி யோடிய வன்ன போக குணங்கள் பூத புணர்ச்சிதான்,
தந்தி டாதிவை பேத மாயிட வந்த வாவினை தந்தவா. 9

அறிவு பூதம தென்னில் வேறு புறத்த தறிந்தமை கண்டடிலம்
செறிவு தான்உ டலத்தெ னில்சவ மான போதுடல் தேருமோ
குறிகொ ளாதுடல் வாயுவானது கூடி டாமையின் என்னின்நீ
பிறித ராதுயிர் நிற்க ஞானம் உறக்க மென்பிற வாததே. 10

அறிவு டற்குண மென்னில் ஆனைய தாதி அந்தம் எறும்பதா
உறுமு டற்பெரி தான வற்றில் உதித்தி டும்பெரி தாகவே
சிறுவு டற்செறி ஞான மும்சிறி தாயி டும்பரி ணமமும்
பெறுமு டற்சிறி தாவ தென்பெரி தாவதென்சில பேசிடே. 11

போத மும்மெலி வாகி யும்மலி பூத மானவை கூடலிற்
பேத மோடு பெருத்து டற்கள்சிறுத்த பெற்றிமை என்றிடின்
ஓது டற்பெரி தான வுஞ்சிறி தாயி டாசிறி தானவும்
நீதி யிற்பெரி தாயி டாமுனம் உள்ள தன்மையின் நீடுமே. 12

இயல்பு காண்இவை யென்னில் வேறிசை பெண்ணொ டாணிரு தன்மையாஞ்,
செயல்கொ ளாஇவர் செய்தி காரண மாக வந்து செனிப்பதென்,
இயல்ப தாமுடல் பூத காரிய மாவ தும்மில்லை யாகுமால்,
மயல தாம்வினை யாலொ ருத்தன் வகுத்த தன்மையின் வந்ததே. 13

கார ணம்அவை யென்ற தென்னை கடாதி போல்நிகழ் காரியம்,
நேர ணைந்து சமைந்து நின்றிடும் என்ப தும்அது நேர்கிலோம்,
போர ணைந்திடு மொன்ரெ டொன்று பொருந்து மாகில் வருந்தியும்,
நீர ணைந்தொரு தீயி னின்றது கண்ட தாயின் நிகழ்த்திடே. 14

பூத மேவு புணர்ச்சி யேபுரி காய காரண மாகுமேல்
காதல் ஆணொடு பெண்ணும் மேவு புணர்ச்சி காரண மாவதென்
ஆதி யேஉல கத்தில் ஆணொடு பெண்ணு மாயனை காரியம்
நாதன் நாயகி யோடு கூடி நயந்த காரணம் என்பரே. 15

கந்தம் வெம்மை கலந்தி டும்புனல் கன்மம் என்செய்த தென்றனை
சந்த னந்தழல் சார நீரிரு தன்மை யுற்றிடு மாறதோர்
தந்த கன்மம் இரண்ட ணைந்து தருஞ்சு கத்தொடு துக்கமும்
சிந்தி யாஎழு சீவ னுற்றிடும் வேறு டற்கிலை தேறிடே. 16

இன்பம் எய்தி இருந்து நீவினை இல்லை இங்கியல் பென் றிடில்,
துன்பம் எய்திடு வானென் மற்றிது சொல்லி டாய் சொல வல்லையேல்,
முன்பு செய்திடு கன்ம மென்றறி கன்ம மும்முதல் வன்னறிந்,
தன்பி னுலுறு விக்கு மப்பயன் ஆங்க மைப்பொ டநாதியே. 17

அநாதி யேலமை வின்றெ னின்மல மாயை கன்மம் அணுச்சிவன்
அநாதி கன்மம் அணுக்கள் செய்ய அறிந்து கன்மம் உடற்செயா
அநாதி காரிய மாமு டற்கள் அசேத னம்மனை யாவறிந்(து)
அநாதி யாதி அமைக்க வேண்டும் அமைப்பி னேடும் அநாதியே. 18

காணெ ணுகர ணங்க ளுக்குயிர் கண்டி டாமையின் இன்றெனில்
காணு மோகடங் கண்ட கண்ணினைக் கண்டு நிற்பதுங் கண்ணதே
காணெ ணுதுயிர் தானு மிப்படி கண்டி டுங்கர ணங்களைக்
காணெ ணுகர ணங்க ளுக்குயி ருண்மை யாவதுங் கண்டிடே. 19

அங்கி யானது தானு மொன்றை அணைந்து நின்று நிகழ்ந்திடும்
பங்கி யாதுயிர் தானு மிப்படி பற்றி யல்லது நின்றிடா(து)
எங்கு மார்தயி லத்தை யுண்டெழு தீப மான தெரிந்திடும்
அங்க தாம்உடல் நின்று கன்மம் அருந்தி யாருயி ராவதே. 20

அறிவு தானுட லத்தின் வேறது வாயி றந்து பிறந்திடின்
அறிவு முன்புள திங்கு வந்தும் அறிந்தி டாமைய தின்றெனின்
அறிவை யோகன வத்து நீநன வத்தை அன்று தரத்திருந்
தறியு மவ்வறி வோம யக்கறி வாத லாலறி யாதுகாண். 21

இறந்தி டும்அறி வேபி றந்திடு மென்ப திங்கிசை யாதெனின்,
உறங்கி டும்பொழு தின்றி நின்றுணர் விங்கு தித்திடு மாறதோர்,
பிறந்த இவ்வுடல் போக வேறுடல் பின்பு வந்தமை பேசிடின்,
மறந்தி டுங்கன வத்தின் வேறு டல் வந்த வாறு மதித்திடே. 22

திருச்சிற்றம்பலம்

கரணம் வாயு விடத்த டங்க அடங்கி வந்தெழு காரியம்
மரண மான விடத்து மற்றிவை மாய்ந்து பின்பு வருஞ்செயல்
கிரண மார்கலை கெட்டு திப்ப இறப்பி ஞேடு பிறப்பையும்
தரணி யோர்கள் மதிக்கு ரைப்ப ருயிர்க்கு மிப்படி சாற்றிடே. 23

பூத மானவை காரி யங்கள் பொலிந்து மன்னி அழிந்திடும்
ஆத லால்ஒரு நாதன் இங்குளன் என்ற றிந்துகொள் ஐயனே
பேத மான கடாதி மண்ணினில் வந்த வாறு பிடித்திடில்
கோதி லாத குலால ஞல்வரு செய்கை யென்று குறிப்பரே. 24

வேதன் நாரணன் ஆர ணம்மறி யாவி ழுப்பொருள் பேதைபால்,
தூத ஞயிரு கால்ந டந்திடு தோழன் வன்மை செய் தொண்டனுக்(கு),
ஆத லாலடி யார்க ளுக்கெளி யான டிக்கம லங்கள்நீ,
காத லாலணை ஈண்டன் வேண்டின இம்மை யேதருங் கண்டிடே. 25

பொன்கு லாவு மணிக்க லன்கள் மலம்பு கில்கை பொருந்திடா,
மின்கு லாம்இடை யார்கள் தாமுல கத்தின் வேட்கை விடும்பொருள்,
புன்பு லால்மல மூத்தி ராதி பொசிந்து நாறு புலைக்கலம்,
என்கொ லாமிவர் மேல்வி ழுந்த திவற்றின் என்பெற எண்ணியே. 26

தோலி ரத்தம் இறைச்சி மேதை யெலும்பு மச்சை சுவேதநீ
ராலெ டுத்த முடைக்கு ரம்பை அழுக்கி ஞேடு புழுக்குழாம்
நூலொ ழுக்கிடு கோழை ஈரல் நுரைக்கு மூத்திர பாத்திரம்
சேல டர்த்தகண் ணர்க ளென்பது தேர்ம லத்திரள் திண்ணமே. 27

ஆசை யுற்றுழல் சூக ரங்கள் அசுத்த மேவி அளைந்துதின்
றேசு கித்தன வாயி டுஞ்சுகம் ஏழை யோடுறும் இன்பம் நீ
மாச தற்ஞெளிர் நித்த சுத்த வளந்த ருஞ்சுக வாரிகாண்
ஈச னுக்கடி மைத்தி றத்தின் இசைந்து நாம்பெறும் இன்பமே. 28

குரோத மேகுண மாயி ருந்தவர் சாந்தி நன்மை குறிக்கொளார்
அராக மேயணை வார்க ளாசை அறுத்த இன்பம் அறிந்திடார்
பராவு தேவர் பராவு தூய பராப ரன்அடி பற்றிநீ
விராவு மெய்யில் விடாத இன்பம் விளைந்திடும் இதுமெய்ம்மையே.29

காம மாதி குணங்க ளைச்சுக மென்று கொண்டனை காதலால்
தூம மாரழல் அங்கி சீத மலிந்த போது சுகந்தரும்
நாம மார்தரு சீதம் வெம்மை நலிந்த பேபது தருஞ்சுகம்
சேம மாகிய இன்ப மாமிகு தெய்வ நன்னெறி சேரவே. 30

படிக்கு நூல்கள் சிவாக மம்பசு பாசமோடு பதித்திறம்,
எடுத்தி யம்புவ தீசன் வார்கழ லேத்தி டுந்தொழி லென்றுமே,
விடுத்தி டும்பொருள் காம மாதிகள் வேண்டி டும் பொரு ளீண்டருள்,
முடித்து மும்மலம் விட்டு நின்மல ஞேடு நின்றிடன் முத்தியே. 31

திருச்சிற்றம்பலம்

2. பௌத்தரிற் சௌத்திராந்திகன் மதம் -1

நீதியார் வேத நூலின் நெறியலா அறங்கள் நாளும்
ஓதியோர் ஐந்து சீலம் உடையராய் உடல மூடிப்
போதிநீள் மரத்தின் மேவும் புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதான் இலாத கொள்கைச் சௌத்திராந் திகன்முன் சாற்றும். 1

முழுதுணர்ந் துலகிற் கோறல் முதற்செயல் முனிந்து மற்றும்
பழுதிலா அருளி ஞலே பரதுக்க துக்க ஞகித்
தொழுதுவா னவரும் போற்றத் தொல்பிட கங்க ளான
வழுவிலா கமங்கள் சொன்ன மாதவன் நாத ஞவான். 2

மருவிய அளவை காட்சி மானமென் றிரண்டி வற்ருல்
கருதிய பொருள்கள் ஞான ஞேயமாய்க் கணத்திற் பங்கம்
வருமுரு அருவம் வீடு வழக்கென நான்க தாகித்
தருமவை ஒன்றி ரண்டாய்த் தான்விரிந் தெட்டி ஞமே. 3

உருஇயல் பூத மோடங் குபாதாய ரூப மாகும்
அருஇயல் சித்தம் கன்மம் என்றிரண் டாகும் வீட்டின்
மருவியல் குற்றம் கந்த மெனவழங் கிடும்வ ழக்கின்
இருஇயல் உள்ள தோடங் கில்லதாம் இயம்புங் காலே. 4

மண்புனல் அனல்கால் பூதம் வலிகந்தம் இரதம் வன்னம்
எண்டரும் உபாதா யம்தா னிவைஇரு நான்குங் கூடி
உண்டொரு பொருளு ரூபம் உறுபுலன் உபாங்க மோடக்
கண்டது சித்தம் கன்மம் நன்றுதீ தென்றல் காணே. 5

குற்றவீ டராக மாதி குணங்களைக் குறைத்த லாகும்
மற்றவீ டுருவ மாதி ஐந்தையு மாய்த்த லாகும்
சொற்றருந் தொகைதொ டர்ச்சி மிகுத்துரை யென்று மூன்ருய்
உற்றிடும் வழக்கி ரண்டும் ஒன்றுமூன் ருகி ஆரும். 6

ஒருவனென் ருேதப் பட்டான் உருவாதி ஐந்தும் கூடி
வருபவ னென்று ரைத்தல் தொகையுண்மை வழக்க தாகும்
உருவமங் காதி யாய ஐந்தையும் ஒருவன் இன்று
தருவது தொகையினின்மை வழக்க தாஞ்சாற் றுங்காலே. 7

காரண காரி யத்தின் தொடர்ச்சியாய்க் கால மூன்றின்
சோர்வறத் தோன்றும் கெட்டு வழியென்கை தொடர்ச்சி யுண்மை
ஓர்தரின் ஒருவ னேகக் காலத்தும் உள்ளா னென்று
தேர்வது தொடர்ச்சியின்மை வழக்கதாம் செப்புங்காலே. 8

தோற்றிய பொருள்க ளெல்லாம் நாசமாம் என்று சொல்லும்
மாற்றமுன் னுரைத்தல் மற்றை மிகுத்துரை வழக்கி னுண்மை

போற்றிய பொருள்கண் கட்குப் போனது போல்மு திர்ந்து
வேற்றுமைப் பட்ட தென்கை மிகுத்துரை இல்வழக்கே. 9

உள்வழக் கில்வ ழக்குள் ளதுசார்ந்த உள்வ ழக்கோ(டு)
உள்ளது சார்ந்த இன்மை வழக்குடன் இன்மை சார்ந்த
உள்வாக் கின்மை சார்ந்த இல்வழக் கென்ரு ராரும்
உள்வழக்குள துண்டென்கை முயற்கோடின் றில்வழக்கே. 10

உணர்வுசார்ந் துணர்வு திக்கை யுள்ளது சார்ந்த வுண்மை
உணர்வுபி னின்ரு மென்கை யுள்ளது சார்ந்த இன்மை
உணர்வுமுன் பின்றித் தோன்றல் இல்லது சார்ந்த வுண்மை
உணரினில் லதுசா ரின்மை உள்ளங்கை உரோம நாணே. 11

வான் முதல் ஐந்தும் அநித்தியம் எனல்

சொன்னநால் வகையு மின்றிச் சொல்லிடும் பொருள்க ளெல்லாம்
என்னையோ அறிகி லோம்பித் தேறியோ வானம் ஆன்மா
மன்னுகா லங்கடிக்கு மனமுடன் வாக்கி றந்திட்(டு)
உன்னுமோர் இறையும் உண்டென் றுரைப்பது நித்த மன்றே. 12

1. வானம்

ஈங்குவான் செயற்கு வாரா இயம்பிய பொருள்க ளெல்லாம்
தாங்குவான் உளதே யென்னில் தரித்திடா தருவ மாதல்
ஓங்குவான் ஓசைக் ககதி யெனிலதங் குருவின் கூட்டம்
நீங்குவா னின்றி எங்கும் நின்றதேல் எங்கு மின்றே. 13

2. ஆன்மா

போதமுண் டுயிர்கட் கென்னில் வாயிலும் புலனும் நூலும்
ஆய்தலின் றெட்டுத் தீட்டுக் கலப்பினில் அறியு மென்னில்
ஏதமுண் டிரவிற் பச்சை சிவப்புடன் ஏய்ந்த போது
கேதநின் றென்னே என்னும் ஐயமுன் கிடத்த லாலே. 14

அறிந்திடா வாயி லின்றேல் அறிவின்ரும் ஐந்தும் பற்றி
அறிந்திடும் அறிவுண் டென்னில் ஐந்தினும் அறிவொன் ருக
அறிந்திட வேண்டும் சார்பின் அறிந்திடு மென்னில் உன்னை
அறிந்திலோம் புத்த னென்றிங் கழகிது சொன்ன வாறே. 15

ஞானஞே யங்க ளன்றி ஞாதிரு என்று சொல்ல
ஆனதிங் கறிவோ அன்ரு அன்றெனில் அவனி போலும்
தானதிங் கறிவே என்னில் சமைந்திடு நன்ப ருப்புப்
போனக மதற்குத் தானே கறியெனப் புகன்ற தாமே. 16

திருச்சிற்றம்பலம்

உயிரினை அருவ தென்னில் உருவுடன் உற்று நில்லா(து)
உயிரினை உருவ தென்னில் உடலினில் உடல டங்கா(து)
உயிரினை அணுவ தென்னில் உடல்பல துவார மோடும்
உயிரினை நித்த மென்னில் உணர்வுத யாந்த மின்றே. 17

எங்குமாய் நின்ற தான்மா என்றிடின் எங்கும் இன்ரும்
தங்கிடு நிறைவு தத்தம் சரீரங்கள் தோறு மென்னின்
மங்கிடும் உடலத் தோடே வடிவினில் ஓரிடத்தே
அங்கது நின்ற தென்னில் அடிமுடி அறிவின் ருமே. 18

3. காலம்

சாற்றிய காலம் இங்குத் தங்கிய வாறி தென்னை
தோற்றுவித் தளித்துப் போக்கும் தொழிலவை கால மென்னில்
போற்றிய பொருளில் புக்குப் பிணங்கிடும் பொருட்பின் இன்ரும்
தேற்றிய இல்வ ழக்குத் திரவியத் தியல்பி ளுமே. 19

4. திக்கு

எனக்குநீ கிழக்கி ருந்தா யாகின்மேற் கென்ரு யென்பால்
எனக்குமேற் கிருந்தான் என்பாற் கிழக்கென இயம்புந் திக்குத்
தனக்குநாம் கொள்வ தெப்பால் சாற்றிடாய் இல்ல ழக்குத்
தனக்குள தாகும் உண்மை தானில தாகு மன்றே. 20

5. இறை

உலகினைப் படைத்தான் என்ருய் ஒருவனிங் குள்ள தாயின்
உலகினைப் படைக்க வேண்டா இல்லையேல் படைக்க வொண்ணு(து)
உலகினுக் குபாதா நந்தான் உள்ளதாய்க் காரி யத்தாம்
உலகினைப் படைக்கில் அங்கும் உளதில தாவ துண்டே. 21

உள்ளது கடாதி போல உதிப்பித்தான் என்று ரைக்கின்
மெள்ளவே யெங்கு நின்று விதித்தனன் உலகின் மீது
வள்ளல் தான்நின்ரு னென்னில் வந்ததாம் உலக முன்னே
தள்ளிடா தெங்கு நிற்கின் எங்குமுன் தந்த தாமே. 22

இல்லது கருணை யாலே இயற்றினன் இறைவன் என்னில்
கொல்லரி உழுவை நாகங் கூற்றமுங் கொண்டு தோற்ற
வல்லவன் கருணை யென்னே வலியினுல் வேண்டிற் றெல்லாம்
பல்கவே படைத்தா ஞயிற் பித்தரைப் பணிந்தி டாயே. 23

பெறுவதிங் கென்பபடத்துப் பெற்றது விளையாட் டென்னில்
சிறுமழ விறைய தாகும் செய்திடும் கன்மத் தென்னின்
உறுபெருங் கன்மஞ் செய்வோர் முன்புள ராவ ருண்மை
அறிவுறின் ஞால மெல்லாம் அநாதியென் றறிந்தி டாயே. 24

உருவொடு நின்ரு னென்னின் உருவமுன் படைத்தார் வேண்டும்
உருவவன் இச்சை யென்னில் உலகெலாம் இச்சை யாகும்
உருவுல கத்து ளோர்கட் குறுவது கன்மா லென்னின்
உருவுடை யோர்கட் கெல்லாம் உற்றது கன்மத் தாமே. 25

அருவெனில் பவத்தி னின்றும் எடுத்திடான் ஆகா சம்போல்
மருவினன் நிழல்போ லென்னின் மருவினோர்க் காகும்மாட்சி
பெருகிய அறிவுண் டென்று பேசிடின் நேசத் தோடும்
கருதிட உருவம் வேண்டும் இல்லையேற் கருத லின்றே. 26

எங்கள்நூல் அநாதி யாக இறைவனுண் டென்னு மென்னின்
உங்கள்நூல் உரைப்பா ரின்றி ஓதுவ தழகி தாகும்
அங்கவன் தன்னை நூல்கொண் டறிந்தனம் அவனைக் கொண்டே
இங்குநூல் அறிந்தோ மென்னில் ஈதோராச் சரிய மாமே. 27

உற்றெழு மரங்க ளாதி உயிரின்றிப் பூத ரூபம்
பற்றியிப் பாரின் மீது பாங்கினுற் பலவு மாகிப்
புற்றெடு மயிர்கொம் பாதி போலவே தோன்றி மாயும்
மற்றுள யோனி கட்குப் பயனென வழங்கு மன்றே. 28

கொன்றிட லாகா தென்றும் கொன்றவை கொண்டு நாளும்
தின்றிட லாகு மண்ணே டொத்திடும் செத்த வெல்லாம
ஒன்றிய வாச மூட்டி உண்ணுநீர் வைத்த வர்க்கோ
சென்றுநின் றுண்ட வர்க்கோ புண்ணியம் செப்பி டாயே. 29

ஓங்கிய உருவ மோடும் வேதனை குறிப்பி னேடும்
தாங்குபா வனைவிஞ் ஞானம் தாமிவை ஐந்துங் கூடிப்
பாங்கினுற் சந்தா னத்திற் கெடுவது பந்த துக்கம்
ஆங்கவை பொன்றக் கேடாய் அழிவது முத்தி யின்பம். 30

அழித்திடும் அராக மாதி அகற்றிநல் லறங்கள் பூரித்(து)
இழித்திடும் புலன்கள் போக்கி இன்பொடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை எட்டையும் பாரித் தெல்லாம்
ஒழித்திடு ஞான சீலம் சமாதியின் உறுதி யாமே. 31

சௌத்திராந்திகன் மத மறுதலை

அனைத்தினையும் உணர்ந்தானெம் இறைவ
னென்றிங் கறியாது புத்தநீ அறைந்தா யென்றும்,
அனைத்தினையும் அறிந்திடான் அளவி லாமை
ஒன்றொன்ரு அனைத்தினையும் அறிந்தா னென்னின்,

திருச்சிற்றம்பலம்

அனைத்தினையும் அளவிறந்த தென்ன வேண்டா
அளவிலா ஞானத்தால் அறியின் ஞானம்,
அனைத்தினையும் அறியாது கணத்தில் தோன்றி
அழிதலால் அறிந்த மையின் ருகு மன்றே. 1

சிலபொருளை அறிந்தவற்றின் திறத்தே யொட்டிச்
சிந்திப்பன் எப்பொருளும் என்னிற் சென்று,
பலபொருளாய் ஒன்றுபல பேத மாகிப் பயின்றுவரு
மாதலாற் பார்க்கு மாறென்,
உலகுதனில் ஒருபொருளங் குணரும் போதின்
உற்றுணர்தல் ஆராய்தல் தெளித லுண்டாய்,
நிலவுமத னுல் உணர்வு பன்மை முன்பின்
நின்றிடா தென்பையெல்லாம் நினைப்ப தெங்கே. 2

முத்திநிலம் கண்டறங்கள் மொழிந்தா னுயின்
முதல் முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ணம்,
ஒத்திடுந்தேன் நெய்கூட்டி உண்டிறந்தோன்
ஒருவன் உலகினில்வந் திதுதீதென் றுரைத்தால் ஒக்கும்,
செத்ததுபின் னென் றுரைக்கில் கதியில்
செல்லாத் தேரனுரை நீர்பெருகிச் சென்ரு ருகும்,
அத்தினள வறியாதிக் கரையோர் தம்மை
யக்கரைக்கே செல்லவிடும் ஆசை யாமே. 3

நீர்போல நின்றுயிர்கட் களித்தி டாதே
நெருப்பாய துயர்ப்பிறப்பின் நிகழ்ந்து நின்று,
பாரோருக் களித்தபடி வலையிற் பட்ட
பலகலைமான் கண்டொருநீள் கலைபாய்ந் தோடி
நேரேசென் றவ்வலைக்கே நேர்ந்தா
லொக்கும் நீள்பாவக் குழியில்விழு நீர்மை யாகும்,
ஆரோவிங் கவனெப்பார் அறத்தை
யாக்கப் பிறந்தறமாக் கினனென்னில் அடங்க வாமே. 4

அலகிறந்த யோனிகளில் புகுந்த தெல்லாம்
அறத்தை அளித் திடவென்னில் அவற்றி னெல்லாம்,
நிலவுவது கன்மத்தா லாகு மன்றி
நினைந்ததோர் இச்சையினுல் நிகழ்ந்தா னுகில்,
உலகுதனி லுள்ளோர்க்கும் அதுவே யாகும்
ஒருத்தி வயிற் றினிலிருந்தங் குதரந் தள்ளித்,
தலமதில்வந் தானென்னில் தாயைக்
கொன்ருன் தருமத்தை யின்றெனக்குச் சாற்றி டேலே. 5

திருச்சிற்றம்பலம்

அரியினொடு நரிஉழுவை ஆதி யாக
ஆனபோ தறந் திரிந்து கோற லாதி,
பரிவினொடும் செய்தனனும் இல்லை
யாகிற் பசிதனக்குத் தின்பதவன் பழுதை யோதான்,
கருதிலவன் பரதுக்க துக்க னாகிற்
கணவனிழந் தோர்கட்குங் கண்ணி குத்தித்,
திரியுமவர் துயரினுக்கும் இரங்கு வோன்றன்
செயலறத்துக் கழகியதாஞ் செப்புங் காலே. 6

ஒருபொருளைத் தேடிஅதற் குரையுந் தேடி
உரைப்பதன்முன் உணர்விறக்கும் உனக்கு நூலென்,
மருவிவருஞ் சந்தான வழியில் என்னில்
வாயுரைத்த தேயுரைத்து வழங்குமாகும்,
பெருகுவது கெட்டென்னில் அதுபோ
லாம்பின் பித்துரைத்த தறியாது பேதை சொல்லும்,
தருவது நூல் எப்பரிசு முதல்நடுவோ
டிறுதி தான் விருத்த மின்றியது சாற்றி டாயே. 7

முன்னாகப் பலஅறங்கள் பூரித்தெம் இறைவன்
முழு துணர்ந்திங் கருளினால் உயிர்கள் முத்தி அடையப்,
பின்னாகப் பிடகநூல் உரைத்தா னென்று
பேசினாய் இவன்முன்பு பேரறங்கள் புரிநூல்,
சொன்னார் இவனைப்போன் முன்னொருவன்
என்னில் அவனுக்குச் சொன்னார் எனத்தொடர்ச்சியாகி,
அன்னாய்பின் அனவத்தைப் படுமொருவன்
இன்றும் ஆரோஉன் பாழியிருப் பார்இதனை அறையே. 8

இந்நூலைச் சொன்னவன்தான் இங்கிருந்தா
னென்னில் இவனிருத்தி யேத்துமவன் எங்கிருந்தா னெவனோ,
அந்நூலோ குருவந்த அடைவுமுனக் கில்லை
அடைவுதரின் முடிவின்கண் அநாதி போதன்,
சொன்னானும் அவையேதா கமங்க ளாகுஞ்
சுருக்கியூன் தவம்புரியச் சொல்லுவ தெல்லோரும்,
உன்நூல்கண் கழுவாதே உதிப்ப தன்முன்
புலாலோ டுண்பானோர் ஊன்பிரிய னுரைத்ததொரு நூலே. 9

முன்நூலும் வழிநூலும் சார்பு நூலும்
மூன்றாகும். உலகத்து மொழிந்த நூல்கள்,
இந்நூலில் உன்நூலிங் கெந்நூ லென்னில்
இந்நூல்கா ணென்நூலென் றியம்ப மாட்டாய்,

திருச்சிற்றம்பலம்

உன்நூலும் ஒருநூலாய் உரைப்ப தென்னே
உலட்டுநூல் பருத்திநூல் சிலம்பி நூல்கள்,
அந்நூலு மல்லாதே பொய்ந் நூல்
கொண்டிங் கறநோற்றுத் திரிந்தவா றழகி தாமே. 10

புத்தனவன் பொன்றக்கெட் டுப்போனு னென்று
போற்றுவதிங் காரைநீ பொய்த்தவஞ்செய் புத்தா,
செத்த வர்க்குச் சிலகிரியை செய்ய இங்குச்
செய்தவர்க்கும் புண்ணியமா மென்று செப்பின்,
நித்தமுயி ராதலாற் பலிக்குஞ் செய்தி
நினைந்துதரு வானுமுளன் உனக்கிவ்வா றில்லை,
வைத்தசுடர்த் தீபமற மாய்ந்தக்கா
லதற்கு மருவுதிரி நெய் கூட்டு மதிகேடுன் வழக்கே. 11

நூலுரைத்தான் ஒருவனுளன் என்றநுமா
னத்தால் நூல்கொண்டிங் கறிந்தாற்போல் நூலா நூலின்,
பாலுரைத்த பொருள்களெல்லாம் அநுமான
மென்னிற் பரலோக பாதாள லோகங்க ளொருசொல்,
லாலுரைத்த நூலின்றி அறையா யின்றேல்
அவையறிந்த படியெனுன தநுமான மன்றே,
மேலுரைக்கும் பிரமாண முனக்கில்லை
காட்சி யநுமானம் விட்டபொருள் விளக்குவதா கமமே. 12

எப்பொருளும் அநித்தமென இயம்பிடுவை
அநித்தம் இல்லதற்கோ உள்ளதற்கோ உளதிலதா னதற்கோ,
செப்பி டின்இல் லதற்கில்ல தென்று மில்லை
சென்றடைவ துள்ளதற்கேல் உள்ளதென்று முண்டாம்,
அப்படிதான் உளதிலதாம் அப்பொருளுக்
கென்னில் உளதிலதா காதிலதும் உள்ள தாகா,
திப்பொருளுக் கநித்தமிலை என்றொன்றைக்
காட்டாய் எனில்தோன்றும் பொருள்நின்றிங் கிறுதி யாமே. 13

அங்குரம்வித் தின்கேட்டில் தோன்றுமது போல
அனைத்துருவுங் கெட்டுவழி யாகு மென்னின்,
அங்கவற்றுக் காக்கக்கே டறைந்தா யெல்லாம்.
அநித்தமெனும் உரைமறந்தாய் அருகனுமா னுய்நீ,
இங்குமுளை யிலைமரமாய் எழுந்தீண்டிச்
செல்லா திறந்ததே எழுந்தபடி நில்லா தென்னின்,
மங்கியிடா தேபால தருணவிருத் தையாய்
வரும்வடிவு திரிந்து நின்று மாயுங் காணே. 14

உடல்பூத மெனில்ஒன்றுக் கொன்றுபகை
ஒன்ரு வுதிரசுக் கிலமென்னின் மரத்தினுளுக் கல்லி,
னிடமாகத் தவளையுரு வந்தவா றியம்பாய்
இருவினைகா ணெனின்வினைக ளிரண் டுருவாய் நிற்கும்,
திடமாக வன்னமுரு வெனின்உண்ண
வுண்ணச் சென்றுவள ருங்காயந் தேயமுணர் வென்னின்,
மடவோனே அருவுணர்விங் கசேதனமாய்
உருவாய் வளராது வருமில்லா தெனின்மலர்வான் வருமே. 15

என்றுமிலா தொன்றின்ருய் வருமுருவம் வித்தின்
எழுமரம்போ லெனின்வித்தி னுண்டாய்நின் றெழுங்காண்,
நின்றதேல் வித்தின்மரங் கண்டதில்லை
யென்னின் நெற்கமுகாய் நீளாது நெல்லாயே நீளும்,
ஒன்றிலொன்றங் கிலாமையினு லுதியாகா
ரணம்பெற் றுதிப்பதுகா ரியமதுவு முள்ளதாகும்,
மன்றமதிக் கலைபோலக் கந்த மைந்து
மருவியுள தெனும்உரையும் மறந்தனையோ இன்றே. 16

உருவமெலாம் பூதவுபா தாய சுத்தாட்
டகவுருவ மென்னின் நீ உலவத்துக்கு,
மருவும்அன லோடுநீர் மண்கந்த மிரதம்
வன்னம்இலை வன்னிக்கு வளிநீர்மண் வாசந்,
தருமிரத மிலைநீர்க்குத் தழல்கால்மண்
கந்தந் தானில்லைத் தலத்தினுக்குச் சலமனல்கால் கூடி,
வருவதிலை இந்திரிய விடயமான
மாபூதங் களுமறியாய் மதிகெட்டாயே. 17

மருத்தெண்ணெய் தனின்மருந்து நின்ருற்
போல மறைந்தெட்டும் சூக்குமமாய் மருவு மென்னில்,
திருத்துமவன் மருந்தெண்ணெய் சேர்த்தாற்
போலச் சேர்ப்ப வன்வே றுண்டெல்லா வுருவும் எட்டும்,
பொருத்தியதே லொருதன்மை யாம்பொருள்க
ளொன்றின் குணமொன்றிற் புகாதறைகை பொருளறியாய் பூத,
உருப்பொருள்வே றுபாதாயப் பொருள்வேறு
காட்டா யுபாதாயம் பூதகுணங் குண குணியா முலகே. 18

அழிந்துணர்வை உணர்வுதரு மெனின்அழிந்த
தாக்கா தாமுணர்விற் பொருள்வினைகள் அணையா வாகும்,
அழிந்திடுவ தாக்கியெனின் முன்னெருகா
லத்தே அறிவிரண்டு நில்லாதங் கறக்கே டின்றி,

திருச்சிற்றம்பலம்

அழிந்துணர்வை உணர்வுதரு மெனின்நித்தா
நித்தம் அடையும்உணர் வுக்கநித்த மாயே செல்லா,
தழிந்தெருவை ஆக்குவது போலாக்கு
மென்னின் ஆம்பொருள்வே றழிந்துசத்தி கிடந்தாக்கும்அவையே. 19

கேடிலாச் சந்தானத் தேபலிக்கு மென்று
கிளக்கும்நீ சந்தானம் நித்த மாகும்,
ஓடுநீர் போலழிந்தா முணர்வொழுக்க
மென்னின் ஒழுகுநீ ரிட்டதெல்லா முடன்கழிதல் போலத்
தேடுபொருள் சீலம்பா வனைகுறிவிஞ்
ஞானஞ் சென்றவுணர் வோடேகு நின்றுணர்வின் ஏயா,
நீடுநீர் முன்னெழுகிக் கெடாதுநிறைந்
தோடு நிகழுணர்வுங் கேடின்றி நிறைந்து செலுங் காணே. 20

சந்தானங் காரணமோ காரியமோ இரண்டின்
தன்மை யதோ காரணமுங் காரியமும் நித்தம்,
வந்தாருஞ் சந்தானத் தொடர்ச்சியெனின்
அதற்கும் வருநித்தந் தோற்றக்கே டடை தலின்மற் றென்றேல்,
ஐந்தான கந்தங்க ளன்றாய் நித்தம்
அடைபொருளாம் அறிவும்அறி வடைவு மின்றிச்,
சிந்தா முன் பின்னாகிப் பின்முன் னாகித்
திரிந்துவருந் திரிவறிந்து தேரா தேரே. 21

ஒருகாலத் துணர்வுகெட்டா மெனின்உதிப்பீ
றொன்றாம் ஒருபொருளின் திரிவுனக்குக் கால மானல்,
வருகால நிகழ் காலங் கழிகால மென்று
வழங்குவதென் பொருள்வரவு நிலைகழிவால் இன்றேல்,
திரிகாலம் செப்பிடாய் பொருட் செயலு மொன்றும்
செயல்மூன்றும் ஒருகணத்தே சேரு மென்னில்,
தருகால மூன்றும் தாமரைநூ றிதழில்
தள்ளூசி யுங்கால மூன்றினையுந் தருமே. 22

உணர்வுகா ரணமுணர்வுக் கென்னின்
நித்தம் உணர்வுக்குண் டாகிநின் றுணர்வையுதிப் பியாதிங்,
குணர்வுசந் தான விடத் தொழிந்தாற்
பின்னை யுண்டாகா துடலுணர்வுக் குபாதாக மென்னின்,
உணர்வுடலின் இடையரு துதிக்க வேண்டும்
உடலுணர்வின் வினையினால் உணர்வுதிக்கு மென்னில்,
உணர்வுவினை யுளதொடுங்கா துணர்வுதருஞ்
செய்தி உணர்வைவினை தரினொருவன் செயல்வினையின் றாமே. 23

வினையுணர்வு தரும்வினையை உணர்வுதரு
மென்றும் விளம்பின்நீ உணர்வுபோல் வினையி னுக்கு,
நினைவுவரும் ஒன் றையொன்று நிகழ்த்தி
டாபின் நிலையின்மை யானிகழ்த்திக் கெடுதல் செய்யா,
கனல்விறகில் பிறந்ததனைப் பொடிசெய்
தாற்போல் கருத்துவினை யிற்றேன்றிக் கழிக்கும்வினை யென்னின்,
முனமுணர்வு பிறந்தளவே வினைகெடுக்கும்
முன்பின் உதியாது முகிழ்நெருப்பின் விறகுதியா வாறே. 24

பேயுநர கருஞ்சுரரும் பிரமருமாய் உலகிற்
பிதாமாதா ஆதார மொன்று மின்றிக்,
காயமொடு தாம்வருவர் என்றுரைப்பை காயங்
காரியமாய் வருதலினுல் காரணமுண் டாகும்,
ஆயுமுணர் வோசுத்த அட்டகமோ கன்மம்
வடித் ததோ வடிவுசெய்து வைத்தாரும் உண்டோ,
ஆயுமுணர் வுண்டாகில் அறைந்திடாய்
உலகுக் காதிதுணை நிமித்தகா ரணமறிவ தறிவே. 25

உருவாதி கந்தங்கள் ஐந்துங் கூடி ஒருவன்வே
றெருவனிலை யென்றுரைக்கும் புத்தா,
உருவாதி ஐந்தினையும் உணர்பவன்வே றென்ன
உணரும்விஞ் ஞானமென்றுய் அஞ்ஞானம் உணர்ந்தவரார்,
உருவாதி பொருள்காட்டித் தனைக் காட்டும் சுடர்போல்
உணர்வுபிறி தினையுணர்த்தித் தனை யுணர்த்து மென்னின்,
உருவாதி பொருளினையும் சுடரினையும் காணும்
உலோசனம்போல் உணர்வுபொருள் உணர்வதுவே றுண்டே. 26

காயமுடன் இந்திரியம் மனம்நான் என்று கதறுவாய்
காயம்உறக் கத்தறியா வாகும்,
வாயில்களும் அப்படியி லொன்றையொன்றங் கறியா
மனங்கணத்திற் கெடுங்கால மூன்றின்வர வறியா(து),
ஆயுமறி வாகியுடல் பொறிமனமூன் றறிந்தாங்
கவைநானல் லேனென்றும் அறிந்துமனத் தாலே,
ஏயுமொரு பொருள்கருதி இந்திரியப் பாலே
இசைவித்துக் காயத்தால் இயற்றுவதான் மாவே. 27

கழிந்தஉணர் வேபின்னும் யானறிந்தே னென்று
கருதலினவ் வுணர்வறிந்த தென்னின் முன்னே,
மொழிந்த மொழி நான்மொழிந்தே னென்றல்
வாய்தான் மொழிந்ததோ மொழிந்தவன்வே ருனுற் போல,

எழுந்தவுணர் வெல்லாங்கொண் டியானறிந்தே
னென்ற தெதுஅதுகாண் உயிருணர்வால் வாக்கால் மற்றை,
ஒழிந்தகா யந்தன்னல் உணர்ந்துரைத்துச் செய்தங்
குணர்வினுக்கும் ஆதார மாய் நிற்கும் உயிரே. 28

இந்திரிய வீதிஎழுஞ் சித்தம் நெஞ்சத்
தெழுஞ்சித்த மென்றிரண்டு மொன்றுகெட்டே யொன்று,
வந்தெழுவ தெனில்கனவில் கண்டபடி நனவின்
வாய்திறவார் நனவு கண்ட படிகனவிற் காணுர்,
அந்தனுரு வன்னங்க ளறிந்திடா னின்றேல்
அறிகனவும் இறந்துணர்வும் அழிந்துறக்கம் அடைந்தால்,
உந்துவதோர் சந்தான மில்லையுணர் வுதிப்ப
உயிர்கனவு நனவினையும் உணருங் காணே. 29

ஒருகாலத் தோரிடத்தில் ஒருணர்வேல் செவிதான்
ஒன்றுணரா திருசெவியும் உணரும் ஓசை,
ஒருகாலத் திரு கண்ணும் இருசெவியும் மனமும்
ஒருவனைக்கண் டவனுரை கேட் டுணர்ந்திடுமைம் பொறியும்,
ஒருகாலும் உணராவுள் உணர்வின்றிப் பொறிகள்
ஒன்ருென்ரு வுணர்வதுள் ளுணர் வைந்தும் உணரா,
ஒருகாலும் பொறிவிகற்பித் துணராவுள் ளுணர்வுக்
குள்ளதுகாண் விகற்பமிரண் டும்முணர்வ துயிரே. 30

அருஉணர்வு மாய்ஆறும் மாறி மாறி அங்கங்கே
தோன்றியிடின் அகத்துநிலை யின்றி,
உருவினெடு பாலதரு ணவ்ருத்தா வத்தை உண்டாகா
துறக்கத்தின் உடல் தட்ட அழைப்ப,
வருவதுணர் வெங்கிருந்து நெஞ்சிலிருந் தென்னில்
வாயில்வினை யறிந்தெழுப்ப ஆயுஅறி யாதாம்,
திரியொழிய இடிஞ்சில்தொடத் தீபமெழா அடக்கஞ்
சென்ற பொழு தாலுணர்வு நின்றநிலை செப்பே. 31

இச்சைவெறுப் பியற்றலின்பத் துன்பம் ஞானம்
இவை யணுவின் குறியாகும் இவற்றில் இச்சை,
நச்சிநுகர்ந் தொரு பழத்தின் இனங்கண்டு முன்பு
நான்நுகர்ந்த கனியினின மென்று நச்சல் பின்பு,
மெச்சவெறுப் பாதிகளும் இப்படியே யாகும்
இவைமுன்பும் பின்புமுணர்ந் திடுத லாலே,
நிச்சய கர்த் தாஒருவ னுளனென்று நல்லோர்
நிறுத்திடுவர் வெறுத்திடுவர் நின்னுடைய பொருளே. 32

எப்பொருட்கும் இரந்தரமாய் இடங்கொடுத்து நீங்கா
திருளொளிதா னன்றிஇரண் டினுக்குமிட வகையாய்,
ஒப் பில்குணஞ் சத்தமதாய் வாயுவாதி உதித்தொடுங்க
நிற்கும்வா னுயிர்முன்னே சொன்னேம்,
செப்பிடுங்கா லம்பொழுது நாளாதி யாகித்
திரிவிதமாய்த் தீமைநன்மை செய்யுந் திக்குத்,
தப்பில்குணக் குக்குடக்குத் தெற்குவடக் காதி
தானுகித் திரியாதே நின்றுபலந் தருமே. 33

காரியமாய் உலகெலாம் இருத்த லாலே கடாதிகள்போல்
காரியகர்த் தாவொருவன் வேண்டும்,
ஆரியமாய் அறம் பொருளோ டின்பவீ டெல்லாம்
அறைந்துயிர்கட் கறிவுசெயல் அளிப்பதுநூல் அந்நூல்,
கூரியராய் உள்ளவர்கள் ஓதஓதிக் கொண்டுவர
லான்முன்னே குற்ற மின்றிச்,
சீரியபே ரறிவுடையோன் செப்ப வேண்டும்
செயலினுக்குங் கரிவேண்டுஞ் சிவனுளனென் றறியே. 34

மரங்களுயி ரல்லவென்று மறுத்துச் சொன்னுய்
வாடுதல்பூ ரித்தலால் மரங்களுயி ராகும்,
திரங்குநீர் பெருதொ ழியிற் பெறிற்சிரத்தை சேரும்
சீவனல எனினுலகில் சீவ னெல்லாம்,
உரங்கொள்வ தூண்பெறிற் சோரும் ஊண்பெரு ருவேல்
உலர்ந்தமர நீர்பெற்ரு லுய்யாதுள் ளுயிர்கள்,
கரந்தசினை முட்டைகட்கு வாயிலின்று வாயில்
கண்டிலதேற் பூத்துக்காய்த் தெழல்மரங்கள் உயிரே. 35

ஒருமரத்தின் உயிரொன்றேல் கொம்பொசித்து நட்டால்
உய்யுமுயிர் ஒன்றுபல வாமோ வென்னில்,
கருமரத்தின் வித்துவேர் கொம்புகொடி கிழங்கு
கண்கலந்து கொள்ளு முயிர் அண்டம் வேர்ப்புத்,
தருபிறப்புச் சராயுசங்கள் சனன மும்பெற் ருற்போல்
தானடையும் உற்பிச்சம் தலநடவா வென்னில்,
பெருநிலத்தில் காலிலார் நடப்பரோ பேதாய்
பிறப்பின்விதம் அநேகங்காண் பேசுங் காலே. 36

தின்னுமது குற்றமிலை செத்ததெனும் புத்தா
தின்பை யெனக் கொன்றுனக்குத் தீற்றினர்க்குப் பாவம்,
மன்னுவதுன் காரணத்தால் தின்ஞ தார்க்கு
வதைத்தொன்றை இடாமையினல் வதைத்தவர்க்கே பாவம்,

திருச்சிற்றம்பலம்

என்னிலுனே யூட்டினர்க்குப் பாவஞ் சேர
என்னதவம் புரிகின்ருய் புலால்கடவுட் கிடாயோ,
உன்னுடலம் அசுசியென நாணி வேருேர்
உடலுண்ணில் அசுசியென உணர்ந்திலேகாண் நீயே. 37

குடைநிழலும் கண்ணுடிச் சாயையும்போல்
பிறப்புக் கொள்ளும்உணர் வென்னல்கா ரணமழிய அழியும்,
அடை நிழல்போல் கந்தமைந்தும் அழியுமுனக்
கிங்கே அவையழிந்தால் அருங்கதியின் அணேயுமுணர் வின்ரும்,
இடைகனவில் எழுமுணர்வு நனவுணர்வா ருற்போல்
எழுமுணர்வு கன்மத்தால் நிஊேந்துகதி யென்னில்,
மிடைசிஊேயும் அந்தனுமுட் டையுமுயிர்விட்
டக்கான் மேவுவதென் பிறப்பினுடல் விடாது கன்ம வுணர்வே. 38

ஐந்துகந்தம் சந்தானத் தழிதல்பந்த துக்கம் அறக்
கெடுகை முத்தியின்பம் என்றறைந்தாய் கந்தம்,
ஐந்துமழிந்தால்முத்தி அணேபவர்யா ரென்ன
அணேபவர்வே றில்லே யென்ருய் ஆர்க்குமுத்தி யின்பம்,
ஐந்தினுணர் வினுக்கென்னில் அழியாத உணர்வுண்
டாகவே அவ்விடத்தும் உருவாதி கந்தம்,
ஐந்துமுள வாமதுவும் பந்த மாகி அரந்தை
தரும் முத்தியின்பம் அறிந்திலேகாண் நீயே. 39

அநாதிமுத்த ஞய்ப்பரஞய் அசலஞ யெல்லா
அறிவு தொழில் அநுக்கிரக முடையஅரன் கன்மம்,
நுஞதிகமற் ஞெத்தவிடத் தேசத்தி நிபாத
நுழைவித்து மலங்களெல்லாம் நுங்க நோக்கி,
மஞதிகர ணங்களெல்லாம் அடக்கித் தன்ஊே
வழிபடுநல் லறிவருளி மாக்கருஊேக் கையால்,
இஞத பிறப் பினில்நின்று மெடுத்து மாரு
இன்ப முத்திக் கேவைப்பன் எங்கள்முத்தி யிதுவே. 40

3. யோகாசாரன் மதம்

போதமே பொருளாய்த் தோன்றும் பொருளதாய் எழலாற் போதம்
வாதனே அதஞற்கூடி வருதலால் வடிவிலாமை
ஆதலாற் கனவே போலும் சகமுள தறிவே யாமென்(று)
ஓதிஞன் ஓதா ஞய உணர்விஞல் யோகா சாரன். 1

திருச்சிற்றம்பலம்

யோகாசாரன் மத மறுதலை

போதமுந் தவிர வேறோர் வாதனை புகன்றாய் போதம்
வாதனை இரண்டுண் டென்னாய் போதவா தனையும் என்னிற்
காதலாற் பொருளி னோடு கலந்தபின் எழுங்க ருத்தாம்
வாதனை கனவு கண்ட பொருளின்மேல் வருங்க ருத்தே. 1

அறிவதே பொருள தாயின் அகம்சடம் என்ன வேண்டும்
பிறிபொரு ளாகும் பேதித் திதம்பிர பஞ்ச மென்னில்
உறுபொருள் உருவந் தோய்ந்தால் உணர்வு மவ்வுருவாய் நிற்கும்
செறிபொரு ளதுவாய் நிற்குந் தெளிபளிங்கதுவே போல. 2

4. மாத்தியமிகன் மதம்

அவயவம் பொருளாய்த் தோன்றும் அவயவம் ஒழிந்தாற் பின்னை,
இவைபொரு ளென்ன வேறொன் றிலாமையாற் பொருள்கள் இன்றாம்,
அவைபொருள் இலாமை யாலே அறிவுமின் றாகு மென்று,
நவைதரு மொழியி னாலே நவிலுமாத் தியமி கன்றான். 1

மாத்தியமிகன் மத மறுதலை

கடத்தினில் அவயவங்கள் படத்தினில் புகாமற் காத்தும்,
படத்தினில் அவயவங்கள் கடத்தினிற் புகாமற் கொண்டும்,
இடத்தினில் நிற்கும் ஆகும் அவயவி இரண்டுங் கூடி,
உடைத்தொரு பொருளுண் டாகப் பொருளுமுண் டுணர்வும் உண்டே. 1

கருவியும் ஒளியும் வேறு கருதிடுங் கருத்தும் நிற்கப்
பொருள்புண ராமை யாலே போதம்வந் தெழுவ தின்றாம்
மருவிடும் பொருளுண் டாக வந்தெழும் புந்தி யானால்
பொருளுள தாகு மாகப் போதமும் உள்ள தாமே. 2

5. வைபாடிகன் மதம்

அரிசனம் நூறு கூட வருணம்வந் தெழுந்தாற் போல
விரிசகம் பொருள்கள் ஞானம் விரவிட மேவித் தோன்றும்
தெரிசன மிதுவே யென்று தெளிந்திடும் தேரர் வீடு
பரிவொடும் அடைவீ ரென்று பகரும்வை பாடி கன்றான். 1

வைபாடிகன் மத மறுதலை

பொருளது புறம்ப தாகும் போதம்அந் தரம தாகும்
தெருளிடின் இரண்டுஞ் சென்று சேர்ந்திடு மாற தின்றாம்
அருவுணர் உருவ ஞேய மாதலி னாலுங் கூடா
உருவரு வுடைய வைபா டிகற்கினி மாற்றம் இன்றே. 1

திருச்சிற்றம்பலம்

3. அமணரில் நிகண்டவாதி மதம் -1

வாச மாமலர் அசோகு பேணிமறை நீதி யோடுமலை யுந்தவத்(து),
ஆசை யாலுடை அகன்று மாசினை அடைந்தில் வாழ்தரும் அறத்தினில்,
பாச மானது தவிர்ந்து பண்டிபட வுண்டு பாயினொடு பீலிமேல்,
நேச மாயவை தரித்துளோர் களின் நிகண்ட வாதியை நிகழ்த்துவாம். 1

ஈறி லாதன அநந்த ஞானமுதல் எண்கு ணங்களெனும் ஒண்குணம்,
மாறி லாதமதி மேவு சீதமென மன்னி வானவர் வணங்கவே,
வேறு லாவுகுண ஞான ஆவரணி யாதி எட்டினையும் விட்டசீர்,
ஏறு பான்மையுடை நீடு வாழ்அருகன் எங்க ளுக்கிறைவன் என்றனன். 2

கருவி கண்படு தொடக்கொ ழிந்துவரு கால மூன்றின் நிகழ் காரியம்,
பெருக நின்றொரு கணத்தி லேஉணர் பெருந்த வக்கடவுள் பீடினால்,
மருவி நின்றுவழி பட்ட வர்க்குமலை வுற்ற வர்க்குமனம் ஒத்திடும்,
குரிசி லெங்களிறை யென்று பின்னும்நிகழ் குற்ற மின்மையது கூறுவான்.3

பசித்தல் தாகபய செற்ற மோடுவகை மோக சிந்தனை பழித்தனோய்,
நசித்தல் வேர்வினொடு கேத மோடுமதம் வேண்ட லீண்டதி சயித்தலும்,
புசிப்பு வந்திடு பிறப்பு றக்க மிவை விட்டொ ரட்டகுண பூதனாய்,
வசித்த வன்னுலகின் மேலி ருந்தொருசொல் இகல னுக்கருளும் என்றனன்.4

அந்த வாய்மொழியி னால்அவன்சரண மாதி யோகமுதலானநூல்,
இந்த மாநிலம் மயங்கி டாதவகை இங்கி யம்பினன் இதன்பொருள்,
வந்த காலமுயிர் தன்ம தன்மிஅறம் மற்றும் விண்மருவு புற்கலம்,
பந்தம் வீட்டினொ டநாதியா யிவை படைப்ப தின்றியுள பத்துமே. 5

நிற்ற லோடுதலை போதல் அன்மையை நிகழ்த்து நீடுவெதி ரேகமும்,
உற்ற தாம்இவை கணத்தி லேமருவி உள்ள வாபுரியு மாறுதான்,
கற்ற காலமள வெய்தி வாழுமுயிர் காய மேவிநிறை வானதே,
பெற்று வேறுவரு தன்மை நேரறிவு பெற்ற தாகியுள பேசிலே. 6

பரந்து மீதுதரு மாத்தி காயம்அழி வித்(து) அநித்தமது பண்ணிடும்,
நிரந்து கீழதரு மாத்தி காயமது நித்த மாய்மிக நிறுத்திடும்,
புரந்த புண்ணிய மிதற்கு நன்மைபுகல் பாவ மானவது தீமையே,
தரும்பொ ருட்கிடம தாகும் வானமிகு புற்க லன்களவை சாற்றுவாம். 7

ஏனும் ஒன்றுடைய வாகி எங்கும்அணு வாய்இரும்புகல் மரங்களும்,
பூணும் அங்குருவெ லாமு மாகுமிவை புற்க லப்பொருள்கள் என்னலாம்,
காணும் அங்கறு வகைத்தொ ழில்களவை கட்டு விட்டநெறி கன்மமேல்,
மாண நின்றுவரு மாறி மாறிமுன் வகைந்த துண்டுவிட மாட்சியே. 8

திருச்சிற்றம்பலம்

நிகண்டவாதி மத மறுதலை

அருகனுக் கனந்த ஞான மாதி ஆதி யாகவே
பெருக நிற்றல் சீதம்மா மதிக்க டைந்த பெற்றியேல்
ஒருவும் இட்ட ஒப்பவன் னுயிர்த்தி றத்தி னுள்ளபின்
மருவு மிக்க குற்றம்மேல் அறத்தின் மன்னி னுனெனில். 1

அறத்தின் மன்னு வித்தவன் ஒருத்த னுய்அவன் அறத்
திறத்தி னிற்றல் மற்றொருத்த னுல்வி ளைந்த செய்தியாம்
மறத்தின் அற்ற வர்க்கெலாம் வணக்கம் உன்இறைக்குமேற்
பிறக்குமிங் கவத்தை கொண்ட தாரை யின்று பேசிடே. 2

கருவிதன் தொடக்கொ ழிந்து கண்டு வாழு மென்றியேல்
உருவு கொண்டு நின்ற தென்னில் உண்டுதான் மநாதிகள்
ஒருவி நின்ற தென்னில் அத்த மொன்றையும் உணர்ந்திடான்
பொருள்தெ ரிந்து போகை கால மொன்றிலே புணர்ந்திடான். 3

ஆர்வ கோப மானவை அடைந்தொ றுப்ப வர்க்கெலாம்
சேர்வ தின்மை செப்பில்இன்று சீவன் மேவு காயமால்
ஒரு மன்னர் போலவே உயிர்க்க ளித்த லென்றியேல்
ஏர்கொள் பொன்ன யிலிடத் திருத்தல் பெற்ற தென்கொலோ. 4

சொல்ல தொன்று கொண்டிகலின் ஆத்தன் நாடவேசொலின்
இல்லை யாம் மநாதிதான் இயம்பு மாற தெங்ஙனே
நல்ல வாம் மநாதிதான் அவர்க்கு நாட வேயிலை
ஒல்லை ஊமர் ஊமருக் குரைத்த வாற தொக்குமே. 5

இன்ப பூமி சேரிகலில் நாதன் இவ்வி ருநிலத்
துன்பம்அங் குணர்ந்தி டாமை இங்கு வந்த சொல்லிடான்
இன்ப பூமி யில்இருந் திருந்தி யாவும் எய்திடில்
துன்ப பூமி யாமுணர்ந்து சொல்ல வல்ல தில்லையே. 6

நிறைந்து காய மோடு சீவன் நின்ற தாகில் இவ்வுடல்
குறைந்த போது தானும் இத்தொ டொக்கவே குறைந்திடும்
இறந்து போகும் இக்கடம் இறந்த போது நீர்குடத்(து)
உறைந்து டைந்தி டக்குடம் உலர்ந்த வாற தொக்குமே. 7

கண்டநூல் தருந்தன் மாத்தி காய மோட தன்மமும்
உண்டு மீது கீழ்உலாவி உற்று நின்றி டப்பொருள்
கொண்ட தென்னில் அத்தமிவ் விரண்டு தன்மை கூடிடா
வண்டு புட்கள் போலெனின் வழங்கி டாக ணத்திலே. 8

நீடு பாவ புண்ணி யங்க ளால்நிரய வானகம்
கூடு வோர்கள் இன்று நின்று கூட்டு வோர்கள் இன்மையின்
ஒடு மாக ஊணத்தி றத்தின் உற்றவா றுரைத்தியேல்
வீடு மாக ஊணக்கு நாடும் வில்லி போல வேண்டுமே. 9

ஏண தொன்று புற்கலத்தின் எய்து மென்னின் நாசமே
காண லாகும் அக்கடம் கழிந்த தன்மை இல்லவை
பூண வேண்டும் மேலுறும் பொருத்த மின்மை யொன்றினின்
மாணவே அணுப்பொருள் நிகண்ட வாதி வைத்ததே. 10

ஆறு காரி யங்கள்மாற வேத வங்க ளாமெனின்
மாறி வாணி கஞ்செயா திருக்க வந்தி டாதனம்
ஈறி லாத வூழதென்னின் எங்கு முள்ள தூழதே
பேறு காரி யம்விடப் பிறப்ப தில்லை பேசிலே. 11

உடல்வ ருந்தல் மாதவங்கள் உறுதி யென்று ரைத்திடில்
படவ ருந்து நோயினோர்கள் படர்வர் பொன்னெ யில்எனுய்
திடம்வ ருந்த இன்பம்இச்சை செய்தல் செய்தியேல்
கெடஅரிந்தி டாய்உன் நாசி கேடில் இன்பம் உன்னியே. 12

பூர்வ கன்மம் அற்றிடப் புசித்த பின்பு பொன்னெயில்
நேர்வ தென்னின் அக்கன் மத்து நிச்சய மிலாமையில்
தீர்வ தின்மை தீரியின்வாயில் சேர்வ தின்மை தெண்கடல்
நீர்வ றந்த பின்புபூளை மீன ருந்த நின்றதே. 13

கூறு கூவல் மன்னும்அக் குடம் குறித்து நீள்கரை
ஏற லுற்ற தன்மை நீ ஒருத்த ரின்றி ஏறுதல்
வேறொ ருத்தன் அக்குடத்தை மீது நின்றெ டுக்கவே
ஏற லுற்ற தன்மையில் சிவன்தி றத்து நின்றிடே. 14

7. ஆசீவகன் மதம் - 2

என்உயி ரதற்குப் போல எவர்க்கும்ஒத் திருப்பன் என்று
தன்னுயிர் வருந்தத் தானும் தலையினைப் பறித்துப் பார்மேல்
மன்உயிர் எவற்றி னுக்கும் வருந்தவே அறங்கள் சொல்லும்
அன்னதோர் வாய்மை ஆசீ வகன்அம ணர்களிற் கூறும். 1

வரம்பிலா அறிவன் ஆதி வைத்தநூற் பொருள்கள் தாமும்
நிரம்பவே அணுக்கள் ஐந்து நிலம்புனல் தீகால் சீவன்
பரந்திவை நின்ற பான்மை பாரது கடினம் சீதம்
தரும்புனல் சுடும்தீ வாயுச் சலித்திடும் உயிர்போதத் தாம். 2

திருச்சிற்றம்பலம்

பார்புனல் பரக்கும் கீழ்மேல் படர்ந்திடும் தேயு வாயுச்
சேர்வது விலங்கின் உள்ளம் அவற்றொடும் சேரும் வேறு
சார்வது பெற்ற போது சார்ந்தஅப் பொருளின் தன்மை
நேர்வது மாகி நிற்கும் இதுபொருள் நிகழ்த்து மாறே. 3

உணர்தரா அணுக்கள் நான்கும் ஒன்றுகெட் டொன்ற தாகப
புணர்தரா ஒன்றில் புக்கொன் றாயினும் பொருந்தி வாழும்
அணைதரா புதிய வந்திங் கழிதரா பழைய வான
இணைதரா ஒன்றொன் றாகி மாறுதல் ஒன்றும் இன்றே. 4

கொண்டுமுன் விரித்தல் நீட்டல் குறுக்குதல் குவித்தல் ஊன்றல்,
உண்டுதின் றுலர்த்தல் மீட்டல் உடைத்திடல் ஒன்றும் ஒண்ணு,
விண்டுபின் புறம்பும் போகும் வேறுநின் றுள்ளு மேவும்,
பண்டுமின் றென்றும் எங்கும் பரந்தொரு தன்மைப் பாலே. 5

கண்ணினில் காண வொண்ணு சனித்தந்தக் கன்மத் தாலே
நண்ணிடும் உருக்க ளாகி நின்றபின் நரரோ காண்பார்
விண்ணினில் தேவர் காண்பர் ஓரணு மிக்க நான்காய்
எண்ணிய பொருள்க ளெல்லாம் இசைவதென் றியம்புமின்னே. 6

ஒன்றினை ஒருவி மூன்றங் குற்றிடா திரண்டு விட்டு
நின்றிடா திரண்டு கூடும் நெறிநிலம் நான்கு நீர்மூன்(று)
இன்றிரண் டழல்கா லொன்றாய் இசைந்திடும் பூமி யிவ்வா
றென்றுநீர் தீகா லாகி ஈண்டுவ தென்றி யம்பும். 7

வெண்மைநன் பொன்மை செம்மை நீல்கழி வெண்மை பச்சை
உண்மையிவ் வாறின் உள்ளும் கழிவெண்மை ஓங்கு வீட்டின்
வண்மைய தாகச் சேரும் மற்றவை உருவம் பற்றி
உண்மையவ் வொட்டுத்தீட்டுக் கலப்பினில் உணரும் என்றான். 8

பேறிழ விடையூ றின்பம் பிரிவிலா திருக்கை மற்றும்
வேறொரு நாட்டிற் சேறல் விளைந்திடு மூப்புச் சாதல்
கூறிய எட்டும் முன்னே கருவினுட் கொண்ட தாகும்
தேறிய ஊழிற் பட்டுச் செல்வதிவ் வுலகம் என்றான். 9

புண்ணிய பாவம் என்னும் இரண்டணுப் பொருந்த வைத்தே
எண்ணிய இவற்றி னேடும் ஏழென எங்க ளோடு
நண்ணிய ஒருவன் கூறும் ஞானமிவ் வாற தென்று
கண்ணிய கருத்தி னோர்கள் கதியினைக் காண்பர் என்றான். 10

திருச்சிற்றம்பலம்

ஆசீவகன் மத மறுதலை

வாராநெறி வீடானபின் மண்மேல் அவன் வந்து
தாராமையின் நூலானது தானேஉள தின்றும்
சேராமையில் அணுவானவை ஐந்தும்ஒரு தேயத்(து)
ஓராஞெரு காலத்தினில் ஒன்றுமுணர் வின்றும். 1

இருபான்மையர் இவர்மண்டலர் செம்போதகர் என்றே
வருபான்மையர் இவர்மண்டலர் மண்மேல்வரு நூலும்
தருபான்மையர் எனின்நீதல மதில்வாழ்பவர் தம்போல்
ஒருபான்மையின் உளராகுவர் உணராதுரை செய்தாய். 2

உயிரானவை உடல்தீண்டிடல் ஒட்டுக்கலப் பெய்தும்
பயில்வால்உணர் வெய்தும்மெனும் மொழியானவை பழுதாம்
துயிலார்தரு மவர்பாலகர் தொடரார்அறி வினைநீ
செயிரார்தரும் உரையேதரும் அதுவோஉன செயலே. 3

அணுவானவை கீழ்மேல்உள வானுல்அவ யவமும்
நணுகாவென லாமேவரின் நாசம்அவை யெய்தும்
அணுகாவெனின் இறைதொள்ளைகொள் ஆகம்முள வாகும்
துணிவாலிவை கலவாபல தொகையாம்வகை இலவாம். 4

மிகையாம்அணு உளவாகையின் அவையாம்மிக வென்னில்
தொகைநாலிடை அறலால்அவை தொகுமாறில வாகும்
பகையாகையின் மிசைதாழ்மையின் நிலையாவகை பண்ணும்
நகையாம்உரை கழியாயிரம் அவைதூணென நண்ணு. 5

கூடாஅணு அறியாமையின் வளிகூட்டுதல் கூறின்
நாடாவளி அணுவானவை நணுகச்செயும் அவரை
நீடாவினை தன்னுலெனின் நினைவின்றது இன்றும்
தேடாயொரு வனைநீஇவை செய்வானுள னென்றே. 6

8. பட்டாசாரியன் மதம் -1

வேதமே யோதி நாதன் இலையென்று விண்ணில் ஏறச்
சேதமாங் கன்மஞ் செய்யச் சைமினி செப்பும் நூலின்
நீதியே கொண்டு பட்டா சாரியன் நிகழ்த்தும் நீர்மை
ஓதநீர் ஞாலத் துள்ளே உள்ளவா றுரைக்க லுற்றும். 1

உற்றிடுங் காம மாதி குணங்கள்தாம் உயிர்கட் குண்டாம்
மற்றிவை தருமே யாகின் மறைமொழி வாய்மை யின்றும்
கற்றநூல் அளவாற் போதம் கலப்பது கல்வி யின்றேல்
பெற்றிடும் மழவு மூங்கை என்னவே பேச லாமே. 2

திருச்சிற்றம்பலம்

உண்டொரு கடவுள் வேதம் உரைத்திட உயிரின் தன்மை
கொண்டவன் அல்லன் என்றுங் கூறிடின் உருவங் கூடில்
பண்டைய உயிரே யாகும படித்தநூ லளவு ஞானம்
கண்டிடும் உருவ மின்றேல் கருதுவ தில்லை என்றான். 3

தேவரும் முனிவர் தாமும் சித்தரும் நரரும் மற்றும்
யாவரும் உரைப்பர் வேதம் இயம்பினர் இன்ன ரென்னப்
போவதன் றென்று நாளும் பரம்பரை புகல்வ தாகும்
கூவல்நி ரென்னில் கொள்ளேம் மறுமையைக் குறித்த லாலே. 4

உன்னிய அங்க மாறும் மூன்றுப வேதந் தானும்
தன்னுளே அடக்கி வேறு தங்கிடா வகையைச் சார்ந்து
முன்னமோர் தோற்ற மின்றி முடிவின்றி நித்த மாகி
மன்னியோர் இயல்பே யாகி வழங்கிடும் மறைய தென்றான். 5

செய்தியும் நெறியும் மேவுந் தேவரும் பொருளும் எல்லாம்
எய்திய பன்மை யாலே ஓரியல் பியம்பா தாகும்
ஐயமில் காலம் மூன்றும் அறிந்தபின் நெஞ்ச கத்தாய்
மெய்யதாய் வந்து தோன்றி விளங்கிடும் வேத நூலே. 6

தப்பிலா வாகுந் தாது பிரத்தியந் தன்னி னோடே
ஒப்பிலா தாம்பி ராதி பதிகமாம் உறுப்புங் கொண்டு
செப்புமாம் வேதம் சொன்ன விதிப்படி செய்யச் சேம
வைப்பதாம் வீடு பாசம் மருவலாம் ஒருவ லாமே. 7

போக்கொடு வரவு காலம் ஒன்றினில் புணர்வ தின்றி
ஆக்கவே ரொருவ ரின்றி அநாதியாய் அணுக்க ளாகி
நீக்கிடா வினையிற் கூடி நிலமுத லாக நீடி
ஊக்கமா ருலகம் என்றும் உள்ளதென் றுரைக்க லாமே. 8

நித்தமாய் எங்கு முண்டாய் நீடுயிர் அறிவு தானுப்
புத்திதான் ஆதி யாய கருவியின் புறத்த தாகிச்
சுத்தமாய் அருவ மாகித் தொல்லைவல் வினையின் தன்மைக்(கு)
ஒத்ததோர் உருவம் பற்றிப் புலன்வழி உணர்ந்து நிற்கும். 9

செயல்தரு வினைகள் மாய்ந்து சிந்தையிற் சேர்ந்து நின்று
பயனொடு பலியா நிற்கும் பலாலமும் தழையு மெல்லாம்
வயல்தனின் மருவி நாசம் வந்தபின் பலத்தை வந்திங்(கு)
இயல்பொடுந் தந்தாற் போல என்றும்பின் இயம்பு கின்றான். 10

நீதியா நித்த கன்மம் நிகழ்த்திடச் சுபத்தை நீங்கார்
தீதிலா இச்சா கன்மஞ் செந்தழல் ஓம்பிச் செய்ய

திருச்சிற்றம்பலம்

ஏதுதான் வேண்டிற் றெல்லாம் எய்தலாஞ் சோம யாகம்
ஆதிதான் ஆசை வீசி அமைத்திட வீட தாமே. 11

கருதிய கன்மம் ஞானம் இரண்டுங்கா லாகக் கொண்டு
மருவிட லாகும் வீடு மதிதனை மதித்துச் செய்தி
ஒருவிடில் பதித ஞகும் பதிதனைக் கதியின் உய்க்கத்
தருவதோர் நெறிதான் இல்லை என்னவுஞ் சாற்றி ஞனே. 12

பசுப்படுத்(து) யாகம் பண்ணப் புண்ணியம் ஆவ தென்று
வசிப்பினுன் மறைகள் சொன்ன வழக்கினுல் வாய்மை யாக
நசிப்பிலா மந்தி ரங்கள் நவிற்றலின் இன்ப மாகும்
பசிப்புளான் ஒருவன் உண்ணப் பசியது தீர்ந்த பண்பே. 13

பட்டாசாரியன் மத மறுதலை

வேதஞ் சுயம்புவென வேதந்த வாய்மொழியில் வேறும் பிரமாண முளதேல்,
நீதந்து காணிங்கு மாதுங்க பாரதமும் நேர்கண்ட தாகும் அதுபோல்,
ஓதுஞ் சொலாய்வருத லானுங்க டாதிபட மோவந்தி டாஒருவரா,
லேதந்த தாமறைக ளாய்வந்த வாய்மொழியும் வேறிந்து சேக ரனதே. 1

உரைதந்தி டானஒருவன் எனிலிந்த வானினிடை ஒலி கொண்டு மேவி உளதாம்,
புரைதந்த வாம்மறைகள் அபிவெஞ்ச மாயொளிர்கை பொருள்தந்த தீப மதுவேல்,
வரை தந்த தாலிவ்வுரை கபிலன்சொ லாகுமது மறைகின்ற வாறும் வரவும்,
விரைவின்சொ லாயிதனை யெதுகொண்டு மேவுவது விடைகொண்ட தாலுன் உரையே.2

உருவின்க ணேமருவி வரில்இன்று தேரைஉரை உளதுங்கள் நூலின் மறையும்,
தருகின்ற நாதரவர் இவரென்று நாமமது தரவந்தி டாமை யதனுல்,
வருமென்று நேடியெனில் வளர்கின்ற தீவதனில் வருகின்ற வாடை பலவால்,
ஒருதந்து வாயனவன் இவனென்ற போதிலிவை உளதென்று நீடிய வையே. 3

மறைநின்று நாலுதிசை யவர்ஒன்ற தாகவரும் உரை தந்த வாய்மை அதனுல்,
நிறைவென்று நீடுமெனில் வனையுங்க டாதிபல சொலவொன்றி நீடி யுளதாம்,
குறைவின்றி நாடும் மொழி அவைசென்று கூடுவதொர் குணமுண்ட தாகு மலர்தான்,
உறைகின்ற மாலைதனில் உளதென்ற தாகுமெனின் உணர்வின்ற தாழி ஒலியே.4

உடல்நின்று நாமுணரு மதுகண்ட வாருெருவன் உலகங்க ளேஉ ருவமாய்,
இடைநின்று மாமறைக ளவைஅன்று வாய்மொழிய இவைகொண்டு லோக நெறியின்,
கடனின்று வாழுமது கருதும்பின் ஆணைவழி கருமஞ்செய் காசினி யுளோர்,
திடமென்று சீர்அரச னுரைதங்கும் ஓலைதிரு முகமென்று சூடு செயலே. 5

முடிவின்றி வேதியர்கள் முதல்வந்த மூவர்களும் மொழி யும்சொல் ஆரிய மெனில்,
கடிவின்றி யேகணித ரவர்கண்ட வாறதுவென் வடகண்ட சாதி கடியா(து),

திருச்சிற்றம்பலம்

ஓடிவின்றி ஓதுவதென் உரைதங்கு வேதமொழி உளதென்று கூறு மவர்தாம்,
அடியின்று தானெனும தறிவின்றி ஈனுமவர் இலையென்ற ஆத ரவதே. 6

அறிகின்ற பான்மைஅவ யவநின்ற தாகில்அணு அழியுங்க டாதி யெனவே,
செறிகின்ற வாறதிலை யெனின்வந்து சேருமது திடமன்றுகூட வொருவன்,
குறிகொண்டு காரின் முளை வருகின்ற பீசமவை குலையொன்றி வேனி லழியும்,
உறுகின்ற காலமவை உடனின்று போயழியும் உலகென்று நீடி யிலதே. 7

நிறைவெங்கு மாகில்உயிர் நெறிநின்று போய்வருதல் அணைவின்ற தாம் உடலிலே,
குறைவின்றெ லாமும்உள குடகந்த மாகில் அவை விடநின்ற வாறு குறியா,
உறைகின்ற மாதவர்கள் உடனின்று போய்வறிதொர் உடல்கொண்டு மீள்வ துணராய்,
மறைதந்த வாய்மைதனில் நிறைவின்றி யேயுலகின் மலைகின்ற தாலுன் உரையே.8

அழிகின்ற தால்வினைகள் ஆகின்ற வாறெனெரு வது மங்கி யான பரிசேல்,
ஒழிவின்றி ஓதநமும் அறவுண்ண நாம் வினைகள் உறுகின்ற வாறதெனலாம்,
கழிகின்ற தாலறிவு வினைதந்தி டாவினைஞர் கருமங்கள் நாடி யுறுவோர்,
பழுதின்றி யேஉதவும் அதுபண்ப தாகஅருள் பரமன்க ணுகும் வினையே. 9

கருமங்கள் ஞானமது வுடன்நின்ற லால்மருவு கதிதங்க லாகு மெனின்நீ,
தரும் அங்க ராகமுதல் அவைதங்க மேலறிவு தவிரும்பின் வீடும் அணையா,
பொருள் நின்று தேடிவரு பயன் உண்டு போகவினை புரிகின்ற வாற தெனவே,
திருநின்ற போகம் வளர் அவிசென்று மேவியது செலவுண்டு சூழ்வ செயலே. 10

9. பிரபாகரன் மதம் - 2

அருந்தவனும் சைமினிபண் டாரணநூல் ஆய்ந்தானுய்த்
திருந்தும்உல கினிற்கொண்டு செப்பியநூல் திறமதனைப்
பரிந்துபிர பாகரன்பட் டாசானில் வேருகிப்
புரிந்துரைசெய் நெறியதனைப் புவனிமிசைப் புகன்றிடுவாம். 1

அருஞ்செயலின் அபாவத்தே அபூர்வமெனும் அது தோன்றித்,
தருஞ்செயல்நின் றழியில்பின் பலிப்பிப்ப தாகுமது,
வருஞ்செயல்ஒன் றின்றியே மண்சிலைபோ லாமுத்தித்,
தருஞ்செயலீ தெனவுணர்ந்து தாரணிமேல் அவன் சாற்றும். 2

பிரபாகரன் மத மறுதலை

வேறுபலந் தருவதுதான் வினையென்று வேதங்கள்
கூறவோர் அபூர்வந்தான் கொடுக்குமெனக் கொண்டவுரை
மாறுதரு மறையோடு முன்பின்றி வந்ததால்
தேறியவிண் பூமுடிமேற் சேர்ந்துமணந் திகழ்ந்ததுவாம். 1

ஆநந்தம் கதியென்ன அறிவழிகை வீடென்கை
ஊனம்பின் உணர்விழந்தோர்க் குளதாகும் உயர்முத்தி
தானிங்குச் சிவப்பொழியத் தழல்நிற்கு மாறில்லை
ஞானங்கெட் டுயிர்நிற்கும் எனுமுரைதான் நண்ணுதால். 2

5. சத்தப் பிரமவாதி மதம் - 1

உரையா னதுமை யலினல் உலகாம்
புரையோ ருணரும் பொருள்பொய் யிதனை
விரையா துணரும் அதுவீ டெனவே
வரையா துரைவா திவகுத் தனனே. 1

பரிணும விவர்த்த னமாய மதிற்
தருமாம் உலகுள் ளதுசத் தமதே
பொருளா வதுசொல் நலம்அல் லவெனில்
மருவா துபொருட் டிறமற் றிலையே. 2

பூமா வெனவே உரையும் பொருளும்
ஆமாம் பொருளொன் றில்அணைந் திலதால்
நாம்ஆ தரவெய் துசொல்நன் கருவாய்த்
தாமாம் பொருள்நெற் பொரிதா னெனவே. 3

சொல்வந் தெழலும் பொருள்தோன் றுதலால்
சொல்லே பொருளென் றுதுணிந் திடுநீ
சொல்லும் பொருளும் உடனின் றதெனின்
சொல்லும் பொருளின் றுசொல்நின் றதுவே. 4

சத்தப் பிரமவாதி மத மறுதலை

உரையா னதுமை யலினல் உலகேல்
உரையாய் ஒருமை யலும்உள் ளதென
வரையா துணரும் அதுவண் கதியேல்
வரையா மறையோ டுமலைந் தனையே. 1

அருவம் உரையா தலின்அவ் வுருவாய்
மருவும் பரிணு மம்மறந் திடுமாம்
பருகுந் ததியா னதுபா லதெனில்
உருவம் அதுவாய் அழியும் உரையே. 2

ஆயம் உடன்அந் தவிவர்த் தநமும்
மாயவ் வுளதென் றுசொல்எவ் விடமு
மாய்நின் றமையின் உரையின் நலமும்
ஆயும் பொருளுக் கறிநா மமதே. 3

உரைபோல் பொருளுக் குருவின் மையினவ்
உரையே பொருளென் றஊஇன் றரியென்
உரையே கவிமா லவனுக் குளதாம்
உரையாய் கவியா கவொர்மா லிஊயே. 4

நெல்லில் பொரியா வதுநீ டழலில்
சொல்லில் பொருளொன் ஞெடுதொக் கிடலால்
கல்வித் திறமாம் உரைகாட் சியினுல்
மல்லற் பொருள்சா லவளந் தருமே. 5

முன்கண் டபொருள் பெயரா தலினுல்
பின்கண் டபிழம் புணரும் பெயரால்
நன்கண் டபொருட் கொருநா சமதின்(று)
என்கண் டஊகா ரணமின் றழிவே. 6

பொருள்இந் திரியம் உணர்வோ டுபுமான்
இருளின் றியிடும் ஒளிஇத் தஊயும்
மருவும் பொழுதில் வருஞா னமதின்
ஒருவும் பெயர்அர்த் தம்உதித் திடுமே. 7

அர்த்தம் தெளிதற் கொளியா னதுபோல்
சத்தம் பொருள்தான் அறிதற் குளதாம்
நித்தம் அதுவன் றுரைநின் றழியும்
சித்தன் ஒருவன் உரைசெய் தனனே. 8

மாயாவாதி மதம் - 2

நானே பிரமம் என்றுரைத்து ஞாலம் பேய்த்தே ரெனஎண்ணி,
ஊனே புகுந்து நின்றுயிர்கட் குபதே சங்கள் உரைத்துவரும்,
மாஞ மதிகே டனுமாய மாயா வாதி பேயாகித்,
தானே உரைக்கும் அந்நூலின் உண்மை தன்ஊச் சாற்றுவாம். 1

அறிவாய் அகில காரணமாய் அநந்தா நந்த மாய்அரு வாய்ச்,
செறிவாய் எங்கும் நித்தமாய்த் திகழ்ந்த சத்தாய்ச் சுத்தமாய்க்,
குறிதான் குணங்க ளொன்றின்றிக் கூறும் வேதம் தனக்களவாய்ப்,
பிறியா அநுபூ திகந்தனக்காய் நின்ற தந்தப் பிரமந்தான். 2

ஒன்ரும் இரவி பலபாண்டத்(து) உண்டாம் உதகத் தங்கங்கே,
நின்ருற் போல உடல்தோறும் நிகழ்ந்து நிற்கும் பொருள் மேற்கண்,
சென்ருற் போலப் புலன்களுக்குஞ் சிந்தை தனக்குந் தெரிவரிதாம்,
என்ருல் காட்சி முதலாய இருமூன் றளவைக் கெட்டாதால். 3

திருச்சிற்றம்பலம்

இருளில் பழுதை அரவெனவே இசைந்து நிற்கும் இருங்கதிர்கள்,
அருளப் பழுதை மெய்யாகி அரவும் பொய்யாம் அதுவேபோல்,
மருளில் சகமுஞ சத்தாகி மருவித் தோன்றும் மாசில்லாத்
தெருளில் சித்தே சத்தாகும் பித்தாம் சகத்தின் செயலெல்லாம். 4

உலகந் தானும் நிருவசனத் துண்டாம் இன்றேல் உதியாது
நிலவி யுண்டேல் அழியாது நிற்ப தாகும் மித்தையால்
இலகு சுத்தி கனல்சேர இன்ரும் வெள்ளி நின்றதாம்
குலவு சகமும் விவகாரம் பரமார்த் தத்தில் கொள்ளாதால். 5

தாங்கும் உலகுக் குபாதானம் சத்தாம் சிலம்பி நூல்தன்பால்,
வாங்கி வைத்துக் காப்பதுபோல் வையமெல்லாம் தன்பக்கல்,
ஓங்க உதிப்பித் துளதாக்கி நிறுத்தி ஒடுக்கத் திலதாக்கும்,
ஆங்கு வந்த வாறதனுல் சத்தாம் சகத்தின் அமைவெல்லாம். 6

மன்னும் பிரமந் தனின்வாஞய் வானின் வளியாய் அந்தவளி,
தன்னின் அழலாய் அழலின்பால் சலமாய்ச் சலத்தில் தாரணியாய்ச்,
சொன்ன இதனின் மருந்தாகித் தோற்றும் மருந்தில் அன்னமாய்,
அன்ன மதனில் துவக்காதி ஆறு தாது ஆயினவால். 7

ஆறு தாதுக் களும்கூடி வந்த கோசம் அன்னமயம்
மாறில் பிராண கோசமயம் மன்னு மதனில் மனேமயந்தான்
வேறு வரும்விஞ் ஞானமயம் மேவும் அதனின் அதுதன்னில்
கூறி வரும்ஆ நந்தமயம் கோச மயம்பின் கூடியதால். 8

கோச உருவில் பிரமந்தான் கூடித் தோன்றும் நீடுமொரு
காசம் மருவும் கடற்தோறும் நின்ருற் போலக் கதிரவன்தன்
வீசு கிரணம் உருவின்கண் வெளிப்பட்ட டிடுவ ததிற்பற்றும்
பாசம் அதனுக் கின்ருகும் என்ருற் பரத்திற் பற்றுண்டோ. 9

அலகில் மணிக ளவைகோவை அடைந்த பொழுதின் அங்கங்கே,
நிலவும் ஒருநூல் பலநிறமாய் நின்ருற் போல நீடுருவம்,
பலவும் மருவு பேதத்தால் பன்மை யாகும் பிரமந்தான்,
குலவு போக போக்கியங்கள் கொள்ளும் போன்று கொள்ளாதால். 10

போற்றும் செயலால் பலநாமம் புனைந்து போக போக்கியத்தில்,
தோற்றும் நனவு கனவினுடன் சுழுத்தி துரியம் எய்தும் இதற்(கு),
ஏற்ற கரணம் நிரைநிரையே ஈரேழ் நாலொன் றெல்லாமும்,
மாற்றி நிற்கும் கேடின்றி வந்த போகம் மாய்ந்திடல். 11

கருவி யெல்லாம் நானெனவே கருதல் பந்தம் அக்கருத்தை
ஒருவ முத்தி யுண்டாகும் உள்ளம் வித்தாம் செய்தியினுல்
மருவும் மாயா காரியங்கள் அவித்தை மாய வேமாயை
பிரியும் பிரிய ஞானமது பிறக்கும் பிறவா பேதமே. 12

ஆன கன்ம அநுட்டயங்கள் அந்தக் கரண சுத்திதரும்
ஊன மின்றி அச்சுத்தி ஞான மதனை உண்டாக்கும்
ஞான மதுதான் பிரமத்தை நானென் றுணர்த்தும் நான்பிறந்தால்
வான மதிநீர்த் துளக்கமெனக் காணுந் தன்னை மாயையிலே. 13

தானே தாஞய் அநுபோகம் தன்னில் தன்னை அநுபவித்திட்(டு)
ஊனே உயிரே உணர்வேயென் றென்று மின்றி உரையிறந்து
வானே முதலாம் பூதங்கள் மாய மாயா தேமன்னி
நானே பிரமம் எனத்தெளியும் ஞானம் பிரம ஞானமே. 14

சாற்றும் மறைதத் துவமசிமா வாக்கி யங்கள் தமையுணர்ந்தால்
போற்றி அதுநீ யாஞயென் றறைவ தல்லால் பொருளின்றே
தேற்று மிதனைத் தெளியாதாச் தெளியப் பஞ்ச ஆதநமேல்
ஏற்ற இயம நியமாதி யோகம் இருநான் கியற்றுவரால். 15

மாயாவாதி மத மறுதலை

ஏகம் நானென இயம்பி இப்படி அறிந்து முத்தியடை மின்னென,
மோக மானஉரை சோகம் இன்பொடு முடிந்தி டாதுமல டாகிய,
காக மானது கருங்க லின்தசை பறித் தழுங்கரிய குஞ்சியின்,
தாக மார்பசி தவிர்க்க வாயிடை கொடுத்ததென் றுரைசெய் தன்மையே. 1

நீடு வேதம்அள வாக ஏகமெனும் நீதி தான்நிகழ்வ தாகுமேல்,
நாடி ஞாதிருவும் ஞான ஞேயமுடன் நாளு நான்மறையும் ஓதலால்,
ஓடு மாகுமுன(து) ஏகம் ஓதுமிவை ஊன மாகிஉரை மாறுகோள்,
கூடு மாகும்அநு பூதி தானுமது கூடிடாதறிவி லாமையால். 2

நீதியால் ஒளிகொள் பானு வான(து)அக னீரி லேநிகழு மாறுபோல்,
ஆதி தானுருவ மாய காயமதன் மேவி ஆவதிலை யாகுமாம்,
தீதி லாஅருவ மாதலால் நிழல்கள் சேர வேறிடமி லாமையால்,
ஓதில் ஓர்அகலின் நீரி லேயொருவர் காணலால் இலதுன் ஏகமே. 3

வேறு வாயில்புல ஞேடு மேல்மனமும் மேவி டாதுபிர மாணமும்,
கூறி டாதறிவு தானெ ஞஉணர்தல் கோடு நீ முயலின் நாடிஞய்,
ஈறி லாதபரம் ஏக மேயென இயம்பு நீ இசையும் ஞானமும்,
பேற தாவதிலை பேத மானஇது பேண வேயுளது பேசிலே. 4

திருச்சிற்றம்பலம்

இலகு சோதிமணி எனவும் ஏகமெனின் இதனில் ஏக மது விலகினாய்,
குலவு காசுமொளி அதுவும் நீடிவளர் குணமும் நாடுவதொர் குணியுமாம்,
பலவு மானகுண மொருவும் ஏகமது எனவும் நீபகரில் நிகரிலா,
உலக மானதனை உதவு மாறதிலை உணர்வு தானுமிலை உணரிலே. 5

புற்றி னோர்பழுதை தொக்க போதுமயிர் புளகமாக அரவிரவிலே,
உற்ற தாம்அதனை யொக்க வேஉலகு திக்கு மாறுமொரு சத்திலே,
பெற்ற தாகுமெனின் அப்பி ராந்தியுடை யோரும் அப்பிரம பேதமாய்,
நிற்பர் நீபகரின் முற்றும் ஐயநிலை பெற்றும் இன்பமதி லாததாம். 6

ஓதி யேஉலக மதனை நீயும்நிரு வசன மாகஉரை செய்வதென்,
பேதை யோய்உளதும் இலதும் அல்லபொருள் பேசு வாரும்உள ரோசொலாய்,
ஆதி யேயுளது வருத லால்இலதி லாவ தின்மைய தழிந்துபோம்,
நீதி யால்உளதி லாமை நேர்வ தெனின் நேர்மை யாகியது நின்றதே.7

வேற தாகியது போல்இ ருந்தமையில் வெள்ளி சுத்தி யெனில் ஐயமே,
கூற லாம்ஒருப ரத்தொ டொத்தபொருள் கொண்டு விண்டநிலை கண்டனம்,
மாறி டாதுநிலம் நீர தாகி அனல் வாயு வாகிஅவை மாறியும்,
சேறி லாதுவிவ கார மன்றுபர மார்த்த மாயது செறிந்ததே. 8

மாய நூலதுசி லம்பி வாயினிடை வந்த வாறதனை மானவே,
ஆய தேஉலக மான தும்பிரம மதனி லேயெனில் அடங்கிநின்(று),
ஏயு மாகுமொரு சித்து மத்துடன்நி லாத தென்றுபின் இயம்பின்நீ,
பேய னேகடம்மி ருத்தில் வந்தது பிறப்ப தாவதிலை பேசிலே. 9

வேற தாகும்உரு வத்தி லேபரம்வெ ளிப்ப டும்மென விளம்பில்நீ,
ஊறி லாஉருஅ சத்தி லேபிரமம் உண்டு தானுணர்வி லாததென்,
மாறி வாயுவும ஞதி யானவையும் வந்தி டாமையினி லின்றெனில்,
ஈறு தானுடைய தாய தோபிரம மென்கொ லோஇவை இறப்பதே. 10

பற்ற தின்றிஉடல் நின்றி டும்பரமெ னப்ப கர்ந்தனைப ரிந்துடன்,
உற்று டம்புநரை திரைகள் நோய்சிறை உறுப்ப ழிந்திவையு முள்ளபின்,
குற்ற மென்றிதனை விட்டி டாதுவிட வென்ற லும்குலைவு கொண்டிடும்,
பெற்றி கண்டுமொரு பற்ற றும்பரிசு பேச வேஉளது ஞசையே. 11

சோதி மாமணிகள் ஊடு போனதொரு நூலு மானநிலை சொல்லிடும்,
நீதி யால்மணிகள் பேத மாகிஒரு நூலின் நின்றமைநி கழ்த்தினாய்,
ஆதி தானொருவ னாகி யேபல அநந்த யோனில் அமர்ந்தவன்,
பேதி யாதநிலை பேசினாய் உலகு பேத மேஇலத பேதமே. 12

ஒத்து நின்றுடலின் இன்ப துன்பமவை உற்றும் உற்றிடுவ தின்றெனும்,
பித்த உன்னுரையின் உற்ற தேயிலது பெற்ற தின்றிலது பெற்றதேல்,

துய்த்த லென்னுறுதல் சீவ பாவமது சொல்லி ஞென்றினுந்தோய் விலாமைநீ,
வைத்து நித்தமன வாக்கி றந்தபர மென்ன மானமிலை இன்னமே. 13

எங்கும் நின்றிடில் அவத்தை யின்றிடும் இசைந்தி டுங்கரண மென்னில்நீ,
அங்கு நின்றபரம் எங்கொ ளித்ததது நின்ற தேல்அவை அடங்கிடா,
இங்கு நின்றதொரு காந்த மானகல் இரும்பு சந்நிதிஇ யங்குநேர்,
தங்கி நின்றதெனில் நீங்கி மீளும்வகை தங்கி டாதுனுரை தப்பதே. 14

இருள்பொ திந்ததொரு பரிதி இவ்வுலகில் இசையில் இன்றுடலம் நானெனும்,
மருள்பொ திந்ததொரு பிரம மிங்குளது மருவி நின்றஉரு ஒருவியே,
தெருள்பொ திந்து பரம்நானெ னும்தெளிவு சென்ற போதுகதி யென்றிடும்,
பொருள்பொ திந்ததெனில் அமல னுக்குமலம் வருத லாலுளது புன்மையே. 15

சுத்த மானதுப ரத்தி னுக்கணவ தின்று சுத்தமத நாதிநீ,
வைத்த மாயமுறு சித்(து) அசுத்தமுற மற்ற தற்கு மலம் வைத்தனை,
ஒத்த சீவன்மல கன்ம மாயையுறு கின்ற காரணமு ணர்ந்திடாய்,
பித்த னேவிறகி னிற்பி றப்பதெரி யென்னில்வே றுபொருள் பெற்றதே.16

உன்னின் நீயும் அநுபோக மென்றபொழு துற்றி டும் துவிதம் மற்றதிங்(கு),
என்னில் இல்லையெனில் இல்லை நீயுமறி வின்மை கண்டஇடம் உண்மையேல்,
மன்னு மோருணர்வு வந்தி டும்முணர்வெ லாமு மாயையெனில் மாயையே,
சொன்ன தோர்பிரம மாயி டும்பிரமம் மாயை யாய்அறிவு சோருமே. 17

ஆர ணங்கள் தரு தத்து வம்அசிப தங்க ளின்பொருள் அறிந்திடாய்,
கார ணம்அதுவும் நீயும் என்றிருமை கண்டு வேறதின்மை கருதிடாய்,
நார ணன்பிரம ஞலும் நாடரிய நாய கன்கழல்கள் நண்ணிநீ,
ஏர ணைந்துபொலி சாத நங்கள் கொடு யோக ஞானமும் இயற்றிடே. 18

6. பாற்கரியன் மதம்

மன்னு மறையின் முடிவென்று மாயா வாதி உடன்மலைந்து
பின்ன மாகிப் பிரமத்தைப் பேதா பேதம் சாதித்துப்
பன்னு மொருநூல் அதுவாகப் பாரின் மீது பாற்கரியன்
சொன்னஇதனை இந்நூலின் அகத்தே தோன்றச் சொல்லுவாம். 1

சித்தே உலகாய்ப் பரிணமித்துச் சீவனுகித் திகழ்ந்த மையால்,
சத்தே யெல்லாம் முத்தியினைச் சாரக் கண்ட ஞானங்கள்,
வைத்தே மொழியும் மாமறைகள் சொன்ன மரபே வந்தக்கால்,
ஒத்தே கெட்டுப் பிரமத்தோ டொன்ருய்ப் போமென் றுரைத்தனனே.2

திருச்சிற்றம்பலம்

பாற்கரியன் மத மறுதலை

இயம்பு கின்றதுல காயி டாதுசட மின்றி நின்றுசட மாகியே,
முயங்கு கின்றமையில் இலவணத்திரத முழுதுமே கனதை முயல்கைபோல்,
பயந்த தென்னில்அறி யப்ப டும்பொருளும் அறிவு மென்றுபல வாகுமோ,
தியங்கு கின்ற தெனு ரைத்தி டாய்கடின மாதி யாகிவரு சித்தனே. 1

உன்னு கின்றபிர மத்தி லேசிறிதிவ் வுலக மானதென ஓதின்நீ,
மன்னு கின்றசில கால மோடழியும் அழிய வந்துதவு மாயையால்,
தன்னி லொன்றுமெனில் வருத லோடிறுதி தருத லால்அதுச டத்ததாம்,
உன்னெ டச்சகமும் உண்மை யன்றுசட மென்ன வேஉறுதி மன்னுமே. 2

வித்தெ முந்துமர மாய்வி ளைந்தமை விளம்பி னுய் உவமை வேறுநீ,
நித்த மென்றவுரை பொய்த்து நீடுசட மாய்எ ழுந்தழியும் நின்பரம்,
ஒத்தெ ழும்பொழுது வித்தி னுக்கவனி யுண்டு தாரகமு னக்கெனு,
பித்த னென்றுல குரைத்தி டும்பிரம மாயி னுய்இவைபி தற்றிலே. 3

சூட கம்கடகம் மோதிரம் சவடி தொடரொ டாரம்முடி தோடுநாண்,
ஆட கந்தருவ தாகும் அப்படிய னைத்து மப்பிரம மாகுமேல்,
நீடும் அப்பணிகள் செய்து ளோர்அவைபு னைந்து ளோர்களை நிகழ்த்திடும்,
நாடி டும்சகமி யற்று வோர் கொடு நடத்து வோர்உளர்ந விற்றிலே. 4

அறிவி னேடுசெயல் மாறில் வீடதனை அணுகொ ணுதவைஇ ரண்டினுல்,
உறுதி யானபிர மத்தி னேடழிய ஒன்ற லாமென உரைத்திகாண்,
இறுதி யேல்அதனெ டிசைவ தின்றிசைவ துள்ள தாயிடின்அவ் வின்பமே,
பெறுதி நீஉடலொ டுயிர்க ளாய்அறிவு பிரியு மாறுசெயல் பெறுவதென். 5

7. நிரீசுரசாங்கியன் மதம்

மூலம் புரியட் டகம்விகிர்தி யாகி மூன்ருய்ப் பிரகிருதி
தூல சூக்கம் பரமாயச் சுத்த புருடன் சந்நிதியில்
பாலன் சேட்டை புரிந்துலகம் யோனி பலவாய்ப் பரந்தொடுங்கும்
சால வென்று நிரீசுவர சாங்கி யன்ருன் சாற்றிடுமே. 1

நிரீசுரசாங்கியன் மத மறுதலை

சுத்தன் அறிவன் புருடனெனில் சூழா தாகும் பிரகிருதி
பெத்தம் நீங்கி னுலும்பின் பெத்த னுவன் பேரறிவால்
கத்த மேவும் பிரகிருதி கண்டு கழிக்க மாட்டானேல்
முத்த னுகான் சுத்தனுக்கு மூலப் பிரகி ருதியிலையாம். 1

புருடன் பிரகி ருதிபெற்ருல் போதம் சிறிதங் குண்டாகிக்,
குருடன் முதுகின் முடவனிருந் தூர்ந்தாற் போலப் பிரகிருதி,
இருட னிடத்தே இருந்தியங்கும் கன்மால் இறையன் றிரண்டிஜனயும்,
மருட னுருவாய்ச் சேட்டிப்பித் தறியும் அமலன் அரனேயாம். 2

அறியான் புருடன் பிரகிருதி அசேத நம்கா ரியத்தி னுக்குக்,
குறியாய் நாதன் உளனென்று கூறு முத்தி விவேகமெனில்,
செறிவாம் தஜளபோ காதறியில் சேர்த்தோன் வேண்டும் செயலிற்போம்,
நெறியால் பணிசெய் துடற்பாசம் நீக்கிக் கொள்நீ நின்மலனுல். 3

8. பாஞ்சராத்திரி மதம்

ஆதியாய் அருவ மாகி அகண்டபூ ரணமாய் ஞானச்
சோதியாய் நின்ற மாயன் சுவேச்சையால் உருவு கொண்டு
நீதியார் கருணே யாலே நீள்கடல் துயின்று நூலும்
ஓதினு னென்று பாஞ்ச ராத்திரி உரைப்ப னுற்றே. 1

உந்தியில் அயனை ஈன்றும் அவனைக்கொண் டுலகுண் டாக்கி
அந்தநல் லுலக ழிக்க அரனையும் ஆக்கு வித்துத்
தந்திடுஞ் சகத்தி னுக்குத் திதிகர்த்தா தானே யாகி
வந்திடும் தோற்றம் ஈறும் நிலைமையும் பண்ணும் மாயன். 2

மீன்ஆமை கேழல் நார சிங்கம்வா மனனுய் வென்றி
ஆனுத இராமர் மூவர் ஆயனுய் அளித்தான் கற்கி
தானுயும் வருவன் இன்ன மென்றவன் சாற்றித் தேவர்
கோனுயும் நிற்ப னென்று கூறுவன் குறிப்பி னேடே. 3

ஏழ்கடல் செலுவில் ஏற்றும் இருங்கிரி முதுகில் ஏற்றும்
தாழ்தலம் முழுதுங் கண்டும் தபநியன் உடல்பி ளந்தும்
வாழுல களந்தும் மன்னுய் மன்னர்க்கு மன்ன ராயும்
பாழ்பட உழறிப் பாரும் நோக்கும்பின் பரியு மாயே. 4

பொய்கைவாய் முதலை வாயில் போதகம் மாட்டா(து)
ஐயனே நாதா ஆதி மூலமே என்ற ழைப்ப
உய்யயாம் பணிமால் ஓல ஓலவென் ருேடிச் சென்று
வெய்யவாய் முதலை வீட்டிக் கரிக்கும்வீ டருளி ஞனே. 5

அலைகடல் கடைந்தும் வானேர்க் கமுதினை அளித்துந் தீய
கொலைபுரி அசுரர் தம்மைக் கொன்றுல கங்கள் காத்தும்
கலைமலி பொருளன் பர்க்குக் கருணையால் உரைத்தும் மிக்க
தலைமையில் நிற்பன் மாய னென்றும்பின் சாற்றி ஞனே. 6

திருச்சிற்றம்பலம்

மாயையாய் உயிராய் மாயா காரிய மாகி மன்னி
மாயையாற் பந்தஞ் செய்து வாங்கிடும் அவனு லன்றி
மாயைபோ காதென் றெண்ணி மாயனை வணங்கப் பின்னை
மாயைபோம் போனல் மாயன் வைகுண்டம் வைப்பனன்றே. 7

பாஞ்சராத்திரி மத மறுதலை

ஆதிதா னுகில் ஆதிக்(கு) அந்தமுண் டாகும் அந்தக்
கோதிலான் இறைவ னென்று கூறிடும் வேதம் ஞானச்
சோதியாய் நின்ரு னுகில் தோய்ந்திடான் மாயை ஞானத்
தீதிலா உருவ மென்னில் சேர்ந்திடான் தாதுச் சென்றே. 1

தாதுவா னதுஏ தென்னில் சங்கரன் பலிக்குச் செல்லத்
தீதிலாக் கோதண் டத்தைத் திறந்தவன் விட்ட போது
போதுவ துதிர மன்ரே போந்துமூர்ச் சித்து வீழ்ந்தான்
நாதனுர் எழுப்பப் பின்னே நடந்தனன் கிடந்த வன்ருன். 2

இச்சையால் உருவங் கொள்வன் அரியெனில் இகழ்வேள் விக்கண்
எச்சனுய் உண்ணப் புக்கங் கிருந்தஅன் றீச னுலே
அச்சமார் தலைய றுப்புண் டான்தலை யாக்கிக் கொள்ளான்
நச்சினுர் போற்ற நாதன் நாரணன் தலைகொ டுத்தான். 3

நூலினை உரைத்த வேத நூலினை நுவலும் வண்ணம்
மால்அருள் செய்தா னென்ருய் மறைநீதி உலகி யற்கை
சாலவே தெரியா தாகிக் கிடந்தநாள் சகத்து யார்க்கும்
ஆலின்கீ ழிருந்து வேதம் அருளினுன் அறைந்தான் நூலே. 4

அயன்றனைப் பயந்தா னென்ருய் அரிஅயன் சிரஞ்சே திப்பப்
பயந்திடான் தலைமால் தானும் படைத்திடான் சிரத்தைக் கிள்ளும்
சயந்தரும் அரனைத் தந்தான் அயனென்கை தப்பே யன்ரே
தியங்கிடா துணராய் எல்லாஞ் சிவன்செய லென்று தேர்ந்தே. 5

சீவன்கள் சனனம் போலச் சிலர்வயிற் றுதித்த மாலைத்
தேவென்றே உலகங் காக்கச் சுவேச்சையாற் செனித்தா னென்பீர்
பூவன்பின் படைக்க மாட்டா தரனடி போற்ற வேதக்
கோவந்து முகத்தில் தோன்றிச் சிருட்டியைக் கொடுத்தல் கூறும். 6

நாரணன் அயனை யீன்றும் அயனும்நா ரணனை யீன்றும்
காரணம் ஒருவ ருக்கங் கொருவர்தாம் இருவ ருக்கும்
வாரண முரித்த வள்ளல் காரண னென்று மன்ற
ஆரணம் உரைக்கும் பக்கத் தவர்களும் அடைந்தா ரன்றே. 7

திருச்சிற்றம்பலம்

அழிப்(பு)அரி யேவ லென்ருய் அரிதனை யழிக்கும் அன்றங்(கு)
அழிப்பது தவிர்க்க மாட்டான் அங்கமும் அழித்தே பூண்டான்
அழிப்(பு)அரி யேவ லென்றங் கறைந்ததும் அழிந்த தன்ருே
அழித்திடும் அரனே ஆக்கம் நோக்கமும் ஆக்கு வானே. 8

வானம்கீழ் மண்ணு மெல்லாம் மாயனே காப்பா னென்ருய்
தான்அஞ்சும் சலந்த ரன்தன் உடல்கீண்ட சக்க ரத்தை
ஆன்அஞ்சும் ஆடு வான்பாற் பெற்றுல களித்த வார்த்தை
தானெங்கு மாகு மெல்லாம் சங்கரன் காப்பே யாமே. 9

மாலினுர் சேலி ஞராய் வாரிகள் அடக்கிக் கொண்டன(று)
ஆலியா உலக மெல்லாம் அழிப்பவன் நானே என்னச்
சேலினுர் தமைப்பி டித்துச் செலுவினை இடந்து கண்ணைச்
சூலியார் மேல ணிந்தான் சூலிதா ஞகு மன்றே. 10

ஆமையாய் மேருத் தாங்கி அடைகலாய்க் கிடந்த போது
நாமெனு உலகா தார நாதனென் றகந்தை பண்ண
ஆமெனு ரன்று மென்னுர் அமரரு மானுர் பார்த்துத்
தாமநாள் ஆமையாரைத் தகர்த்தோடு தரித்தா ரன்றே. 11

எழுதலம் இடந்து பன்றி யாய்இருங் கொம்பி லேற்றுத்
தொழுதுல கிறைஞ்ச நின்ற சோதிநா னென்ற போதன்(று)
அழுதல மந்து வீழ அருங்கோடு பறித்த ணிந்தான்
கழுதல மந்த காட்டில் ஆடிடுங் கடவு ளன்றே. 12

இங்கடா வுளனே மாலென் றிரணியன் தூணை எற்ற
உங்கடா மோத ரன்ருன் உருநர சிங்க மாகி
எங்கடா போவ தென்னு உடல்பிளந் திறையா னென்ன
அங்கடா சிம்பு ளாகி யெடுத்தடர்த் தான் அரன்ருன். 13

தானமென் றிரந்து செல்லத் தனக்குமூ வடிகொடுப்ப
வானமும் அளந்து கொண்டு மாபலி தன்னைப் பின்னை
ஈனமாஞ் சிறையி லிட்டான் இறையன்ருேன் றீந்தோன் தங்கட்(கு)
ஊனஞ்செய் திடுவோர் தாங்கள் உத்தம ரல்ல ராகும். 14

மாயமான் தன்னைப் பொய்ம்மா னெனஅறி யாத ரக்கன்
மாயையி லகப்பட் டுத்தன் மனைவியைக் கெடுத்தான் தன்னை
மாயைக்குத் கர்த்தா வென்பை மதிகெட்டங் கவனைக் கொன்று
நாயனுர் தமைப்பூ சித்தான் கொலைப்பாவ நணுகி டாதே. 15

பரசுடன் பிறந்தான் தானும் பத்தனுயப் பரசி னுலே
அரசறுத் தரனை நோக்கி அருந்தவம் பரிந்தான் அன்று

திருச்சிற்றம்பலம்

பரசிய பரசு ராமன் பலதேவ னுலக மெல்லாம்
உரைசெயும் உமையாள் கோனை உள்நினைந் தியோகி னின்றான்.16

ஓதிய வாசு தேவர் தமைஉப மணியு தேவர்
தீதிலா நோக்கஞ் செய்து சிவகரஞ் சிரத்திற் சேர்த்தி
ஆதிபா லடிமை யாக்க அரிஉடல் பிராணன் அத்தம்
ஈதெலாம் கொள்நீ என்றங் கிறைஞ்சினர் அறிந்தி டாயே. 17

பின்வரும் பரிதா னாகி அரியென்றாய் பின்பு வந்தால்
என்வரு மீச னாலென் றறிகிலோம் இவுளி யார்க்கு
முன்வரும் அவதா ரங்கள் முடிந்தமை அறிந்தா யன்றே
பொன்வரும் சடையி னான்தன் புகழெங்கும் புக்க தன்றே. 18

கைவரை மூல மேயோ எனக்கரிக் குதவுங் காட்டின்
மொய்வரை எடுத்தான் மூலம் ஆயிட வேண்டு மோதான்
ஐயனேமுறையோ என்றால் அரசனே அங்குச் செல்வான்
வையகங் காப்பான்செய்கை வழக்கன்றோ ஊர்காப்பான்போல். 19

அன்றியும் ஆனை மாலுக் கடிமையாய் மூல மேயோ
என்றிடு மதனால் மால்தான் இறைவனென் றியம்ப வேண்டா
உன்றனக் கடிமை யானார் உன்னையெம் பெருமா னென்றால்
இன்றுநீ வணங்கு முன்றன் எம்பெரு மானே நீயே. 20

ஞாலம்உண் டவனால் உண்டார் நல்லமு தமரர் என்றாய்
வேலைநஞ் செழமா லாதி விண்ணவர் வெந்து சென்ற
காலமின் றெமக்குக் காவாய் கடவுளே யென்ன நாதன்
ஆலமுண் டிலனேல் தேவர் அமுதமுண் டிடுவ தெங்கே. 21

அஞ்சியன் றரிதா னோட அசுரனைக் குமர னாலே
துஞ்சுவித் தொருபெண்ணாலே தாரகன் உடல்துணிப்பித்(து)
அஞ்சிடப் புரம்தீ யூட்டிச் சலந்தர னுடல்கீண் டோத
நஞ்சினை யுண்டு மன்றோ நாயகன் உலகங் காத்தான். 22

பார்த்தனார் இரதமேறிப் படைதனைப் பார்த்துச் சார்பைக்,
கூர்த்தஅம் பாலே எய்து கொன்ற சாளே னென்னத்,
தேர்த்தனி லிருந்து மாயை செய்துமால் கொல்லச் செப்பும்,
வார்த்தைநூ லாக்கிக் கொண்டாய் புரங்கொல் நூல் மதித்தி டாயே. 23

மாயைதான் உயிர்க ளாகா துயிர்கள்தாம் மாயை யாகா
மாயவன் இவைதா னாகான் இவைதானு மாய னாகா
ஏயுமாம் அநாதி யாக இறைபசு பாச மென்றே
தூயவன் கலப்பி னாலே எல்லாமாய்த் தோன்று வன்காண். 24

பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி
ஆசற்ற ஆக மங்கள் அறைந்திட அறிவின் றிங்கே
மாசற்ற மால்மா சாகி மாயையு முறுவ னென்னில்
கூசிப்பின் கொள்ளார் நல்லோர் உனக்காமிக் குழப்பு நூலே. 25

பிரமம்நா னென்ற போது பிரமனே டரியுங் கூடிப்
பரமனர் இகலி டாமே பார்த்திடர் பண்ணி நின்ற
உரமனர் அழலு ரூபம் தன்னையு முணர மாட்டான்
கரமனுள் திகிரி ஏற்ருன் கடவுளென்றறைவதென்னே. 26

தேரரி இறையன் றென்றே சிவமுனி ததீசி யோடே
போர்புரிந் திகல மாலைப் புக்கவன் பிடித்த டித்து
மார்பினி லுதைத்து மால்தன் சக்கரம் வயிற்றில் வைத்திட்(டு)
ஏர்மலி படைப டைத்திட் டரிபட வெறிந்தா னன்றே. 27

சூலிகாண் இறைமால் அல்லன் சூலியைத் தொழுந்துர் வாசன்
மாலினர் மார்மி திப்பத் திருமறு மார்ப னகி
நூலினர் மார்பன் நோன்ருள் பட்டிடஞ் சுத்த மென்று
பாலினர் கடலான்ஆங்கே பரிவொடும் திருவை வைத்தான். 28

தவகுண னய்மால் சென்று தீவியைச் சக்க ரத்தால்
அவகுணஞ் செய்தன் ருேடப் பிருகுவந் தவளைப் பார்த்துச்
சிவனல தறியே னகில் இதுசெய்தோன் செறிகப் பத்துப்
பவமென மொழிய மாலும் பயப்பட்டுப் பதறி வீழ்ந்தான். 29

பயப்பட்டுப் பரனைநோக்கித் தவம்பண்ணப் பரனும்தோன்றி
நயத்தஞ்ச லென்று வேண்டிற் றென்னென நார ணன்தான்
பெயர்த்தருள் பிருகு சாப மெனஅன்பன் பிருகு வென்ன
உயர்கொள்நீ பவந்தோ றென்ன ஓமென்ருன் உலக நாதன். 30

இப்படிப் பிருகு சாபத் தீரைந்து பிறப்பின் வீழ்ந்து
மெய்ப்படு துயர முற்று வருபவன் விமலன் அல்லன்
எப்படி யானுஞ் சொன்னேன் இறைஅரி அல்ல னென்றே
மைப்படி கண்டன் அண்டன் மலரடி வணங்கி டாயே. 31

சிவஞானசித்தியார் பரபக்கம் முற்றிற்று.

உ
சிவமயம்

திருத்துறையூர் - ஸ்ரீஅருணந்திதேவ நாயனுர்

அருளிச்செய்த

4.(உ) சிவஞானசித்தியார் சுபக்கம்

பாயிரம்

விநாயகர் வணக்கம்

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன்ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமுமொன்
ரேவென்னச் செய்யும் தேவே.

மங்கல வாழ்த்து

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேரும்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்ப ஞகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம். 1

நூல் வழி

என்னைஇப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி ஞலே தாளிணை தலைமேற் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டான்நூல்
சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்ரும். 2

நுதலிய பொருள் முதலியன

பண்டைநற் றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன் மார்க்கர்
கண்டநூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்ட ரிகத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்ரும். 3

திருச்சிற்றம்பலம்

அவையடக்கம்

மறையினுன் அயனுன் மாலான் மனத்தினுன் வாக்கான் மற்றும்
குறைவிலா அளவி னுனுங் கூருெணு தாகி நின்ற
இறைவனுர் கமல பாதம் இன்றியான் இயம்பும் ஆசை
நிறையினுர் குணத்தோர்க் கெல்லாம் நகையினே நிறுத்து மன்றே.4

அருளினுல் ஆக மத்தே அறியலாம் அளவி னுலும்
தெருளலாஞ் சிவனே ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலா மிரிக்க லாகும் அடியரோ டிருக்க லாமே. 5

அளவையியல்

அளவைகள் பல

அளவை காண்டல் கருதல்உரை அபாவம் பொருளொப் பாறென்பர்,
அளவை மேலும் ஒழிபுண்மை ஐதிகத்தோ டியல் பெனநான்(கு),
அளவை காண்பர் அவையிற்றின் மேலு மறைவர் அவையெல்லாம்,
அளவை காண்டல் கருதல்உரை என்றிம் மூன்றின் அடங்கிடுமே.1

அளவை மூன்றன் இலக்கணம்

மாசறு காட்சி ஐயந் திரிவின்றி விகற்ப முனுு
ஆசற அறிவ தாகும் அனுமானம் அவினு பாவம்
பேசுறு மேதுக் கொண்டு மறைபொருள் பெறுவ தாகும்
காசறு முறையிம் மானத் தடங்கிடாப் பொருளேக் காட்டும். 2

ஐயம் முதலியவற்றின் இலக்கணம்

கண்ட பொருளே இரட்டுறவே கருதல் ஐயம் திரியவே,
கொண்டல் திரிவாம் பெயர்ச்சாதி குணமே கன்மம் பொருளெனஐந்,
துண்ட விகற்ப உணர்வினுக்குப் பொருளி னுண்மை மாத்திரத்தின்,
விண்ட லில்லா அறிவாகும் விகற்ப மில்லாக் காட்சியே. 3

காட்சி முதலியவற்றின் வகை

காண்டல் வாயில் மனம்தன்வே தனேயோ(டு) யோகக் காட்சியென,
ஈண்டு நான்காம் அனுமானம் தனக்கும் பிறர்க்கு மென்றிரண்டாம்,
மாண்ட உரைதந்தி ரமந்திரத்தோ டுபதே சச்சொல் லெனமூன்றும்,
பூண்ட அளவைக் கெதிர் புலன்தன் னியல்பு பொதுவென் றிரண்டாமே. 4

திருச்சிற்றம்பலம்

பிரமேயம்

அன்னிய சாதி யும்தன் சாதியும் அகன்று நிற்றல்
தன்னியல் பன்னி யத்தைத் தவிர்ந்துதன் சாதிக் கொத்தல்
துன்னிய பொதுஇ யற்கை சொன்னஇவ் விரண்டி னுள்ளே
மன்னிய பொருள்கள் யாவும் அடங்கிடு மான முற்றால். 5

வாயிற்காட்சி முதலியவற்றின் இயல்பு

உயிரினோ டுணர்வு வாயில் ஒளியுரு வாதி பற்றிச்
செயிரொடு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக் காட்சி
அயர்விலிந் திரிய ஞானம் ஐம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞானம் மானதக் காண்ட லாமே. 6

அருந்தின்பத் துன்பம் உள்ளத் தறிவினுக் கராக மாதி
தரும்தன்வே தனையாங் காட்சி சமாதியான் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால இயல்பகல் பொருள்க ளெல்லாம்
இருந்துணர் கின்ற ஞான மியோகநற் காண்ட லாமே. 7

அனுமான வகையும் உறுப்புக்களும்

பக்க மூன்றின் மூன்றேது வுடைய பொருளைப் பார்த்துணரத்,
தக்க ஞானந் தன்பொருட்டாம் பிறர்தம் பொருட்டாம் அனுமானம்,
தொக்க இவற்றாற் பிறர்தெளியச் சொல்லலாகும் அச்சொல்லும்,
மிக்க வந்து வயத்தினொடு வெதிரே கச்சொல் லெனஇரண்டாம். 8

மூன்று பக்கம் பக்கம்நிகர் பக்கம் நிகரில் பக்கமெனத்,
தோன்றும் பக்கந் துணிபொருளுக் கிடமாம் உவமை நிகர் பக்கம்,
ஆன்ற பொருள்சென் றடையாத விடமா நிகரில் பக்கமுதல்,
ஏன்ற இரண்டும் பொருளுண்மைக் கிடமாம் ஒன்று பொருளின்றாம். 9

ஏது மூன்றாம் இயல்புகா ரியத்தோ டநுப லத்தியிவை,
ஓதி னியல்பு மாமரத்தைக் காட்டல் உறுகா ரியம் புகைதன்,
ஆதி யாய அனல்காட்ட லாகும் அநுப லத்தியது,
சீத மின்மை பனியின்மை காட்டல் போலுஞ் செப்பிடிலே. 10

புகையால் அனலுண் டடுக்களைபோ லென்னப் புகறல் அந்நுவயம்,
வகையாம் அனலி லாவிடத்துப் புகையின் றாகும் மலரினொடு,
முகையார் நீரிற் போலென்று மொழிதல் வெதிரே கச்சொல்இவை,
தொகையார் உறுப்பைந் தொடுங் கூடச் சொல்லு வாரு முளர்துணிந்தே. 11

திருச்சிற்றம்பலம்

போது நாற்றத் தால்அறிதல் பூர்வக் காட்சி அனுமானம்
ஓது முறையா லறிவின்அள வுணர்தல் கருதல் அனுமானம்
நீதி யான்முற் கன்மபல நிகழ்வ திப்போ திச்செய்தி
ஆதி யாக வரும்பயனென் றறிதல் உரையால் அனுமானம். 12

உரையளவையின் வகை

அனுதியே அமல ஞய அறிவன்நூல் ஆக மந்தான்
பின்ஆதிமா றின்றிப் பேணல் தந்திர மந்தி ரங்கள்
மனுதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகும்
தனுதிஈ றிலாதான் தன்மை யுணர்த்துல் உபதே சந்தான். 13

கருதலளவையின் குற்றமும் தோல்வித் தானமும்

ஈண்டு பக்கப் போலிநான் கேதுப் போலி யொருமூன்ருய்,
வேண்டும் எழுமூன் ருகும்விளங் குவமைப் போலி யீரொன்பான்,
காண்டுந் தோல்வித் தானம்இரண் டிருபத் திரண்டாம் கருதிலிவை,
யாண்டு மொழிவர் அவையெல்லாம் அளக்கில் அறுபத் தைந்தாகும். 14

பிரமாணவியல்

முதற் சூத்திரம்

பதியுண்மை

ஒருவனே டொருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறு மாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே. 1

முதலதிகரணம்

1. உலகாயத மறுப்பு

உலகம் மூவினை உடையது

உதிப்பதும் ஈறு முண்டென் றுரைப்பதிங் கென்னை முன்னோர்
மதித்துல கநாதி யாக மன்னிய தென்ப ரென்னின்
இதற்கியான் அனுமா ஞதி யெடேனிப்பூ தாதி யெல்லாம்
விதிப்படி தோற்றி மாயக் காணலான் மேதி னிக்கே. 2

திருச்சிற்றம்பலம்

முத்தொழில் செயற்கையே

இயல்புகாண் தோற்றி மாய்கை என்றிடின் இயல்பினுக்குச்,
செயலதின் றியல்பு செய்தி செய்தியேல் இயல்ப தின்ரும்,
இயல்பதாம் பூதந் தானே இயற்றிடுஞ் செய்தி யென்னில்,
செயல்செய்வான் ஒருவன் வேண்டுஞ் செயற்படும் அசேத னத்தால்.3

உலகம் முதல்வனுல் நடைபெறுகிறது

நிலம்புனல் அனல்கால் காண நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும்
பலந்தரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டா வென்னின்
இலங்கிய தோற்ற நிற்றல் ஈறிவை இசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசம் தனக்கிலா நாதன் வேண்டும். 4

பௌத்தம் பற்றிய ஆசங்கை

சார்பினில் தோன்று மெல்லாம் தருபவன் இல்லை யென்னில்
தேரின்இல் லதற்கோ தோற்றம் உள்ளதற் கோநீ செப்பாய்
ஓரின்இல் லதுவுந் தோன்ரு துள்ளதேல் உதிக்க வேண்டா
சோர்விலா திரண்டு மின்றி நிற்பது தோன்று மன்றே. 5

உலகு சற்காரியம்

உள்ளது மிலது மின்றி நின்றதொன் றுளதே லுண்டாம்
இல்லதே லில்லை யாகும் தோற்றமும் இசையா தாகும்
உள்ளகா ரணத்தி லுண்டாம் காரிய முதிக்கும் மண்ணில்
இல்லதாம் படங்க டாதி எழில்தரு மியற்று வானுல். 6

ஒருபொரு ளொருவ னின்றி உளதில தாகு மென்னில்
தருபொருளுண்டேலின்ரும் தன்மையின் றின்றே லுண்டாய்
வருதலின் றிலது கார்ய முதலுள தாகு மென்னில்
கருதுகா ரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தா வாலாம். 7

மீமாஞ்சை பற்றிய ஆசங்கை

காயத்தின் அழிவு தோற்றம் கண்டனம் உலகிற் காணு
நீஇத்தை உரைத்த வாறிங் கென்னெனில் நிகழ்த்து முண்மை
மாயத்த உலகம் பூநீர் தீவளி வான மாதி
யாயித்தா ஞென்றி ஞென்று தோன்றிநின் றழித லாலே. 8

உலகம் முற்றும் ஒருகாலத்து தோன்றும் மறையும்

ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் ஒக்கப்
பாரிடம் அழிவ தின்ரும் என்றிடிற் பயில்வித் தெல்லாம்

திருச்சிற்றம்பலம்

காரிட மதனிற் காட்டும் அங்குரங் கழியும் வேனில்
சீருடைத் துலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும். 9

காலம் துணைக்காரணம் - வினைமுதல் அன்று

காலமே கடவு ளாகக் கண்டனம் தொழிலுக் கென்னில்
காலமோ அறிவின் றுகும் ஆயினுங் காரி யங்கள்
காலமே தரவே காண்டும் காரணன் விதியி னுக்குக்
காலமுங் கடவு ளேவ லால்துணைக் கார ணங்காண். 10

அணுகாரண வாத மறுப்பு

அழிந்தபின் அணுக்கள் தாமே அகிலமாய் வந்து நின்று
கழிந்திடுங் கன்மத் தென்னில் கன்மமும் அணுவுங் கூட
மொழிந்திடுஞ் சடமே யாகி மொழிதலான் முடியா செய்தி
ஒழிந்திடும் அணுரூ பங்கள் உலகெலா மொடுங்கு மன்றே. 11

காரண அணுக்கள் கெட்டாற் காரிய உலகின் றென்னில்
காரண மாயை யாகக் காரியங் காண லாகும்
காரண மாயை யென்னை காண்பதிங் கணுவே யென்னில்
காரண மாயை யேகாண் காரியம் அணுவிற் கண்டால். 12

மாயையே முதற்காரணம்

காரிய மென்ப தென்னை காரண அணுவை யென்னில்
காரியம் அவய வத்தாற் கண்டனங் கடாதி போலக்
காரிய உருவ மெல்லாம் அழிதருங் கார ணத்தால்
காரிய உறுப்பின் மாயை தருமெனக் கருதி டாயே. 13

தோற்றமும் நிலையு மீறும் மாயையின் தொழில தென்றே
சாற்றிடு முலகம் வித்துச் சாகாதி அணுக்க ளாக
ஏற்றதே லீண்டு நிற்கும் இல்லதே லியைவ தின்றும்
மாற்றநீ மறந்தா யித்தால் மாயையை மதித்தி டாயே. 14

மாயையி னுள்ள வஞ்சம் வருவது போவ தாகும்
நீயதிங் கில்லை யென்னில் நிகழ்த்திடு முயலிற் கோடு
போய்உகும் இலைக ளெல்லாம் மரங்களிற் புக்குப் போதின்
ஆயிடும் அதுவு மென்னிற் காரணங் கிடக்க வாமே. 15

சாங்கிய மத மறுப்பு

கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ள தாகி
வருதலால் அநாதி வைய மற்றெரு கடவு ளித்தைத்

தருதலால் ஆதி யாகச் சாற்றலு மாகு மாயைக்
கொருவனு ரென்னிங் கென்னின் உள்ளவா றுரைப்பக் கேள்நீ. 16

புத்திமற் காரி யத்தால் பூதாதி புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்ருல் அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடும் அதனுன் மாயைக் குணர்வொன்று மில்லையென்றே
வைத்திடு மதனுல் எல்லாம் வருவிப்பா னெருவன் வேண்டும். 17

உலகத்தின் மூன்று காரணங்கள்

காரிய கார ணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணு மவன்முதல் துணைநி மித்தம்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
ஆரியன் குலால னுய்நின் ருக்குவன் அகில மெல்லாம். 18

மூவகை முதற்காரணம்

விந்துவின் மாயை யாகி மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடும் அராக மாதி முக்குண மாதி மூலம்
தந்திடுஞ் சிவன வன்தன் சந்நிதி தன்னில் நின்றே. 19

வைகரி வாக்கின் இயல்பு

வைகரி செவியில் கேட்ப தாய்அத்த வசன மாகி
மெய்தரும் உதான வாயு மேவிட விளைந்த வன்னம்
பொய்யற அடைவு டைத்தாய்ப் புந்திகா ரணம தாகி
ஐயமில் பிராண வாயு அடைந்தெழுந் தடைவு டைத்தாம். 20

மத்திமை வாக்கின் இயல்பு

உள்ளுணர் ஓசை யாகிச் செவியினில் உறுதல் செய்யா(து)
ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடைய தன்றித்
தெள்ளிய அக்க ரங்கள் சிந்திடுஞ் செயல தின்றி
மெள்ளவே எழுவ தாகும் மத்திமை வேற தாயே. 21

பைசந்தி வாக்கின் இயல்பு

வேற்றுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுதல் அடைவொ டுக்கிச் சொயம்பிர காச மாகிச்
சாற்றிடு மயிலி னண்டம் தரித்திடும் சலமே போன்றங்(கு)
ஆற்றவே உடைய தாகிப் பைசந்தி அமர்ந்து நிற்கும். 22

திருச்சிற்றம்பலம்

சூக்குமையின் இயல்பும் அதனை அறிவதன் பயனும்

சூக்கும வாக்க துள்ளோர் சோதியாய் அழிவ தின்றி
ஆக்கிடும் அதிகா ரத்திற் கழிவினை தன்னைக் கண்டால்
நீக்கமில் அறிவா னந்தம் முதன்மைநித் தியமு டைத்தாய்ப்
போக்கொடு வரவி லைப்பும் விகாரமும் புருட னின்றும். 23

வாக்குச்சத்தி வைப்புச்சத்தியே

நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் அஞ்ச தாகச் செயல்பரி ணும மன்று
புகழ்ந்திடும் விருத்தி யாகும் படங்குடி லாறுற் போல
மகிழ்ந்திடும் பிரம மன்று மாமாயை என்பர் நல்லோர். 24

சுத்தமாயையின் பிறகாரியங்கள்

வித்தைகள் வித்தை ஈசர் சதாசிவர் என்றி வர்க்கு
வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள் மந்தி ரங்கள்
தத்துவம் சரீரம் போகம் கரணங்கள் தாமெ லாமும்
உய்த்திடும் வைந்த வந்தான் உபாதான மாகி நின்றே. 25

வாக்குசக்தியே சவிகற்ப அறிவுக்குக் காரணம்; அதுவே பரம பந்தமுமாம்

மூவகை அணுக்க ளுக்கு முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞான மின்றும்
ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞான முண்டேல்
சேவுயர் கொடியி ஞன்றன் சேவடி சேர லாமே. 26

மாயேயத்தின் பொதுவியல்பு

அருவினில் உருவந் தோன்றி அங்காங்கி பாவ மாகி
உருவினில் உருவ மாயே உதித்திடும் உலக மெல்லாம்
பெருகிடும் சுருங்கும் பேதா பேதமோ டபேத மாகும்
ஒருவனே யெல்லா மாகி அல்லவா யுடனு மாவன். 27

அருவில் உருவாராது என்னும் மாயாவாத மறுப்பு

அருஉரு ஈறு தாகும் விகாரமும் அவிகா ரத்தின்
வருவது மில்லை என்னின் வான்வளி யாதி பூதம்
தருவது தன்னின் மேக சலனசத் தங்க ளோடும்
உருவமின் உருமே றெல்லாம் உதித்திடும் உணர்ந்து கொள்ளே. 28

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் அதிகரணம்

முதல்வன் பரம் ஆதார நிமித்தன்

மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலால னாலே
எண்ணிய உருவ மெல்லாம் இயற்றுவன் ஈசன் தானும்
கண்ணுகா ரியங்க ளெல்லாம் காரண மதனிற் காண்பன்
பண்ணுவ தெங்கே நின்றிங் கென்றிடிற் பகரக் கேள்நீ. 29

சீலமோ உலகம் போலத் தெரிப்பரி ததனால் நிற்கும்
கோலமும் அறிவா ரில்லை ஆயினுங் கூறக் கேள்நீ
ஞாலமே ழினையுந் தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமே போலக் கொள்நீ நிலைசெயல் கடவுட் கண்ணே. 30

முதல்வன் தன்செயல்களால் விகாரம் உறான்

கற்றநூற் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்றும்
பெற்றியும் சாக்கி ராதி உயிரினிற் பிறந்தொ டுக்கம்
உற்றதும் போல வெல்லா உலகமும் உதித்தொ டுங்கப்
பற்றொடு பற்ற தின்றி நின்றனன் பரனு மன்றே. 31

உலகப் படைப்பின் பயன்

உயிரவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பதென் அரன்பா லென்னில்
செயிருறு மலத்தி னுகும் சிதைந்ததே தென்னிற் சித்தத்(து)
அயர்வொழி காரி யங்கள் அழியுங்கா ரணங்கி டக்கும்
பயில்தரு காரி யம்பின் பண்டுபோற் பண்ணு மீசன். 32

தோற்றுவித்தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்
போற்றவே உடைய னீசன் புகுந்தது விகார மென்னில்
சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை அலருங் காந்தம்
காற்றிடும் கனலை நீரும் கரந்திடும் காசி னிக்கே. 33

சங்காரக் கடவுளே முதல்வன்

உரைத்தஇத் தொழில்கள் மூன்றும் மூவருக் குலகம் ஓத
வரைத்தொரு வனுக்கே யாக்கி வைத்ததிங் கென்னை யென்னின்
விரைக்கம லத்தோன் மாலும் ஏவலான் மேவி னோர்கள்
புரைத்ததி கார சத்தி புண்ணியம் நண்ண லாலே. 34

இறுதியாம் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
உறுதியின் நின்ற ரென்னின் இறுதிதா னுண்டா காதாம்
அறுதியில் அரனே யெல்லாம் அழித்தலால் அவனு லின்னும்
பெறுதுநாம் ஆக்கம் நோக்கம் பேரதி கரணத் தாலே. 35

திருச்சிற்றம்பலம்

விளையாட்டு என்பதன் கருத்து

சொன்னஇத் தொழில்க ளென்ன காரணந்தோற்ற வென்னின்
முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாம்உ யிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அருளால் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதுஞ் சொல்ல லாமே. 36

அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்ம மெல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பில்
தெழித்திடல் மலங்க ளெல்லாம் மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம். 37

முதல்வனது தடத்த இயல்பு

அருவமோ உருவா ரூப மானதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னின்
அருவமும் உருவா ரூபம் ஆனது மன்றி நின்ற
உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே. 38

கடவுள் உருவத்தின் இயல்பு

நண்ணிடும் உருவ மென்னின் நமக்குள உருவம் போலப்
பண்ணிட ஒருவன் வேண்டும் இச்சையேற் பலரும் இச்சை
கண்ணிய உருவங் கொள்ளேம் யாம்பெருங் கடவுள் தானும்
எண்ணிய யோக சித்தர் போலுரு இசைப்பன் காணே. 39

வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ளு மாபோல்
உத்தமன் கொள்வ னென்னின் அவர்களி லொருவ னுவன்
அத்தகை யவர்க ளெல்லாம் ஆக்குவ தருளா லாங்கு
வைத்தது மாயை யென்னின் வடிவெலா மாயை யாமே. 40

இறைவன் உரு சத்தியுரு

மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகும்
மாயஆ ணவம கன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழின்முதல் நண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால். 41

சத்தியே வடிவென் றுலும் தான்பரி ணும மாகும்
நித்தமோ அழியும் அத்தால் நின்மலன் அருவே யென்னின்
அத்துவா மார்க்கத் துள்ளான் அலனிவன் அருமை தன்னைப்
புத்திதா னுடையை போல இருந்தனை புகலக் கேள்நீ. 42

திருச்சிற்றம்பலம்

இறைவன் இயல்பு வரையறை படாதது

உலகினில் பதார்த்த மெல்லாம் உருவமோ டருவ மாகி
நிலவிடு மொன்ஞென் ருகா நின்றஅந் நிலையே போல
அலகிலா அறிவன் ருனும் அருவமே யென்னி லாய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்ருய்க் கூடுவன் குறித்திடாயே. 43

பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லான்
அந்தமும் ஆதி யில்லான் அளப்பில ஞத லாலே
எந்தைதான் இன்ன னென்றும் இன்னதா மின்ன தாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே. 44

குறித்ததொன் ருக மாட்டாக் குறைவிலன் ஆத லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும்
நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளி ஞலே. 45

திருவுருவத்தின் இன்றியமையாமை

ஆரணம் ஆக மங்கள் அருளிஞல் உருவு கொண்டு
காரணன் அருளா ஞகில் கதிப்பவ ரில்லை யாகும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே. 46

உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் ரேன்றும்
கருமமும் அருள ரன்றன் கரசர ணுதி சாங்கம்
தருமரு ளுபாங்க மெல்லாம் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே. 47

முதல்வன் அசிந்திதன் என்னும் சுருதி, புராணங்கள்

உலகினை இறந்து நின்ற தரன்உரு வென்ப தோரார்
உலகவ னுருவில் தோன்றி ஒடுங்கிடு மென்றும் ஓரார்
உலகினுக் குயிரு மாகி உலகுமாய் நின்ற தோரார்
உலகினி லொருவ னென்பர் உருவினை யுணரா ரெல்லாம்.48

தேவரி ஞெருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார் முதலுருப் பாதி மாதர்
ஆவது முணரார் ஆதி அரிஅயற் கறிய வொண்ணு
மேவுரு நிலையு மோரார் அவனுரு விளைவு மோரார். 49

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்

திருச்சிற்றம்பலம்

வேகியா னுற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லாம் உம்பரின் ஒருவ னென்பர். 50

ஒன்ருெடொன் ருெவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலக நீங்கி நின்றனன் என்று மோரார்
அன்றிஅவ் வேட மெல்லாம் அருள்புரி தொழிலென் ருேரார்
கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணமென் ருேரார். 51

நாயகன் கண்ந யப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னுலே சுடரொளி கொடுத்த பண்பில்
தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னுர். 52

கண்ணுதல் யோகி ருப்பக் காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுசு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்.53

ஐந்தொழிற்கும் திருவுரு வேண்டும்

படைப்பாகித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையும் நூலும்,
இடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்ப மென்றும்,
அடைப்பானும் அதுவும் முத்தி யளித்திடு மியோகும் பாகந்,
துடைப்பானுந் தொழிலும் மேனி தொடக்கானேற் சொல்லொ ணுதே. 54

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது
திருமேனி உபயம் பெற்ருேம் செப்பிய மூன்றும் நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே. 55

முதல்வனது உபசாரத் திருமேனிகள்

அத்துவா மூர்த்தி யாக அறைகுவ தென்னை என்னின்
நித்தனுய் நிறைந்த வற்றின் நீங்கிடா நிலைமை யானும்
சித்துடன் அசித்திற் கெல்லாம் சேட்டித னுத லானும்
வைத்ததாம் அத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம். 56

மந்திர மத்து வாவின் மிகுத்தொரு வடிவ மாகத்
தந்ததென் அரனுக் கென்னில் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்று மிவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதீத மான சிவசத்தி சேர்ந்து நிற்கும். 57

திருச்சிற்றம்பலம்

சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய ஆத லானும்
சத்திதான் பிரேரித் துப்பின் தானதிட் டித்துக் கொண்டே
அத்தினுற் புத்தி முத்தி அளித்தலால் அரனுக் கென்றே
வைத்தவா மந்தி ரங்கள் வடிவென மறைக ளெல்லாம். 58

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரம் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேள்நீ
முந்திய தோற்றத் தாலும் மந்திர மூலத் தானும்
அந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலு மாகு மன்றே. 59

மூன்ரும் அதிகரணம்

ஒருவனது சத்திபலரிடத்துத்தங்கித் தொழிலியற்றும்

அயன்றனை யாதி ஆக அரனுரு வென்ப தென்னை
பயந்திடுஞ் சத்தி யாதி பதிதலாற் படைப்பு மூலம்
முயன்றனர் இவரே யாயின் முன்னவ னென்னை முற்றும்
நயந்திடும் அவனி வர்க்கு நண்ணுவ தொரோவொன் ருமே. 60

சத்திதான் பலவோ வென்னில் தானொன்றே அநேக மாக
வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லாம்
உய்த்திடு மொருவன் சத்தி போலரன் உடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவன் நினைந்த வாரும். 61

சத்தியின் வடிவு ஞானமே

சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும்
உய்த்திடு மிச்சை செய்தி இவைஞானத் துளவோ வென்னின்
எத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி
வைத்தலான் மறைப்பில் ஞானல் மருவிடுங் கிரியை எல்லாம். 62

ஐந்து சத்திகள்

ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியையென் றெருமூன் ருகி
நின்றிடுஞ் சத்தி இச்சை உயிர்க்கருள் நேச மாகும்
நன்றெலாம் ஞான சத்தி யால்நயந் தறிவன் நாதன்
அன்றருட் கிரியை தன்னல் ஆக்குவன் அகில மெல்லாம். 63

திருச்சிற்றம்பலம்

சீவனும் வேறு சிவனும் வேறு

சீவனும் இச்சா ஞானக் கிரியையாற் சிவனை யொப்பான்
ஆவனென் றிடின்அ நாதி மலம்இவற் றினைம றைக்கும்
காவல னிவன்செய் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன்
பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற் றுகும். 64

சுத்த தத்துவங்கள் ஐந்து

ஞானமே யான போது சிவன்தொழில் ஞான மொக்கின்
ஈனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழில தேறின்
ஊனமேற் கிரியை வித்தை உருத்திரன் இலய போகம்
ஆனபே ரதிகா ரத்தோ டதிகர ணத்த னுமே. 65

வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்கள் ஐந்துஞ்
சுத்ததத் துவஞ்சி வன்தன் சுதந்திர வடிவ மாகும்
நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு வருவித்தார் கருமத் தாலே. 66

தாதான்மிய சத்தியின் இயல்பு

ஒருவனே இராவ ணுதி பாவக முற்றுற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாம் தன்மையும் திரியா னுகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பும்
இருமையும் போலமன்னிச் சிவத்தினே டியைந்து நிற்கும். 67

பொன்மைநீ லாதி வன்னம் பொருந்திடப் பளிங்க வற்றின்
தன்மையாய் நிற்கு மாபோல் சத்திதன் பேத மெல்லாம்
நின்மலன் தானுய்த் தோன்றி நிலைமையொன் றுயே நிற்பன்
முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்குந்தான் முளையா னன்றே. 68

சத்தியுஞ் சிவமு மாய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார். 69

முதல்வனது தன்னியல்பு

சிவன்அரு உருவும் அல்லன் சித்தினே டசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்க ளொன்றும் பண்ணிடு வானும் அல்லன்
தவமுத லியோக போகம் தரிப்பவ னல்லன் தானே
இவைபெற இயைந்து மொன்றும் இயைந்திடா இயல்பினுனே. 70

திருச்சிற்றம்பலம்

இரண்டாஞ் சூத்திரம்

சத்தி பதி சிவன் என முதல்வன் நிற்றல்

உலகெலா மாகி வேருய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணேயின் அமர்ந்து செல்லத்
தலேவனுய் இவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீர் அமல ஞகி நின்றனன் நீங்கா தெங்கும். 1

முதலதிகரணம்

வேருயும் உடனுதல் பொருந்தும் எனல்

ஒன்றென மறைக ளெல்லாம் உரைத்திட உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவ தென்னே யென்னின்
அன்றவை பதிதான் ஒன்றென் றறையும்அக் கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே. 2

ஒருவன் பலவாதல் பொருந்தும் எனல்

உருவொடு கருவி யெல்லாம் உயிர்கொடு நின்று வேருய்
வருவது போல ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன்
தருமுயி ரவனே யாகா உயிரவை தானு மாகான்
வருபவ னிவைதா ஞயும் வேறுமாய் மன்னி நின்றே. 3

இரண்டாம் அதிகரணம்

இருவினேயின் இயல்பு தொகுப்பு

இருவினே இன்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்தி றந்து
வருவது போவ தாகும் மன்னிய வினேப்ப லன்கள்
தருமரன் தரணி யோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவுங் கன்ம பலன்களும் மறுமைக் கண்ணே. 4

இன்பத்துன்பம் இருவினேயால் வரும் செயற்கை

இருவினே யென்னே இன்பத் துன்பங்கள் இயல்ப தென்னின்
ஒருதன்மை இயல்புக் குள்ள தொருவனுக் கிரண்டு செய்தி
வருவதென் மலருந் தீயும் மருவலின் வாசம் வெம்மை
தருவதென் நீரென் செய்து தானியல் பாகு மன்றே. 5

தன்னியல் பொழியப் பூவும் தழலும்வந் தணேய நீரின்
மன்னிய திரண்டு செய்தி வருமிரு வினேயி ஞனும்
உன்னிய இன்பத் துன்பம் உறும்உயி ருணர்வி லாத
துன்னிய அசித்தை இன்பத் துன்பங்கள் சூழ்ந்தி டாவே. 6

திருச்சிற்றம்பலம்

இருவினையும் முயற்சியும்

இம்மையின் முயற்சி யாலே இருநிதி ஈட்டி இன்பம்
இம்மையே நுகர்வர் செய்தி இலாதவர் பொருளு மின்றி
இம்மையே இடரு ழப்பர் வேறிரு வினைய துண்டேல்
இம்மையின் முயற்சி யின்றி எய்திட வேண்டும் இங்கே. 7

இருவினைச் செயல்காண் இம்மை இரும்பொரு ளின்பம் வேண்டி
வருவினை செய்யுங் காலை மடிவரும் மடியு மின்றித்
தருவினை யதனில் அந்தந் தானறும் துயருந் தங்கும்
ஒருவினை செய்யா தோரும் உடையர்இவ் வுலகத் துள்ளே. 8

பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
ஆறுமுன் கருவுட் பட்ட தவ்விதி அனுப வத்தால்
ஏறிடு முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ இனிச்செய் கன்மம் மேலுடற் சேரு மென்றே. 9

இருவினையின் தொடர்ச்சி

உடற்செயல் கன்மம் இந்த உடல்வந்த வாறே தென்னின்
விடப்படு முன்னு டம்பின் வினைஇந்த உடல்வி ளைக்கும்
தொடர்ச்சியால் ஒன்றுக் கொன்று தொன்றுதொட் டநாதி வித்தின்
இடத்தினின் மரம்ம ரத்தின் வித்தும்வந் திடையு மாபோல். 10

முற்செயல் விதியை இந்த முயற்சியோ டனுப வித்தான்
இச்செயல் பலிக்கு மாறென் இதமகி தங்கள் முன்னர்
அச்செய லானல் இங்கும் அவைசெயின் மேலைக் காகும்
பிற்செயா தனுப விப்ப தின்றுபின் தொடருஞ் செய்தி. 11

மேலைக்கு வித்து மாகி விளைந்தவை உணவு மாகி
ஞாலத்து வருமா போல நாம்செய்யும் வினைக ளெல்லாம்
மேலத்தான் பலமாச் செய்யும் இதமகி தங்கட் கெல்லாம்
மூலத்த தாகி யென்றும் வந்திடும் முறைமை யோடே. 12

இருவினைகளை இறைவன் ஏற்றுப் பயன் தரல்

இதமகி தங்கள் என்ப திகல்மன வாக்குக் காயத்(து)
இதமுயிர்க் குறுதி செய்தல் அகிதமற் றதுசெய் யாமை
இதமகி தங்க ளெல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டிங்(கு)
இதமகி தத்தால் இன்பத் துன்பங்கள் ஈவ னன்றே. 13

இறைவனிங் கேற்ப தென்னை இதமகி தங்க ளென்னின்
இறைபர னுயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமை யாகும்
அறமலி இதஞ்செய் வோருக் கனுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி அகிதஞ் செய்யின் நிக்கிர கத்தை வைப்பன். 14

துன்பம் நுகர்வித்தலும் கருணையால்தான்

நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வ(து)
அக்கிர மத்தால் குற்றம் அடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி ஞலே ஈண்டறம் இயற்றி டென்பன்
எக்கிர மத்தி ஞலும் இறைசெயல் அருளே யென்றும். 15

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொ லாற்றின்
வந்திடா விடின் உறுக்கி வளாரிஞல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்ஞே ஈசஞர் முனிவு மென்றும். 16

செயல்களே பயனைத் தாரா

செயல்களே பலத்தைச் செய்யும் தெய்வம்வேண் டாஇங் கென்னின்
முயலுமிச் செயல்க ளிங்கே முழுவதும் அழியு மெங்கே
பயனளிப் பனவ ழிந்தே பலன்களைப் பண்ணுங் கெட்டே
வயலிடும் தழையும் தின்னும் மருந்தும்பின் பலிக்கு மாபோல். 17

செய்க்கிடுந் தழையும் தின்னுந் திரவிய மதுவும் போல
உய்த்திடுஞ் செய்தி கெட்டே உறுவிக்கும் பலத்தை யென்னின்
வைத்திடுஞ் சோறும் பாக்கும் அருந்தினர் வயிற்றின் மாய்ந்தான்
மெய்த்திடும் பலம்உனக்கு மலமலான் வேறு முண்டோ. 18

திரவியம் உவமை யன்று செய்திக்கண் திரவி யங்கள்
விரவிய விடத்தே வீந்து பலந்தரும் இம்மை அம்மை
பரவிநீ பார்நீர் அங்கி பாத்திரத் திட்ட வெல்லாம்
கரவிடு மிங்கே எங்கே பலன்கொளக் கருதி ஞயே. 19

செய்தவர் மனத்தே எல்லாச் செய்தியும் கிடந்து பின்னர்
எய்தவே பலன்க ளீனும் என்றிடின் இருஞ் சுவர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த(து)
ஐயனே அழகி துன்சொல் இந்திர சால மாய்த்தே. 20

தானஞ்செய் பொருள் தரித்தோர் செய்தவர் தக்க செய்தி
ஊனம்பின் ஞறவே காண்டும் பலமுறு விப்பான் வேண்டும்
ஈனமில் செய்தி ஈச னிடும்பணி இவைநாம் செய்தால்
நூனங்கள் அதிக நோக்கி நுகர்விப்பன் வினைநோய் தீர. 21

தொழில் முதனிலை எட்டும் பயன்தரா; இறைவனே தருவன்

உலகுடல் கரணங் காலம் உறுபலம் நியதி செய்தி
பலவிவை கொண்டுகன்மம் பண்ணுவ துண்பதாஞல்
நிலவிடா திவைதாம் சென்று நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளா(து)
அலகிலா அறிவ ஞனை அணைத்திடும் அருளி ஞலே. 22

திருச்சிற்றம்பலம்

பொது அறம்

ஒழுக்கம்அன் பருள்ஆ சாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவ டக்கம் அறிவொடர்ச் சித்த லாதி
இழுக்கிலா அறங்க ளானல் இரங்குவான் பணிய றங்கள். 23

சிறப்பு அறம்

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழும் செயலற மானு லியார்க்கும்
முனமொரு தெய்வ மெங்கும் செயற்குமுன் னிலையா மன்றே. 24

சிவனே வழிபாட்டிற்கு உரியவன்

யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னூர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும்
ஆதலான் இவையி லாதான் அறிந்தருள் செய்வ னன்றே. 25

இங்குநாம் சிலர்க்குப் பூசை இயற்றினல் இவர்களோவந்(து)
அங்குவான் தருவா ரன்றேல் அத்தெய்வ மத்த னைக்காண்
எங்கும்வாழ் தெய்வமெல்லாம் இறைவனு ணையினல் நிற்ப(து)
அங்குநாம் செய்யுஞ் செய்திக் காணைவைப் பால ளிப்பன். 26

சிவன் அடிமறவாமையே பொருள்

காண்பவன் சிவனே யானல் அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம் அரன்றன் பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன விதியறம் விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே. 27

சிவனை வழிபடும் இடங்கள்

தாபர சங்க மங்கள் என்றிரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்
நீபரன் தன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை
ஆய்பரம் பொருளை நாளும் அர்ச்சிநீ அன்பு செய்தே. 28

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே. 29

திருச்சிற்றம்பலம்

சிவனை அரசனுக்கு உவமித்தல்

மறைகளீ சன்சொல் அச்சொல் வழிவாரா உயிரை வைக்கும்,
சிறைகள்மா நிரயம் இட்ட பணிசெய்வோர் செல்வத் தோடும்,
உறையும்மா பதிகள் உம்ப ருலங்கள் யோனிக் கெல்லாம்,
இறைவனு ணையினல் இன்பத் துன்பங்கள் இயைவதாகும். 30

ஆணையால் அவனி மன்னன் அருமறை முறைசெய் யாரை
ஆணையில் தண்டஞ் செய்தும் அருஞ்சிறை யிட்டும் வைப்பன்
ஆணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன் எங்கும் ஆணையே ஆணை யேகாண். 31

அரசனும் செய்வ தீசன் அருள்வழி அரும்பா வங்கள்
தரையுளோர் செய்யில் தீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமும் சேரார் அந்த நிரயமுன் நீர்மை ஈதாம். 32

சிவனை மருத்துவனேடு உவமித்தல்

அருளினல் உரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யின்
இருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலா மலங்கள் தீர்க்கும் மருந்திவை வயித்ய நாதன். 33

மருத்துவன் உரைத்த நூலின் வழிவரிற் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிகள் தப்பில் தப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யா துறும்பிணி சென்றுந் தீர்ப்பன்
உரைத்தநூற் சிவனுமின்னே உறுங்கன்ம மூட்டித் தீர்ப்பன். 34

மண்ணுளே சிலவி யாதி மருத்துவன் அருத்தி யோடும்
திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாம்
கண்ணிய கட்டி பாலும் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்பத் துன்பம் அருத்தியே வினைய றுப்பன். 35

உயிர் இறந்தும் பிறந்தும் வரல்

பூதனு சரீரம் போனல் புரியட்ட ரூபந் தானே
யாதனு சரீர மாகி இன்பத்துன் பங்க ளெல்லாம்
நாதனர் ஆணை யுய்க்க நரகொடு சுவர்க்கம் துய்த்துத்
தீதிலா அணுவா யோனி சேர்ந்திடும் சீவ னெல்லாம். 36

உடல்விடா யோனி பற்றி உதிப்பினும் உதிக்கு மொன்றிற்
படர்வுரு துறும்பா வத்தாற் பாடாணம் போற்கி டந்து
கடனதாம் காலஞ் சென்ருற் கடுநர கதனில் வீழ்ந்தங்(கு)
இடருறும் உருவங்கன்மத் தளவினில் எடுக்கு மன்றே. 37

திருச்சிற்றம்பலம்

ஓர் உடம்பு விட்டு மற்ரோர் உடம்பு எடுக்குமாறு

பன்னகம் அண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
துன்னுதோல் முட்டை யாக்கை துறந்துசெல் வதுவே போல
உன்னிய வுயிர்கள் தூல வுடல்விட்டு வானி னூடு
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல். 38

இருவினையின் இலக்கணம்

தன்மமோ டதன்ம வாகித் தானிரு பயனுந் தந்து
நன்மைதீ மையினு மின்பத் துன்பினு நாடிக் காண
முன்னமே ஆன்மா வின்தன் மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும். 39

இருவினை அநாதி யாதி இயற்றலால் நுகர்வால் அந்தம்
வருமலஞ் சார்ந்து மாயா உருவுகள் மருவி யார்த்துத்
தருசெயல் முறைமை யாலே தான்பல பேதங் காட்டி
அருவதாய் நின்ற ரன்தன் ஆணையின் அமர்ந்து செல்லும். 40

உயிர்கள் அச்சுமாறிப் பிறக்கும் எனல்

சங்கமம் தாப ரங்கள் தத்தம்கன் மத்துக் கீடா
அங்குரு யோனி மாறும் அச்சுமா ருதிங் கென்னின்
இங்குமா னுடரி யற்றும் புண்ணியத் தின்ப ஈட்டம்
அங்குவான் சுரர்ளாயோ நரர்களாய் அருந்து வாரோ. 41

நரர்களாய்த் துய்ப்ப ரென்னின் நரர்பதி சுரரு லோகம்
சுரர்களாய்த் துய்ப்ப ரென்னிற் சொன்னஅச் சழியு மாகும்
சுரர்களாய்ப் பலன்கள் துய்த்துத் தாமிங்குத் தோன்றும் போது
நரர்களாய்ப் பிறப்பர் ஞாலத் தமரராய் நண்ணிடாரே. 42

வண்டுக ளாகி மாறும் மயிர்க்குட்டி மற்ரோர் செந்துப்
பண்டைய உருவந் தானே வேட்டுவ னுய்ப்பி றக்கும்
கண்டுகொள் யோனி யெல்லாம் கன்மத்தால் மாறு மென்றே
கொண்டன சமய மெல்லாம் இச்சொல் நீ கொண்ட தெங்கே. 43

அகலியை கல்ல தானுள் அரிபல பிறவி யானுன்
பகலவன் குலத்திற் ரேன்றிப் பாரெலா முழுதும் ஆண்டு
நிகரிலா அரச னுகும் சிலந்திநீ டுலகம் போற்றச்
சகமதி லெலிதா னன்ரே மாவலி யாய்த்துத் தானே. 44

திருச்சிற்றம்பலம்

முதல்வனது சாப அனுக்கிரகமே வினைப்பயன்

செப்பினுய் மாற வேறு சிலர்விதி யாலே கன்மால்
வைப்புறு மியோனி எல்லாம் மாறிவந் திடாவிங் கென்னின்
எப்படி யானுஞ் செய்திக் கிறைகரி யாவ னென்றே
முற்பட மொழிந்தே னெல்லாம் முதல்வன்தன் விதியே யாகும். 45

அவ்வவ யோனி தோறும் அவ்வவ உலகந் தோறும்
செவ்விதின் அறிந்து கன்மம் சேர்ந்திடா சீவன் சேரா
இவ்வகை தம்மிற் சேர்வும் இறைசெய லாஞற் செய்த
எவ்வுரு வுந்தன் கன்மான் மாற்றுவன் இறைவன் தானே. 46

சூக்கும உடம்பினின்றும் பருவுடல் தோன்றும்

மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேநின் றென்னில்
கூறிய சூக்கு மத்தாம் உருவெனிற் குறியொன் றென்னின்
வேறொரு குறியா மாரம் வீரசங் கிலியு மாகும்
தேறுநீ யொருவ ஞலிச் செயலெலாம் சிவஞ லாகும். 47

தூலம் சூக்குமத்தினின்றும் வருவதற்கு உவமை

சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றிடா சூக்கு மத்தின்
ஆக்கியோ ருடல்கி டப்ப தின்றுட லாக்குந் தன்மைக்(கு)
கோக்கிய சத்தி யுண்டாய் உடல்தருங் காலம் உற்று
நீக்கிட மரம்பின் வேரோர் நீள்மர நிகழ்த்து மாபோல். 48

விதிப்படிச் சூக்கு மத்தே உருவரும் வினையா லிங்கே
உதித்திடா உருவ மாக உருவரு மரங்கள் வித்தில்
கதித்தெழு மரமும் வித்தும் கழியும்பின் அழியுஞ் சூக்க
மதிக்கெழு கலைகள் போல வருவது போவ தாமே. 49

ஒன்றற்கொன்று சூக்குமமாய் முடியும் காரணமுடிபு

தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல தற்கு
மூலமா னதற்கு மூல மோகினி அதன்மு தற்ருன்
மேலதாம் விந்து சத்தி சிவமிவை மிசையா மெல்லாம்
சாலவின் ருகும் ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்த போது. 50

மூன்ருமதிகரணம்

உலகப் படைப்பின் நோக்கம்

அரன்விதி யருள தென்றே யறைந்தனம் அதுவு முன்னே
தரைநர கருந்து றக்கம் தனுகர ஞதி யெல்லாம்
வருவதுஞ் செய்த நாதி மலங்களிம் மருந்தால் தீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங் கயமும் சூட்டும். 51

திருச்சிற்றம்பலம்

மலத்தை மலத்தாற் கழுவல்

எழுமுடல் கரண மாதி இவைமலம் மலம லத்தாற்
கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னில்
செழுநவ அறுவை சாணி உவர்செறி வித்த ழுக்கை
முழுவதுங் கழிப்பன்மாயை கொடுமல மொழிப்பன் முன்னோன். 52

மாயையின் இலக்கணம்

நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத் திற்கோர்
வித்துமாய் அசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமும்உ யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே. 53

மாயையின் காரியமாகிய தத்துவங்கள்

மாயையிற் கால மோடு நியதிபின் கலாதி தோன்றும்
ஆயஅக் கால மூன்ருய் ஆக்கியு மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாம் காலசங் கையினைப் பண்ணி
நாயக ஞானை யாலே நடத்திடுஞ் ஜகத்தை யெல்லாம். 54

நியதிபின் தோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்
அயர்விலாக் கலைபின் தோன்றி ஆணவம் ஒதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை
உயர்கலை யதனில் தோன்றி அறிவினை உதிக்கப் பண்ணும். 55

விச்சையின் அராகந் தோன்றி வினைவழி போகத் தின்கண்
இச்சையைப் பண்ணி நிற்கும் தொழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமுன் மருவி ஆன்மா
நிச்சயம் புருட ஞகிப் பொதுமையின் நிற்ப னன்றே. 56

வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையில் தோன்றித்
தருங்குண மூன்ருய் ஒன்றிற் ருன்மூன்ருய் மும்மூன் ருகும்
இருங்குண ரூப மாகி இயைந்திடு மெங்கும் ஆன்மாப்
பெருங்குண வடிவாய்ப் போக சாதனம் பெந்த மாமே. 57

சித்தமாம் அவ்வி யத்தம் சிந்தனை யதுவுஞ் செய்யுஞ்
புத்திஅவ் வியத்தில் தோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும். 58

ஆங்காரம் புத்தி யின்கண் உதித்தகந் தைக்கு வித்தாய்
ஈங்கார்தான் என்னே டொப்பார் என்றியான் என்ன தென்றே
நீங்காதே நிற்குந் தானும் மூன்றதாய் நிகழு மென்பர்
பாங்கார்பூ தாதி வைகா ரிகம்தைச தம்தா னென்றே. 59

திருச்சிற்றம்பலம்

மனமது தைச தத்தின் வந்தொரு பொருளை முந்தி
நினைவதுஞ் செய்தங் கைய நிலைமையின் நிற்கு மாங்கே
இனமலி சோத்தி ராதி கன்மஇந் திரிய மெல்லாம்
முனமுரை செய்த வைகா ரிகம்தரு மென்பர் முன்னோர். 60

நற்செவி துவக்குக் கண்நா நாசிஐந் தினையு நல்லோர்
புத்திஇந் திரிய மென்று புகன்றனர் இவைத மக்குச்
சத்தநற் பரிச ரூப இரதகந் தங்க ளைந்தும்
வைத்தனர் விடய மாக அடைவினின் மருவு மென்றே. 61

வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளெனநி னைந்தே
ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்தம்
ஊக்கமார் ஐந்து மைந்தின் தொழிலென ஓதி னரே. 62

கருவிகள் புறம், அகம், உள்அகம் எனப்படல்

வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவி யாகும்
ஓயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகும்
ஆய்வார்கட் கராக மாதி அவற்றினுட் கருவி யென்பர்
மாயாள்தன் வயிற்றி வற்ருல் துடக்குண்டு வாழு மான்மா. 63

அகப்பூதம், புரியட்டகம்

ஓசைநற் பரிச ரூப இரதகந் தங்க ளென்று
பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தின்
நேசஇந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டும்
ஆசைசேர் மனாதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான். 64

பூதமும் பூத குணங்களும்

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னாத்
தோற்றும்வான் வளிதீ நீர்மண் தொடக்கியே ஒன்றுக்கொன்றங்(கு)
ஏற்ற மாமோசை யாதி இருங்குண மியைந்து நிற்கும்
ஆற்றவே விடய பூதம் அங்காங்கி பாவத் தாமே. 65

இரந்தர மாகி வான்றான் இடங்கொடுத் திடும்ச லித்துப்
பரந்தவை திரட்டும் கால்தீச் சுட்டொன்று வித்தல் பண்ணும்
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செயும் நீர்மண் தானும்
உரந்தரு கடின மாகித் தரித்திடும் உணர்ந்து கொள்ளே. 66

மண்புனல் அனல்கான் வான்பால் வடிவுநாற் கோண மாகும்
தண்பிறை மூன்று கோணம் தகுமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மைகறுப்பொடு தூமவன்னம்
எண்தரும் எழுத்துத் தானும் லவரய வவ்வு மாமே. 67

குறிகள்வச் சிரத்தி ஞேடு கோகந தஞ்சு வத்தி
அறுபுள்ளி அமுத விந்து அதிதெய்வம் அயன்மா லாதி
செறிபுக ஸீச ஞேடு சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலைஐந் திற்கும் நிகழ்த்துவர் இந்த நீர்மை. 68

தத்துவம் முப்பத்தாறு எனல்

சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன ஐந்தும்
இத்தகை மையின்இ யம்பும் இவைமுப்பத் தொன்று மாகத்
தத்துவ முப்பத் தாருஞ் சைதன்னி யங்க ளேந்து
சித்தசித் தான்மா வொன்று முப்பதும் அசித்தே செப்பில். 69

ஐந்துசுத் தத்தின் கீழேழ் சுத்தாசுத் தம்அ சுத்தந்
தந்திடும் புமான்கீ ழெண்மூன் ருயதத் துவஞ்சீ வற்கு
வந்திடும் பிரேர காண்டம் மருவுபோக சயித்தி ரத்தோ(டு)
அந்தமில் அணுக்க ளுக்குப் போக்கிய காண்ட மாமே. 70

தத்துவ ரூப மாகும் தரும்அரு வுருவ மெல்லாம்
தத்துவம் தூல சூக்க பரங்களு மாகி நிற்கும்
தத்துவம் தன்னிற் சாரும் அணுக்கள்சா தாக்கி யத்தில்
தத்துவ சத்தம் சாரும் சகலமும் தத்து வங்காண். 71

தத்துவங்களின் ஒடுக்கமும் தோற்றமும்

தத்துவம் எண்மூன் றும்சென்(று) ஆன்மதத் துவத்தொ டுங்கும்,
வித்தையி ஞெடுங்கும் ஆறும் சிவத்தினி ஞெடுங்கும் மூன்றும்,
நித்ததத் துவம்இம் மூன்றும் என்பர்கள் இரண்டு நின்ற,
சுத்தமாம் சிவத்தொ டுங்கும் தோற்றமும் இதுபோ லாகும். 72

நான்காமதிகரணம்

சமயத் தெய்வங்களின் இடங்கள்

மொய்தரு பூத மாதி மோகினி அந்த மாகப்
பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மெய்தருஞ் சைவ மாதி இருமூன்றும் வித்தை யாதி
எய்துதத் துவங்க ளேயும் ஒன்றுமின் றெம்மி றைக்கே. 73

நவந்தரு பேதம்

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்தி ரன்தான் மால்அயன் ஒன்றிஞென்ருய்ப்
பவந்தரும் அருவ நாலிங் குருவநா லுபய மொன்ருய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்ப னென்பர். 74

திருச்சிற்றம்பலம்

சத்திபேதம் ஏழு

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னுகி
ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி
வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகும்
எத்திற நின்ருன் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள். 75

சிவம் சத்திகளுக்கு உள்ள சம்பந்தம்

சத்திதான் நாத மாதி தானுகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னுதி யாகும் தரும்வடி வான வெல்லாம்
சத்தியும் சிவமு மாகும் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே. 76

சிவம்சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே. 77

தத்துவ ஞானியின் இயல்பு

தனுகரண புவன போகம் தற்பரம் பந்தம் வீடென்(று)
அணுவினே டெல்லா மாகி அடைந்திடுந் தத்து வங்கள்
இனிதறிந் திவைநி விர்த்தி முதல்கலை யிடத்தே நீக்கி
நனிபர முணர்ந்தோ னந்தத் தத்துவ ஞானி யாவன். 78

தத்துவங்களால் உயிர் பெறும் பயன்

எல்லாமாய்த் தத்துவங்கள் இயைந்ததென் அணுவுக் கென்னில்
தொல்லாய கன்மமெல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற் கும்பின்
நில்லாமை முற்று வித்து நீக்கவும் கூடி நின்ற
பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்த தன்றே. 79

மூலமலத்தின் இயல்பு

ஒன்றதாய் அநேக சத்தி யுடையதாய் உடனுய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம் பினிற்களிம்பேய்ந்(து)
என்றும்அஞ் ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே. 80

மலம் மாயையின் வேறு

மலமென வேறென் றில்லை மாயாகா ரியம தென்னின்
இலகுயிர்க் கிச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும் மாயை
விலகிடும் மலமி வற்றை வேறுமன் றதுவே ருகி
உலகுடல் கரண மாகி உதித்திடும் உணர்ந்து கொள்ளே. 81

அறிவை மறைப்பது மலமே மாயை அன்று

மாயையே ஆன்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்கும்
தூயவெம் பரிதி தன்னைச் சுடர்முகில் மறைத்தாற் போலப்
போய்முகில் அகலச் சோதி புரிந்திடு மதுவே போலக்
காயமு மகல ஞானத் தொழில்பிர காச மாமே. 82

பரிதியை முகில் மறைப்பப் பாயொளி பதுங்கி ஞற்போல்
உருவுயிர் மறைக்கின் ஞானக் கிரியைகள் ஒளிக்கு மாகும்
கருதிடும் இச்சா ஞான காரியம் காயம் பெற்ருல்
மருவிடும் உயிர்க்குக் காயம் வந்திடா விடின்மறைப்பே. 83

போதகா ரியம்ம றைத்து நின்றது புகல்ம லங்காண்
ஓதலாம் குணமு மாக உயிரினுள் விரவ லாலே
காதலால் அவித்தை சிந்தத் தரும்கலை யாதி மாயை
ஆதலா லிரண்டுஞ் சோதி இருளென வேரு மன்றே. 84

மலம் உயிரின் குற்றம், குணம் அன்று

புருடன்தன் குணம் அவித்தை யெனில்சடம் புருட ஞகும்
குருடன்தன் கண்ணின் குற்றம் கண்ணின்தன் குணமோ கூருய்
மருள்தன்றன் குணம தாகி மலம்அசித் தாகி நிற்கும்
தெருள்தன்றன் குணம தாகிச் சித்தென நிற்கும் சீவன். 85

மும்மலங்களின் வேறுபாடு

மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போல்
மம்மர்செய் தணுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி ஞேடும் இருமல மிசைப்பன் இன்னும். 86

ஐம்மலம் எனும் வழக்கு

மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்றும்
ஏயும்மும் மலங்கள் தத்தந் தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்
ஆய்வர்இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும். 87

மலம்மாயை கன்மம் மாயே யம்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பில் தங்கிஇத் தரைகீழ் மேலும்
நிலையாத கொள்ளி வட்டங் கறங்கென நிமிடத் தின்கண்
அலமாரும் இறைவ ஞணை யால்உயிர் நடக்கு மன்றே. 88

திருச்சிற்றம்பலம்

பிறவி வேறுபாடும் அவற்றின் நீங்குமாறும்

அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயு சத்தோ(டு)
எண்தரு நாலெண் பத்து நான்குநூ ருயி ரத்தால்
உண்டுபல் யோனி யெல்லாம் ஒழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரி யங்காண். 89

நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தா னுகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணெ ணுதே. 90

சைவத்தின் வரும் அருமை

வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மை யோடும் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெற லரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னுனைப் போற்றுவார் அருள்பெற் ருரே. 91

சிவ வழிபாடே மக்கள் பிறவியின் பயன்

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனைஅர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார். 92

யாக்கை நிலையாமை

கருவினுள் அழிவ தாயும் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனுய் அழிவ தாயும்
தருணனுய் அழிவ தாயும் தான்நரைத் தழிவ தாயும்
உருவமே யழிவே யானல் உள்ளபோ தேபார் உய்ய. 93

நுகர்ச்சியின் நிலையாமை

ஒருபுலன் நுகரும் போதங் கொன்றில்லை ஒன்றன் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடும் எல்லாம் மாறும்
ஒருபொழு துணரி னுண்டாம் அல்லதிவ் வல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும்பின் மாயு மன்றே. 94

அரிசனம் பூசி மாலை அணிந்துபொன் னுடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட
வரிசின்ன மூதத் தொங்கல் வந்திட வுணர்வு மாண்டு
பெரியவர் பேச்சு மின்றிக் கிடத்தலால் பிணத்தோ டொப்பர். 95

பிணத்தினை ஒத்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர் உங்க ளுடலுயிர் உணர்வு மெல்லாம்
கணத்திடைத் தோன்றி மாயும் காயமென் றறிந்தொ ருக்கால்
வணக்குறீர் அரனை என்றும் வானவர் வணங்க வைப்பன். 96

மூன்றுஞ் சூத்திரம்

உயிரின் உண்மை

உயிரெனப் படுவ திந்த உடலின்வே றுளதாய் உற்றுச்
செயிருறும் இச்சா ஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வுறும் இன்பத் துன்பப் பலங்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடும் அஞ்ச வத்தைப் படும்உண்மை துரியா தீதம். 1

உயிர் பருவுடம்பின் வேறு

உடலின்வே றுயிரேன் இந்த உடலன்றே உணர்வ தென்னின்
உடல்சவ மான போதும் உடலினுக் குணர்வுண் டோதான்
உடலினின் வாயுப் போனால் உணர்ச்சியின் றுடலுக்கென்னின்
உடலினின் வாயுப் போகா துறக்கத்தும் உணர்வ தின்றே. 2

உயிர் ஐம்பொறியின் வேறு

அறிவதைம் பொறியே யென்னின் உறக்கத்தி னறியாவாகும்
அறிவதும் ஒன்றொன் றாக ஒன்றொன்றாய் அறியு மென்னின்
அறிவுக ளொன்றை யொன்றங் கறிந்திடா ஐந்தையுங் கொண்(டு)
அறிவதொன் றுண்ட தான்மா ஐம்பொறி அறிந்தி டாவே. 3

உயிர் உயிர்ப்பின் வேறு

அறிந்திடும் பிராண வாயு அடங்குதல் விடுதல் செய்தால்
அறிந்திடா துடலு றக்கத் தறிவின்மை கரண மின்மை
அறிந்திடு முதலி யாகின் அதுநிற்கக் கரணம் போகா
அறிந்திடும் பிராணன் தன்னை அடக்கியும் விட்டும் ஆன்மா. 4

இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்

உயிரின் பொதுவியல்பு

உணர்வன கரண மென்னின் ஒன்றையொன் றுணரா வெவ்வே(று)
அணைதருஞ் செயல்கள் நான்கும் அறிந்தவை அடக்கி ஆக்கிப்
புணருமுட் கரண மாக்கிப் புறக்கரு வியினும் போக்கி
இணைதரு மிவற்றின் வேருய் யானென தென்ப தான்மா. 1

முதலதிகரணம்

உயிர் அகக் கரணங்களின் வேறு; பசு, சிவஞானங்கள்

கருவியாம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும்
மருவிஆன் மாவே என்ன வரும்தீப மெனத்தெ ரிந்தாங்(கு)
ஒருவியான் மாவி னுண்மை உணர்ந்தவர் தமையு ணர்ந்தோர்
தருமிது பசுஞா னம்பின் சிவஞானந் தனக்கு மேலாம். 2

பிரணவ கலைகள்

அவ்வுட னுவ்வு மவ்வும் மனம்புத்தி அகங்கா ரங்கள்
செவ்விய விந்து நாதஞ் சித்தமோ டுள்ள மாகும்
ஒவ்வெனும் எழுத்தாம் ஐந்தும் உணர்வுதித் தொடுங்குமா
பவ்வமும் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந் தோன்றும். 3

அயன்அரி அரனு மீசர் சதாசிவம் அதிதெய் வங்கள்
உயவரும் அவ்வோ டுவ்வு மவ்விந்து நாதங் கட்குப்
பயனுறும் அஞ்சில் ஆன்மாப் பரவிடில் அசித்தாம் பார்க்கில்
சயமுறு வளியி ரண்டும் தவிர்த்துறில் தானுந் தோன்றும். 4

உயிர் பல்பொருட் கூட்டம் அன்று

ஆன்மாவின் வடிவு தானே அநேகார்த்தக் கூட்ட மென்னில்
பார்ப்பார்கட் கான்மா இன்ருய்ப் பலபொரு ளுண்மையாகும்
சேர்ப்பாய பலவே உண்மை என்றிடில் சென்றி வற்றை
ஓர்ப்பான்வே றுணர்வோர்க் கெல்லாம் உணர்பொருள் வேறதாமே. 5

இரண்டாம் அதிகரணம்

உயிர் பிரம்மத்தின் பரிணமம் அன்று

அறிவிச்சை செயல்களெல்லாம் அடைந்தனல் வெம்மை யும்போல்
குறியுற்றங் கேகா நேக குணகுணி பாவ மாகி

நெறியுற்று நிற்கு மென்னில் நிகழ்புலன் கரண மெல்லாம்
செறிவுற்றங் கறிவு கொள்ள வேண்டுமா சீவ ஞர்க்கே. 6

உயிர் சாங்கியர் கூறும் அறிவு மாத்திரமும் அன்று

குணங்களை யின்றி யொன்றும் குறியு டைத்தான்மா வென்னின்
இணங்கிடா இச்சா ஞானக் கிரியைகள் இவையு டறக்கட்
பிணங்கிடுஞ் சந்நி திக்கண் எனிற்பிணத் துறக்கத் தின்ரும்
உணங்கிடும் கரண மென்னில் சந்நிதி ஒழிந்த தன்றே. 7

சந்நிதி குணம தாகும் தானென்போல் என்னிற் காந்தம்
முன்னிரும் பென்ரு யீர்க்கு முறைமையுண் டகற்ற லின்ரும்
உன்னுத லொடுங்கல் ஓடல் இருத்தலே கிடத்தல் நிற்றல்
என்னுமித் தொழில்கள் மற்றும் இயற்றுவ தான்மா வென்னே. 8

உயிர் உருவன்று

உருவுயி ரென்னின் இந்த உடலினுட் காண வேண்டும்
வருவது பரிணு மத்தாய் அநித்தமாம் பூத மாகும்
கருவினில் நுழையு மாறும் காட்டிட வேண்டும் கண்ணின்
மருவிடா தென்னின் உன்றன் வாயினல் உருவன் றென்னே. 9

சூக்கும உருவ தென்னில் தூலகா ரணம் தாகும்
ஆக்கிய மஞதி தன்மாத் திரைவடி வசேத னம்பின்
நீக்கிய சூக்கு மத்தே நிற்பதோ ருருவுண் டென்னின்
ஆக்கிடும் உருவமெல்லாம் அசித்துமாய் அநித்த மாமே. 10

உயிர், கௌளர் கூறும் அருவுருவும் அன்று

அருவுரு வென்னில் ஆன்மா அருவுரு வாவ தின்ரும்
உருவரு வாகா தாகும் ஒருபொருட் கிரண்டு தன்மை
வருவது மில்லை காட்ட வன்னிபோல் மருவு மென்னின்
உருவமுங் காண வேண்டும் உண்மையும் ஒழிந்து போமே. 11

சந்திரன் வடிவு போலத் தான்அரு வுருவ மென்னின்
வந்துநங் கண்ணிற் ரூனறும் வடிவுள தாமு யிர்க்கும்
இந்தவூ னுருவந் தானுய் எழுவது முயிரே யென்னில்
பந்தமாய் அசித்தா யான்மாப் பவுதிக மாகு மன்றே. 12

உயிர் பாதஞ்சலர் கூறும் அருவும் அன்று

அருவவி காரி யான்மா ஆகாயம் போல வென்னின்
உருவினைக் கட்டி யாட்டி ஓட்டிமீட் டுலாவப் பண்ணி

மருவிநிற் பித்தி ருத்திக் கிடத்திமண் புரட்டி மற்றும்
பெருவிகா ரங்க ளெல்லாம் தருவதென் பேசி டாயே. 13

உயிர் வைசேடிகர் முதலியோர் கூறும் அசித்தும் அன்று

அசித்தெனின் உணராதான்மா அசித்துச்சித் தாகுமென்னின்
அசித்துச்சித் தாகா தாகும் சித்தசித் தாவ தில்லை
அசித்தொரு புறமா யொன்றில் சித்தொரு புறமாய்நில்லா(து)
அசித்துருச் சித்தே யென்னின் அசித்தடைந் தறிவ தின்றும். 14

உயிர் பாஞ்சராத்திரிகள் கூறும் அனுபரிமாணமும் அன்று

உயிரினை அணுவ தென்னின் உடல்பல துவார மோடும்
பயில்வுறக் கட்டு ணுது பாரமும் தரித்துச் செல்லா(து)
அயர்வுறும் அசித்தாய்ப் பூத அணுக்களி னென்ற தாகும்
இயல்புறும் அவய வத்தால் அணுவுரு இறக்கு மன்றே. 15

உடலினின் ஏக தேசி உயிரெனின் உருவாய் மாயும்
படர்வுறு மறிவின் றெங்கும் சுடரொளிப் பண்ப தென்னில்
சுடர்தொடிற் சுடுவ தெங்கும் தொட்டிடம் அறிவுண் டாகும்
அடர்புலன் இடத்து மொக்க அறிவெழ வேண்டுமன்றே. 16

அது சமணர் கூறும் உடம்பளவினதும் அன்று

உருவினில் நிறைந்து நின்றங் குணர்ந்திடும் உயிர தென்னின்
மருவிடா துறக்கம் வாயில் அறிவொக்க வழங்க வேண்டும்
பெருகிடும் சுருங்கும் போதம் பேருடல் சிற்று டற்கண்
வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்துபின் மாயுமன்றே. 17

அது பட்டாசாரியன் கூறும் வியாபகமும் அன்று

எங்குந்தான் வியாபி யாய்நின் றுணரும்இவ் வான்மா வென்னில்,
தங்கிடும் அவத்த போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்,
பங்கமார் புலனென் றென்றுய்ப் பார்த்திடல் பகரல் வேண்டும்,
இங்கெலாம் ஒழிந்தான் நிற்ப தெங்ஙனம் இயம்பல் வேண்டும். 18

அஃது ஐக்கவாதி கூறுமாறு சுத்தசித்தும் அன்று

சுத்தமாம் ஆன்ம சித்தைத் துகளுடல் மறைத்த தென்னின்
வைத்துரு துடற்கண் வாயில் கரணங்கள் வழியால் ஞானம்
ஒத்துறும் மலமற் றுலும் உறுமலம் வீடு மின்றும்
பெத்தமு மடையான் முத்த னுய்ப்பிர காச னுமே. 19

திருச்சிற்றம்பலம்

சித்தாந்திகள் கூறும் ஆன்மலக்கணம் கேவல அவத்தை

அசித்தரு வியாப கம்போல் வியாபகம் அருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய ளுகி
நசித்திடா ஞானச் செய்தி அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய ளுகிப் பசுவென நிற்கு மான்மா. 20

சகலாவத்தை

மாயையின் வயிற்றுள் மன்னி வருஞ்செயல் ஞான மிச்சை
ஏயுமக் கலாதி மூன்ருல் ஏகதே சத்தி னேய்ந்திங்(கு)
ஆயுமுக் குணங்கள் அந்தக் கரணங்க ளாதி யெல்லாம்
காயபெத் தங்க ளாகிக் கலந்துடன் நிற்கு மான்மா. 21

சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள அவத்தையுள் தங்கி யெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்க ளெல்லாம் அருந்தியும் நிற்கு மான்மா. 22

ஆன்மா ஐங்கோசத்தில் ஆர்ப்புண்ணல்

மருவா னந்தம் விஞ்ஞான மனேபி ராணன் அன்னமயம்
உருவாந் தன்மை யுண்டாய்மு ஒன்றுக் கொன்று சூக்குமமாய்
வருமாம் அன்ன மயம்பற்றி மாயை முதற்கா ரணமாகும்
அருவா யான்மா ஐங்கோசத் தார்ப்புண் டவற்றின் அகம் புறமாம். 23

அதனை உவமையின் உணர்த்தல்

தோற்பாவைக் கூத்தும் தொல்லை மரப்பாவை இயக்கமும் சீர்த்
தேர்ப்பாரிற் செலவும்வேருய்ச் செலுத்துவோர் செய்திதானும்
பார்ப்பாய வேடங் கட்டி ஆடுவோர் பரிசு போலும்
ஆர்ப்பாய காயந் தன்னை ஆன்மாநின் ருட்டு மாறே. 24

உயிர் ஐங்கோசத்தின் வேறு என்றற்கு அனுபவம்

என்னுடல் பொறிபி ராணன் கரணம்என் னுணர்வென் றக்கால்
தன்னின்வே ருகும் நீஎன் றன்மனை யென்ற வெல்லாம்
நின்னின்வே ருகும் என்னின் நீங்கிடா இவையிங் கென்னின்
உன்னின வாகும் நீயாம் உகிர்மயிர் உகவுங் காண்டி. 25

பொன்னணி யாடை மாலை போதுமே லான போதிங்(கு)
என்னணி யானென் றுன்னி இருந்தனை பிரிந்த போது
நின்னணி நீயு மல்ல வாயினை காய நின்னில்
அன்னிய மாகும் உன்னை அறிந்துநீ பிரிந்து பாரே. 26

திருச்சிற்றம்பலம்

எனது ஆன்மா என்னும் வழக்குப் பற்றிய ஆய்வு

உடலியா னல்லேன் இந்த உணர்வுயான் அல்ல வான
கடனியா தென்னின் வேறு கண்டுணர் வென்ன தென்கை
இடரிலா என்ற ளுன்மா என்றபோ தான்மா வேறே
திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்ப லேகாண். 27

புந்தியை மனம தென்று மனமது புந்தி யென்றும்
சிந்தையைச் சீவ னென்றும் சீவனைச் சிந்தை யென்றும்
முந்தனை யான்மா வென்றும் ஆன்மாவை முந்த னென்றும்
வந்திடு மென்ற ளுன்மா என்றது மற்றொன் றைக்காண். 28

கோசங்களை உபநிடதம் ஆன்மா எனல் இலக்கணை வழக்கு

அறிவுடல் சிந்தை யான்மா அணைதலால் ஆன்மா வென்பர்
எறிசுடர் விளக்கி ருக்கு மிடத்தையும் விளக்கென்றுற்போல்
பொறிபுலன் கரண மெல்லாம் புலப்படும் அபேத மாகிப்
பிறிதரா தறிவ தான்மா அறிபொருள் பின்ன மாமே. 29

உணர்த்த உணர்வது ஆன்மா

கண்டுணர் புருடன் வேறு கனவுகண் டொடுங்கிக் காயம்
உண்டியும் வினையு மின்றிக் கிடந்துயிர்த் திடவு ணர்ந்து
கண்டிடுங் கனவுஞ் சொல்லி ஒடுக்கமுங் கருதி வேறாய்
உண்டியும் வினையும் உற்றிங் குணர்த்திட உணரா நிற்கும். 30

புருடனே அறிவ ளுகில் பொறிபுல ளுதி போதம்
தருவதென் அறிவு மாயா தனுகர ணுதி பற்றி
வருவதிங் கநாதி யாக மலத்தினின் மறைந்து நிற்பன்
அருவனுய் இவற்றோ டாளும் அமைச்சரும் அரசும் போல்வன். 31

மூன்றும் அதிகரணம்

ஆன்மா ஐந்தவத்தை உறுதல்

படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லில்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்னர்
அடைதருந் தனியே அந்தப் புரத்தினில் அதுபோ லான்மா
உடலினின் அஞ்ச வத்தை உறுமுயிர் காவ லாக. 32

அவத்தைகளில் தொழிற்படும் கருவிகள்

சாக்கிர முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து களத்தினிற் சுழுமுனை மூன்று

நீக்கிய இதயந் தன்னில் துரியத்தி லிரண்டு நாபி
நோக்கிய துரியா தீதம் நுவலின்மூ லத்தி ஞென்றே. 33

கீழால் அவத்தை மேலால் அவத்தை மேலே அவத்தை

இருவகைச் சாக்கி ராதி அவத்தைக ளியல்பு தானும்
ஒருவகை கீழே நூக்கி உற்பவங் காட்டு மொன்று
பெருகமேல் நோக்கித் தீய பிறப்பறுந் திடுமி யோகில்
தருவதோர் சமாதி தானும் தாழ்ந்துபின் சனனஞ் சாரும். 34

மாசகலமும் சுத்தாவத்தையும்

அறிதரு முதல வத்தை அடைதரு மிடத்தே ஐந்தும்
செறிதருங் கரணந் தன்னில் செயல்தொறுங் கண்டு கொள்நீ
பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற அருளா லாங்கே
குறியொடும் அஞ்ச வத்தை கூடுவர் வீடு கூட. 35

மாசகலத்தில் சுத்ததத்துவம் தொழிற்படுதல்

ஐந்துசாக் கிரத்தின் நான்கு கனவினில் சுழுனே மூன்று
வந்திடுந் துரியந் தன்னின் இரண்டொன்று துரியா தீதம்
தந்திடும் சாக்கி ராதி அவத்தைகள் தானந் தோறும்
உந்திடுங் கரணந்தன்னில் செயல்தொறு முணர்ந்து கொள்ளே.36

காரண அவத்தை மூன்று

கேவல சகல சுத்தம் என்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய் பொறிக ளெல்லாம்
காவலன் கொடுத்த போது சகலஞ மலங்க ளெல்லாம்
ஓவின போது சுத்த முடையன்உற் பவந்து டைத்தே. 37

அறிவிலன் அமூர்த்தன் நித்தன் அராகாதி குணங்க ளோடும்
செறிவிலன் கலாதி யோடும் சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி ஞேடும் வியாபிகேவலத்தில் ஆன்மா. 38

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயல் மருவிச் சத்த மாதியாம் விடயம் தன்னில்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு ழன்று
திரிதரும் சகல மான அவத்தையிற் சீவன் சென்றே. 39

இருவினைச் செயல்க ளொப்பின் ஈசன்தன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்தன் பாதம் பெறுவது சுத்த மாமே. 40

திருச்சிற்றம்பலம்

ஐந்தாஞ் சூத்திரம்

முதல்வனது உபகாரம்

பொறிபுலன் கரண மெல்லாம் புருடனுல் அறிந்தான் மாவை
அறிதரா அவையே ஆன்மாக்க ளனைத்து மெங்கும்
செறிதரும் சிவன்ற ஞலே அறிந்திடும் சிவனைக் காணு
அறிதரும் சிவனே யெல்லாம் அறிந்தறி வித்து நிற்பன். 1

இரண்டாம் அதிகரணம்

வினைக்கு ஏற்றபடி அறிவு விளங்கும்

இறைவனே அறிவிப் பானேல் ஈண்டறி வெவர்க்கும் ஒக்கும்
குறைவதி கங்கள் தத்தம் கன்மமேற் கோமான் வேண்டா
முறைதரு செயற்குப் பாரும் முளரிகட் கிரவி யும்போல்
அறைதரும் தத்தங் கன்மத் தளவினுக் களிப்பன் ஆதி. 2

உயிர் அறிவிக்க அறியும் என்றற்குக் காரணம்

அறிந்திடும் ஆன்மா வொன்றை ஒன்றினுல் அறித லானும்
அறிந்தவை மறத்த லானும் அறிவிக்க அறித லானும்
அறிந்திடுந் தன்னை யுந்தான் அறியாமை யானுந் தானே
அறிந்திடும் அறிவன் அன்ரும் அறிவிக்க அறிவ னன்றே. 3

கருவியால் பொருளால் காட்டால் காலத்தால் கருமந் தன்னுல்
உருவினுல் அளவால் நூலால் ஒருவரா லுணர்த்த லானும்
அருவனுய் உண்மை தன்னில் அறியாது நிற்ற லானும்
ஒருவனே எல்லாத் தானும் உணர்த்துவன் அருளி னுலே. 4

கருவியும் பொருளும் காட்டும் காலமும் கன்மந் தானும்
உருவமும் அளவும் நூலும் ஒருவரு முணர்த்த லின்றி
அருவனு யுலக மெல்லாம் அறிந்தவை யாக்கி வேருய்
ஒருவனே உயிர்கட் கெல்லாம் உயிருமாய் உணர்த்தி நிற்பன். 5

உயிர் அறிவிக்க அறியும் என்றற்கு உரையளவை

இறைவன்தன் சந்நி திக்கண் உலகின்றன் சேட்டை யென்னும்
மறைகளும் மறந்தாய் மாயை மருவிடான் சிவன வன்கண்
உறைதரா தசேத னத்தால் உருவுடை உயிர்கட் கெல்லாம்
நிறைபரன் சந்நி திக்கண் நீடுணர் வுதிக்கு மன்றே. 6

திருச்சிற்றம்பலம்

அதி சூக்கும பஞ்சகிருத்தியம்

உலகமே உருவ மாக யோனிகள் உறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன். 7

தெரிந்துகொண் டொரோவொன் ருகச் சென்றைந்து புலனும் பற்றிப்,
புரிந்திடும் உணர்வி ஞேடும் போகமுங் கொடுத்தி யோனி,
திரிந்திடு மதுவுஞ் செய்து செய்திகண் டுயிர்கட் கெல்லாம்,
விரிந்திடும் அறிவுங் காட்டி வீட்டையும் அளிப்பன் மேலோன். 8

சத்தியின் இயல்பு

அருளது சத்தி யாகும் அரன்தனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை அந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்(கு)
இருளினை ஒளியா லோட்டும் இரவியைப் போல ஈசன். 9

ஆறுஞ் சூத்திரம்

முதல்வனது தன்னியல்பு

அறிவுறும் பொருளோ ஈச னறிவுரு தவஞே வென்னின்
அறிபொருள் அசித்த சத்தாம் அறியாத தின்ரும் எங்கும்
செறிசிவம் இரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்
நெறிதருஞ் சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றிடாவே. 1

முதல் அதிகரணம்

அறிவிஞல் அறிந்தவை அசத்து

ஆவதாய் அழிவ தாகி வருதலால் அறிவு தானும்
தாவலால் உலகு போகம் தனுகர ணுதி யாகி
மேவலால் மலங்க ளாகி விரவலால் வேறு மாகி
ஓவலால் அசத்தாம் சுட்டி உணர்பொரு ளான வெல்லாம். 2

மண்தனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வும்
எண்தரு பூத பேத யோனிகள் யாவு மெல்லாம்
கண்டஇந் திரமா சாலம் கனுக்கழு திரதங் காட்டி
உண்டுபோல் இன்ரும் பண்பின் உலகினை அசத்து மென்பர். 3

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் அதிகரணம்

எவ்வாற்ருனும் அறியாத பொருள் இல்லது

உணராத பொருள்சத் தென்னின் ஒருபய னில்லைத் தானும்
புணராது நாமும் சென்று பொருந்துவ தின்ரும் என்றும்
தணவாத கரும மொன்றும் தருவது மில்லை வானத்(து)
திணரார்பூந் தொடையு மியாமைக் கெழுமயிர்க் கயிறும் போலும். 4

மூன்ரும் அதிகரணம்

உணர்விறந்து உணர்வது சத்து

தத்துவம் சத்(து) அசத்துச் சதசத்து மன்றென் ருலென்
உய்த்துணர்ந் துண்டோ இன்ரே என்றவர்க் குண்டென் ரேதில்
வைத்திடும் சத்தே யாகும் மனத்தொடு வாக்கி றந்த
சித்துரு அதுஅ சித்தாம் மனத்தினுல் தேர்வ தெல்லாம். 5

அறிபொருள் அசித்தாய் வேரும் அறிவுருப் பொருள்சத்தென்னின்
அறிபவன் அறியா ஞகில் அதுஇன்றுபயனு மில்லை
அறிபவன் அருளி ஞலே அந்நிய மாகக் காண்பன்
அறிபொரு ளறிவாய் வேருய் அறிவரு ளுருவாய் நிற்கும். 6

சிவசத்து பாவிக்க வருவதன்று

பாவிப்ப தென்னிற் பாவம் பாவகங் கடத்திற் பாவம்
பாவிக்கும் அதுநா னென்னில் பாவகம் பாவங் கெட்டுப்
பாவிப்ப தென்னிற் பாவம் பாவனை இறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும் பரம்பரன் அருளி ஞலே. 7

அன்னிய மிலாமை யானும் அறிவினுள் நிற்ற லானும்
உன்னிய வெல்லாம் உள்நின் றுணர்த்துவன் ஆத லானும்
என்னதி யானென் ரேதும் இருஞ்செருக் கறுத்த லானும்
தன்னறி வதனுற் காணும் தகைமையன் அல்லன் ஈசன். 8

சிவத்தை ஒன்றி நின்றுணரும் ஆன்மா சிவம் எனப்படுதல்

ஒன்றெனு மதனுல் ஒன்றென் றுரைப்பதுண் டாகை யாலே
நின்றனன் வேருய்த் தன்னின் நீங்கிடா நிலைமை யாலே
பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமையன் அறிவி னுள்ளே
என்றுநின் றிடுத லாலே இவன்அவ னென்ன லாமே. 9

திருச்சிற்றம்பலம்

சாதனவியல்

ஏழாஞ் சூத்திரம்

ஆன்மாவின் உண்மையியல்பு

அனைத்துஞ்சத் தென்னின் ஒன்றை அறிந்திடா தசத்தா லென்னின்,
முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிருள் இரவி முன்போல்,
நினைப்பதிங் கசத்தே யென்னில் சத்தின் முன்நிலாமை யானும்,
தனைக்கொடொன் றுணர்த லானும் தானசத் துணரா தன்றே. 1

சத்தசத் தறிவ தான்மாத் தான்சத்தும் அசத்து மன்று
நித்தனுய்ச் சதசத் தாகி நின்றிடும் இரண்டின் பாலும்
ஒத்துட னுதித்து நில்லா துதியாது நின்றி டாது
வைத்திடுந் தோற்றம் நாற்றம் மலரினின் வருதல் போலும். 2

சிவம், ஆன்மா, மலம் அநாதியே வியாபக வியப்பியமாதல்

சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபால் அசத்தஞ் ஞானம்
ஒத்துரு குற்ற மெல்லாம் உற்றிடு முயிரின் கண்ணே
சத்துள போதே வேரும் சதசத்தும் அசத்து மெல்லாம்
வைத்திடும் அநாதி யாக வாரிநீர் லவணம் போலும். 3

உயிர் தூல சித்து, சிவம் அதிசூக்கும சித்து

அறிவிக்க அறித லானும் அழிவின்றி நிற்ற லானும்
குறிபெற்ற சித்தும் சத்தும் கூறுவ துயிருக் கீசன்
நெறிநித்த முத்த சுத்த சித்தென நிற்பன் அன்றே
பிறிவிப்பன் மலங்க ளெல்லாம் பின்னுயிர்க் கருளினுலே. 4

எட்டாஞ் சூத்திரம்

முதல்வன் பக்குவான்மாவுக்கு உணர்த்து முறைமை

மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்(து)அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானுக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்தொல் லுயிரை
மன்னும்அருட் குருவாகி வந்(து)அவரின் நீக்கி
மலம்அகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன். 1

திருச்சிற்றம்பலம்

முதலதிகரணம்

மூவகை உயிர்களுக்கு அருளும்முறை

உரைதரும்இப் பசுவர்க்கம் உணரின் மூன்றும்
உயரும்விஞ் ஞானகலர் பிரளயா கலர்சகலர்
நிரையின்மலம் மலங்கன்மம் மலங்கன்ம மாயை
நிற்கும்முத லிருவர்க்கு நிராதார மாகிக்
கரையில்அருட் பரன்துவிதா சத்திநிபா தத்தால்
கழிப்பன்மலஞ் சகலர்க்குக் கன்ம வொப்பில்
தரையிலா சான்மூர்த்தி ஆதார மாகித்
தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்திநிபா தத்தால். 2

தீக்கையின் வகைகள்

பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகம்மா னதமும்
அலகில்சாத் திரம்யோக மௌத்தி ராதி
அநேகமுள அவற்றினௌத் திரிஇரண்டு திறனும்
இலகுஞா னங்கிரியை யெனஞான மனத்தால்
இயற்றுவது கிரியைஎழிற் குணட்மண்ட லாதி
நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதிதான் இன்னும்
நிர்ப்பீசஞ் சபீசமென இரண்டாகி நிகழும். 3

பாலரொடு வாலீசர் விருத்தர்பனி மொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப் பண்ணும்
சீலமது நிர்ப்பீசம் சமயா சாரம்
திகழ்சுத்தி சமயிபுத் திரர்க்கு நித்தத்(து)
தேலுமதி காரத்தை இயற்றித் தானும்
எழில்நிரதி காரையென நின்றிரண்டாய் விளங்கும்
சாலநிகழ் தேகபா தத்தி னேடு
சத்தியநிர் வாணமெனச் சாற்றுங் காலே. 4

ஓதியுணர்ந் தொழுக்கநெறி இழுக்கா நல்ல
உத்தமர்க்குச் செய்வதுயர் பீசமிவர் தம்மை
நீதியினுல் நித்தியநை மித்திககா மியத்தின்
நிறுத்திநிரம் பதிகார நிகழ்த்துவதும் செய்து
சாதகரா சாரியரும் ஆக்கி வீடு
தருவிக்கும் உலோகசிவ தருமிணியென் றிரண்டாம்
ஆதலினுன் அதிகாரை யாம்சமயம் விசேடம்
நிருவாணம் அபிடேகம் இவற்றடங்கு மன்றே. 5

திருச்சிற்றம்பலம்

அத்துவ சோதனை

அழிவிலாக் கிரியையினுன் ஆதல்சத்தி மத்தான்
ஆதல்அத்து வாசுத்தி பண்ணிமல மகற்றி
ஒழிவிலாச் சிவம்பிரகா சித்தற்கு ஞானம்
உதிப்பித்துற் பவந்துடைப்பன் அரன்ஒருமூ வர்க்கும்
வழுவிலா வழிஆரும் மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
கழிவிலா துரைத்தமுறை யொன்றினென்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணும். 6

மந்திரங்கள் முதல் ஐந்தும் கலைஐந்தின் வியாத்தி
மருவும்மந் திரமிரண்டு பதங்கள் நாலேழ்
அந்தநிலை யெழுத்தொன்று புவனம் நூற்றெட்(டு)
அவனிதத் துவமொன்று நிவிர்த்திஅயன் தெய்வம்
வந்திடுமந் திரம்இரண்டு பதங்கள் மூவேழ்
வன்னங்கள் நாலாறு புரம்ஐம்பத் தாறு
தந்திடும்தத் துவங்கள்இரு பத்து மூன்று
தரும்பிரதிட் டாகலைமால் அதிதெய்வம் தானும். 7

வித்தையின்மந் திரமிரண்டு பதம்நா லைந்து
விரவும்எழுத் தேழுபுரம் இருபத் தேழு
தத்துவமு மோரேழு தங்குமதி தெய்வம்
தாவில்உருத் திரனுகும் சாந்தி தன்னில்
வைத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதி னென்று
வன்னமொரு மூன்றுபுரம் பதினெட் டாகும்
உத்தமமாம் தத்துவமும் ஒருமூன் ருகும்
உணரில்அதி தேவதையும் உயரீச னுமே. 8

சாந்தியா தீதகலை தன்னின்மந் திரங்கள்
தாம்மூன்று பதமொன்(று)அக் கரங்கள்பதி னாறு
வாய்ந்தபுரம் மூவைந்து தத்துவங்க ளிரண்டு
மருவும்அதி தேவதையும் மன்னுசதா சிவராம்
ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினென்று பதங்கள்
எண்பத்தொன் றக்கரங்கள் ஐம்பத்தொன் ருகும்
ஆய்ந்தபுரம் இருநூற்றே டிருபத்து நாலாம்
அறிதருதத் துவம்முப்பத் தாறுகலை ஐந்தே. 9

முதல்வன் அருளும் முறைமையைத் தொகுத்துக் கூறல்

மூன்றுதிறத் தணுக்கள்செயும் கன்மங் கட்கு
முன்னிலையாம் மூவிரண்டாம் அத்து வாவின்
ஆன்றமுறை அவைஅருத்தி அறுத்துமல முதிர்வித்(து)

அரும்பருவம் அடைதலுமே ஆசா ணுகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகளறுத்தங் கத்துவாத் தொடக்கறவே சோதித்(து)
தேன்றஉடற் கன்மம்அந பவத்திஞல் அறுத்திங்(கு)
இனிச்செய் கன்ம மூலமல ஞானத் தால்இடிப்பன். 10

இரண்டாம் அதிகரணம்

உயிர்கள் உய்யும் வகை

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்ருல் வைசத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர். 11

முத்தி வகை

இம்மையே ஈரெட்டாண் டெய்திஎழி லாரும்
ஏந்திழையார் முத்தியென்றும் இருஞ்சுவர்க்க முத்தி
அம்மையே யென்றமுத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை யென்றும்அட்ட குணமுத்தி யென்றும்
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
விவேகமுத்தி யென்றும்தன் மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றும்செப் புவர்கள்
சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே. 12

சைவமே தலையாய நெறி

ஓதுசம யங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்ருேடொன் ருெவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியிஞல் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலிஞல் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும். 13

திருச்சிற்றம்பலம்

வேதாகமங்களே முதனூல்கள்

அருமறையா கமமுதனூல் அனைத்தும்உரைக் கையினுன்
அளப்பரிதாம் அப்பொருளை அரனருளால் அணுக்கள்
தருவர்கள்பின் தனித்தனியே தாமறிந்த அளவில்
தர்க்கமொடுத் தரங்களினுற் சமயம்சா தித்து
மிருதிபுரா ணம்கலைகள் மற்று மெல்லாம்
மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம்வே தாங்கம்
சுருதிசிவா கமம்ஒழியச் சொல்லுவதொன் றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணுதே. 14

வேதம் பொது, சைவம் சிறப்பு

வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅம லன்தருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினுல் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையி ஞெழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும். 15

சிவநெறியொன்றே ஒரே பிறப்பில் வீடு பெறுவிப்பது

சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகரெல்லாம் மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுவென்ன பிராந்தி. 16

சிவனொருவனே எல்லா அறிவு முதன்மை அருள் உடையன்

இறைவனு வான்ஞான மெல்லா மெல்லா
முதன்மைஅனுக் கிரகமெல்லா மியல்புடையான் இயம்பு
மறைகளா கமங்களினுன் அறிவெல்லாந் தோற்றும்
மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கும்
முறைமையினுல் இன்பத்துன் பங்கொடுத்த லாலே
முதன்மையெலாம் அறிந்துமுயங் கிரண்டு போகத்
திறமதனுல் வினைஅறுக்குஞ் செய்தி யாலே
சேரும்அனுக் கிரகமெலாம் காணுதும்நாம் சிவற்கே. 17

திருச்சிற்றம்பலம்

நால்வகை நெறி

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்ர மார்க்கம்
தாதமார்க்கம் மென்றுஞ்சங் கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபத மென்பர். 18

தாதமார்க் கம்சாற்றிற் சங்கரன்தன் கோயில்
தலம்அலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண் டால்அடியேன் செய்வ(து)
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோர் ஈசனுல கிருப்பர். 19

புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனம்மூர்த்தி மூர்த்தி மானும்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினல் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினெடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே. 20

சகமார்க்கம் புலனெடுக்கித் தடுத்துவளி இரண்டும்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி அலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல்உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர். 21

சன்மாக்கம் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவும் கீழாக மேலாம்
பதிபசுபா சம்தெரித்துப் பரசிவனைக் காட்டும்

நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் தானே. 22

ஞானபூசையின் உயர்வு

ஞானநூல் தனையோதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்று
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபம்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன் றுயருமிவை ஊட்டுவது போகம்
ஆனவையான் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம். 23

ஞானத்தின் படிநிலை நான்கு

கேட்டலுடன் சிந்தித்தல் தெளித்தல் நிட்டை
கிளத்தலென ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்
வீட்டையடைந் திடுவர்நிட்டை மேவி னோர்கள்
மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்(கு)
ஈட்டியபுண் ணியநாத ராகி இன்பம்
இனிதுநுகர்ந் தரனருளால் இந்தப் பார்மேல்
நாட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவால்
ஞானநிட்டை அடைந்தடைவர் நாதன் தாளே. 24

தானம்யா கம்தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள்
சாந்திவிர தம்கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வர்
ஈசனியோ கக்கிரியா சரியையினில் நின்றோர்
ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லாம்
ஒடுங்கும்போ தரன்முன்நிலா தொழியின்உற்ப வித்து
ஞானநெறி அடைந்தடைவர் சிவனை அங்கு
நாதனே முன்னிற்கின் நணுகுவர்நற் றோளே. 25

சிவஞானிகளைப் பேணுவோர் வீடடைவர்

சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
திலமளவே செய்திடினும் நிலமலைபோல் திகழ்ந்து
பவமாயக் கடலின்அழுந் தாதவகை எடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கத்

திருச்சிற்றம்பலம்

தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னினும்சா ராமே
நவமாகும் தத்துவஞா னத்தை நல்கி
நாதன்அடிக் கமலங்கள் நணுகுவிக்கும் தானே. 26

சிவஞானமே ஒன்றே பரமுத்திக்கு ஏது

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்லஆ கமஞ்சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவர் அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும்முத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞான மென்பர். 27

கேட்டலும் அதன் பயனும்

சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனும் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்
தூரியனும் சிவன்தோன்றும் தானுந் தோன்றும்
தொல்லுலக மெல்லாம்தன் னுள்ளே தோன்றும்
நேரியனுய்ப் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும்
நின்றநிலை யெல்லாம்முன் நிகழ்ந்து தோன்றும். 28

சிந்தித்தலும் அதன் பயனும்

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்
மேவுதலும் ஞானம்விளைந் தோர்குருவின் அருளால்
புக்கனுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்தில் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி ஒட்டில்
தபனியத்தில் சமபுத்தி பண்ணிச்சங் கரனே(டு)
ஒக்கவுறைந் திவர்அவனை அவன்இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன்தோற்ற மொன்றுமே காண்பர். 29

தெளிதலும் அதன் பயனும்

அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினுன் அறியாதே அறிந்து

குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயில்
பிரியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானுய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவன் நிராதார னுயே. 30

ஞானநிட்டையும் பயனும்

புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னுலே
நண்ணியஞா னத்தினுல் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணு னுகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறும் இவன்ருன்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன். 31

ஞானநிட்டை உடையோர் இயல்பு

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினெ டாடலிவை பயின்றிடினும் பயில்வர். 32

தேசமிடம் காலம்திக் காசனங்க ளின்றிச்
செய்வதொன்று போல்செய்யாச் செயலதனைச் செய்தங்(கு)
ஊசல்படு மனமின்றி உலாவல் நிற்றல்
உறக்கமுணர் வுண்டிபட் டினியிருத்தல் கிடத்தல்
மாசதனில் தூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்தில் திருத்தத்தில் மைதுனத்தில் சினத்தின்
ஆசையினின் வெறுப்பின்இவை யல்லாது மெல்லாம்
அடைந்தாலும் ஞானிகள்தாம் அரனடியை அகலார். 33

உபாய நிட்டை

இந்நிலைதான் இல்லையேல் எல்லா மீசன்
இடத்தினினும் ஈசனெல்லா விடத்தினினும் நின்ற

அந்நிலையை அறிந்தந்தக் கரணங்கள் அடக்கி
அறிவதொரு குறிகுருவின் அருளினால் அறிந்து
மன்னுசிவன் தனையடைந்து நின்றவன்ற னாலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனில் துரியா தீதம்
தோன்றமுயல் சிவானுபவம் சுவானுபூ திகமாம். 34

சாக்கிரத்தே அதீதம் புரிவோர் இயல்பு

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவென் இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றே
ஆக்குமுடி கவித்தரசாண் டவர்கள்அரி வையரோ(டு)
அனுபவித்தங் கிருந்திடினும் அகப்பற்றற் றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றாலும்
நுழைவர்பிறப் பினின்வினைகள் நுங்கி டாவே. 35

மூன்றாம் அதிகரணம்

சிவானுபவத்தின் இயல்பு

கருவிகழிந் தாற்காணு றொன்றுமெனிற் காணார்
காணுதார் கன்னிகைதான் காமரசங் காணாள்
மருவிஇரு வரும்புணர வந்த இன்பம்
வாயினாற் பேசரிது மணந்தவர்தாம் உணர்வர்
உருவினுயிர் வடிவதுவும் உணர்ந்திலைகாண் சிவனை
உணராதார் உணர்வினால் உணர்வதுகற் பனைகாண்
அருள்பெறின்அவ் விருவரையும் அறிவிறந்தங் கறிவர்
அறியாரேற் பிறப்பும்விடா தாணவமும் அறுதே. 36

நான்காம் அதிகரணம்

பாசத்தை நேதி பண்ணிவிடுமாறு

பன்னிறங்கள் அவைகாட்டும் படிகம்போல் உள்ளம்
பலபுலன்கள் நிறங்காட்டும் பரிசுபார்த் திட்(டு)
இந்நிறங்கள் என்னிறம்அன் றென்று தன்றன்
எழில்நிறங்கண் டருளினால் இந்நிறத்தின் வேறாய்ப்
பொய்ந்நிறஐம் புலன்நிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான் பின்னை
முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி
முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல். 37

திருச்சிற்றம்பலம்

சிவஞானம் பெறுவது கண்பெற்றூர் பேறு போல்வது

எங்குந்தான் என்னினும் எய்த வேண்டா
எங்குமிலன் என்னின்வே றிறையு மல்லன்
அங்கஞ்சேர் உயிர்போல்வன் என்னின் அங்கத்(து)
அவயவங்கள் கண்போலக் காணு ஆன்மா
இங்குநாம் இயம்புந்தத் துவங்களின் வைத்தறிவ(து)
இறைஞானந் தந்துதா ளீதல்சுட ரிழந்த
துங்கவிழிச் சோதியும்உட் சோதியும்பெற் றூற்போல்
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிவன் காணே. 38

வாதனையாற் சிவத்தை நீங்குவோர் நீங்காவகை பின் உணர்த்தப்படுபவை எனல்

பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
படும்பொழுது நீங்கிஅது விடும்பொழுதிற் பரக்கும்
மாசுபடு மலமாயை அருங்கன்மம் அனைத்தும்
அரனடியை உணரும்போ தகலும்பின் அணுகும்
நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி
ஆசையொடும் அங்குமிங்கு மாகிஅல மருவோர்
அரும்பாச மறுக்கும் வகை அருளின்வழி யுரைப்பாம். 39

ஒன்பதாஞ் சூத்திரம்

சிவத்தைச் சிந்தையில் ஞானத்தால் கண்டு நிற்க; நீங்கின் ஐந்தெழுத்தை எண்ணுக

பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதின்
ஆசைதரும் உலகமெலாம் அலகைத்தே ராமென்(று)
அறிந்தகல அந்நிலையே யாகும் பின்னும்
ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலா மோட. 1

முதலதிகரணம்

பாச பசுஞானங்கள்

வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்

திருச்சிற்றம்பலம்

நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
நணுகிஆன் மாஇவைகீழ் நாட லாலே
காதலினல் நான்பிரம மென்னு ஞானம்
கருதுபசு ஞானம்இவ னுடலிற் கட்டுண்(டு)
ஓதியுணர்ந் தொன்ரென்ரு உணர்ந்திடலாற் பசுவாம்
ஒன்ருகச் சிவன்இயல்பின் உணர்ந்திடுவன் காணே. 2

பசுஞானத்தின் வகை பல

கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னில்
கதியாகும் சிலேமுட்டை கருமரத்தின் உயிர்கள்
மரணங்கொண் டிடஉறங்கி மயங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பனைபண்ண வல்விடத்தை அடையச்
சரணங்கள் புகுநிழல்போல் தனேஅடையுஞ் சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞான மாகும்
அரணங்க ளெரித்தவன்தன் அடியைஅறி விறந்தங்(கு)
அறிந்திடர் செறிந்ததுகள் அகற்றி டீரே. 3

சிவஞானத்தின் இன்றியமையாமை

சிவனேஅவன் திருவடிஞா னத்தாற் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தை யெல்லாம்
அவனேயணு காவென்றும் ஆத லானும்
அவனடிஅவ் வொளிஞான மாத லானும்
இவனுமியான் துவக்குதிர மிறைச்சி மேதை
என்புமச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ
அவமகல எனேயறியேன் எனும்ஐய மகல
அடிகாட்டி ஆன்மாவைக் காட்ட லானும். 4

கண்டிடுங்கண் தனேக்காணு கரணம் காணு
கரணங்கள் தமைக்கான உயிருங் காணு
உண்டியமர் உயிர்தானுந் தன்னேக் காணு(து)
உயிர்க்குயிராம் ஒருவனேயுங் காணு தாகும்
கண்டசிவன் தனேக்காட்டி உயிருங் காட்டிக்
கண்ணுகிக் கரணங்கள் காணுமல் நிற்பன்
கொண்டானே உளத்திற்கண் டடிகூடிற் பாசம்
கூடாது கூடிடினும் குறித்தடியின் நிறுத்தே. 5

இரண்டாம் அதிகரணம்

உலகப்பற்று அற்ருரே சிவஞானத்தைத் தலேப்படுவர்

குறித்தடியின் நின்(று)அட்ட குணமெட்டுச் சித்தி
கோகனதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்

வெறுத்துநெறி அறுவகையும் மேலொடுகீ ழடங்க
வெறும்பொயென நினைந்திருக்க மேலொடுகீ ழில்லான்
நிறுத்துவதோர் குணமில்லான் தன்னையொரு வர்க்கு
நினைப்பரியான் ஒன்றுமிலான் நேர்படவந் துள்ளே
பொறுப்பரிய பேரன்பை அருளியதன் வழியே
புகுந்திடுவன் எங்குமிலாப் போகத்தைப் புரிந்தே. 6

மூன்றும் அதிகரணம்

சிவன் நான் எனப் பாவித்தல்

கண்டஇவை யல்லேன்நான் என்றகன்று காணுக்
கழிபரமும் நானல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினெடும் உளத்தவன்ருன் நின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலும் மலங்களெல்லாம் கருடதியா னத்தால்
விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறை களும்அதுநா ஞனே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே. 7

அக வழிபாடு (ஞான விதிப்படி)

அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்(டு)
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத்தர்ச் சித்(து)
அஞ்செழுத்தாற் குண்டலியின் அனலை யோம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்(று)
அஞ்செழுத்தை விதிப்படிஉச் சரிக்கமதி யருக்கன்
அணையரவம் போற்றுன்றும் ஆன்மாவில் அரனே. 8

இதயத்தின் இயல்பு

நாட்டுமித யந்தானும் நாபியினில் அடியாய்
ஞாலமுதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்
மூட்டுமோ கினிசுத்த வித்தைமல ரெட்டாய்
முழுவிதழ்எட் டக்கரங்கள் முறைமையினின் உடைத்தாய்க்
காட்டுகம லாசனமேல் ஈசர்சதா சிவமும்
கலாமூர்த்த மாம்இவற்றின் கண்ணுகுஞ் சத்தி
வீட்டைஅருள் சிவன்மூர்த்தி மானுகிச் சத்தி
மேலாகி நிற்பன்இந்த விளைவறிந்து போற்றே. 9

திருச்சிற்றம்பலம்

அக வழிபாட்டின் சிறப்பு

அந்தரியா கந்தன்னே முத்திசா தனமாய்
அறைந்திடுவர் அதுதானும் ஆன்மசுத்தி யாகும்
கந்தமலர் புகையொளிமஞ் சனம்அமுது முதலாக்
கண்டனஎ லாம்மனத்தாற் கருதிக் கொண்டு
சிந்தையினிற் பூசித்துச் சிவனைஞா னத்தால்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடும்அவ் வொளிபோல மருவிஅர னுளத்தே
வரவரவந் திடுவன்பின் மலமான தறுமே. 10

புறத்தும் இறைவனை வழிபடுக

புறம்பேயும் அரன்கழல்கள் பூசிக்க வேண்டில்
பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தா லங்குச்
சிந்திக்கும் படிஇங்குச் சிந்தித்துப் போற்றி
அறம்பாவங் கட்குநாம் என்கடவே மென்றும்
ஆண்டவனைக் கண்டக்கால் அகம்புறமென் னுதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றே
சீரடியார் தம்முடைய செய்தி தானே. 11

ஞான வழிபாட்டால் எய்தும் பயன்

இந்தனத்தின் எரிபாலின் நெய்பழத்தின் இரதம்
எள்ளின்க ணெண்ணெயும்போல் எங்குமுளன் இறைவன்
வந்தனைசெய் தெய்விடத்தும் வழிபடவே அருளும்
மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தாற்
சிந்தனைசெய் தர்ச்சிக்க சிவன்உளத்தே தோன்றித்
தீஇரும்பைச் செய்வதுபோற் சீவன் தன்னைப்
பந்தனையை அறுத்துத்தா னுக்கித்தன் னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே. 12

பயனியல்

பத்தாஞ் சூத்திரம்

ஏகனாகி இறைபணி நிற்கப் பாச நீக்கம் உளதாகும்

இவனுலகில் இதமகிதம் செய்த வெல்லாம்
இதமகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்
அவனிவனாய் நின்றமுறை ஏக னாகி
அரன்பணியின் நின்றிடவும் அகலுங் குற்றம்
சிவனும்இவன் செய்தியெலாம் என்செய்தி யென்றும்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல உடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே. 1

முதலதிகரணம்

ஏகனாகி நிற்றலின் பயன்

யான்செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடஅத் தத்துவன்தான் நேரே
தனையளித்து முன்நிற்கும் வினையொளித்திட் டோடும்
நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே. 2

இரண்டாம் அதிகரணம்

இறைபணி நிற்றலின் பயன்

இந்திரிய மெனைப்பற்றி நின்றேஎன் வசத்தின்
இசையாதே தன்வசத்தே எனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற னாணைவழி நின்றிடலால் என்றும்
தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் தாள்கள்
வந்தனைசெய் திவற்றின்வலி அருளினால் வாட்டி
வாட்டமின்றி இருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேல்
முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள்
மூளாஅங் காளாகி மீளா னன்றே. 3

சலமிலனாய் ஞானத்தால் தனையடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவன்அவர் தாஞ்செய்வினை தன்னால்
நலமுடனே பிறர்செய்வினை யூட்டியொழிப் பானாய்
நணுகாமல் வினையவரை நாடிக் காப்பன்

உலகினில்என் செயலெல்லாம் உன்விதியே நீயே
உள்நின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்ரு யென்றும்
நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்றும்
நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந் தானே. 4

நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தரா யிருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பின்
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானங்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பார். 5

அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகும்
ஔடதமந் திரமுடையார்க் கருவிடங்க ளேரு
எங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும் ஞானிக்(கு)
இருவினைகள் சென்றணையா முற்செய்வினை இங்குத்
தங்கிப்போம் பாத்திரமும் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமும் கந்தித்துச் சுழலு மாபோல்
மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும் எல்லா
மலங்களும்பின் காயமொடு மாயு மன்றே. 6

பதினென்ருஞ் சூத்திரம்

பர முத்தியின் இயல்பு

காயமொழிந் தாற்சுத்த ஞகி ஆன்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்(கு)
ஏயும்உயிர் காட்டிக்கண் டிடுமா போல
ஈசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவன் இத்தை
ஆயுமறி வுடையனுய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையின் அடைந்தமுறை யாலே
மாயமெலாம் நீங்கிஅரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாருத சிவானுபவம் மருவிக் கொண்டே. 1

சிவஞானம் சிவத்தையே காட்டும்; கன்மம் நீக்கம்

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வைந்தவத்தின் கலக்கம்

திருச்சிற்றம்பலம்

தருஞானம் போகஞா திருஞான ஞேயம்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞானம் இவையெலாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர். 2

பர முத்தியில் உடம்பு இல்லை; மாயை நீக்கம்

அநாதிஉடல் ஒன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மால்
ஆயழிந்து வருதலால் அந்த மில்லை
பினுதியருள் பெற்றவர்கள் நித்தவுரு வத்தைப்
பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே இதுவும்
இனுதுநிலை இதுதானுங் காய முண்டேல்
இருங்கன்ம மாயைமல மெல்லா முண்டாம்
மனுதிதரு முடலாதி காரியத்தால் அநாதி
மலம்அறுக்கும் மருந்தற்றுல் உடன்மாயுங் காணே. 3

மல நீக்கம்

தெரிவரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்த வாறே
சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த னுகும்
உரியமல மௌடதத்தால் தடுப்புண்ட விடமும்
ஒள்ளெரியின் ஒளிமுன்னர் இருளுந் தேற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போ லாகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து காயம்
திரியுமள வும்உளதாய்ப் பின்பு காயஞ்
சேராத வகைதானுந் தேயு மன்றே. 4

பாடாணவாத பேத வாத மறுப்பு

ஆணவந்தான் அநாதிஅந்த மடையா தாகும்
அடையின்அந்த ஆன்மாவும் அழியுமெனிற் செம்பிற்
காணலுறுங் களிம்பிரத குளிகைபரி சிக்கக்
கழியுஞ்செம் புருநிற்கக் கண்டோ மன்றே
தாணுவின்தன் கழலணையத் தவிரும்மலந் தவிர்ந்தால்
தான்சுத்த னுயிருக்கை முத்திஅரன் தாளைப்
பூணவேண் டுவதொன்று மில்லையெனின் அருக்கன்
புகுதஇருள் போம்அடியிற் பொருந்தமலம் போமே. 5

அநாதி குற்றத்திற்கு அந்தம் உண்டு

நெல்லினுக்குத் தவிடுமிகள் அநாதி யாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்

சொல்லியிடில் துகளற்ற அரிசியின்பா லில்லை
தொக்கிருந்து மற்றொருநெல் தோன்றி டாவாம்
மெல்லஇவை விடுமறவே இவைபோல அணுவை
மேவுமல முடல்கன்மம் அநாதிவிட்டே நீங்கும்
நல்லசிவ முத்தியின்கட் பெத்தான் மாவை
நணுகிநிற்கு மாதலால் நாசமுமின் றாமே. 6

முதலதிகரணம்

இறைவன் உயிர்க்குக் கண்டுகாட்டல்

எவ்விடத்தும் இறையடியை இன்றியமைந் தொன்றை
அறிந்தியற்றி யிடாஉயிர்க ளிறைவன் றானும்
செவ்விதினின் உளம்புகுந்து செய்தியெலாம் உணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன்
இவ்வுயிர்கள் தோற்றும்போ தவனையின்றித் தோற்றா
இவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கும்
அவ்வுயிர்போல் நின்றிடுவன் ஆத லால்நாம்
அரனடியை அகன்றுநிற்ப தெங்கே யாமே. 7

இரண்டாம் அதிகரணம்

பக்குவம் எய்திய உயிர்க்கே முதல்வன் இருப்பு விளங்கும்

எங்குந்தான் நிறைந்துசிவன் நின்றா னாகில்
எல்லாருங் காணவே வேண்டுந்தா னென்னில்
இங்குந்தான் அந்தகருக் கிரவிஇரு ளாகும்
ஈசனருட் கண்ணில்லார்க் கொளியாயே யிருளாம்
பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடையப்
பதிரிஅலர்த் திடுவதுபோல் பருவஞ்சே ருயிர்க்குத்
துங்கஅரன் ஞானக்கண் கொடுத்தருளி னாலே
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. 8

அவிகார வாதம் முதலியவற்றின் மறுப்பு

சென்றணையும் நிழல்போலச் சிவன்நிற்ப னென்னில்
சென்றணையும் அவன்முதலி சிவத்தைஅணைந் தொன்றாய்
நின்றதுயிர் கெட்டென்னில் கெட்டதணை வின்றாம்
நின்றதேற் கேடில்லை அணைந்துகெட்ட தென்னில்
பொன்றினதேன் முத்தியினைப் பெற்றவரார் புகல்நீ
பொன்றுகையே முத்தியெனில் புருடன்நித்த னன்றாம்
ஒன்றியிடு நீரொடுநீர் சேர்ந்தாற்போல் என்னின்
ஒருபொருளாம் அதிபதியோ டுயிர்பொருளொன் றன்றே. 9

திருச்சிற்றம்பலம்

பேதவாத சமவாதங்களின் மறுப்பு

செம்பிரத குளிகையினுற் களிம்பற்றுப் பொன்னுய்ச்
செம்பொனுடன் சேரும்மலஞ் சிதைந்தாற் சீவன்
நம்பனுடன் கூடுமெனிற் பொன்போ லல்லன்
நற்குளிகை போலஅரன் நணுகுமலம் போக்கி
அம்பொனடிக் கீழ்வைப்பன் அருங்களங்க மறுக்கும்
அக்குளிகை தானும்பொன் ஞகா தாகும்
உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரியன்
உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே. 10

அருவ சிவசமவாத மறுப்பு

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்ரு மென்னில்
சிவனருட்சித் திவன்அருளைச் சேருஞ்சித் தவன்ருன்
பவங்கெடுபுத் திமுத்தி பண்ணுஞ்சித் திவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்ருன்
அவன்ருனே அறியுஞ்சித் தாதலினு லிரண்டும்
அணைந்தாலு மொன்ருகா தநந்நியமாக யிருக்கும்
இவன்ருனும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி
இதுஅசித்தென் றிடில்அவனுக் கிவனும்அசித் தாமே. 11

சித்தாந்த முத்தியின் இயல்பு

இரும்பைக்காந் தம்வலித்தாற் போல்இயைந்தங் குயிரை
எரியிரும்பைச் செய்வதுபோல் இவனைத்தா ஞக்கி
அரும்பித்திந் தனத்தைஅன லழிப்பதுபோல் மலத்தை
அறுத்தமலன் அப்பணைந்த உப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோல் அடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா ஞகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பன்அந்த முத்தியினிற் கலந்தே. 12

பன்னிரண்டாஞ் சூத்திரம்

அணைந்தோர் தன்மை

செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்கள் அறுத்தீசன் நேசரொடுஞ் செறிந்திட்(டு)
அங்கவர்தந் திருவேடம் ஆலயங்க ளெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப் பாடி

எங்குமியாம் ஒருவர்க்கு மெளியோ மல்லோம்
யாவர்க்கும் மேலானேம் என்றிறுமாப் பெய்தித்
திங்கள்முடி யார்அடியார் அடியே மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே. 1

இரண்டாம் அதிகரணம்

அடியார்க்கு அன்புடைமை

ஈசனுக்கன் பில்லார் அடியவர்க்கன் பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்அன் பில்லார்
பேசுவதென் அறிவிலாப் பிணங்களைநாம் இணங்கிற்
பிறப்பினினும் இறப்பினினும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்(டு)
அவர்கருமம் உன்கரும மாகச் செய்து
கூசிமொழிந் தருள்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே. 2

மூன்ரும் அதிகரணம்

அடியார் சிவமே யாவர்

அறிவரியான் தனையறிய யாக்கை யாக்கி
அங்கங்கே உயிர்க்குயிராய் அறிவுகொடுத் தருளால்
செறிதலினல் திருவேடம் சிவனுருவே யாகும்
சிவோகம்பா விக்கும்அத்தாற் சிவனு மாவர்
குறியதனல் இதயத்தே அரனைக் கூடும்
கொள்கையினல் அரனவர் குறியொடுதாம் அழியும்
நெறியதனற் சிவமேயாய் நின்றிடுவ ரென்ருல்
நேசத்தால் தொழுதிடுநீ பாசத்தார் விடவே. 3

திருமேனியை வழிபடுவார் கருத்துவகையும் பயனும்

திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் எனநினையும் அவர்க்கும்
உளனெங்கும் இலன்இங்கும் உளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணுத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன்அன் பர்க்கே. 4

திருச்சிற்றம்பலம்

ஞான குரவன் உயர்வு

ஞானயோ கக்கிரியா சரியை நாலும்
நாதன்தன் பணிஞானி நாலினிக்கும் உரியன்
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகிகிரி யாவான்தான் ஒண்கிரியை யாதி
ஆனஇரண் டினுக்குரியன் சரியையினில் நின்ருேன்
அச்சரியைக் கேஉரியன் ஆதலினுல் யார்க்கும்
ஈனமிலா ஞானகுரு வேகுருவும் இவனே
ஈசனிவன் தான்என்றும் இறைஞ்சி ஏத்தே. 5

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தவியோ கத்தால்
மணிஇரத குளிகையினுல் மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தமிலா அணிமாதி ஞானங்க ளெல்லாம்
அடைந்திடும்ஆ சான்அருளால் அடிசேர் ஞானம்
வந்திடுமற் றென்ருலும் வாரா தாகும்
மற்றவையும் அவனருளால் மருவு மன்றே. 6

ஒண் குரவனை வழிபடுமாறும் முத்திப்பயனும்

பரம்பிரமம் இவனென்றும் பரசிவன்தா னென்றும்
பரஞானம் இவனென்றும் பராபரன்தா னென்றும்
அரன்தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே அவனிவன்தா ஞயே
இரங்கியவா ரணம்யாமை மீன்அண்டம் சினையை
இயல்பினுெடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போல்சிவமே யாக்கும்
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் தானே. 7

சிவஞானசித்தியார் சுபக்கம் முற்றிற்று.

உ
சிவமயம்

திருத்துறையூர் - ஸ்ரீஅருணந்திதேவ நாயனுர்

அருளிச்செய்த

5. இருபாவிருபஃது

இது வெண்பாவும் ஆசிரியமுமாகிய இருவகைப் பாக்களாலும் மாறி மாறி வரும் இயல்பினது. 20 பாடல்களை உடையது. ஆதலின் இப்பெயர் பெற்றது. பாடல்களை நினைவு கொள்ளுதற்கேற்ப அந்தாதித் தொடையால் அமைந்துள்ளது. தம் குருமூர்த்தியாகிய மெய்கண்டாரைப் பல்லாற்ருனும் போற்றிப் பல்வேறு வினுக்களை வினுவு முறையில் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. தாம் கேட்கும் வினுவிற்கு வெல்லும் சொல்லின்றி விடையளித்தல் வேண்டுமென ஆசிரியரிடம் விண்ணப்பித்துக் கொண்டிருப்பது விடை காண்டற்குரியார் சிந்தனையில் எண்ணத்தக்க தொன்ருகும். வினுக்கள் பலவும் இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மைபற்றி யவையே. அவற்றுள் சில.

1. குருமூர்த்தியே! நீ என்னை விட்டு நீங்காதிருப்பீரேல் எனக்கு அறியாமை எவ்வாறு வாய்த்தது? ஆணவ மலத்தால் எனின் அதற்குப் பகையாய நீ உடனுயிருக்கும்பொழுது அதுவும் உடனிருப்பது எங்ஙனம் பொருந்தும்?

2. அடியேனுக்கு அறிவுறுத்தும்பொழுது நீ உடனுய் நிற்பையோ? வேருய் நிற்பையோ?

3. குருவாய் எழுந்தருளி எனக்கருளுமிடத்து எவ்வாறு அருள் புரிகுவை? தகுதி கண்டு அருள் புரிவாய் எனில் தகுதியே அமையும், நீ வேண்டுவதில்லை. தகுதி இன்றெனில் நீ அருளும் மெய்யுணர்வை யான் பெருதொழிவன். தகுதியின் பயனுக அவை வரும் எனில் தகுதி என்பது அறிவற்றது. அது நின்னை எங்ஙனம் கொணரும்? மலநீக்கம் தகுதியாமெனில் அது தானே நீங்கிற்ரு? அன்றி நான் நீங்கினேனு? இவ்விரு திறனுள் எதுவாயினும் நீ தேவையில்லை என்பது பெறப்படும்.

இவற்றிற்கு விடை கூறுவாயாக. இவை முதற் பாடற்கண் காணப்பெறும் வினுக்களாகும். இவ்வினுக்களுக்கு மட்டும் விடை திருமுறையிலிருந்து தொட்டுக் காட்டப்பெற்றுள்ளது. எனவே

சித்தாந்தச் செம்பொருளில் ஐயமேற்படின் திருமுறைகளேயே தெளிதற்குரிய கருவிகளாய்க் கொள்ளவேண்டும் என்பதும், இதனுல் விளங்குகின்றது. 'காண்பார் யார்? கண்ணுதலாய்க் காட்டாக்காலே' எனவரும் திருநாவுக்கரசர் திருவாக்கும், 'ஆட்பாலவர்க்கருளும்' என வரும் திருஞானசம்பந்தர் திருவாக்கும், இவ்விஞக்களுக்கு விடைதரும் என்றறிக எனத் தம் குருமூர்த்தி கூறுவதாகக் கூறியுள்ளார். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாசுரத்தைப், பாண்டியன் கேட்பக் கிளந்த மெய்ஞ்ஞானம் என ஆசிரியர் குறித்திருப்பது அதன் அருமையை விளக்குவதாகும்.

1. அறிதலும் அறியாமையுமுடைய அடியேன் என்னே அறிவுடைப் பொருள் என்பேனு? அறியாமையுடைய பொருள் என்பேனு?

2. ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலமும் தானே தேடிக் கொண்டவையா? அல்லது நீ கொடுத்தவையா? அன்றி அவை இயல்பாகவே என்னிடத்து அமைந்தவையா?

3. ஆணவ இருள், ஒளியாகிய உன்முன்னும் நில்லாது, அடியேனுக்கும் தானே அறியும் அறிவில்லே. அங்ஙனமிருக்க அடியேன் இருளேப் பற்றிக்கொண்டது எங்ஙனம்?

4. அடியேன் பொறிகளே எவ்வாறு பற்றினேன்? ஐந்தவத்தைகளே எவ்வாறு அடையலானேன்? எவ்வாறு புவனங்கள் தோறும் பிறந்து இறந்து போக்கு வரவு புரிபவன் ஆயினேன்? என்பன போன்ற விஞக்கள் இந்நூலில் எழுப்பப்படுகின்றன. 'இரு நிலனுய்த் தீயாகி நீருமாகி', 'உன்னில் துன்னி உஞவிடில் துன்னுவை' என்பனவாகிய திருமுறைத் தொடர்கள் இந்நூலில் அமைந்து அணி செய்கின்றன.

உ
சிவமயம்

5. இருபாவிருபஃது

மெய்கண்டதேவர் சிவமேயாவர்

கண்நுதலுங் கண்டக் கறையுங் கரந்துஅருளி
மண்ணிடையில் மாக்கள் மல மகற்றும் - வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண் 1

உயிர் பக்குவத்தில் உணர்த்த உணரும்

கண் அகல் ஞாலத்துக் கதிரவன் தான் என
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ!
காரார் கிரகக் கலி ஆழ்வேனை நின்
பேரா இன்பத்து இருத்திய பெரும!
வினவல் ஆனுது உடையேன் எனது உளம்
நீங்கா நிலை ஊங்கும் உளையால்
அறிவின்மை மலம் பிரிவு இன்மை எனின்
ஓராலினை உணர்த்தும் விராய் நின்றனையேல்
திப்பியம் அந்தோ பொய்ப்பகை ஆகாய்
சுத்தன் அமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பரன் எனும் பெயர் முடியா
வேறுநின்று உணர்த்தின் வியாபகம் இன்றாய்ப்
பேறும் இன்றாகும் எமக்கு எம் பெரும!
இருநிலம் தீநீர் இயமானன் கால் எனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற்கு இலாதலின்
வேறோ உடனோ விளம்பல் வேண்டும்
சீறி அருளல் சிறுமை உடைத்தால்.
அறியாது கூறினை அபக்குவ பக்குவக்
குறிபார்த்து அருளினம் குருமுதலாய் எனின்
அபக்குவம் அருளினும் அறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டில் பயன் இலை நின்றால்
பக்குவம் அதனால் பயன்நீ வரினே
நின்னைப் பருவம் நிகழ்த்தாது அன்றோ
தன் ஒப்பார் இலி என்பதும் தகுமே
மும்மலம் சடம் அணு மூப்பு இளமையில் நீ

திருச்சிற்றம்பலம்

நின்மலன் பருவம் நிகழ்த்தியது யார்க்கோ
உணர்வு எழும் நீக்கத்தை ஓதியது எனினே
இணை இலி ஆயினை என்பதை அறியேன்
யானே நீக்கினும் தானே நீங்கினும்
கோனே வேண்டா கூறல் வேண்டும்
காண்பார் யார்கொல் காட்டாக்கால் எனும்
மாண்பு உரை உணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானத்தின்
ஆட்பால் அவர்க்கு அருள்" என்பதை அறியே. 2

ஆன்மா தடுக்கப்பட்ட அறிவுடையது

அறிவு அறியாமை இரண்டும் அடியேன்
செறிதலால் மெய்கண்ட தேவே - அறிவோ
அறியேனோ யாது என்று கூறுகேன் ஆய்ந்து
குறிமாறு கொள்ளாமல் கூறு. 3

மூலமலம் அநாதிபந்தம், மாயை கன்மம் ஆகந்துகம்

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பம் கற்பம்
குரோதம் மோகம் கொலை யஞர் மதன்நகை
விராய் எண் குணனும் ஆணவம் என விளம்பினை
அஞ்ஞானம் பொய் அயர்வே மோகம்
பைசால சூனியம் மாச்சரியம் பயம்
ஆயேழ் குணனும் மாயைக்கு அருளினை
இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவல் என்று எடுத்த
அறுவகைக் குணனும் கருமத்து அருளினை
ஆங்கு அவைதாமும் நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானய்
என்வழி என்பது ஒன்று இன்ரும், மன்ன!
ஊரும் பேரும் உருவுங் கொண்டு என்
ஊரும் பேரும் உருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதியில்
சைவ சிகாமணி! மெய்யர் மெய்ய!
மும்மலம் சடம் என மொழிந்தனை அம்ம
மாறுகோள் கூறல் போலும் தேறும்
சடம்செயல் அதனைச் சார்ந்திடும் எனினே
கடம்படம் அதனுள் கண்டிலம் விடப்படும்

திருச்சிற்றம்பலம்

ஊன்றிரள் போன்றது தாயில் தோன்றி
அணைந்து ஆங்கு அகறல் வேண்டும் குணங்களும்
பன்மை இன்று ஆகும் எம்மைவந்து அணையத்
தானே மாட்டாது யானே செய்கிலன்

நீயோ செய்யாய் நின்மலன் ஆயிட்டு
இயல்பு எனில் போகாது என்றும் மயல்கெடப்
பந்தம் வந்தவாறு இங்கு
அந்தம் ஆதி இல்லாய் ! அருளே. 4

சிவஞானம் வந்தபின் எதிர்மறை முகத்தால் மலவுண்மை அறியப்படும்

அருள் முன்பு நில்லாது அடியேற்குக் கண்ணின்று
இருள்கொண்டவாறு என்கொல் எந்தாய்! - மருள்கொண்ட
மாலையாய்! வெண்ணெய்வாழ் மன்னவா! என்னுடைய
மால் ஐயா மாற்ற மதி. 5

உயிர் சார்ந்ததன் வண்ணமாய் வசித்திட வரும் வியாபி

மதிநுதல் பாகன் ஆகிக் கதிதர
வெண்ணெய்த் தோன்றி நணி உள் புகுந்து என்
உளம்வெளி செய்து உன் அளவில் காட்சி
காட்டி என் காட்டினை எனினும் நாட்டினென்
உண்மையும் பெருமையும் நுவலில் அண்ணல்
பாதாள சத்தி பரியந்தம் ஆக
ஓதி உணர்ந்த யானே ஏக
முழுதும் நின்றனனே, முதல்வ! முழுதும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
ஆங்கு ஐந்து அவத்தையும் அடைந்தனன் நீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் தூக்கி
எவ்விடத்து உண்மையும் இவ்விடத்து ஆதலும்
செல் இடத்து எய்தலும் தெரித்த மூன்றினும்
ஒன்று எனக்கு அருளல் வேண்டும் என்றும்
இல்லது இலதாய் உள்ளது உளது எனும்
சொல்லே சொல்லாய்ச் சொல்லும் காலைச்
சிறுத்தலும் பெருத்தலும் இலவே நிறுத்தி
யானை எறும்பின் ஆனது போல் எனில்
ஞானம் அன்று அவை காய வாழ்க்கை
மற்றவை அடைந்தன உளவெனின் அற்றன்று

திருச்சிற்றம்பலம்

விட்ட குறையின் அறிந்து தொன்று
தொட்டு வந்தனன் என வேண்டும் நட்ட
பெரியதில் பெருமையும் சிறியதில் சிறுமையும்
உரியது நினக்கே உண்மை, பெரியோய்!
எனக்கு இன்று ஆகும் என்றும்
மனக்கு இனியாய்! இனி மற்றது மொழியே 6

நனவில்நின்று கருதி உணரப்படும் பிற அவத்தைகள்

மொழிந்த அவத்தை முதல் அடியேன் நின்றுங்கு
ஒழிந்தன நான்கும் உணர - இழிந்து அறிந்து
ஏறிற்று இங்கு இல்லை எழில் வெண்ணெய் மெய்த்தேவே!
தேறிற்று என் கொண்டு தெரித்து. 7

சிவஞானம் பெற்றபின் உன் வியாபகம் அனுபவப்பட்டது

தெரித்தது என் கொண்டு எனை உருத்திர பசுபதி!
செடிய னேனையும் அடிமை செய்யப்
படிவம் கொண்டு வடிவுகாட்டு இல்லாப்
பெண்ணை ஆளும் வெண்ணெய் மெய்ய!
அவத்தையில் தெரித்தனன் ஆயின் அவத்தை
தெரித்தாங்கு இருத்தலும் இலனே திருத்தும்
காலம் முதலிய கருவி ஆயின்
மாலும் பிரமனும் வந்து எனை அடையார்
ஓதும் காலை ஒன்றை ஒன்று உணரா
சேதனம் அன்று அவை பேதைச் செயலும் இச்
சேதன ஆனல் செயல் கொள வேண்டும்
போதம் அவற்றைப் புணர்வதை அறியேன்
கருவித் திரளினும் காண்பது ஓர் ஒன்ருய்
ஒருவுதல் அறியேன் உணர்வு இலன் ஆதலின்
நிற்கொடு கண்டனன் ஆயின் எற்குக்
கருவி ஆயினை பெருமையும் இலவே
யானே பிரமம் கோனே வேண்டா
இன்னும் கேண்மோ, மன்ன! நின்னின்
முன்னம் என்றன் உணர்வு இலன் ஆதலின்
என்னைக் காண்பினும் காண்பல உன்னேடு
ஒருங்கு காண்பினும் காண்பல அரும்துணை
கண்டவாறு ஏது எனது கண்ணே!
அண்டவாண! அருட்பெரும் கடலே! 8

திருச்சிற்றம்பலம்

கேவலத்தில் அறியப்படுவது மூலப் பகுதியின் அவிச்சை, உடம்பு, மாயை என்னும் தத்துவம்; உணர்த்துவது சிவம் என்னும் சுத்த தத்துவம்

கடல் அமுதே! வெண்ணெய்க் கரும்பே! என் கண்ணே!
உடலகத்து மூலத்து ஒடுங்கச் - சடலக்
கருவியாது ஆங்கு உணர்த்தக் காண்பதுதான் என்னை
மருவியது என்று உரைக்க மன். 9

உயிரின்கண் உள்ள முதல்வன் துணை அதுமறத்தல் கூடாது

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
அன்னியம் ஆக்கி அருள்வழி அதனால்
என்னுள் புகுந்தனை எனினே முன்னைத்
திரிமலம் தீர்த்த தேசிக! நின்னோடு
உருவுதல் இன்றி உடந்தையே ஆகும்
பெருநிலை ஆகல் வேண்டும் மருவிடும்
மும்மலம் அதனால் எம்முள் நின்றிலை எனில்
அம்மலத் திரிவும் செம்மலர்த் தாள்நிழல்
சேர்தலும் இலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வு இலன் ஆகும், பெரும! தீர்வு இன்று
அமைந்த கருமத்து இயைந்ததை அல்லது
சமைந்தன இலஎனச் சாற்றில் அமைந்த
மாயேயம் கன்மம் மாமலம் மூன்றும்
மாயாது ஆகவே ஆர்ச்சன மாயையின்
உற்பவம் தீராது ஒழுகும் ஒன்று ஒன்று
நிற்சமம் ஆயின் அல்லது நிற்பெறல்
இல்லென மொழிந்த தொல் அறம் தனக்கும்
ஏயாது ஆகும் நாயேன் உளத்து
நின்றனை என்பனோ நின்றிலை என்பனோ
பொன்றிய பொன்றிற்றில மலம் என்பனோ
ஒன்றினை உரைத்து அருள் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க்கு அதிபதி!
கைகண் தலைவாய் கால்செவி மூக்கு உயர்
மெய்கொண்டு என்வினை வேர் அறப் பறித்த
மெய்கண்ட தேவ! வினையிலி!
மைகொண்ட கண்ட! வழுவிலென் மதியே! 10

திருச்சிற்றம்பலம்

உலேவில் அரன்கழலே உன்ன மலசத்தி மெலிந்து தேயும்

மதிநின்பால் இந்த மலத்தின்பால் நிற்க
விதிஎன்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய! - பதிநின்பால்
வந்தால் இதில்வரத்தில் வந்து இரண்டும் பற்றுகிலேன்
எந்தாய் இரண்டு ஆமாறு என் 11

ஆன்மா முதல்வனே உணர்தலும் மறத்தலும் கூடுதலும் பிரிதலுமாம்

எண்திசை விளங்க இருட்படாம் போக்கி
முண்டகம் மலர்த்தி மூதறிவு அருளும்
மேதினி உதய மெய்கண்ட தேவ!
கோதுஇல் அமுத! குணப்பெரும் குன்ற!
என்னின் ஆர்தலும் அகறலும் என்னைகொல்
உன்னில் துன்னி உனுவிடில் பெயர்குவம்
என்னும் அதுவே நின் இயல்பு எனினே
வியங்கோள் ஆளனும் ஆகி இயங்கலும்
உண்டு எனப்படுபவை எண்தாள் முக்கண்
யாங்கணும் பிரியாது ஓங்கு நின் நிலேயின்
யான் வந்து அணேந்து மீள்குவன் ஆயின்
ஆற்றுத்துயர் உற்ருேர் அணிநிழல் நசைஇ
வீற்றுவீற்று இழிதர வேண்டலும் வெறுத்தலும்
இன்றிச் சாயைக்கு நன்றுமன் இயல்பே
அனேயை ஆகுவை நினேவு அரும் காலே
இந்நிலே அதனில் ஏழையேற்கு இரங்கி
நின்னே வெளிப்படுத்து ஒளிப்பை நியேல்
அருள்மாறு ஆகும், பெரும! அஃது அன்றியும்
நிற்பெற்ற அவர்க்கும் உற்பவம் உண்டு எனும்
சொற்பெறும் அஃது இத் தொலுலகு இல்லே
அவ்வவை அமைவும் சோர்வும் மயர்வுஅறச்
சொல்லில் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல் இறந்தோயே! 12

ஞானிகளின் உடம்பு ஆயன் கொல்மரம் போலப் பயன்படினும் மேலும் வளராது

இறந்தோய் கரணங்கள் எல்லாம் எனக்குச்
சிறந்தோய் எனினும் மெய்த் தேவே! - பிறந்து உடனும்
காயம் கொளவும் கொளாமலும் கண்டதுநீ
ஆயன்கொல் பாதவத்து அற்று 13

திருச்சிற்றம்பலம்

நூல்வழிநின்று அருள்வழி நில்லாமை பந்தமே; பிற்செயாது நுகர்வதும் இன்று

அற்றதுஎன் பாசம் உற்றது உன் கழலே
அருள்துறை உறையும் பொருள்சுவை நாத!
வேறு என்று இருந்த என்னை யான் பெற
வேறு இன்மை கண்ட மெய்கண்ட தேவ!
இருவினை என்பது என்னைகொல் அருளிய
மனமே காயம் வாக்கு எனும் மூன்றின்
இதமே அகிதம் எனும் இவை ஆயில்
கணத்திடை அழியும் தினைத்துணை ஆகா
காரணம் சடம் அதன் காரியம் அஃதால்
ஆரணங்கு ஆம் வழி அடியேற்கு என்னைகொல்
செயல் எனது ஆயினும் செயலே வாராது
இயமன் செய்தி இதற்கு எனில் அமைவும்
பின்னை இன்று ஆகும் அன்னதும் இங்குச்
செய்திக்கு உள்ள செயல் அவை அருத்தின்
மையல்தீர் இயமற்கு வழக்கு இல்லை, மன்ன!
ஒருவரே அமையும் ஒருவா ஒருவற்கு
இருவரும் வேண்டா இறைவனும் நின்றனை
நின்னது கருணை சொல் அளவு இன்றே
அமைத்தது துய்ப்பின் எமக்கு அணைவு இன்ரும்
உள்ளது போகாது இல்லது வாராது
உள்ளதே உள்ளது எனுமுரை அதனுல்
கொள்ளும் வகையால் கொளுத்திடும் ஆயின்
வள்ளன்மை எலாம் உள்ளிட அமையும்
ஈய வேண்டும் எனும்விதி இன்ரும்
ஆயினும் என்னை அருந்துயர்ப் படுத்தல்
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமும் கரும பந்தமும்
தெருள அருளும் சிவபெரு மானே! 14

வினைப்பயனை உயிர்க்கு முதல்வனே சேர்ப்பன்

மான் அமரும் செங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன!
போனவினை தானே பொருந்துமோ - யான் அதனில்
ஆவனே ஆக்காய் அமலனும் நின் அருள்தான்
தேவனே! யாதுக்கோ தேர். 15

திருச்சிற்றம்பலம்

முத்தர் வினையை முதல்வனே ஏன்று கொண்டு அருள்வன்

தேராது உரைப்பன் தெருமரல் உள்ளத்தொடு
பேராது அருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்பது என் உண்மை எனில்
நினது நேர்மை சொல்மனத்து இன்றே
எழுவகைத் தாதுவின் ஏழ்துளை இரண்டும்
பெருமுழைக் குரம்பையில் பெய்து அகத்து அடக்கி
நீக்கி என்றனைப் போக்குஅற நிறுத்தி
இச்சை முதலிய எழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பு அது நிற்க
வாக்கும் மனமும் போக்கு உள தனுவும்
சொல்லும் நினைவும் செய்யும் செயலும்
நல்லவும் தீயவும் எல்லாம் அறிந்து
முறை பிறழாமல் குறைவு நிறைவு இன்றாய்க்
காலமும் தேசமும் மால் அற வகுத்து
நடுவுநின்று அருத்தலின் நடுவன் ஆகுதியே
சான்றோர் செய்தி மான்று இருப்பு இன்றே
சாலார் செயலே மால் ஆகுவதே
அத்துவா மெத்தி அடங்கா வினைகளும்
சுத்திசெய் தனையே ஒத்த கன்மத்திடை
நீங்கின என்னை ஊங்கு ஊழ் வினைகளும்
ஆங்கு அவை அருத்துவது ஆரைகொல் அதனால்
கருமம் அருத்தும் கடன் அது இன்றாம்
தருமம் புரத்தல் பெருமையது அன்றே
கண்ணினுள் மணிய! கருத்தினுள் கருத்த!
வெண்ணெய் வேந்த! மெய்கண்ட தேவ!
இடர்படு குரம்பையில் இருத்தித்
துடைப்பது இல்லா அருள் தோன்றிடச் சொல்லே. 16

சங்கரன் சார்ந்தவர்க்கலால் நலமிலன்

சொல்தொழும்பு கொள்ள நீ சூழ்ந்ததுவும் நின்செயல்கள்
மற்றவர்கள் நின்நோக்கில் மாய்ந்த உயிர்க் - குற்றம்
ஒளித்தி யாங்கு, ஐய! உயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றை எம் கோ! 17

திருச்சிற்றம்பலம்

முதல்வன் பெத்தத்தில் உயிர்களின் பின்னும் முத்தியின் முன்னும் நின்றருள்வன்

கோலங் கொண்ட வாறு உணராதே
ஞாலம் காவலன் யான் எனக் கொளீஇப்
பொய்யை மெய்யனப் புகன்று வையத்து
தோடாப் பூட்கை நாடி நாடா
என்னுள் கரந்து என் பின் வந்து அருளி
என்னையும் தன்னையும் அறிவின்றி இயற்றி
என்னது யான் எனும் அகந்தையும் கண்டு
யாவயின் யாவையும் யாங்கணும் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு
என்பணி ஆளாய் எனைப் பிரியாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை அன்னே
அருள்மிக உடைமையின் அருள்துறை வந்து
பொருள்மிக அருள்தலும் பொய்ப்பகை ஆதலும்
கைகண்டு கொள்ளெனக் கடல் உலகு அறிய
மெய்கண்ட தேவன் எனப்பெயர் விரீஇத்
தன்னுள் கரந்து தான்முன் ஆகித்
தன்னதும் தானுமாய் என்னை இன்றுக்கித்
தன்னையும் என்னையும் தந்து தனது
செய்யாமையும் என்செயல் இன்மையும்
எம்மான் காட்டி எய்தல்
அம்மா எனக்கே அதிசயம் தருமே. 18

முதல்வன் உயிர்களைப் பிறவிக் கடலினின்று எடுத்தாள்வோன்

தருமா தருமத் தலைநின்று ஆழ்வேனைக்
கருமா கடல்விடம் உண் கண்டப் - பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்
உரு என்ன வந்து எடுத்தான் உற்று. 19

சித்தாந்த முத்தியின் இயல்பு

உற்றவர் பெற்றவர் அற்றவர் முற்றும்
அற்றவர்க்கு அற்றவன் அல்லவர்க்கு அல்லவன்
அந்தம் ஆதி இல்லவன் வந்து

திருச்சிற்றம்பலம்

குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்டு
இருள்வெளி ஆகும் மருளினை அறுத்து
வந்து புகுதலும் சென்று நீங்கலும்
இன்றி ஒன்ருய் நின்ற அந்நிலையில்
ஒன்று ஆகாமல் இரண்டா காமல்
ஒன்றும் இரண்டும் இன்ரு காமல்
தன்னது பெருமை தாக்கான் ஆயினும்
என்னது பெருமை எல்லாம் எய்தித்
தன்னை எனக்குத் தருவதை அன்றியும்
என்னையும் எனக்கே தந்து தன்னது
பேர் ஆனந்தப் பெரும் கடல் அதனுள்
ஆரா இன்பம் அளித்துத் தீரா
உள்ளும் புறம்பும் ஒழிவுஇன்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலர் அடி அருளிய
மன்னன் எங்கோன் வார்புனல் பெண்ணை
வெண்ணெய் காவலன் மெய்கண்டதேவன்
அண்ணல் அருள் ஆலயத்தன் நண்ணிய
மலமுத லாயின மாய்க்கும்
உலக உயிர்க் எல்லாம் ஒரு கண்ணே. 20

இருபாவிருபஃது முற்றிற்று.



குளித்தலை

உ
சிவமயம்

திருவதிகை - ஸ்ரீமனவாசகங்கடந்தார்

அருளிச்செய்த

6. உண்மை விளக்கம்

உண்மை விளக்கம் என்ற உயரிய நூலை அருளிச்செய்தவர் திருவதிகை ஸ்ரீ மனவாசகங்கடந்தார் ஆவர். இவர் மெய்கண்ட தேவ நாயனுருடைய மாணவர்கள் நாற்பத்தொன்பதின்மருள் இவரும் ஒருவர். ஸ்ரீ அருணந்தி தேவநாயனுருடன் பயின்றவர். இவர் காலம் கி.பி. 44 ஆம் நூற்ருண்டு.

இந்நூல் உலகில் நாம் அறிய வேண்டிய உண்மைகளை விளக்கிக் கூறுவதால் இப்பெயர் எய்தியது. உண்மை என்பது பதி, பசு, பாச உண்மைகளைக் குறிப்பதாகும். பல நூல்களைப் படித்தறிந்து தெரிந்துகொள்ளவேண்டிய உண்மைகளை இந்நூல் இனிய தமிழில் உணர்த்துகிறது. பெரும்பாலும் தத்துவங்களை இந்நூல் விளக்கம் செய்தலால் உண்மை விளக்கம் என்னும் பெயர்க்கு ஏற்புடைத்தாயிற்று.

தம்கருத்தைப் பிறருக்கு உணர்த்த எத்துணையோ முறைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று விஞவிடை வகையில் தம் கருத்துக்களைத் தருவதாகும். பல விஞக்களைத் தாமே எழுப்பி அவற்றிற்குரிய விடைகளையும் கூறும் முறையில் அமைந்தது இது. இங்கு விஞவுவோர் மனவாசகங் கடந்தார் ஆகவும், விடையிறுப்போர் மெய்கண்டாராகவும் விளங்குகின்றனர். இதன்கண் எழுப்பப்பெறும் விஞக்கள் ஆறு: 1. ஆருறு தத்துவங்கள் எவை? 2. ஆணவம் என்பதென்ன? 3. கன்மம் என்பதென்ன? 4. உயிர் என்பது எது? 5. இறை என்பது எது? 6. இறைவன் திருவைந்தெழுத்து உடனுய் நின்று திருக்கூத்து இயற்றும் நிலை எது? இவ்விஞக்கள் இந்நூலின் இரண்டாவது பாடலில் உள்ளன. இவற்றிற்கு விடை கூறுமுகமாக இந்நூல் முழுமைபெற்று விளங்குகின்றது. இவ்விஞக்களுள் ஆருவது விஞவும் அதற்குரிய விடையும் இந்நூலகத்து விளங்குதல் இதன் தனிச்சிறப்பு ஆகும்.

இந்நூலில் 54 செய்யுட்கள் உள்ளன. காப்புச்செய்யுள் ஒன்று, முகவுரை மூன்று செய்யுட்கள். எஞ்சிய ஐம்பது செய்யுட்களே நூற்பொருளைத் தெரிவிக்கின்றன.

திருச்சிற்றம்பலம்

இந்நூலில் பத்துப் பகுதிகள் உள்ளன. அவை ஆன்ம தத்துவம், வித்தியாதத்துவம், சுத்த தத்துவம், ஆணவம், கன்மம், ஆன்ம ரூபம், சிவ ரூபம், பஞ்சாக்கர நடனம், அஞ்செழுத்து, அத்துவித முத்தி, குருலிங்க சங்கம வழிபாடு என்பனவாகும்.

ஆன்ம தத்துவம் என்ற முதற் பகுதியில் ஐம்பூதங்களின் வடிவம், நிறம், எழுத்து, குறி, அதி தெய்வங்கள், அத்தெய்வங்களின் தொழில், பூதங்களின் தன்மை, ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்ருர். ஐம்புலன்கள், ஐம்பொறிகள் ஆகியனவற்றை உணர்த்தி, பொறிகள் பூதங்களோடும் எவ்வாறு சார்ந்து நின்று புலன்களை அறிகின்றன என்ற விளக்கத்தையும் தெரிவித்தருளுகின்ருர். கன்மேந்திரியங்களும் அவைபோல எவ்வெப் பூதங்களோடு எவ்வாறு சார்ந்து நின்று வசனம் கமனம் முதலியவற்றைச் செய்கின்றன என்ற விளக்கத்தையும் அந்தக் கரணங்கள் நான்கின் தொழில்களையும் உணர்த்தியருளுகின்ருர்.

வித்தியாதத்துவம் என்ற பகுதியில் ஏழு வித்தியா தத்துவங்களின் பெயர்களும் அவை ஆன்மாவுக்கு எவ்வெவ்வகையான உதவிகளைப் புரிகின்றன என்பதும் உணர்த்தப்படுகின்றன.

சுத்த தத்துவம் என்ற பிரிவில் அவற்றின் பெயர் ஐந்தினையும் முதலிற் கூறி அவற்றின் இயல்புகளைப் பின்னர்க் கூறுகின்ருர். இவ்வாறு முப்பத்தாறு தத்துவங்களைக் கூறிய ஆசிரியர் ஆணவம் கன்மம் ஆகிய மலங்களின் தன்மைகளைத் தெரிவிக்கிருர்.

ஆன்ம ரூபம் என்ற பகுதியில் ஆன்மா சித்தாகிய சிவத்தையும் அசித்தாகிய பாசத்தையும் பகுத்தறிவது என்றும் **சிவரூபம்** என்ற பகுதியில் இறைவன் அறிவினுள் அறிவாய் மன்னி நிற்கின்ருர் என்றும் கூறுகின்ருர்.

பஞ்சாக்கர நடனத்தில் இறைவன் ஆன்மாவினிடத்தில் ஐந்தெழுத்தே திருமேனியாகக்கொண்டு நடனம் புரிதலையும், அவ்வருட் கூத்து ஐந்தொழிற்கும் தானே முதல்வன் என அறிவித்தலையும் உணர்த்துகிருர். இறைவன் பாசத்திலுள்ள உயிர்களை ஐந்தொழிற் படுத்தும் ஊன நடனத்தையும் பாசத்தின் நீங்கிய முத்தான்மாக்களிடத்து நிகழ்த்தும் ஞான நடனத்தையும் தெரிவித்தருள்கின்ருர்.

ஐந்தெழுத்து என்ற பகுதியில் பஞ்சாக்ஷர விளக்கம் கூறப்படுகிறது. அத்துவித முத்தியில் சைவ சித்தாந்தத்துள் சிறப்பாகக் கூறப்படும் முக்திநிலை விளக்கம் விவரிக்கப்படுகிறது. குரு லிங்க் சங்கமம் என்ற பகுதி முத்திற வழிபாடுகளின் பெருமையைக் கூறுகிறது. இவ்வாறு சைவ சித்தாந்த சாத்திரங்களின் சாரமான பல கருத்துகளைத் தெளிவாக ஓதும் இந்நூல் சாத்திர நூல்களைப் படித்தற்கு முதல் நூலாகத் திகழ்கிறது.

6. உண்மை விளக்கம்

காப்பு

வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மைவிளக்கம் உரைசெய்யத் - திண்மதம்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற்று ஐங்கரனைப்
பந்தம் அறப் புந்தியுள் வைப்பாம் 1

மாணவர் விண்ணப்பம்

பொய்காட்டிப் பொய் அகற்றிப் போதானந் தப்பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய்! விண்ணப்பம் - பொய்காட்டா
மெய்யா! திருவெண்ணெ வித்தகா! சுத்தவினு
ஐயாநீ தான் கேட்டு அருள். 2

வினுக்கள்

ஆருறு தத்துவம் ஏது? ஆணவம் ஏது? அன்றே தான்
மாரு வினை ஏது? மற்று இவற்றின் - வேறு ஆகா
நான் ஏது? நீ ஏது? நடம் அஞ்செழுத்துத்
தான் ஏது? தேசிகனே! சாற்று 3

ஆசிரியர் உடன்பாடு

உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்றனக்கு
வள்ளல் அருளால் அன்று வாய்மலர்ந்து - தெள்ளியசீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த
யோகம் நிகழ் புதல்வா! உற்று 4

மாயை - மாபூதம் 5 - 10. ஆன்ம தத்துவம் 24

நாற்கோணம் பூமிபுனல் நண்ணும் மதியின்பாதி
ஏற்கும் அனல் முக்கோணம் எப்போதும் - ஆர்க்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாயம் ஆம் இவற்ருல் உற்று 5

பொன்பார் புனல்வெண்மை பொங்கும் அனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம் - என்பார்
எழுத்து லவரய அப்பாராதிக்கு என்றும்
அழுத்தமதாய் நிற்கும் அது. 6

குறிகுலிசம் கோகனதம் கொள்சுவத்தி குன்ரு
அறுபுள்ளி ஆர் அமுத விந்துப் - பிறிவு இன்றி
மண்புனல்தீக் கால்வானம் மன்னும் அடைவேஎன்று
ஒண்புதல்வா! ஆகமம் ஓதும். 7

திருச்சிற்றம்பலம்

பாராதி ஐந்துக்கும் பன்னுமதி தெய்வங்கள்
ஆரார் அயன் ஆதி ஐவராம் - ஓரோர்
தொழில் அவர்க்குச் சொல்லுங்கால் தோற்றம் முதல் ஐந்தும்
பழுதறவே பண்ணுவர் காண் பார் 8

படைப்பன் அயன் அளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்பன் உருத்திரனும் சொல்லில் - திடப்பெறவே
என்றும் திரோபவிப்பர் ஈசர் சதாசிவரும்
அன்றே அநுக்கிரகர் ஆம். 9

மண்கடினமாய்த் தரிக்கும் வாரிகுளிர்ந்தே பதம் ஆம்
ஒண்கனல் சுட்டு ஒன்றுவிக்கும் ஓவாமல் - வண்கால்
பரந்து சலித்துத் திரட்டும் பார்க்கில் ஆகாயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து. 10

ஐம்புலன் (தன்மாத்திரை)

உள்ளபடி மாபூதம் ஓதினேம் உன்றனக்குக்
கள்ளமிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில் - மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே ஆம் 11

ஞானேந்திரியம்

ஞானேந் திரியங்கள் நன்று உரைக்கக்கேள்
ஊன மிகுபூதம் உற்றிடமா - ஈனமாம்
சத்தாதியை அறியும் தானம் செவிதோல்கண்
அத்தாலு மூக்கென் றறி. 12

வானிடமா நின்றுசெவி மன்னும் ஒலியதனை
ஈனமிகுந் தோல்கால் இடமாக - ஊனப்
பரிசம் தனை அறியும் பார்வையில்கண் அங்கி
விரவி உருவம் காணுமே. 13

நன்றாக நீரி இடமாக நாஇரதந் தான் அறியும்
பொன்றா மணம்மூக்கும் பூ இடமா - நின்று அறியும்
என்று ஓதும் அன்றே இறை ஆகமம் இதனை
வென்றார் சென்றார் இன்ப வீடு. 14

கன்மேந்திரியம்

கண்ணுதல் நூல் ஓதியிடும் கன்மேந்திரியங்கள்
எண்ணும் வசனாதிக்கு இடமாக - நண்ணியிடும்

திருச்சிற்றம்பலம்

வாக்குப் பாதம்பாணி மன்னு குதம் உபத்த
மாக்கருதும் நாளும் அது. 15

வாக்கு ஆகாயம் இடமா வந்து வசனிக்குக்கால்
போக்கு ஆரும் காற்று இடமாப் புல்கி அனல் - ஏற்கும்
இடும்பை குதம் நீர் இடமா மலாதி
விடும்பார் இடம் உபத்தம் விந்து. 16

அந்தக்கரணம்

அந்தக் கரணம் அடைவே உரைக்ககேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் - சிந்தை இவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து அங்கு
உற்றது சிந்திக்கும் உணர். 17

வித்தியாத்துவம்

ஓதியிடும் நால் ஆறும் உற்று ஆன்ம தத்துவம் என்று
ஆதி அருள்நூல் அறையும்காண் - தீது அறவே
வித்தியா தத்துவங்கள் தம்மை விளம்பக்கேள்
உத்தமனே! நன்ருய் உனக்கு. 18

காலம்நியதி கருதும் கலேவித்தை
ஏல இராகம் புருடனே மாயை - மால் அறவே
சொன்னேம் அடைவாகச் சொன்ன இவை தம் உண்மை
உன்னி உரைக்க நாம் உற்று 19

எல்லே பலம் புதுமை எப்போதும் நிச்சயித்தல்
அல்லல் தரும் கிரியை ஆன்மாவுக்கு - ஒல்லே
அறிவு ஆசை ஐம்புலனும் ஆரவரும் காலம்
குறியா மயக்கு என்று கொள். 20

சிவதத்துவம்

வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினேம்
சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள் - நித்தமாம்
சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவம்நல்
சத்திசிவம் காண் அவைகள் தாம். 21

சுத்தவித்தை ஞானம்மிகும் தொன்மையாம் ஈசுரம்தான்
அத்தன் தொழில் அதிகம் ஆக்கிடும் - ஒத்த இவை
சாதாக்கியம் என்றும் சத்தி சிவம் கிரியை
ஆதார ஞான உரு ஆம். 22

திருச்சிற்றம்பலம்

ஆணவம் கன்மம்

ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக
மாறா மலம் இரண்டும் வாசொல்லக் - கூறில்
அறியாமை ஆணவம் நீ ஆன சுகம் துக்கம்
குறியா வினை என்று கொள். 23

நான் (ஆன்மா)

ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
மாறா அருளால் வகுத்துரைத்தீர் - வேறு ஆகா
என்னை எனக்கு அறியக் காட்டீர் இவை கண்டேன்
உன்னரிய தேசிகரே! உற்று 24

நன்றா உரைக்கக்கேள் நல்ல சித்தின் முன் அசித்து இங்கு
ஒன்றாது சித்து அசித்தை ஓராது - நின்று இவற்றை
அன்றே பகுத்து அறிவது ஆன்மாவே என்றுமறை
குன்றாமல் ஓதும் குறித்து. 25

தத்துவங்கள் ஆறாறும் தம்மைத்தாம் என்று அறியா
எத்தன்மை என்னில் இயம்பக்கேள் - சுத்தமாம்
ஆறு சுவையும் அறியாவே தம்மைத்தாம்
கூறில் அவை இவை போல் கொள். 26

ஆறு சுவையும் அருந்தி அவைதம்மை
வேறு ஒருவன் கூறியிடும் மேன்மைபோல் - ஆறாறும்
ஒன்று ஒன்றாய் நாடி உணர்ந்து ஓதில் அதில் உற்று அறிவாய்
நின்ற பொருள் தானேகாண் நீ. 27

நீ (சிவம்)

குன்றா அருளாலே கூறினீர் என்வடிவு
பொன்றாத நும் உருவம் போதியீர் - நின்று அருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே உனது அறிவில்
நண்ணி அறிவித்திடுவோம் நாம். 28

அன்றியும்கேள் ஆன்மாவால் ஆய்ந்து அறியும் ஐம்பொறிகள்
இன்றி அறியா இவை என்ன - நின்றதுபோல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன் அறிவில்
மேவாமல் மேவி நாமே. 29

அக்கரங்கட்கு எல்லாம் அகர உயிர் நின்றால்போல்
மிக்க உயிர்க்கு உயிராய் மேவினோம் - எக்கண்ணும்
நில்லா இடத்து உயிர்க்கு நில்லாது அறிவு என்று
நல் ஆகமம் ஓதும் நாடு. 30

திருச்சிற்றம்பலம்

நாதாந்த (பஞ்சாக்கர) நடனம் 31- 40

நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்து அஞ்சு எழுத்தால்
உற்று உருவாய் நின்று ஆடல் உள்ளபடி - பெற்றிடநான்
விண்ணூர் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே!
தண்ணூர் அருளாலே சாற்று. 31

நடம் ஆடும் இடம், கருவி

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக் கேள் - சிட்டன்
சிவாயநம எனும் திரு எழுத்து அஞ்சாலே
அவாயம் அற நின்று ஆடுவான். 32

ஊனநாடகம்

ஆடும்படி கேள் நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும்முகம் வாமுடியப் பார். 33

சேர்க்கும் துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனூர்
தங்கும் மகரம் அதுதான். 34

ஞானநாடகம்

ஓங்காரமே நல் திருவாசி உற்று அதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றூர் அறிவர் அணி அம்பலத்தான் ஆடல் இது
பெற்றூர் பிறப்பு அற்றூர் பின். 35

பஞ்சகிருத்திய தாண்டவம்

தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. 36

ஞானத்தின் ஞான நடனம்

மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தான் எடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தையார் பரதம் தான். 37

திருச்சிற்றம்பலம்

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மான் இடத்தே தங்கியிடும் - ஆனந்தம்
மொண்டு அருந்தி நின்று ஆடல் காணும் அருள் மூர்த்தியாக்
கொண்ட திரு அம்பலத்தான் கூத்து 38

பரை இடமா நின்று மிகு பஞ்சாக்கரத்தால்
உரை உணர்வுக்கு எட்டா ஒருவன் - வரைமகள்தான்
காணும்படியே கருணை உருக்கொண்டு ஆடல்
பேணு மவர்க் உண்டோ பிறப்பு. 39

ஐந்தெழுத்துண்மை

நாதாந்த நாடகத்தை நன்ருய் அருள்செய்தீர்
ஓதீர் எழுத்து அஞ்சும் உள்ளபடி - தீதறவே
அஞ்சு எழுத்து ஈது ஆகில் அழியும் எழுத்து ஆய்விடுமோ
தஞ்ச அருள் குருவே சாற்று. 40

உற்ற குறி அழியும் ஓதும்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது - மற்றது கேள்
ஈசன் அருள் ஆவி எழில் ஆர் திரோதமலம்
ஆசு இல் எழுத்து அஞ்சின் அடைவு ஆம். 41

சிவன் அருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவன் எழுத்து அஞ்சின் அடைவாம் - இவன்நின்று
நம்முதலா ஓதில் அருள் நாடாது நாடும் அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று. 42

அண்ணல் முதலா அழகு ஆர் எழுத்து ஐந்தும்
எண்ணில் இராப்பகல் அற்று இன்பத்தே - நண்ணி
அருளானது சிவத்தே ஆக்கும் அணுவை
இருளானது தீர இன்று. 43

ஆதிமலம் இரண்டும் ஆதியாய் ஓதினுல்
சேதியா மும்மலமும் தீர்வு ஆகா - போதம்
மதிப்பு அரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படி ஓது அஞ்செழுத்துமே. 44

அஞ்சுஎழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்சுஎழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் - அஞ்சுஎழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் ஆருறுக்கு அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும். 45

முத்திநிலை யநுபவம்

முத்திதனை அடைந்தோர் முந்துபழம் போது அங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின் - ஒத்த

திருச்சிற்றம்பலம்

இரதமணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர் என்று ஓதும் விதி. 46

தத்துவங்கள் எல்லாம் சகசமாக ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் - முத்திதனில்
சித்தமலம் அற்ருர் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமா ஓதியிடும் தான். 47

ஆதவன் தன் சன்னிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதம் அற நிற்கின்ற பெற்றிபோல் - நாதாந்தத்து
அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்து இனபக்
கண்ணில் அழுந்தியிடும் காண். 48

சென்று இவன் தான் ஒன்றில் சிவபூரணம் சிதையும்
அன்றுஅவன் தான் ஒன்றுமெனில் அன்னியமாம் - இன்றுஇரண்டும்
அற்ற நிலை ஏதுஎன்னில் ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றம் அற நின்றதுபோல் கொள். 49

முப்பொருளும் முத்தியில் நிற்கும் முறைமை

வாக்கு மனம் இறந்த வான் கருணையாளன் உருத்
தாக்கு அறவே நிற்கும் தனிமுதல்வா! - நீக்காப்
பதியினைப் போல் நித்தம் பசுபாசம் என்ருய்
கதியிடத்தும் மூன்றினையும் காட்டு. 50

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு - மெத்தவே
இன்பம் கொடுத்தல் இறை இத்தை விளைவித்தல் மலம்
அன்புடனே கண்டுகொள், அப்பா! 51


அப்பா! இம்முத்திக்கு அழியாத காரணம்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள் - ஒப்பில்
குருலிங்க வேடம் எனக் கூறில் இவை கொண்டார்
கரு ஒன்றி நில்லார்கள் காண். 52

கற்ரு மனம்போல் கசிந்துகசிந்தே உருகி
உற்று ஆசான் லிங்கம் உயர்வேடம் - பற்று ஆக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார். 53

முத்திலாபம்

வாழ்ந்தேன் அருட்கடலே! வற்ருப் பவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதினியில் - சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே!
உண்மைத் தவப்பயனே உற்று. 54

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

7. சிவப்பிரகாசம்

ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் வரலாறு

இவர் தில்லைப்பதியினர்; தில்லைவாழ் அந்தணர். கூத்தப் பெருமானுக்கு வழிபாடு செய்விக்கும் பேறு பெற்றவர். மெய்ந்நூற் பொருளை நன்கு உணர்ந்தவர். இத்தகைய தகுதி காரணமாக இவர் சிவிகையில் ஊர்ந்து செல்லும் இயல்பினராய் இருந்தார். திருக்களாஞ்சேரியில் வாழ்ந்து வந்த மறைஞானசம்பந்தர் ஒருநாள் தில்லைத் திருவீதியில் இவர் சிவிகையில் வரக்கண்டார். அப்பொழுது 'பட்ட மரத்தில் பகல் குருடு போகுது பார்' என அவர் கூறினார். அதுவே சிவிகையில் செல்லும் உமாபதி சிவத்திற்கு அருளுரையாயிற்று. சிவிகையினின்றும் இறங்கிய உமாபதி சிவம் மறைஞானசம்பந்தரை வணங்கி அவரிடம் உபதேசம் பெற்றார்.

தில்லை மூவாயிரவர் இச்செயல் தகுதியற்றது எனக் கருதித் தம் கூட்டத்திலிருந்து இவரை விலக்கி விட்டனர். உமாபதி சிவம் அதற்கு மனந்தளரவில்லை. நாடவர் பழித்துரை அவருக்குப் பூணதுவாயிற்று. தில்லைக்கு அருகிலுள்ள கொற்றவன் குடியில் திருமடம் அமைத்துக் கொண்டு அங்குச் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். கூத்தப் பெருமானை வழிபாடாற்றும் நாள்வர இவர் திருக்கோயிலுக்குச் சென்றார். ஆயினும் அங்குள்ளோர் இவரைத் தடுத்து விட்டனர். இவருக்குரிய முறை நாளில் பிறிதொரு அந்தணர் வழிபாடாற்றச் செல்லப் பூசைப் பெட்டகத்தில் பெருமான் காணுதவராயினர். அனைவரும் கேட்க, 'நாம் உமாபதியின் பெட்டகத்தில் இருக்கின்றோம்' என்னும் அசரீரி கேட்டது. அதன் மெய்ம்மை உணர்ந்த அந்தணர்கள் இவரை அழைத்து முன்போல் வழிபாடு செய்தருள வேண்டிக் கொண்டனர். இவரும் ஏற்றுச் பூஜை செய்து வந்தார்.

கொற்றவன்குடித் திருமடத்தில் அரிய நிகழ்ச்சியொன்று நடந்தது. பெற்றான் சாம்பான் என்பார் திருமடத்திற்கு நாளும் விறகு கொணரும் திருத்தொண்டைச் செய்து வந்தார். இவர் தாழ்ந்த வகுப்பினர். இவருக்குத் தீட்சையருள இறைவன் உமாபதி சிவத்திற்குத் திருமுகமொன்று அருளினன். அத்திருமுகத்தின்படி இவர் அவருக்கு வீடு பேறளித்தனர். பெற்றான் சாம்பான் என்பாருடைய மனைவியார் இவ்வுண்மை உணராது அரசரிடம் சென்று தம் குறையைக் கூற அரசனும் உமாபதி சிவத்திடம் வந்து 'நீர்பெற்றான் சாம்பானுக்கு வீடுபேறளித்தது வாய்மையாயின் என் முன் பிறிதொருவருக்கும் வீடுபேறளிப்பீர்' எனக் கூற இவரும் தாம் நாளும் வழிபட்டு வரும் சிவலிங்கத் திருமேனியின் திருமஞ்சன நீரால் வளர்ந்ததும், கோமுகியின் அருகே இருந்ததுமான முள்ளிச்செடி ஒன்றிற்குத் தம் அருள் நோக்கால் வீடுபேறளித்தார். அது கண்ட அரசனும் பெற்றான் சாம்பானின் மனைவியும், பிறரும் உண்மை உணர்ந்து அவரை வழிபட்டுச் சென்றனர். பின் ஒருஞான்று தம் குருவாகிய மறைஞானசம்பந்தர் செங்குந்தர் வீதி வழியே செல்கையில் அவர்கள் பாவிற்கு இடுதற்காக வைத்திருந்த கஞ்சியை வார்க்கக் கையேற்று உண்டார். உடன் வந்த உமாபதி சிவாசாரியர் தம் ஆசிரியர் கைவழி ஒழுகிய கஞ்சியைக் கையேற்று அருந்தினர். அதைக் கண்ட மறைஞானசம்பந்தர் அவருடைய பக்குவத்தை உணர்ந்து தமக்குப் பின் தம் ஞான பரம்பரையை வளர்க்குமாறு அவருக்குக் கட்டளையிட்டருளி வீடுபேறடைந்தார். மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் உமாபதி சிவாசாரியர் ஏழு நூல்களை அருளியவர். இவையன்றித் திருமுறைத் திரட்டு, கோயிற் புராணம், திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண சாரம், சேக்கிழார் புராணம், சிவஸ்தல சிவநாம சத்திநாமக்கலி வெண்பா, சதரத்ன சங்கிரகம் ஆகிய நூல்களையும், பௌஷ்கரபாஷ்யம் என்ற பேருரையையும் இவர் எழுதியுள்ளார்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

7. சிவப்பிரகாசம்

இந்நூல் 100 பாடல்களை உடையது. பொது இயல்பு, உண்மை இயல்பு என இரு பிரிவுகளை உடையது. நூலின் தொடக்கத்தே பாயிரம் என்ற பகுதியுள்ளது. இதன்கண் காப்பும், கூத்தப்பெருமான், உமையம்மை, விநாயகர், முருகர் ஆகியோருக்கு வணக்கமும் கூறப்பெற்றுள்ளன. அடுத்துத் தமக்கு முன்னிருந்த ஸ்ரீகண்டர், நந்தியம் பெருமான், சனற்குமாரர், சத்திய ஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர் ஆகிய அகப்புறச் சந்தான குரு முதல்வர்களுக்கும், அடுத்துத் தமக்கு நேர் முக ஆசிரியரான மறைஞான சம்பந்தர் ஆகிய அகப்புறச் சந்தான குரு முதல்வர்களுக்கும், அடுத்துத் தமக்கு நேர் முக ஆசிரியரான மறைஞான சம்பந்தருக்கும் வணக்கம் கூறுகின்றுர் ஆசிரியர். இவ்வாறு வணக்கம் கூறப்பெற்றுள்ள முறை இந்நூற்கே அமைந்த சிறப்பாகும்.


நுவலும் பொருள் கூறுங்கால் சைவ சித்தாந்தச் சிறப்பு, விளக்கப் பெற்றுள்ளது. இதனையடுத்துத் தீட்சையின் வகைகளும் அதன் பயன்களும் கூறப்பெற்றுள்ளன. நூல் வழியும், நூற் பெயரும், கூறும் முறையும், அவையடக்கம் கூறும் முறையும் இந்நூற்கு அமைந்த தனிச்சிறப்பினை விளக்குவதாகும். நூல் வழியில் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகிய இரு நூற் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றுடன் ஆகமங்களின் கருத்துக்களையும் ஏற்று இந்நூலைச் செய்வதாக ஆசிரியர் கூறியுள்ளார். அவையடக்கத்துள் எத்தகைய பொருள் உண்மையும், தொன்மை எனக்கருதி நன்றென்றலும், இன்று தோன்றியது என்பதால் தீதென்றலும் தவறு என்னும் உண்மை மிக அழகாகக் கூறப்பெற்றுள்ளது. நூலுண்மை தேறுவாரைத் தலை, இடை, கடையெனப் பிரித்துத் தலையாயார் சொற்குற்றம் முதலியன உளவாயினும் பொருள் நயங்கருதி ஏற்பர் என்றும் இடையயார் பழமை யழகு. புதுமை ஆகியவற்றைக் காணின் அவற்றை ஏற்று மகிழ்வர் என்றும், கடையாயார் தமக்கென அறிவிலராதலின் பிறர் புகழின் புகழ்ந்தும் பிறர் இகழின் இகழ்ந்தும் வருவாரென்றும் கூறியிருப்பது எண்ணி மகிழ்தற்குரிய தொன்ருகும்.

திருச்சிற்றம்பலம்

பொது இயல்பில் இம் முப்பொருள் உண்மைபற்றிய விளக்கம் உள்ளது. உண்மை இயல்பு கூறத் தொடங்குங்கால் இன்ன இன்ன பொருள்களைக் கூறுவன என நுதலிப் புகுகின்றார் ஆசிரியர். உண்மையியல்பில் உயிரியல்பு, அது ஐந்தவத்தைப் படுமாறு, உயிர்தானாக யாதொன்றையும் அறியாமை, அத்தகைய உயிர்க்கு இறைவன் உணர்த்தும் முறைமை, சிவஞானத்தின் உண்மை, அதன் பயன், திருவைந்தெழுத்தின் இயல்பு, அணைந்தோர் தன்மை ஆகியவை விரித்துரைக்கப் பெறுகின்றன.

நூலின் இறுதியில் நூற்கருத்தும் கேட்டற்குரியார் யாவர் என்பதும் கூறப் பெற்றுள்ளன. உண்மையை உணர வேண்டுமென்னும் வேட்கையும் தகுதியும் உடையவர்க்குத் தீக்கையளித்து இந்நூலைக் கற்பிக்குமாறு ஆசிரியர் கூறியிருப்பது இந்நூற் பெருமையையும், சைவசித்தாந்தம் பயிற்று முறைமையும் விளக்குவதாகும்.

சிவஞானபோதம் (மெய்யுணர்தல்) மிகின் சிவஞானம் சித்திக்கும் அது சித்திக்கவே உயிரிடத்துச் சிவம் பிரகாசிக்கும். இம்மூன்று நூல்களும் தம் பெயரானே இவ்வுண்மையைப் புலப்படுத்தி நிற்றலும் ஈண்டு அறியத்தக்கதாகும்.



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

7. சிவப்பிரகாசம்

காப்பு

ஒளியான திருமேனி உமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழல்நாளு மறவாமல்
அளியாளும் மலர் தூவும் அடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே. 1

நடராஜர் ஸ்துதி

ஓங்கொளியாய் அருண்ஞான மூர்த்தி யாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துடி செய்ய நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினு முறவணங்கிப் போற்றல் செய்வாம். 2

சிவகாமியம்மை ஸ்துதி

பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானம் கிரியைபர போக ரூபம்
தருங்கருணை உருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்கள் தாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்றாய்
விமலாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். 3

விநாயகர் ஸ்துதி

நலந்தரல்நூ லிருந்தமிழின் செய்யுட் குற்றம்
நண்ணுமை இடையூறு நலியாமை கருதி
இலங்குமிரு குழையருகு பொருதுவரி சிதறி
இணைவேல்க ளிகழ்ந்தகயற் கண்ணியொடு மிறைவன்

கலந்தருள வருமானை முகத்தான் மும்மைக்
கடமருவி யெனநிலவு கணபதியின் அருளால்
அலர்ந்துமது கரமுனிவர் பரவவளர் கமல
மனைதிரு வடியிணைகள் நினைதல் செய்வாம். 4

முருகக்கடவுள் ஸ்துதி

வளநிலவு குலவமரர் அதிபதியாய் நீல
மயிலேறி வருமீச னருள்ஞான மதலை
அளவில்பல கலையங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அண்ணல்விறலெண்ணு
உளமருவு சூரனுரம் எமதிடும்பை யோங்கல்
ஒன்றிரண்டு கூறுபட வொளிதிகழ்வேல் உகந்த
களபமலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மல ரடியிணைகள் சிந்தை செய்வாம். 5

சந்தானகுரவர்

தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணை
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாரு
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவிலருள் மறைஞான சம்பந்தர் இவரிச்
சந்தானத் தெமையாளும் தன்மை யோரே. 6

(மறை ஞானசம்பந்தர்) குரு வணக்கம்

பார்திகழ வளர்சாம வேத மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை யாண்ட
சைவசிகா மணிமருதைத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில்புடைசூழ் மதின்மீதே மதியங்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம். 7

நுதலிய பொருள்

புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகல் அவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமும் சொற் பொருள்போல்
பேதாபே தமும் இன்றிப் பெருநூல் சொன்ன

திருச்சிற்றம்பலம்

அறத்திறனுல் வளேவதா யுடலுயிர்கண் ணருக்கன்
அறிவொளிபோல் பிறிவருவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்கலுற்ரும். 7

தீட்சாக்கிரமம்

மூவகையா ருயிர்வருக்க மலத்தார் கன்ம
மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமா மெனவுருவாய் வந்து நாதன்
திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்
பாவனேயால் மிகுநூலா லியோகப் பண்பால்
பரவிவரு மவுத்திரியால் பாச நாச
மேவவரு ளுதவுமவுத் திரியிரண்டு திறனும்
வியன்கிரியை ஞானமென விளம்பு மாறே. 8

விரும்பியமந் திராதிகார மர்ச்சனு திகார
மேவுமியோ காதிகார மெனச்சமய விசேடம்
வரும்பொருவில் நிருவாண மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் பவனங்கள் தத்துவங்கள் கலேகள்
ளிரங்கடைவிற்ருேகைபதினுென் றெண்பத் தொன்றைம்பத்தொன்
றிருநூற்ருே டிருபத்து நாலாரு றைந்திற்
பரந்தநெறி யறுவகையு மொருவிநினே வரிதாம்
பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று மன்றே. 9

சிவஞானத்தின் சிறப்பும் வகையும்

கிரியையென மருவுமவை யாவும் ஞானங்
கிடைத்தற்கு நிமித்தமெனக்கிளக்குமுண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கண்
மருவியிடு முயர்ஞான மிரண்டா மாரு
மலமகல வகலாது மன்னு போதத்
திருவருளொன் ருென்றதனேத் தெளிய வோதுஞ்
சிவாகமமென் றுலகறியச் செப்பும் நூலே. 10

நூல்வழியும் நூற்பெயரும்

தெரித்தகுரு முதல்வருயர் சிவஞான போதஞ்
செப்பினர்பின் பவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற் றவர்கள்திரு வடிகள் போற்றி
விளம்பிநூ லவையிரண்டும் விரும்பினேக்கிக்

திருச்சிற்றம்பலம்

கருத்திலுறை திருவருளு மிறைவ னூலுங்
கலந்துபொது வுண்மையெனக் கருதி யானு
மருத்திமிக வுரைப்பன்வளர் விருத்த நூறு
மாசில்சிவப் பிரகாச மாகு மென்றே. 11

அவையடக்கம்

தொன்மையவா மெனுமெவையு நன்றாகா வின்று
தோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா துணிந்த
நன்மையினா் நலங்கொண்மணி பொதியுமதன் களங்க
நவையாகா தெனவுண்மை நயந்திடுவா் நடுவாந்
தன்மையினா் பழமையழ காராய்ந்து தரிப்பா்
தவறுநலம் பொருளின்கட் சாா்வாராய்ந் தறிதல்
இன்மையினா் பலா்புகழி லேத்துவரே திலருற்
றிகழ்ந்தனரே லிகழ்ந்திடுவா் தமக்கென வொன் றிலரே.12

பொதுவதிகாரம்

முதற் சூத்திரம்

1. பதி இயல்பு

பலகலையா கமவேத மியாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல்பதிபாரமே யதுதான்
நிலவுமரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமா யேகமாய் நித்த மாகி
யலகிலுயிா்க் குணா்வாகி யசல மாகி
யகண்டிதமா யானந்த வருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பா் தெளிந்து ளோரே. 13

முதல்வன் திருவுரு

நீடுபரா சத்திநிக ழிச்சா ஞான
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்து வாதி
கூடுமொளி வளா்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரன புவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே. 14

ஈங்கிதுவென் றதுகடந்த வியல்பி னானும்
ஈறுமுத நடுவொன்று மிலாமை யானும்
ஓங்கிவளர் ஞானமய னாத லானும்
உண்மைபிறர்க் கறிவரிய வொருமை யானும்
தாங்கரிய வெறுப்பினொடு விருப்பு மெல்லாஞ்
சார்வரிய தனிமுதல்வ னாத லானும்
நீங்கலரு முயிர்க்குயிராய் நிற்ற லானும்
நிறுத்திடுவ நினைந்தவுரு நிமலன் றானே. 15

முதல்வனது உண்மை

உலகமெலா மொருவனொ டொருத்தியொன்றென்
றுளதாகி நின்றளவி லொடுங்கும் பின்னு
மலமதனு லுளதாகு முருவ மாறி
வருவது பேர் வதுசெல்வ தாத லானும்
மலைவிலசேத தனமாயை யாதலானு
மணுக்களுரு வடையுமறி விலாமை யானும்
நிலவுதொழின் மருவுயுரு நிற்ற லானும்
நின்றெவையு மளித்திடுவ நிமலன் றானே. 16

கந்தமல ரயன்படைக்கு முலக மெல்லாங்
கண்ணனளித் திடுமவையெங் கடவுள் தானே
யந்தமுற வழித்திடுவ னாத லாலே
யயனரியு மவனதுய ரதிகா ரத்து
வந்தமுறை தன்றொழிலே மன்னுவிப்ப னெல்லாம்
வருவிப்பன் விகாரங்கண் மருவான் வானின்
முந்தரவி யெதிர்முளரியலாவுறுமொன்றலர்வான்
முகையாமொன் றென்றுலரு முறையி னாமே. 17

உலகப் படைப்பின் பயன்

ஏற்றவிவை யரனருளின் றிருவிளையாட் டாக
வியம்புவர்க ளணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே
யூற்றமிக வருள்புரித லேது வாக
வுரைசெய்வ ரொடுக்கமிளைப் பொழித்தன் மற்றைத்
தோற்மல பாகம்வரக் காத்தல் போகந்
துய்ப்பித்த றிரோதாயி தகநிறுத்த லாகும்
போற்வரு மருளருளே யன்றி மற்றுப்
புகன்றவையு மருளொழியப் புகலொ ணாதே. 18

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் சூத்திரம்

2. பசுவியல்பு

எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி னழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
யண்ணலரு ளானண்ணி யவையவரா யதனால்
அலகினிகழ் போகங்க ளருந்து மாற்றாற்
புண்ணியபா வம்புரிந்து போக்குவரவுடைத்தாய்ப்
புணருமிருண் மலபாகம் பொருந்தியக்கா
லுண்ணிலவு மொளியதனு லிருளகற்றிப் பாத
முற்றிடுநற் பசுவருக்க மெனவுரைப்ப ருணர்ந்தோர். 19

3.பாச வியல்பு

மலமும் திரோதானமும்

ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாயிரு ளொளிரவிருண்ட
மோகமாய்ச் செம்பிலுரு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையு மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வரதுபரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிக
ணணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே. 20

சுத்தமாயையின் காரியம்

உன்னலரும் பரசிவன்ற னருளாலே நாத
முதிக்கு மிருங் குடிலைதனில் விந்துவரு நாதந்
தன்னிலதி ஞெளிவளருஞ் சதாசிவரா மவரில்
தயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனுன்
மன்னுவரிவ் வகையைவர் வாய்மையினுன் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவுஞ் சூக்குமாதி யொருநான்கு மென்று
மொழிந்திடுவரருங்கலைகண் முதிர்ந்துளோரே. 21

மாயையின் இயல்பு

உருவாதி சதுர்விதமா யொன்றுென்றுெவ்வா
உண்மையதாய் நித்தமா யொன்ரு யென்று
மருவாகிக் கன்மாந்த மணுக்க ளியார்க்கு
மாவார மாயசித்தா யசல மாகி

திருச்சிற்றம்பலம்

விரிவாய தன்செயலின் வியாபியா யெல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க
வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய
மன்னியிடு மரனருளான் மாயை தானே. 21

மாயையின் உண்மை

என்னையிது வெனினுலகுக் குபாதான மில்லை
பிறைவனல தெனினசித்துச் சித்தினிடத் துதியா
மன்னியுள தேனமுதல்வ னெனகொ லென்னின்
மாயைதா னசித்துருவாய் மருவ மாட்டா
தன்னவனு மிதுவொழிய வாக்க மாட்டான்
அசத்தனு மெனினதுவு மவன்போ னித்த
முன்னவனவ் வசித்தைவிரித் தெவையு மாக்கு
முதன்மையது கொடுத்ததென மொழிந்திடாரே. 22

இருவினை உண்மை

படைத்ததொரு படியின்றிப் பறவைபசு நரராய்ப்
பண்ணியதென் முன்னைவினைப் பான்மையென்ப
ரடுத்தவினை யுளதாயி னிறையே னென்னில்
அசேதனமற் றவையாவிக் கமைந் தாகும்
எடுத்தவினை யுறுவுறுவ துயிரேற் றுனே
யிருவினைக்குத் தக்கவுட லெய்து மென்னில்
சடத்திரளு மகர்த்தாவா யறிவொன் றில்லாத்
தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே. 23

மும்மலமும் அநாதி

அல்லன்மிக வுயிர்க்கிவைதா னணைத்த தீசன்
அருவினைக ளருந்துதற்கோ விளையோ வன்றிச்
சொல்லிவரு மாயையோ வணுவை முந்தச்
சூழ்ந்ததெனு முரைமுதலோர் தொடக்கிலார்பால்
ஒல்லைவரு மெனினுளதா முயிருண் டாவே
யுளதுமல மலமுளதா வொழிந்த வெல்லாம்
நெல்லின்முளை தவிடுமிபோ லநாதி யாக
நிறுத்திடுவ ரிதுசைவ நிகழ்த்து மாறே. 24

தத்துவங்களின் தோற்றமுறை

அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை
யராகமிவை யனந்தரான் மாயைதனி லாகும்
உருத்திரராற் கலையதனிற் பிரகிருதி குணங்கள்
உளவாகு மாங்காரம் புந்திதனி லுதிக்குந்

திருச்சிற்றம்பலம்

தெரித்தவிது திரிவிதமாந் தைசதம்வை காரி
திகழ்தரு பூதாதி யெனத் திருந்தி யசாத்துவிதம்
விரித்தகுண மனம்புத்தி யிந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே! 25

மன்னியகன் மேந்திரிய மானவிரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவருஞ் சத்தந்
தன்ஊைமுத லாகியதா மதமிகுமாத் திரைபின்
தருமதனின் வானநில மனல்புனன்மண் சத்த
முன்னதனில் வெளியாதி யொன்ரென் ருக
முறையிலுறு மிருமையயன் முடிவா முன்னே
யுன்னுசதா சிவராதி யதிபதிக ளொடுக்க
முதித்தவடை வெனவுரைப்ப ருணர்ந்து ளோரே. 26

கன்மத்தின் இயல்பு

நண்ணியிடு முருவதனுக் கேது வாகி
நாஞபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரு மாதலால் அநாதி யாகிப்
பலவாகி யணுக்கடொறும் படர்வதாகி
யெண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பிதனுய் மதிகதமா யிருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலு மாறே. 27

கன்மநெறி திரிவிதநற் சாதியாயுப் போகக்
கடனதெனவருமூன்று முயிரொன்றிற் கலத்தல்
தொன்மையதூ ழல்லதுண வாகா கானுந்
தொடங்கடைவினடையாதே தோன்று மாறித்
தன்மைதரு தெய்விகமுற் பௌதிகமான் மிகமாந்
தகையிலுறு மசேதனசே தனத்தாலுஞ் சாரு
நன்மையொடு தீமைதரு சேதனனுக் கிவணூ
ணுடிலத ஹூழ்விஊயா நணுகுந் தானே. 28

மேலைக்கு வருவிஊயே தென்னி னங்கண்
விருப்புவெறுப் பெனவறியவ் விஊவு மெல்லா
மூலத்த விஊப்பயில்வா மென்னி ஞமேன்
முற்றியதன் பயனுனக்கு முஊக்குமென்பர்
ஞாலத்து விஊகளிரு திறஞகும் புந்தி
நண்ஞத விஊநணுகும் விஊயெனவொன் றிரண்டா
யேலத்தா னிதமகித மாமிதனுல் வழுவா
தெய்தியிடும் புண்ணியபா வங்க ளென்றே. 29

திருச்சிற்றம்பலம்

உற்றதொழி னினைவுரையி நிருவினையு முளவாம்
ஒன்றொன்று லழியா தூனொழியாதுன்னின்
மற்றவற்றி னொருவினைக்கோர் வினையால் வீடு
வைதிகசை வம்பகரு மரபி லாற்றப்
பற்றியது கழியுமிது வினையாலேற்கும்
பான்மையுமாம் பண்ணுதும் பலிக்கு முன்னஞ்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி சோருஞ்
சோராதங் கதுமேலைத் தொடர்ச்சி யாமே. 30

ஐம்மலம்

மோகமிக வுயிர்கடொறு முடனாய் நிற்க
மூலவா ணவமொன்று முயங்கி நின்று
பாகமிக வுதவுதிரோ தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரு மாமாயைச் திரட்சி யொன்றென்
ருகமல மைந்தென்ப ரைந்து மாரு
தருளென்ப தரிதென்ப ரறிந்து ளோரே. 31

அவத்தை இயல்பு

1. கேவலாவத்தை

ஓங்கிவரும் பலவுயிர்கண் மூன்றவத்தை பற்றி
யுற்றிடும்கே வலசகல சுத்தமென வுணர்க
வீங்குவருங் கலாதியொடு குறியுருவ மொன்று
மின்றிமல மன்றியொன்று மில்லையெனு மியல்பா
யாங்கறிவை யறிவரிதாய் அறிகருவி யணையா
வாதலினு லிருண்மருவு மலர்விழிபோல துவாய்
நீங்கும்வகை யின்றி நித்த வியாபகமா யங்க
ணிற்பதுகே வலமென்று நிகழ்த்து நூலே. 32

ஐக்கியவாத மதமும் மறுப்பும்

இன்மைமல மாயைகன்ம மென்றிரண்டே யிறைதான்
இலங்குபல வுயிர்களு முன்புரிந்த விருவினையின்
தன்மைகளா லெவர்களுக்குந் தனுகரண புவனந்
தந்திடுமிங் கதனாலே யிருபயனுஞ் சார்ந்து
கன்மமெலா நேராக நேராதன் மருவக்
கடவுளரு ளாலெவையுங் கழித்திடுவ னதனாற்
பின்மலமா னவையணுகா பெருகொளிமுன்புளதே
பெற்றிடுமென் றித்திறமென் பேசு மாறே. 33

திருச்சிற்றம்பலம்

மலத்தின் உண்மை

மாயைமுத லெனவினையின் பான்மைமுதலெனவே
மன்னுபனை விதைமரபின் மயங்குமலம் சுத்தற்
கேயுநெறி யென்கொலத னியல்பாயின் முத்தி
என்பதென்மற் றிவை நிற்க விருங்கலாதி யுணர்வாய்
மேய பினர்த் தன்னுருவம் விளங்காமை விளக்கு
மிகுமுலகந்த னிலென்னிலி வைவிடுங்கா லுணர்வுள்
தோயுநெறி யிலதாத லறியாமை யெனநீ
சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே. 34

அந்நியமா னவையுணர்த்தி யநந்நியமாய் நிறைந்த
வறிவறியா மையினுனு மருணிலவுங் காலந்
தன்னிலவ னேயாவு மாய்நின்ற தொன்மை
தாமுணர்த லானுமுயிர் தானென வொன்றிலதாய்
மன்னியிடு மலமாயை கன்மங்கண் மாறி
வந்திடுமிங் கிதுவழுவா தாதலினுன் மனத்தால்
உன்னரிய திருவருளை யொழியமல முளதென்
றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே. 35

2. சகலாவத்தை

மலமும் மாயையும் முரனுவன : நால்வகை வாக்குகள்

புகலுமல மொழித்தற்குக் கலாதிமுதன் மாயை
பொருந்தியிடு மரனருளாற் போதந் தீபஞ்
சகலமெலா முடனுய வாறு போலுந்
தருமருளை மலமுயிர்கள் சாராமன் மறைக்கு
மிகலிவரு மியையுணரி னிருள்வெளியாந் தன்மை
எய்தும் வகை தன்செய்தி யிலங்கும் விந்து
பகர்வரிய வுணர்வாகி யொளியா யுள்ளப்
பான்மையினல் ஒரு நாதம் படரும் தானே. 36

வந்தடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வருமடைவு படவொடுக்கி மயிலண்ட சலநேர்
சிந்தைதனி லுணர்வாகும் பைசந்தி யுயிரிற்
சேர்ந்துவரு மவைமருவு முருவெவையுந் தெரித்து
முந்தியிடுஞ் செவியிலுரு துள்ளணர்வா யோசை
முழங்கியிடு மத்திமைதான் வைகரியிலுதானன்
பந்தமுறு முயிரணைந்து வந்தமொழி செவியின்
பாலணைய நினைந்த பொருள் பகருந் தானே. 37

திருச்சிற்றம்பலம்

வாக்குகளால் சவிகற்ப உணர்வு உண்டாதலும் தத்துவங்களின் தொழிலும்

இத்தகைமை இறையருளால் உயிரறியும் அறிவுக்
கீடாக வாடாதே யீரிரண்டா னுரைத்த
வித்தைமுத லவரான் விளங்கு ஞான
மேவியிடு மெனவுரைப்ப ரசுத்த மாயை
வைத்தகலை தான்மூல மலஞ்சிறிதே நீக்கி
மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப்
புத்திதர வித்தையிடை நின்றறிவை யுயிர்க்குப்
பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே. 39

பேசரிய வராகந்தன் கன்மத்துக் கீடாப்
பெற்றதனி லாசைதனைப் பெருகுவிக்கு நியதி
தேசமிகு மரசர்தரு மாணி செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்குஞ் செய்கை போல
நேசமுறு தங்கன்ம நிச்சயித்து நிறுத்து
நிகழ்காலங் கழிகால மெதிர்கால மென்றே
யோசைதர வருங்கால மெல்லைபலம் புதுமை
யுறுவிக்கு மிறைசக்தி யுடனாய் நின்றே. 40

ஐவகையா லுறுபயன்க ளுகரவருங் கால
மதுபுருட தத்துவமென் றறைந்திடுவ ரறிந்தோர்
மெய்வகைய கலாசுத்தி தனினிதற்குஞ் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பிய நூல் விளம்புஞ்
செய்வகையின் றொடர்ச்சியிங்குத் தோற்றுவிக்குங் குணத்தின்
சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமா மவைதா
மிவ்வகையிற் சாத்துவித ராசததா மதமா
இயம்புவர்க ளொன்றிரண்டு குணமேற்கை யுடைத்தே. 41

அலகில்குணம் பிரகாசம் லகுதைவியா விருதி
யடார்ச்சிமிகுஞ் கவுரவம நியமமிவையடைவே
நிலவியிடு மும்மூன்று முயிரொன்றிற் கலந்தே
நிற்குமிவை நிறைபுலனின் பயனெவையுங் கவருங்
குலவிவரு போகங்கொ ளிடமா மாருக
குறைவிலொளி யாமலகில் புலனிடத்தி னொருமை
பலவகையு முடையதாய்ப் பரனருளாற் புத்தி
பஞ்சாசற் பாவகமும் பண்ணுவிக்குந் தானே 42

ஆனதனு வதனிலுறு மநிலனையு மியக்கி
யாங்கார நீங்காத வகந்தைக்கு வித்தா
யானலது பிறரொருவ ரெனையொப்பார் புவியி
னில்லையெனு மியல்பினதா யிந்திரியம்புலன்க

டானுகரு மளவிலதின் முந்தியுறு மிச்சை
தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியுந் தந்து
மானதமா னதுநிற்குஞ் சிந்தைநினை வையம்
வந்துதரு மனமொழிய வகுப்பொ ணூதே. 43

சொன்னமுறை செவிதுவக்கு நோக்கு நாக்குத்
துண்டமிவை யைந்திற்குந் தொகுவிடய மாக
மன்னியசத் தப்பரிச ரூபரச கந்த
மருவியிடு மிவையடைவே வாக்குப் பாதம்
பின்னர்வரு பாணிமிகு பாயுவினோ டுபத்தம்
பேசலுறு மைந்திற்கும் பிறங்கொலிகொள் வசன
முன்னரிய கமனதா னவிசர்க்கா நந்த
முற்றதொழில் பெற்றிடுவ துண்மை யாமே. 44

முந்தியவைம் பூதங்கள் வானுதி யாக
முயங்கியநற் செவிமெய்கண் ணுநாசிமுறையா
லிந்தவயி னின்றுவரு மைம்புலனு முயிர்தா
மெய்தும்வகைதம் முருவினிலங்கியிடும் புறத்து
வந்தடைய விடங்கொடுக்கு மிரந்தரமாய் வானம்
வாயுமிகச் சலித்தெவையுந் திரட்டுந்தீ வெம்மை
தந்தவைசுட் டொன்றுவிக்கு நீர்குளிர்ந்து பதமே
தருமுரத்துத் தரிக்குமிகு தரணி தானே. 45

தத்துவங்களின் வகையும் உயிர்கள் இறந்து பிறந்து வருமாறும்

இந்நிரையி லைந்துசுத்த மேழ்சுத்தா சுத்த
மெண்மூன்று மசுத்தமெனு மிவைமுப்பத்தாரு
மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடுந் துயர்தா
மருவுமுரு நிலையழிய வரும்பொழுது வரியார்
பன்னகமண் டசங்கனவு படர்வகையே முன்னம்
பகரவருங் கலாதிநிலை பரவியசூக் குமமாந்
தன்னுருவி லணைந்துபய னருந்தியர னருளாற்
றரையினிடை வருமென்று சாற்று நூலே. 46

நால்வகைத் தோற்றம் முதலியன

தோற்றியிடு மண்டசங்கள் சுவேதசங்கள் பாரிற்
றுதைந்துவரு முற்பீசஞ் சராயுசங்க ணுன்கி
னூற்றமிகு தாபரங்கள் பத்தொன்பதென்று
மூர்வபதி னைந்தமரர் பதினுென்றெ டுலவா

மாற்றருநீ ருறைவனநற் பறவைகணுற் காலி
மன்னியிடும் பப்பத்து மானுடரோன் பதுமா
வேற்றியொரு தொகையதனி லியம்புவர்கள் யோனி
யெண்பத்து நான்குநூ ருயிரமென்றெடுத்தே. 47

3. சுத்தாவத்தை

இனையபல பிறவிகளி னிறந்துபிறந் தருளா
லிருவினைகள் புரிந்தருந்து மிதுசகலம் அகலா
முனமருவு மிருபயனு மொருகாலத் தருந்த
முந்துநுக ருந்துபய னந்தமுற வந்த
வினையுமெதிர் வினையுமுடி வினையுதவு பயனு
னேராக நேராதன் மேவுங் கான்முற்
சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே. 48

நாடியசத் திநிபாத நாலு பாத
நண்ணும்வகை யெண்ணரிய ஞான பாதங்
கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக்
கூத்தனொரு மூர்த்திகொடு குறுகி மோக
நீடியகே வலசகல நிகழாவாறு
நிறுத்திமல மறுக்குமிது நிலையார் சுத்தங்
கேடி புகழ் தருஞ்சரியை கிரியா யோகக்
கேண்மையரே லிவையுணர்த்தக் கிளக்கு நூலே. 49

முத்தி பேதங்கள்

அரிவையரின் புறுமுத்தி கந்த மைந்து
மறுமுத்தி திரிகுணமு மடங்கு முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம்போ முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தியிவை பழிசேர் முத்தி
திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி
திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே. 50

திருச்சிற்றம்பலம்

உண்மை அதிகாரம்

இவ்வியலின் வகை

இங்கியவை பொதுவி யம்பு மென்பர்க ளிதன்மேல் ஆன்மாத்
தங்கிய அஞ்சவத்தை தன்னுண்மை உணர்த்துந் தன்மை
பொங்கொளி ஞான வாய்மை அதன்பயன் புனித ஞம
மங்கதில் அணைந்தோர் தன்மை யறைகுவ னருளி ஞலே. 51

மூன்ருஞ் சூத்திரம்

1. ஆன்ம வியல்பு

செறிந்திடு முடலுண் மன்னிச் சேர்புலன் வாயில்பற்றி
யறிந்ததி லழுந்து மொன்று மறிந்திடா தறியுந்தன்மை
பிறிந்தடை வஞ்ச வத்தை பெருகிய மலத்தாற்பேணி
யுறுந்தனி யதீத முண்மை யுயிர்க்கென வுணர்த்துமன்றே. 52

உருவுணர் விலாமை யானு மோரொரு புலன்களாக
மருவிநின் றறித லானு மனுதிகள் தம்மின் மன்னித்
தருபய னுகர்த லானு முயிர்சட மாத லானும்
அருவினை யுடலு ளாவி யறிவிஞ லறியு மன்றே. 53

அறிவெனில் வாயில் வேண்டா வன்றெனி லவைதாமென்னை
யறிவவை யுதவு மென்னி லசேதன மவைதாமெல்லாம்
அறிபவ னறியுந் தன்மை யருளுவ னென்னி லான்மா
வறிவில தாகு மீச னசேதனத் தளித்தி டானே. 54

அறிவிஞ லறிந்த யாவு மசத்தாத லறிதி யென்றும்
அறிவிஞ லறியொ ணுதே லாவதொன்றின்மை தொன்மை
யறி வுதா ஞென்றை முந்தி யதுவது வாகக் காணு
மறிவுகா ணசத்து மற்ற தறிவினுக் கறியொணுதே. 55

எவ்வறி வசத்த றிந்த தெனிலுயி ரறியா தீசன்
அவ்வறி வறியா னல்ல தசேதன மறியா தாவி
செவ்விய கருவி கூடில் தெரிவுரு தருளிற் சேரா
துவ்விரு வகைய தென்னி லொளியிரு ளொருங்குருவே. 56

சத்திது வென்ற சத்துத் தானறி யாத சத்தைத்
சத்தறிந் தகலவேண்டா வசத்திதுசத்தி தென்ரோர்
சத்திரு ளொளிய லாக்கண் டன்மைய தாம சத்தைச்
சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சதசத்தாமே. 57

திருச்சிற்றம்பலம்

கண்ணொளி விளக்களித்துக் காட்டிடுமென்னின் முன்னங்
கண்ணொளி யொன்று மின்றும் விளக்கொளி கலந்த வற்றைச்
கண்ணொளி யகல நின்றே கண்டிடும் வேறு காணுக்
கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத்தொன் றன்றே. 58

ஓரிடத் திருத்தன் மாயா வுருநிறைந் திடுத லொன்றும்
பேரிடத் துறைத ருனே பிறங்கறி வாகி நிற்றல்
சோர்வுடைச் சடநி கழ்த்த லெனுமிவை சொல்லார் நல்லோ
ரோரிடத் துணரு முண்மை யொளிர்தரு முபலம் போலும். 59

நான்காஞ் சூத்திரம்

அஞ்சவத்தை இயல்பு

எண்ணவொன் றிலாத தீத மெய்திய துரியத் தொன்று
நண்ணிடுஞ் சுழுத்தி தன்னில் நயந்துள தொன்று பின்னு
மண்ணிடுங் கனவு தன்னி லாறேழாஞ் சாக்கிரத்திற்
கண்ணுறு மஞ்சா ருய கருவிகள் மருவுந் தானே. 60

இவ்வகை அவத்தை தன்னி லெய்திடுங் கரணமெல்லா
மெய்வகை யிடத்தி லுற்று மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம கற்றப் புரிந்திடி லருளாலாங்கே
யைவகை யவத்தை யுய்க்குமறி வினாலறிந்து கொள்ளே. 61

நீக்கமி லதீத மாசு நிறைந்தகே வலமா நீர்மை
சாக்கிரங் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகு
மூக்கமி லிரண்டுங் கூடா தொழியவோர் நிலையி னீடுஞ்
சாக்கி ராதீதஞ் சுத்தத் தகைமைய தாகுந் தானே. 62

3. தன்னுண்மை உணர்த்துந் தன்மை

மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங்
கருவிக ளுன்கு நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி
யொருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத்
தெரிவுறு தவனெ ழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே. 63

தனக்கென வறிவி லாதான் ருனிவை யறிந்து சாரான்
றனக்கென வறி விலாத வாயிரு னறியா சாரத்
தனக்கென வறிவி லாதான் தத்துவ வன்ன ரூபன்
தனக்கென வறிவா னுலிச் சகலமு நுகருந் தானே. 64

திருச்சிற்றம்பலம்

அவிகாரவாதம் சிவாத்துவிதம் என்பவற்றை மறுத்தல்

கண்டுணர் புலன்கள் காணுங் கருத்தினு லொருத்தன் ஞானங்
கொண்டுள மறியு மென்னிற் கொள்பவன் முதலி யாகு
மண்டிய வுணர்வு யிர்க்கா மன்னிநின் றறியூ மென்னில்
உண்டிட வேண்டு வானுக் கொருவன்வே றுண்ட லாமே. 65

சித்தாந்தம்

இருணனி யிரவி தான்வந் திரித்தலு மிரவி லெண்ணும்
பொருணிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறு போல
மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்துயிர் தன்னுண் மன்னு
மருளையு மொழிய ஞாலத் தறிந்தவா றறியு மன்றே. 66

அறிந்திடு மனுதி வாயி லானவை யவன்ற னுலே
யறிந்திடு மென்று மொன்று மறிந்திடா வவைபோலி யாவும்
அறிந்திடு மறியுந் தன்மை யறிந்திட கன்மத் தொன்மை
யறிந்தவை நுகரு மாறு மருளுவ னமலன் ருனே. 67

ஆருஞ் சூத்திரம்

4. ஞான வாய்மை

காட்டிடுங் கரண மொன்று மில்லையேற் காணு ணுதா
ஞட்டிய விவற்ருன் ஞான நணுகவு மொண்ணு முன்னம்
ஈட்டிய தவத்தி ஞலே யிறையரு ளுருவாய் வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குரைகழல் குறுகு மாறே. 68

ஏழாஞ் சூத்திரம்

பன்னிறங் கவருந் தொன்மைப் படிகநீ டொளியும் பன்மை
மன்னிலங் கியல்புந் தந்த வளரொளி போல வையந்
தன்னகம் பயிலு நற்சிற் சடங்களின் றன்மை தாவா
நன்னலம் பெறநி றைந்த ஞானமே ஞானமென்பர். 69

மாயைமா யேய மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளெனி லிருளாய் நிற்கும்
மாயைமா யேய மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும். 70

திருச்சிற்றம்பலம்

5. ஞானவாய்மையின் பயன்

தேசுற மருவு மான்ம தெரிசன மான்ம சுத்தி
வாசிலா வான்ம லாப மாகமூன் ருகு மூன்றும்
பாசம தகல ஞானம் பற்றருன் பணியை நீத்தல்
ஏசினே யத்த முந்த லெனுமிவற் றடங்கு மன்றே. 71

1. ஆன்ம தரிசனம்

தன்னறி வதனு லேதுந் தனக்கறி வில்லை யேனுந்
தன்னறி வாக வெல்லாந் தனித்தனி பயன ருந்துந்
தன்னறி வறியுந் தன்மை தன்னுலே தனைய றிந்தாற்
தன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே. 72

தத்துவ மான வற்றின் தன்மைக ளுணருங் காலை
யுய்த்தறிந் திடவு திப்ப தொளிவளர் ஞான மாகும்
அத்தன்மை யறிவு மாறு மகன்றிட வதுவா யான்மா
சுத்தமாஞ் சுத்த ஞானத் தொருமுத ரேன்று மன்றே. 73

சத்தி சத்திமான் என்னும் இருமை

உறைதரு முணர்வு மன்றி யதன்முத லுள்ள தென்றிங்
கறைவதெ னென்னி லண்ண லருளெனு மதுவே யன்றி
நிறையொளி முதல தன்றி நின்றிடா நிமல ஞுகும்
இறைவன் முதல வன்றே னிலங்கருள் சத்தி யாமே.74

சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடராகுஞ் சிவமொ ழிந்தச்
சத்திதா நின்ரு முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி
யத்தனை யருளு மெங்கு மடைந்திடு மிருள கற்றி
வைத்திடு மிரவி காட்டும் வளரொளி போன்ம கிழ்ந்தே.75

2. ஆன்ம சுத்தி

சிவசமவாத மறுப்பு

புகலரு மசத்தர் தம்பாற் பொருந்திய வலகை யேபோல்
அகிலமு முணரு மீச னருளுயிர் மேவ லாலே
சகலமு நிகழ வேண்டுந் தலைவனைந் தொழிலுந் தானே
யிகலற வியற்றல் வேண்டு மென்றது நன்றி யின்றே. 76

இன்றுநோக் குரை நடக்கு மியல்பிலோற் கினைய வாய்ந்து
நின்றதோ ரலகை நேர்ந்தா னிகழ்வதெ னதுபோ லுள்ளத்
தொன்றிய வுணர்வு தம்பா லுள்ளது நிகழ்த்து மீசன்
தன்றெழி னடத்து மேனி தனக்கெனக் கொண்டு தானே. 77

இந்நிலை தன்னின் மன்னி யெய்திடுங் கலாதி போதந்
தன்னள வறிந்து நிற்குந் தகவிலா மலங்க ணீத்த
வந்நிலை கரண மாகா வகையதி லறிவ டங்கி
மன்னிய வியாபி யாய வான்பயன் ரேன்று மன்றே. 78

அடைபவர் சிவமே யாகு மதுவன்றித் தோன்று மென்ற
கடனதெ னென்னின் முன்னுங் கண்டிடார் தம்மைப் பின்னுந்
தொடர்வரு மருளி னுலுந் தோன்றுமா காணு ராயின்
உடையவ னடிசேர் ஞானம் உணர்தலின் றணைத லின்றே. 79

3. ஆன்ம லாபம்

பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவி லாமைச்
சொற்பெறு மதீதம் வந்து தோன்ருமே தோன்றி நின்ற
சிற்பர மதனு லுள்ளச் செயலறுத் திடவு திக்குந்
தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே. 80

ஒடுங்கிடா கரணந் தாமே யொடுங்குமா றுணர்ந்தொ டுக்க
வொடுங்கிடு மென்னி னின்ற தொடுங்கிடா கரண மெல்லா
மொடுங்கிட வொடுங்க வுள்ள வுணர்வுதா னெழியும் வேரு
யொடுங்கிடி னன்றி மற்றவ் உண்மையை யுணரா னுதே. 81

பற்றிடுங் கருவி யாவும் படர்ந்துணர் வளிக்கும் காலை
யுற்றறிந் திடுவ தொன்றி னுணர்வினி னுண்மை யாகு
மற்றது பகல்வி ளக்கின் மாய்ந்திட வருவ துண்டேற்
பெற்றிடு மதனை மாயப் பிறப்பினை யறுக்க லாமே. 82

முந்திய வொருமை யாலே மொழிந்தவை கேட்டல் கேட்ட
சிந்தனை செய்த லுண்மை தெளிந்திட லதுதா னுக
வந்தவா றெய்த நிட்டை மருவுத லென்று நான்கா
மிந்தவா றடைந்தோர் முத்தி யெய்திய வியல்பி னேரே. 83

பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை யுணர வொண்ணு திறையருண் ஞான நண்ணின்
தேசுறு மதனுன் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை. 84

உபாய நிட்டை

விளம்பிய வகையி னிட்டை மேவிட லரிதேன் முன்னம்
அளந்துணர் வளித்த வற்றி னளவுமற் றவற்றி னுலே
யுளங்கொளுந் தனையு முள்ள படியுமுற் றுணர்ந்து செவ்வே
தளர்ந்திடா துவப்ப மற்றத் தன்மைய தாகுந் தானே. 85

பாவிக்கின் மனுதி வேண்டும் பயனிலை கரண நீத்துப்
பாவிப்ப னென்னி லென்ன பழுதுள பாவ கத்தாற்

பாவிக்க வொண்ணு னென்று பாவிப்ப னென்னி னீயென்
பாவிக்க வேண்டா வாண்ட பரனருள் பற்றி னோர்க்கே. 86

பரமுத்தியின் இயல்பு

ஒன்றிரண் டாகி யொன்றி னொருமையா மிருமை யாகி
யொன்றினொன் றழியு மொன்ரு தென்னினொன் ருகா தீயி
னொன்றிரும் புறழி னின்ரு முயிரினைந் தொழிலும் வேண்டு
மொன்றிநின் றுணரு முண்மைக் குவமையா ணவத்தொ டொன்றே.87

பாச நீக்கம்

அழிந்திடும் பாச மென்னி னித்தமென் றுரைத்தல் வேண்டா
அழிந்திடா தென்னின் ஞான மடைவது கருதல் வேண்டா
அழிந்திடுஞ் சத்தி நித்த மழிந்திடா வொளியின் முன்னர்
அழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்தி டாவே. 88

வினை நீக்கம்

எல்லையில் பிறவி நல்கு மிருவினை யெரிசேர் வித்தி
னெல்லையி னகலு மேன்ற உடற்பழ வினைக ளூட்டுந்
தொல்லையின் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே. 89

6. புனித ஞமம்

பந்தமா னவைய றுத்துப் பவுதிக முழலு மெல்லைச்
சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரும்
அந்தமா திகளில் லாத வஞ்செழுத் தருளி னுலே
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே. 90

திருவெழுத் தைந்தி லான்மாத் திரோத மாசருள் சிவஞ்சூழ்
தரநடு நின்ற தொன்ருந் தன்மையுந் தொன்மை யாகி
வருமந மிகுதி யாலே வாசியி லாசை யின்றிக்
கருவழிச் சுழலு மாறுங் காதலார்க் கோத லாமே. 91

ஆசறு திரோத மேவா தகலுமா சிவமுன் னுக
வோசைகொ ளதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீள
வாசியை யருளு மாய மற்றது பற்ரு வுற்றங்
கீசனி லேக மாகு மிதுதிரு வெழுத்தி னீடே. 92

7. அணைந்தோர் தன்மை

தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தா
னீங்கிட நீங்கா மூல நிறையிரு ளிரிய நேயத்
தோங்குணர் வகத்த டங்கி யுளத்துளின் பொடுங்க நேரே
தூங்குவர் தாங்கி யேகத் தொன்மையிற் றுகளி லோரே. 93

குறிப்பிடங் காலத் திக்கா சனங்கொள்கை குலங்கு ணஞ்சீர்
சிறப்புறு விரதஞ் சீலந் தபஞ்செபந் தியான மெல்லா
மறுத்தற வொழிதல் செய்தன் மருவிடா மன்னு செய்தி
யுறக்குரு பவர்போல் வாய்மை யொழிந்தவை யொழிந்து போமே.94

அகம்புற மென்றி ரண்டா லருச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டு மின்றித் தமோமய மாகி யெல்லா
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மையார் போல ஞானந்
திகழ்ந்தகம் புறமெ ஞுத செம்மையார் நன்மை யாரே. 95

ஞானத்தில் யோகம்

அண்டமே விடவ னைத்து மனைத்தையு மண்ட மேவிக்
கொண்டல்போ லெவையு ஞானங் குறைவிலா நிறைத லாலே
கண்டதோர் பொருளை யந்தக் கருத்தினுற் காணிற் றூனே
யண்டநா யகனு மேனி யானதே லைய மின்றே. 96

ஞானத்திற் கிரியை

மண்முதற் கரணமெல்லா மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினி லூன்றி யந்தக் கருத்தினு லெவையு நோக்கி
யெண்ணியஞ் செழுத்து மாறி யிறைநிறை வுணர்ந்து போற்றல்
புண்ணியன் றனக்கு ஞான பூசையாய்ப் புகலு மன்றே. 97

ஞானத்திற் சரியை

தொண்டர்கள் தாமும் வானோர் தொழுந்திரு மேனிதானும்
அண்டருங் கண்டி லாத வண்ணலே யெனவ ணங்கி
வெண்டர ளங்கள் சிந்த விழிமொழி குழற மெய்யே
கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தி னேரே. 98

நூற்கருத்து

நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி வேதத்
தலைதரு பொருளா யின்பாய்த் தாவில்சற் காரியத்தாய்
மலைவறு முணர்வாற் பெத்த முத்திகண் மதித்தா மன்றே. 99

நூலை உபதேசிக்குமாறு

திருவருள் கொடுத்து மற்றிச் சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியு மாற்றுல் விளம்பிய வேது நோக்கிப்
பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறுவிப்பின் முன்
தருமலை வொழியக் கொள்வோன் றன்வயிற் சாற்ற லாமே. 100

முற்றும்

உ

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

8. திருவருட்பயன்

மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள்ளும் குறள் வெண்பாவால் ஆனது இது ஒன்றே. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் திறந்தெரிதற்குத் திருக்குறள் எத்துணைத் தெளிவும் நுண்மையும் சிறப்பும் உடையதாய்த் திகழ்கின்றதோ அதைத் போன்றே சைவசித்தாந்த நுண்பொருளைத் தெளிதற்கும் இந்நூல் பெரிதும் பயன்படுகின்றது. மெய்ந்நூற்பொருள்களைத் தெரிதற்கு விரும்புவார் முதற்கண் இந்நூலைப் பயில்வர்.

நூறு குறள் வெண்பாக்களாலாய இந்நூல் பத்து அதிகாரங்களையுடையது. அதிகாரம் ஒவ்வொன்றும் பத்துப் பத்துக் குறள் வெண்பாக்களை உடையது. பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறியுநெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுந்தருள்நிலை, அணைந்தோர் தன்மை என்பன அவ்வதிகாரத் தலைப்புக்களாகும். இதன் ஆசிரியர் இப்பகுப்பிலேயே மூவர் தேவாரங்களை வகுத்துக்கொண்டு, தேவார அருள் முறைத்திரட்டு என்ற நூலையும் திரட்டியருளியுள்ளார். திருமுறைகளை இவ்வாறு எண்ணி மகிழலாம் என்பது ஆசிரியர் திருவுள்ளமாகும். ஆசிரியர் தாம் கூறும் மெய்ந்நூற்பொருளை உணர்வதற்கு எடுத்தாளும் உவமைகள் மிக நுண்ணியன. அணுகுதுணையறியா ஆற்றோனில், பாலாழி மீனுளும் பான்மைத்து, தாடலைபோல், உற்கை தரும் பொற்கை உடையவர் போல், தூணிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார் தொகும் இதுபோல் என்பன காண்க. ஆசிரியர் பிறிது மொழிதல் என்னும் அணிநலம்பட, பல பாடல்களை அருளியுள்ளார். அவை மிகச் சுவையுடையன. இருவர் மடந்தையர்க்கு என் பயன்? இன்புண்டாம் ஒருவன் ஒருத்தி உறின், தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும் நாப்பித்தத்தில் தான் தவிர்ந்தபின். "தரையை அறியாது தாமேதிரிவோர் புரையை அறியா புவி" என்பன காண்க. "பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு அறிவென்ற பேர்நன்று அற" என உயிரது இயல்பையும், பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டு என்றும் கணவர்க்கும் தோன்றாத கற்பு என ஆணவத்தின் இயல்பையும் ஆசிரியர் கூறியிருப்பது நகைச்சுவை ததும்பவுள்ளன. வெள்ளியம்பல வாணமுனிவர் தாம் எழுதிய முதுமொழிமேல்வைப்பு என்னும் நூலில் வீட்டின்பாலுக்கு இந்நூலில் உள்ள குறள் வெண்பாக்களையே எடுத்தாண்டிருப்பதும் ஈண்டு குறித்தற்குரியதாகும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

8. திருவருட்பயன்

காப்பு

நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

1. பதிமுது நிலை

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து. 1

தன் நிலைமை மன் உயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான். 2

பெருமைக்கும் நுண்மைக்கும் பேர்அருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்புஇன்மை யான். 3

ஆக்கிஎவையும் அளித்து ஆசுடன் அடங்கப்
போக்கு அவன் போகாப் புகல் . 4

அருவம் உருவம் அறிஞர்க்கு அறிவாம்
உருவம் உடையான் உளன். 5

பல்ஆர் உயிர் உணரும் பான்மைஎன மேல்ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை. 6

ஆஞ அறிவாய் அகலான் அடியவர்க்கு
வான்நாடர் காணுத மன். 7

எங்கும் எவையும் எரி உறு நீர்போல் ஏகம்
தங்கும்அவன் தானே தனி. 8

நலம்இலன் நண்ணுர்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலம்இலன் பேர் சங்கரன். 9

உன்னும்உளது ஐயம்இலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து 10

திருச்சிற்றம்பலம்

2. உயிரவை நிலை

பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை. 11.

திரிமலத்தார் ஒன்றுஅதனில் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தார் ஆயும் உளர். 12

மூன்றுதிறத்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்
தோன்றலர்தொத்து உள்ளார் துணை. 13

கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்
திண்திறலுக்கு என்னோ செயல் . 14

பொறிஇன்றி ஒன்றும் புணராதே புந்திக்கு
அறிவுஎன்ற பேர்நன்று அற. 15

ஒளியும் இருளும் உலகும் அலர்கண்
தெளிவு இல்எனில் என்செய. 16

சத்துஅசத்தைச் சாராது அசத்துஅறியாது அங்கண்இவை
உய்த்தல் சத்சத்தாம் உயிர். 17

இருளில் இருளாகி எல்இடத்தில் எல்லாம்
பொருள்கள் இலதோ புவி. 18

ஊமக்கண் போல ஒளியும் மிக இருளே
யாம்மன்கண் காணா தவை. 19

அன்றுஅளவும் ஆற்றும் உயிர் அந்தோ அருள்தெரிவது
என்றுஅளவு ஒன்றுஇல்லா இடர். 20

3. இருண்மல நிலை

துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்
இன்றென்பது எவ்வாறும் இல். 21

இருளானது அன்றி இலதெவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள். 22

ஒருபொருளும் காட்டாது இருளுருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது. 23

அன்றுஅளவி உள்ளளியோடு ஆவி இடைஅடங்கி
இன்றளவும் நின்றது இருள். 24

பலரைப் புணர்ந்தும் இருள்பாவைக்கு உண்டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு. 25

திருச்சிற்றம்பலம்

பன்மொழிகள் என்உணரும் பான்மை தெரியாத
தன்மை இருளார் தந்தது. 26

இருள்இன்றேல் துன்புஎன் உயிர் இயல்பேல் போக்கும்
பொருள் உண்டேல் ஒன்ருகப் போம். 27

ஆசாதியேல் அணைவ காரணமென் முத்திநிலை
பேசாது அகவும் பிணி. 28

ஒன்று மிகினும் ஒளிகவராதேல் உள்ளம்
என்றும் அகலாது இருள். 29

விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவுஆதி கன்மத்து வந்து. 30

4. அருளது நிலை

அருளில் பெரியது அகிலத்தில் வேண்டும்
பொருளில் தலைஇலது போல். 31

பெருக்க நுகரவினை பேரொளியாய் எங்கும்
அருக்கனென நிற்கும் அருள். 32

ஊனறியாது என்றும் உயிர்அறியாது ஒன்றுமிவை
தானறியாதார் அறிவார் தான். 33

பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து அருளுயிர்கள்
மால்ஆழி ஆளும் மறித்து. 34

அணுகும் துணைஅறியா ஆற்ருேனில் ஐந்தும்
உணர்வை உணராது உயிர். 35

தரையை அறியாது தாமே திரிவோர்
புரையை உணரார் புவி. 36

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம். 37

வெள்ளத்துள் நாவாற்றி எங்கும்விடிந்து இருளாம்
கள்ளத் தலைவர் கடன். 38

பரப்புஅமைந்து கேண்மின்இது பாலல்கலன்மேல் பூஞை
கரப்பு அருந்த நாடும் கடன். 39

இற்றைவரை இயைந்தும் ஏதும் பழக்கமிலா
வெற்று உயிர்க்கு வீடு மிகை. 40

திருச்சிற்றம்பலம்

5. அருளுரு நிலை

அறியாமை உள்நின்று அளித்ததே காணும்
குறியாக நீங்காத கோ. 41

அகத்துறு நோய்க்கு உள்ளினரை அன்றிஅதனை
சகத்தவரும் காண்பரோ தான். 42

அருளா வகையால் அருள்புரிய வந்த
பொருள்ஆர் அறிவார் புவி. 43

பொய்இருண்ட சிந்தைப் பொறி இலார் போதமாம்
மெய்இரண்டும் காணார் மிக. 44

பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணார் புவி. 45

எமக்குஎன் எவனுக்கு எவை தெரியும் அவ்வத்
தமக்குஅவனை வேண்டத் தவிர். 46

விடம்நகுலம் மேவினும் மெய்ப்பாவகனின் மீளும்
கடனில்இருள் போவதுஇவன் கண். 47

அகலத் தரும் அருளை ஆக்கும் வினைநீக்கும்
சகலர்க்கு வந்துஅருளும் தான். 48

ஆர்அறிவார் எல்லாம் அகன்ற நெறிஅருளும்
பேர்அறிவான் வாராத பின். 49

ஞானம் இவன்ஒழிய நண்ணியிடும் நற்கல்அனல்
பானு ஒழியப் படின். 50

6. அறியும் நெறி

நீடும் இருவினையும் நேராக நேர்ஆதல்
கூடும் இறைசத்தி கொளல். 51

ஏகன் அநேகன் இருள்கருமம் மாயைஇரண்டு
ஆக இவை ஆறு ஆதி இல். 52

செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என்று உணர். 53

ஊன் உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனொடு உயிர்
தான் உணர்வொடு ஒன்றும் தரம். 54

தன்நிறமும் பல்நிறமும் தானும்கல் தன்மைதரும்
பொன்நிறம்போல் மன்நிறம்இப் பூ. 55

திருச்சிற்றம்பலம்

கண்தொல்லை காணும்நெறி கண் உயிர் நாப்பண்நிலை
உண்டுஇல்லை அல்லது ஒளி. 56

புன்செயலி நோடு புலன்செயல்போல் நின்செயலை
மன்செயலது ஆக மதி. 57

ஓராதே ஒன்றையும்உற்று உன்னுதே நீமுந்திப்
பாராதே பார்த்தனைப் பார். 58

களியே மிகுபுலனுய்க் கருதி ஞான
ஒளியே ஒளியாய் ஒளி. 59

கண்டபடியே கண்டு காணுமை காணுமல்
கொண்டபடியே கொண்டு இரு. 60

7. உயிர் விளக்கம்

தூநிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார் தொகும் இதுபோல்
தன்அதுவாய் நிற்கும் தரம். 61

தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும்நாப்
பித்தத்தில் தான் தவிர்ந்த பின். 62

காண்பான் ஒளி இருளில் காட்டிடவும் தான் கண்ட
வீண்பாவம் எந்நாள் விடும். 63

ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல். 64

கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க்கு அல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று. 65

வஞ்சமுடன் ஒருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனே போயினனே சொல். 66

தனக்குநிழல் இன்றும் ஒளிகவரும் தம்பம்
எனக்கவர நில்லாது இருள். 67

உற்கைதரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின்
நிற்க அருளார் நிலை. 68

ஐம்புலனுல் தாம்கண்டது என்ருல் அதுவொழிய
ஐம்புலன் ஆர்தாம் ஆர்அதற்கு. 69

தாமே தருபவரைத் தம்வலியினுல் கருதல்
ஆமே இவன்ஆர் அதற்கு. 70

திருச்சிற்றம்பலம்

8. இன்புறு நிலை

இன்புறுவார் துன்பார் இருளில் எழும்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின். 71

இருவர் மடந்தையருக்கு என்பயன் இன்பு உண்டாம்
ஒருவன் ஒருத்தி உறின். 72

இன்பதனை எய்துவார்க்கு கீயும் அவர்க்கு உருவம்
இன்பகனம் ஆதலினால் இல். 73

தாடலைபோல் கூடி அவை தான் நிகழா வேற்று இன்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள். 74

ஒன்றாலும் ஒன்றாது இரண்டாலும் ஓசைஎழாது
என்றாலும் ஓர் இரண்டும் இல். 75

உற்றாரும் பெற்றாரும் ஓவாது உரைஒழியப்
பற்றாரும் அற்றார் பவம். 76

பேய் ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும் இனி
நீ ஒன்றும் செய்யாது நில். 77

ஒண்பொருட்கண் உற்றார்க்கு உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போல் காண். 78

மூன்றாய தன்மை அவர் தம்மில் மிக முயங்கித்
தோன்றாத இன்பம் அது என் சொல். 79

இன்பில் இனிது என்றல் இன்று உண்டேல் இன்று உண்டாம்
அன்பு நிலையே அது. 80

9. ஐந்தெழுத்து அருள் நிலை

அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின். 81

இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்து உள். 82

ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான்நடுவே நாடு. 83

விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரில் பெறும். 84

மால்ஆர் திரோதம் மலம்முதலாய் மாறுமோ
மேலாகி மீளா விடின். 85

திருச்சிற்றம்பலம்

ஆராதி ஆதாரம் அந்தோ அதுமீண்டு
பாராதுமேல் ஓதும் பற்று. 86

சிவமுதலே ஆம்ஆறு சேருமேல் தீரும்
பவம் இதுநீ ஓதும் படி. 87

வாசி அருளியவை வாழ்விக்கும் மற்று அதுவே
ஆசுஇல் உருவமும் ஆம் அங்கு. 88

ஆசில்நவா நாப்பண் அடையாது அருளிஞல்
வாசி இடை நிற்கை வழக்கு. 89

எல்லா வகையும் இயம்பும் இவன் அகன்று
நில்லா வகையை நினைந்து. 90

10. அணைந்தோர் தன்மை

ஓங்கு உணர்வின் உள்அடங்கி உள்ளத்துள் இன்புஒடுங்கத்
தூங்குவர்மற்று ஏது உண்டு சொல். 91

ஐந்தொழிலும் காரணர்களாம் தொழிலும் போகம்நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக. 92

எல்லாம் அறியும் அறிவுஉறினும் ஈங்குஇவர்ஒன்று
அல்லாது அறியார் அற. 93

புலன் அடக்கித் தம்முதல்கண் புக்குறுவார் போதார்
தலம்நடக்கும் ஆமை தக. 94

அவனைஅகன்று எங்குஇன்றும் ஆங்குஅவனும் எங்கும்
இவனைஒழிந்து உண்டாதல் இல். 95

உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்கு
எள்ளும் திறம் ஏதும் இல். 96

உறும்தொழிற்குத் தக்க பயன் உலகம் தத்தம்
வறும்தொழிற்கு வாய்மை பயன். 97

ஏன்ற வினைஉடலொடு ஏகுமிடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும். 98

மும்மை தரும்வினைகள் மூளாவாம் மூதுஅறிவார்க்கு
அம்மையும் இம்மையே ஆம். 99

கள்ளத்தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக. 100

திருவருட்பயன் முற்றிற்று.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

9. வினா வெண்பா

இந்நூல் மிகச்சிறியது. 13 பாடல்களை உடையது. தம் குருமூர்த்தியாகிய மறைஞானசம்பந்தரை வினவு முகமாக அமைந்தது. இவற்றுள் 11, 13 ஆகிய இருபாடல்களும் வினவுதலின்றி அமைந்தவை.

காண்பான், காட்டுவான், காணப்படும்பொருள் என்ற மூவகை நினைவுகளினின்றும் நீங்கி இறையுணர்வோடு ஒன்றிக் காண்பவர்களே வீடுபேறு அடைந்தவர்களாவர். அல்லாதார் அப்பேற்றினை அடையத்தக்காரல்லர்.

இறைவன் அருளையே கண்ணாகக்கொண்டு மெய்யுணர்வார்க்கு அச்செம்பொருள் உணர்தற் கெளிதாகி இன்பினை நல்கும். அவ்வனுபவப் பேற்றிற்கு இந்நூல் துணை செய்யும். இந்நூல் உண்மை அறியாதார் ஊமன் கண்ட கனவினை ஒப்ப ஒன்றியிருந்து தெளிதற்கும், தெளிந்தவற்றை உணர்த்துதற்கும் உணராதவராவர். இவையே இப்பாடல்களின் கருத்தாகும். எஞ்சிய 11 பாடல்களில் பல அரிய வினாக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில - மருதூர்ச் சம்பந்தா! ஒளியும் இருளும் ஓரிடத்துக்கூடல் அரிது. அங்ஙனமாகவும் கொடியேனிடத்து நீ எவ்வாறு பொருந்தி நின்றாய்? கேவல நிலையில் ஒன்றுமறியாமலும், சகல நிலையில் யாவற்றையும் மயங்கியும் உணரும் அடியேன் உன் திருவருளால் யாது பெற வல்லேன்? அருவம் உருவமாகாது, உருவம் அருவமாகாது, அருஉரு இரண்டும் ஒரு பொருட்கண்ணே பொருந்தமாட்டா. அங்ஙனமாயின் நினைவு மாத்திரையில் வடிவம் கொள்ளும் இறைவன் நிலை எத்தகையது? என்பன போன்ற வினாக்கள் நூலைக் கற்போரின் சிந்தனையையும் எழுச்சியையும் தூண்ட வல்லனவாகும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

9. வினா வெண்பா

நீடு மொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூட லரிது கொடுவினையேன் - பாடிதன்மு
னென்றவார் சோலை யுயர்மருதைச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ. 1

இருளி லொளிபுரையு மெய்துங் கலாதி
மருளி நிலையருளு மானும் - கருவியிவை
நீங்கி லிருளா நிறைமருதச் சம்பந்தா
வீங்குனரு ளாலென் பெற. 2

புல்லறிவு நல்லுணர்வ தாகா பொதுஞான
மல்லதில துள்ளதெனி லந்நியமாந் தொல்லையிருள்
ஊனமலை யாவா றுயர்மருதைச் சம்பந்தா
ஞானமலை யாவாய் நவில். 3

கனவு கனவென்று காண்பரிதாங் காணி
னனவி லவைசிறிது நண்ணு - முனைவனருள்
தானவற்றி லொன்று தடமருதைச் சம்பந்தா
யானவத்தை காணுமா றென். 4

அறிவறிந்த வெல்லா மசத்தாகு மாயின்
குறியிறந்த நின்னுணர்விற்கூடா - பொறிபுலன்கள்
தாமா வறியா தடமருதைச் சம்பந்தா
யாமா ரறிவா ரினி. 5

சிற்றறிவு முற்சிதையிற் சேர்வாரின் றுஞ்சிறிது
மற்றதனி நிற்கிலருண் மன்னுவாந் துற்றமுகின்
மின்கொண்ட சோலை வியன்மருதைச் சம்பந்தா
வென்கொண்டு காண்பேனி யான். 6

திருச்சிற்றம்பலம்

உன்னரிய நின்னுணர்வ தோங்கியக்காலொண்
தன்னளவு நண்ணரிது தானுகு - மென்னறிவு கருவி
தானறிய வாரா தடமருதைச் சம்பந்தா
யானறிவ தெவ்வா றினி. 7

அருவே லுருவன் றுருவே லருவன்
றிருவேறு மொன்றிற் கிசையா - வுருவோரிற்
காணி லுயர்கடந்தைச் சம்பந்தா கண்டவுடல்
பூணுமிறைக் கென்னும் புகல். 8

இருமலத்தார்க் கில்லை யுடல்வினையென் செய்யு
மொருமலத்தார்க் காரை யுரைப்பேன் - திரிமலத்தார்
ஒன்ருக வுள்ளா ருயர்மருதைச் சம்பந்தா
வன்ருகி லாமா றருள். 10

ஒன்றிரண்டாய் நின்ருென்றி லோர்மையதா மொன்ருக
நின்றிரண்டா மென்னிலுயிர் நேராகுந் துன்றிருந்தார்
தாங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா யானுகி
யோங்கியவா றெவ்வா றுரை. 11

காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை
காண்பார் கணன்முத்தி காணுர்கள் - காண்பானுங்
காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர். 12

ஒன்றி நுகர்வதிவ னூணு முறுதொழிலும்
என்று மிடையி லிடமில்லை - யொன்றித்
தெரியா வருண்மருதைச் சம்பந்தா சேர்ந்து
பிரியாவா றெவ்வாறு பேசு. 13

அருளால் உணர்வார்க் ககலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித் - தெருளா
வினவெண்பா உண்மை வினுவாரே ஊமன்
கனுவின்பா லெய்துவிக்குங் காண். 14

வினா வெண்பா முற்றும்.

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

10. போற்றிப்பஃறொடை

இது 95 கண்ணிகளையுடையது. பஃறொடை வெண்பா யாப்பில் அமைந்தது. தம் குருமூர்த்தியாய மறைஞான சம்பந்தர் தம்மை ஆட்கொண்ட அருட்செயலைப் பலவாறுகப் போற்றி மகிழுமுகமாக அமைந்துள்ளது. இறைவனே குருமூர்த்தியாக வந்து ஆட்கொண்டான் என்பதை முதல் 6 கண்ணிகளில் போற்றுகின்றுர் ஆசிரியர் உயிரின் வினை நீக்கத்திற்கே உடலும் உலகும் கொடுக்கப் பெற்றன என்பதை 7 முதல் 13 வரையுள்ள கண்ணிகளில் குறிப்பிடுகின்றுர். மாயை குருடனுக்குக் கொடுக்கப் பெற்ற கோல் போன்றதென்பது. இங்குக் குறிக்கத் தகுந்ததொரு உவமையாகும். வினை வயத்தால் தாய் வயிற்றில் கருவாக வாழ்கின்ற பொழுதும், அது உருப்பெற்று வெளிவருகின்ற பொழுதும், இறைவன் செய்யும் கருணையை 14 முதல் 18 வரையுள்ள கண்ணிகளில் விளக்குகின்றுர். குழந்தையாக உருப்பெற்று வெளிவந்தபின் குழந்தையினிடத்துப் பசியை ஏற்படுத்தி அழச்செய்தும், அப்பசி நீங்குவதற்குத் தாயினிடத்துத் தீம்பாலைத் தந்தருளியும் இறைவன் செய்யும் கருணை இருந்தவற்றை 19 முதல் 22 வரையுள்ள கண்ணிகளில் வியந்து போற்றுகின்றுர். இருவினைவயத்தால் உயிர்க்கு இன்பத் துன்பங்கள் மருவுமாறு செய்யும் அறத்தை 23 முதல் 35 வரையுள்ள கண்ணிகளில் போற்றுகின்றுர். உயிர்கள் முன்செய்தனவும், செய்து கொண்டு வருகின்றனவும், அவற்ருல் மேலும் வருவனவுமாய வினைப்பயன்களுக்கு ஏற்ப நன்மை தீமைகளைச் செய்து வரும் நிறத்தை 36 முதல் 38 வரையுள்ள கண்ணிகளில் குறிப்பிடுகின்றுர். உயிர் தான் செய்த நல்வினையின் பயனுக இந்திரன் முதலிய இறையவர் பதங்களை நுகர்வதும், தீவினையின் பயனுக எரிவாய் நரகில் வீழ்வதும், உயிர்களை உய்யக் கொள்ளும் அறக்கருணை மறக்கருணை ஆகியவற்றையும் 39 முதல் 53 வரையுள்ள கண்ணிகளில் குறிப்பிடுகின்றுர். இவ்வாறெல்லாம் உயிர்களைப் பக்குவப்படுத்தி அவற்றை மேலும் மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராவண்ணம் தம் அருட்பதவைச் செய்யும் பெருங்கருணையை 54 முதல் 58 வரையுள்ள கண்ணிகளிலும் விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் ஆகிய மூவர்க்கும் அருள்புரியும் திறத்தை 59 முதல் 83 வரையுள்ள கண்ணிகளிலும் இவ்வாறெல்லாம் உயிர்களை ஆட்கொண்டருளும். குருநாதன் தம்மையும் ஆட்கொண்டு, அயல்நெறியில் போகவிடாது அரிய சைவ சமய நெறியில் நிறுத்திய பெருங்கருணையை 84 முதல் 95 வரையுள்ள கண்ணிகளிலும் போற்றுகின்றுர். நூலின் இறுதியில் உள்ள வெண்பாவில் தில்லையையும் தம் குருநாதன் திருவடிகளையும், அப்பெருமாஞல் பெற்ற சிவபோகத்தையும் போற்றி மகிழ்கின்றுர்.

உ

சிவமயம்

10. போற்றிப்பஃறொடை

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர் கோன்
மாமன்னு சோதி மணிமார்ப - ஞமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கஞ்செய் விந்துவுடன்
நாதநா தாந்த நடுவேதம் - போதத்தால்
ஆமளவுந் தேட அளவிறந்த வப்பாலைச்
சேம வொளியெவருந் தேரும்வகை - மாமணிசூழ்
மன்று ணிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி - குன்றாத
பல்லுயிர்வெவ் வேறு படைத்து மவைகாத்து
மெல்லை யிளைப் பொழிய விட்டுவைத்துந் தொல்லையுறும்.5

அந்தமடி நடுவென் றெண்ண வளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி - முந்துற்ற
நெல்லுக் குமிதவிடு நீடு செம்பிற் காளிதமுந்
தொல்லைக் கடரேன்றத் தோன்றுவரு - மெல்லாம்
ஒருபுடை யொப்பாய்த்தா னுள்ளவா றுண்டாய்
அருவமா யெவ்வுயிரு மார்த்தே - யுருவுடைய
மாமணியை யுள்ளடக்கு மாநாகம் வன்னிதனைத்
தானடக்குங் காட்டத் தகுதியும் போன் - ஞானத்தின்
கண்ணை மறைத்த கடிய தொழி லாணவத்தால்
எண்ணஞ் செயன்மாண்ட வெவ்வுயிர்க்கு முண்ணுடிக் 10

கட்புலனுற் காணுர்தங் கைகொடுத்த கோலேபோற்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பால்
தனுகரண மும்புவன முந்தந் தவற்றுன்
மனமுதலா வந்தவிகா ரத்தால் - வினையிரண்டுங்
காட்டி யதனுற் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி - நாட்டுகின்ற
வெப்பிறப்பு முற்செ யிருவினையா நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துட் கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக் குட்படுங்கால்
எல்லைப் படாவுதரத் தீண்டியதீப் - பல்வகையா 15

லங்கே கிடந்த வநாதியுயிர் தம்பசியால்
எங்கேனுமாக வெடுக்குவென - வெங்கும்பிக்

திருச்சிற்றம்பலம்

காயக் கருக்குழியிற் காத்திருந்துங் காமியத்துக்
கேயக்கை, கான்முதலா யெவ்வுறுப்பு - மாசறவே
செய்து திருத்திப்பின்பி யோகிருத்தி முன்புக்க
வையவழி யேகொண் டணைகின்ற - பொய்யாத
வல்லவமே போற்றியம் மாயக்கா ருன்மறைப்ப
நல்ல வறிவொழிந்து நன்குதீ - தொல்லையுரு
வக்காலந் தன்னிற் பசியையறி வித்தழுவித்
துக்காவி சோரத்தா யுண்ணடுங்கி மிக்கோங்குஞ்.

சிந்தையுருக முலையுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த
பாசப் பெருங்கயிற்றுற் பல்லுயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறிபோற்றி - பாசற்ற
பாலைப் பசும்பதத்தும் பாலனு மப்பதத்து
நாளுக்கு நாட்சகல ஞானத்து - மூள்வித்துக்
கொண்டாள வாளக் கருவிகொடுத் தொக்க நின்று
பண்டாரி யான படி போற்றி - தண்டாத
புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்
அன்புசேர் கின்றனகட் டைந்தாக்கி - முன்புள்ள

உண்மை நிலைமை யொருகா லகலாது
திண்மை மலத்தாற் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூலவருங் கட்டிலுயிர் மூடமா யுட்கிடப்பக்
கால நியதி யதுகாட்டி - மேலோங்கு
முந்திவியன் கட்டிலுயிர் சேர்த்துக் கலைவித்தை
யந்த வராக மவைமுன்பு - தந்த
தொழிலறி விச்சை துணையாக மானி
நெழிலுடைய முக்குணமுமெய்தி - மருளோடு
மன்னு மிதயத்திற் சித்தத்தாற் கண்ட பொருள்
இன்ன பொருளென் றியம்பவொண்ணு - வந்நிலை போய்க்

கண்டவியன் கட்டிற் கருவிகளீ ரைந்தொழியக்
கொண்டுநியமித்தற்றை நாட்கொடுப்பப் - பண்டை
யிருவினையான் முன்புள்ள வின்பத்துன் பங்கள்
மருவும்வகை யங்கே மருவி - யுருவுடனின்
றோங்கு நுதலாய வோலக்க மண்டபத்திற்
போங்கருவி யெல்லாம் புகுந்தீண்டி - நீங்காத
முன்னை மலத்திருளுண் மூடா வகையகத்துள்
துன்னுமிரு ணீக்குஞ் சுடரேபோ - லந்நிலையே

திருச்சிற்றம்பலம்

சூக்கஞ் சுடருருவிற் பெய்து தொழிற்குரியர்
ஆக்கிப் பணித்த வறம் போற்றி - வேட்கைமிகு 35

முண்டிப் பொருட்டா லொருகா லவியாது
மண்டியெரி யும்பெருந்தீ மாற்றுதற்குத் திண்டிறல் சேர்
வல்லார்கள் வல்ல வகையாற் றொழில்புரிதல்
எல்லா முடனே யொருங்கிசைந்து - செல்காலை
முட்டாமற் செய்வினைக்கும் முற்செய்வினைக் குஞ் செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி - நட்டோங்கு
மிந்நிலைமை மானுடருக் கேயன்றி யெண்ணிலா
மன்னுயிர்க்கு மிந்த வழக்கேயாய் - முன்னுடைய
நானாள் வரையி லுடல்பிரித்து நல்வினைக்கண்
வாணாளின் மாலா யயனாகி - நீணாகர் 40

வானாடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானா விதத்தா நலம் பெறுநாள் - தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன் வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட விற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை யென்றெடுத்து
நல்லதோ ரின்சொ னடுவாகச் - சொல்லியிவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு - மையறருஞ்
செக்கி னிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்துந்
தக்கநெருப் புத்தூண் தழுவுவித்து - மிக்கோங்கு 45

நாராசங் காய்ச்சிச் செவிமடுத்து நாவரிந்து
மீராவுன் னூனத்தின் னென்றடித்தும் - பேராமல்
அங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோப மாறாத வேட்கையரா - யிங்கொருநாள்
எண்ணிமுதற் காணாத வின்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு - முன்னாடிக்
கண்டு கடன்கழித்தல் காரியமா மென்றெண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் - மண்டெரியிற்
காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதிய
மீய்த்துத்தாய் தந்தைதம ரின்புறுதல் - வாய்த்த நெறி 50

யோடியதே ரின்கீ ழுயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவமின்றே நீங்குமென - நாடித்தன்
மைந்தனையு மூர்ந்தோன் வழக்கே வழக்காக

நஞ்சனைய சிந்தை நமன்றூதர் - வெஞ்சினத்தால்
அல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி - பல்லுயிர்க்கும்
இன்ன வகையா லிருவினைக்க ணின்றருத்தி
முன்னைமுத லென்ன முதலில்லோ - நல்வினைக்கண்
எல்லா வுலகு மெடுப்புண் டெடுப்புண்டு
செல்காலம் பின்னரகஞ் சேராமே - நல்லநெறி

யெய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுதல்
உய்யு நெறிசிறிதே யுண்டாக்கிப் - பையவே
மட்டாய் மலராய் வருநாளின் முன்னைநாண்
மொட்டா யுருவா முறைபோலக் - கிட்டியதோர்
நல்ல பிறப்பிற் பிறப்பித்து நாடும்வினை
யெல்லை யிரண்டு மிடையொப்பிற் - பல் பிறவி
யத்தமதிலன்றே வளவென்று பார்த்திருந்து
சத்தி பதிக்குந் தரம் போற்றி - முத்திதரு
நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமல மொன்றினையு
மந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப் - பின்னன்பு

மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப் -பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை - யன்னவனுக்
காதிகுண மாதலினு லாடுந் திருத்தொழிலுஞ்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியு மதிக் கொழுந்து - மச்சமற
வாடு மரவு மழகார் திருநுதன்மேல்
நீடுருவ வன்னி நெடுங்கண்ணும் - கேடிலயங்

கூட்டுந் தமருகமுங் கோல வெரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும் - வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தா ளினுமடியார்
உள்ளத் தினும்பிரியா வொண்சிலம்புங் - கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்திவீ ரக்கழலும்
ஒன்றுமுருத் தோன்றும லுள்ளடக்கி - யென்றும்
இறவாத வின்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நறவாருந்

தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதனொரு பேர்புனைந்து - பாரோர்தம்

உண்டி யுறக்கம் பயமின்ப மொத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி - மிண்டாய
வாறு சமயப் பொருளுமறி வித்தவற்றிற்
பேறின்மை யெங்களுக்கே பேருக்கித் - தேறாத
சித்தந் தெளியத் திருமேனி கொண்டுவரும்
அத்தகைமை தானே யமையாமல் - வித்தகமாஞ்
சைவ நெறியிற் சமய முதலாக
வெய்து மபிடேக மெய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளா நோக்கிக் கடியபிறப் பாற்பட்ட
புண்ணு மிருவினையும் போயகல - வண்ணமலர்க்

கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி - யொத்தொழுகுஞ்
சேணு ரிருள்வடிவுஞ் செங்கதிரோன் பானிற்பக்
காணு தொழியுங் கணக்கேபோ - லாணவத்தின்
ஆதி குறையாம லென்பா லணுகாமல்
நீதி நிறுத்து நிலைபோற்றி - மேதக்கோர்
செய்யுஞ் சரியை திகழ்கிரியா யோகத்தால்
எய்துஞ்சீர் முத்திபத மெய்துவித்து - மெய்யன்பாற்
காணத் தகுவார்கள் கண்டாற் றமைப்பின்பு
நாணத் தகுஞான நன்னெறியை - வீணே

யெனக்குத் தரவேண்டி யெல்லாப் பொருட்கு
மனக்கு மலரயன்மால் வானோர் - நினைப்பினுக்குந்
தூரம்போ லேயணிய சுந்தரத்தா ளென்றலைமேல்
ஆரும் படிதந் தருள்செய்த - பேராளன்
தந்தபொரு ளேதென்னிற் றான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி - முந்தியென்றன்
உள்ளமென்று நீங்கா தொளித்திருந்து தோன்றி நிற்குங்
கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி - வள்ளன்மையால்
தன்னைத் தெரிவித்துத் தன்றாளி னுட்கிடந்த
வென்னைத் தெரிவித்த வெல்லையின்கண் - மின்னாரும்

வண்ண முருவ மருவுங் குணமயக்கம்
எண்ணங் கலைகாலமெப்பொருளு - முன்னமெனக்


திருச்சிற்றம்பலம்

கில்லாமை காட்டிப்பின்பெய்தியவா காட்டியினிச்
செல்லாமை காட்டுஞ் செயல்போற்றி - யெல்லாம்போய்த்
தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
யெம்மைப் புறங்கூறி யின்புற்றுச் - செம்மை
யவிகாரம் பேசு மகம்பிரமக் காரர்
வெளியா மிருளில் விடாதே - யொளியாய்நீ
நின்ற நிலையே நிகழ்த்தி யொருபொருள்வே
றின்றியமை யாமை யெடுத்தோதி - யொன்றாகச் 90

சாதித்துத் தம்மைச் சிவமாக்கி யிப்பிறவிப்
பேதந் தனிலின்பப் பேதமுறுப் - பாதகரோ
டேகமாய்ப் போகாம லெவ்விடத்துங் காட்சி தந்து
போகமாம் பொற்றாளி நுட்புணர்த்தி - யாதியுடன்
நிற்க வழியா நிலையிதுவே யென்றருளி
யொக்க வியாபகந்தன் னுட்காட்டி - மிக்கோங்கு
மாநந்த மாக்கடலி லாரா வமுதளித்துத்
தான்வந்து செய்யுந் தகுதியினால் - ஊனுயிர்தான்
முன்கண்ட காலத்து நீங்காத முன்னோனை
யென்கொண்டு போற்றிசைப்பேன் யான் 95

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றியவன் மெய்ஞ்ஞானப் புண்ணிய நூல் - போற்றியெங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேரய்வந் துண்ணின்ற
சம்பந்த மாமுனிபொற் றாள்.

போற்றி பஃறொடை முற்றிற்று.



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

11. கொடிக்கவி

இது 5 பாடல்களை உடையது. வெண்பா யாப்பில் இயன்றது. கூத்தப் பெருமான் திருவிழாக் கொடியேற்றத்தின் பொழுது கொடியேருமல் தடைப்பட்டது கண்டு தில்லைவாழ் அந்தணர் வருந்தினர். அப்பொழுது, இங்கு உமாபதி வந்தால் கொடியேறும் என்ற அசரீரி எழுந்தது. தில்லைவாழ் அந்தணர்கள் அவ்வண்ணமே அவரிடம் சென்று வேண்ட அவரும் இக்கொடிக்கவி பாடி அதனை ஏற்றினர் என்பது இந்நூல் பற்றிய வரலாருகும்.

ஒளியாகிய சிவமும் இருளாகிய மலமும் இருக்குமிடம் ஒன்றே. அது உயிரேயாகும். இவ்விரண்டில் ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும். எனினும் ஒளியாகிய இறைவன், மலமாகிய இருள், உயிரைத் தாக்கா வண்ணம் உயிர்க்குயிராய் நின்று அருள் புரிவன். ஆயினும் உயிர் வேம்பு தின்ற புழுப்போல முன் நோக்கிய உலகியல் இன்பங்களையே பின்னும் ஓராற்ருன் நோக்கும். இவ்வாறு அவ்வுயிர் நோக்காது இறைவனையே நோக்கி இன்புறுமாறு இக்கொடியைக் கட்டினேன். குருமூர்த்தியே! மெய்ப்பொருளாகிய நீ யார்? உன் அருட்சத்தி என்பது யாது? கண்ணெனத் தக்க உயிர் என்பது யாது? இருள் என்பது யாது? ஒளி என்பது யாது? நின்னுல காக்கப் பெறும். இவ்வுலகனைத்தும் உன்னை உணருமாறு இக்கோபுர வாசலில் கொடி கட்டினேன். மாற்றமனங்கழிய நின்ற மறையோனுகிய இறைவனைப் பிரியாதவாறு ஒன்றுபட்டு நிற்க இக் கொடியேற்றம் அருள வல்லது. திருவைந்தெழுத்தின் பேதங்களாகக் கூறப்பெறும் எழுத்துக்கள் பலவும் நெஞ்சின் கண் அழுந்தி உணரப்பெறின் திருவருள் உயிரைச் சிவத்தொடு சேர்க்கும். இதனையே இக்கொடியேற்றம் அறிவுறுத்தும், இறையருளால் உயிர் வினையின் நீங்கி விளங்கிய அறிவினைப் பெற்று அவ்வறிவிலேயே மாருமல் நிற்கும். அதுவே சிவப்பேருகும். இதனையே இக்கொடியேற்றம் கூருமல் கூறுகிறது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

11. கொடிக்கவி

கட்டளைக்கலித்துறை

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
ஒளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக் கொடி கட்டினனே. 1

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே - தருளாளா
நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி. 2

வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா துணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிறியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கொடி. 3

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டாக் கொடி. 4

அந்த மலமறுத்திங் கான்மாவைக் காட்டியதற்
கந்த அறிவை அறிவித்தங் - கிந்தறிவை
மாறாமல் மாற்றி மருவு சிவப் பேறென்றுங்
கூறாமல் கூறக் கொடி. 5

கொடிக்கவி முற்றும்.

உ

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

12. நெஞ்சு விடு தூது

இது கலிவெண்பாவால் அமைந்தது. இறுதியில் ஒரு தனி வெண்பாவும் உள்ளது. 125 கண்ணிகளையுடையது. தம் ஆசிரியரைத் தலைவராகவும் தம்மைக் காதலியாகவும் கொண்டு அவரிடம் சென்று அவரருளைப் பெற்று அதற்கு அடையாளமாக அவரிடம் உள்ள மாலையை வாங்கி வருமாறு தம் நெஞ்சைத் தூதாக விடுப்பதே இதன்பொருள் அமைப்பாகும். தமக்குரிய தலைவன் இறைவனே ஆவன் எனக்கூறி அவனது பெருமையையும், சிற்றறிவுடைய உயிரின் சிறுமையையும் அதற்குக் காரணமாய பாசங்களின் இயல்பையும் முற்பகுதியில் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார். இடைப்பகுதியில், தான் அடையத்தக்க தலைவனின் பெருமை கூறுமுகமாகத் தசாங்கங்களின் இயல்பைக் கூறுகின்றார். இறுதிப்பகுதியில் அத்தலைவனை அடையுங்கால் இடையில் உலோகாயதன், மாயாவாதி, புத்தன், சமணன், சுமார்த்தன் முதலிய தீயோரிடத்துச் செல்லாது தம் தலைவனிடத்திலேயே சென்று கொன்றை மாலையை வாங்கிவர வேண்டுமெனக் கூறுகின்றார்.

“முன்னம் தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவரென்று - நிலைத்தமிழின் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் உரைத்த மெய்வைத்த சொல்லை விரும்பாமல்” எனவரும் வரிகள் திருக்குறளின்பால் இவர்வைத்துள்ள பற்றையும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்தற்கு இதனினும் அரியதொரு நூலில்லை என்பதையும் விளக்குவதாகும்.

“தேற்றற்ற சிந்தை சிவஞான மோனத்தால் ஓட்டற்று வீற்றிருக்கும் ஊருடையான்” என்றபகுதி திருவுந்தியாரின் பாடலை நினைவு கூரச்செய்கின்றது.

“இருபொழுதும் நாள் இருபத்தேழும் நவக்கிரகமும் நலியும் கோள் இது வென்றெண்ணிக் குறிப்பதோ” என்ற கண்ணிகள் அடியவரை நாளும் கோளும் நலியாவென உரை செய்த குறிப்பாகும். இறுதியில் உள்ள வெண்பா, நூற்பொருளின் பிழிவாக அமைந்து விளங்குகின்றது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

12. நெஞ்சு விடு தூது

கலிவெண்பா

இறைவனியல்பு

பூமேவு முந்திப் புயல்வண்ணன் பொற்பமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன் - ஞமேவிப்
பன்றியு மன்னமுமாய்ப் பாரிடத்தும் வான்பறந்து
மென்று மறியா வியல்பினு - னன்றியும்
இந்திரனும் வானேரு மேனேரு மெப்புவியு
மந்தர வெற்பு மறிகடலு - மந்திரமும்
வேதமும் வேத முடிவும்விளை விந்துவுடன்
நாதமுங் காணு நலத்தினு - னேத
வரியா னெளியா னளவிறந்து நின்ற
பெரியான் சிறியான்பெண் பாகன் - தெரியா
வருவா னுருவா னருவுருவு மில்லான்
மரியான் மரிப்பார் மனத்தான் - பரிவான
மெய்யர்க்கு மெய்யன் வினைக்குவினை யாயினுன்
பொய்யர்க்குப் பொய்யாப்பொய் யாயினு - னையன்
படநாகம் பூண்ட பரமன் பசுவின்
இடமாய் நிறைந்த விறைவன் - சுடரொளியான்

உயிரியல்பு

என்றுமுள னன்றளவுமி யானு முளனுகி
நின்றநிலை யிற்றரித்து நில்லாமற் - சென்று சென்று
தோற்றியிடு மண்டஞ் சுவேதங்கண் மண்ணின் மேற்
சாற்றுமுற் பீசஞ் சராயுசங்கட் - கேற்றபிறப்
பெல்லாம் பிறந்து மிறந்து மிருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் - கல்லா
உணர்வின் மிசையோ டுலகா யதனைப்
புணர்வதொரு புல்லறி பூண்டு - கணையிற்
கொடிதெனவே சென்று குடிபழுதே செய்து
கடிய கொலைகளவு காமம் - படியின்மிசைத்

தேடி யுழன்று தெரிவைத் தெரியாமல்
வாடி யிடையு மனந்தனக்கு - நாடியது
போன வழிபோகும் புந்திக்கும் புந்தியுடன்
ஆன திறலா ரகந்தைக்கு - மேனி
யயர வயர வழிய வழியும்
உயிரின் றுயர முரையேன் - வயிரமே

தலையினியல்பு

கொண்டதொரு காமனுக்கும் கோபனுக்கும் மோகனுக்கும்
மண்டு மதமாச் சரியனுக்கும் - திண்டிறல்சேர்
இந்திரியம் பத்துக்கு மீரைந்து மாத்திரைக்கும்
அந்தமிலாப் பூதங்க ளைந்தினுக்கும் - சிந்தைகவர்
மூன்றுகுற்ற மூன்றுகுணம் மூன்றுமலம் மூன்றவத்தை
யேன்றுநின்று செய்யு மிருவினைக்குந் - தோன்றுத
வாயுவொரு பத்துக்கும் மாருத வல்வினையே
யாய கிளைக்கு மருநிதிக்கும் - நேயமாம்
இச்சை கிரியை யிவைதரித்திங் கெண்ணிலா
வச்சங் கொடுமை யவைபூண்டு - கச்சரவன்
சீரினிலை நில்லாமல் திண்டாடும் பல்கருவி
வாரியகப் பட்டு மயங்கினேன் - தேருங்கால்
உன்னை யொழிய வுறவில்லை யென்னுமது
தன்னை யறிவைத் தனியறிவை - முன்னந்
தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவரென்று - நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல் - ஐவர்க்கு
மாவதுவே செய்தங் கவர்வழியைத் தப்பாமல்
பாவமெனும் பௌவப்பரப்பழுந்திப் - பூவையர்தம்
கண்வலையிற் பட்டுக் கலவிக் கலைபயின்றங்
குண்மை யறிவுணர்ச்சி யோராமல் - திண்மையினுல்
நாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறும்
சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங் - காவிநிலை
நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே
பொற்பினுடன் யானே புகலக்கேள் - வெற்பின்மிசை

இறைவனது நிலை

வந்திருக்க வல்லான் மதியாதார் வல்லரணஞ்
செந்தழலின் மூழ்கச் சிரித்தபிரான் - அந்தமிலா

திருச்சிற்றம்பலம்

வேத முடிவில் விளைவில் விளைவிலொளி
யாதி யமல நிமலனருட் - போத
அறிவி லறிவை யறியு மவர்கள்
குறியுள் புகுதுங் குணவ - னெறிகொள்
வெளியில் வெளியில் வெளியன் வெளியி
லொளியி லொளியி லொளியன் - ஒளியி
லளியி லளியி லளிய னளியில்
அளவி லளவி லளவன் - அளவிறந்து
நின்று னனைத்து நிறைந்தா நினைப்பவர்பாற்
சென்றுன் தெரியத் தெரியாதான் - குன்று
விளக்காய் நிறைந்த விரிசுடரான் விண்மேற்
றுளக்காம நின்றபெருஞ் சோதி - யுளக்கண்ணுக்
கல்லாது தோன்று வமல னகிலமெலா
நில்லாம நின்ற நிலையினுன் - சொல்லாரு
மீசன் பெருமை யிருவினையே னுன்றனக்குப்
பேசுந் தகைமையெலாம் பேணிக்கேள் - பாசம்

தசாங்கம் :

1. மலை

பலவுங் கடந்து பரிந்தருள்சேர் பண்பாற்
குலவி விளங்குகுணக் குன்றே - னிலகவே

2. ஆறு

செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
வையம் பரவ மகிழ்ந்தெழுந்தங் - கையம்
களவுபயங் காமங் கொலைகோபங் காதி
அளவில்வினை யெல்லா மழித்திங் - குளமகிழத்
தொம்மெனவே யெங்கு முழங்கிச் சுருதிபயில்
செம்மைதரு மாகமங்கள் சேர்ந்தோடி - மும்மலத்தின்
காடடங்க வேர்பறித்துக் கல்விக் கரைகடந்தங்
கோடுபல பூதத் துணர்வழித்து - நீடுபுகழ்
மெய்வாய்கண் மூக்குச் செவியென்னப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவழித்து - நையுமியல்
வாக்குப்பா தம்பாணி பாயுருபத் தம்பலவு
நீக்கிச் செறிந்து நிறைந்தோடிப் - போக்கரிய
பந்தமெனுஞ் சோலை பறித்துப் பரந்தலைக்கு
மந்தமனம் புத்தியுட னுங்காரஞ் - சிந்தைவிழ

திருச்சிற்றம்பலம்

மோதி யலைக்கு மருணீர்மை முக்குணமுங்
காதி யுரோமமெலாங் கைகலந்து - சீதப்
புளக மரும்பிப் புலன்மயக்கம் போக்கி
விளைவில் புலன்முட்ட மேவிக் - களபதன
மாதர் மயக்க மழித்துவளர் மண்டலத்தின்
சோதியொரு மூன்றினையும் சோதித்து - நீதியினால்
ஆதார மாறினுஞ்சென் ரூறியடல் வாயுக்கண்
மீதான பத்து மிகப்பரந்து - காதிப்
பிறுதிவியப் புத்தேயு வாயுவா காய
வுறுதி நிலமைந்து மோடி - மறுவிலா
நான்முகன்மா லீசன் மகேச நலஞ்சிறந்த
தான்முக மைந்தாஞ் சதாசிவமு - மானதொரு
விந்துநா தங்கடந்து சுத்த வெறுவெளியில்
அந்தமிலாப் பாழடங்கத் தேக்கியபின் - முந்திவரு
மவ்வறிவுக் கப்பாலுஞ் சென்றகண்ட முள்ளாக்கிச்
செவ்வறிவே யாகித் திகைப்பொழிந்தங்- கெவ்வறிவுந்
தானாய வீடருளித் தன்னிற் பிரிவில்லா
வூனாகி யெவ்வுயிர்க்கு முட்புகுந்து - மேனியிலா
வஞ்சவத்தை யுங்கடந் தாயபெரும் பேரொளிக்கே
தஞ்சமெனச் சென்று தலைப்பட்டு - வஞ்சமறத்
தானந்த மில்லாத தண்ணளியா லோங்கிவரு
மானந்த மென்பதோ ராறுடையான் - ஆனந்தம்

3. நாடு

பண்ணும் பயன்சுருதி யாகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண வரியதொரு நாடுடையான் - எண்ணெண்

4. ஊர்

கலையா லுணர்ந்து கருத்தழிந்து காம
நிலையான தெல்லாமும் நீத்தங் - கலைவறவே
தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தால்
ஓட்டற்றுவீற்றிருக்கு மூருடையான் - நாட்டத்தால்

5. தார்

தெண்ணீ ரருவிவிழச் சிந்தைமயக் கந்தெளிந்
துண்ணீர்மை யெய்தி யுரோமமெலா - நண்ணும்
புளகம் புனைமெய்யர் பொய்யிற்கூ டாமல்
உளகம்பங் கொண்டுள் ளுருகி - யளவிலா

மாலா யிருக்கு மவர்மனத்தை வாங்கவருண்
மேலாய் விளங்கலங்கன் மெய்யினுன் - தேலாத

6. குதிரை

வானம் புவன மலைகடலேழ் பாதாள
முனைந்து பூதத் துயிருணர்ச்சி - ஞானமா
யெல்லாமா யல்லவா யெண்ணுவாரெண்ணத்துள்
நில்லாம னிற்குநீள் வாசியான் - சொல்லாரும்

7. யானை

பாதாள மூடுருவிப் பாரேழும் விண்ணேழு
மாதார மாகி யகண்டநிறைந் - தோத
அரிதா யெளிதா யருமறையா றங்கத்
துருவா யுயிரா யுணர்வாய்ப் - பெரிதாய
வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித்
துய்ய கடலைத் துகளெழுப்பி - யையமுறுங்
காமக் குரோத மத மாச்சரியங் காய்ந்தடர்த்துச்
சாமத் தொழிலின் றலைமிதித்து - நாமத்தாற்
கத்துஞ் சமயக் கணக்கின்விறற் கட்டழித்துத்
தத்தம் பயங்கொலைகள் தாங்கழித்தே - தத்திவரும்
பாசக் குழாத்தைப் படவடித்துப் பாவையர்த
மாசைக் கருத்தை யறவீசி - நேசத்தா
லானவே கங்கொண் டருண்மும் மதத்தினு
லூனையார் தத்துவங்க ளுள்புகுந்து - தேனைப்
பருகிக் களித்துயர்ந்து பன்மறைநாற் கோட்டான்
மருவித் திகழ்ஞான வானையா - னிருமுச்

8. கொடி

சமையங் கடந்து தனக்கொப் பிலாத
சுமைதுன்ப நீக்குந் துவசன் - கமையொன்றித்

9. முரசு

தம்மை மறந்து தழலொளியுள் ளேயிருத்தி
இம்மை மறுமை யிரண்டகற்றிச் - செம்மையே
வாயுவை யோடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையு மாங்கே யுறவமைத்துத் - தேயுறவே
என்று மொருதகைமை யாயிருக்கு மின்பருளே
நின்று முழங்கு நெடுமுரசோன் - அன்றியும்

திருச்சிற்றம்பலம்

10. ஆணை

மாலு மயனும் வகுத்தளித்த வையமெலாஞ்
சாலுமிதற் கப்பாலு மெப்பாலு - மேலை
யுலகு முலகா லுணரவொண்ணு வூரு
மிலகி நடக்குமெழி லாணையான் - அலகிறந்த

இறைவன் பெருமை

காட்சியான் காட்சிக்குங் காணுன் கலைஞான
வாட்சியா னுட்சிக்கு மாயிலான் - சூட்சியான்
பாரும் திசையும் படரொளியா லேநிறைந்தான்
றூருந் தலையுமிலாத் தோன்றலான் - வேராகி
வித்தாகி வித்தின் விளைவாகி மேவுதனுச்
சத்தாதி பூதங்க டாமாகிச் - சுத்த
வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பா
லுறுபொருளாய் நின்ற வொருவன் - பொறியிலியேன்

ஞானசாரியர்

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனியென் றம்பிரா - னம்புவியோர்
போற்றுந்திருவடியென் புன்றலைமீதே பொறித்தோ
நேற்றின் புறத்தமைத்த வெங்கோமான் - சாற்றுவார்
சாற்றும் பொருளான் றனிமுதல்வன் ருனல்லான்
வேற்றின்ப மில்லா விளங்கொளியான் - போற்றுங்
குருவேட மாகிக் குணங்குறியொன் றில்லாப்
பெருவேட மாய்நிறைந்த பெம்மான் - கருவேடங்
கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையா
னெட்டுமவர்க் கெட்டா வியல்பினுன் - மட்ட வீழ்தார்

குரு உபதேசம்

வானுேன் பவனி வரக்கண்டு வல்வினையே
னேனுேரு மேத்துதல்கண் டேத்தினேன் - ருனென்னைப்
பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லாம்
நீத்தா நினைவே ருக்கினு - னேத்தரிய
தொண்ணூற்றறுவர் பயிறுெக்கிற்றுவக்கறுத்தான்
கண்ணூறு தேனமுதங் காட்டினுன் - வெண்ணீறும்
வேடமும் பூசையுமே மெய்யென்ருன் பொய்யென்ருன்
மாடையும் வாழ்க்கை மனையுமே - நாடரிய
வஞ்செழுத்தி னுள்ளீ டறிவித்தா னஞ்செழுத்தை

திருச்சிற்றம்பலம்

நெஞ்சழுத்தி நேய மயலாக்கி - யஞ்செழுத்தை
யுச்சரிக்குங் கேண்மை யுணர்த்தியதி லுச்சரிப்பு
வைச்சிருக்கு மந்த வழிகாட்டி - யச்சமறச்
சென்று விளக்கை யெழத்தூண்டிச் செஞ்சுடரி
ஞென்றி யொருவிளக்கி னுள்ளொளியாய் - நின்ற
பெருவிளக்கின் பேரொளியி னுள்ளே பிரச
மருவு மலர்போன் மதித்தங் - கருவினிருக்
கொள்ளா வருளைக் கொளுத்திக் குணங்குறியொன்
றில்லா விடத்தே யளைப்பாற்றி - விள்ளாத
வுள்ள முதலாக வுற்றதெல்லாம் வாங்கவருள்
வெள்ள மயலளித்து மேவினுன் - கள்ள
மறப்பித்தான் மெய்ஞ்ஞான மாக்கிமன மெல்லா
மிறப்பித்தா னென்பிறவி யீர்த்தான் - விறற்சொல்லுக்
கெட்டானை யார்க்கு மெழுதா வியற்குணங்க
ளெட்டானை யாற்ரு வெழுத்தினுன் - மட்டாரும்
பாடலா ராடலார் பண்பலார் நண்பலா
ராடலா ராட லகன்பதியாங் - கூடலார்
காணக்கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்
பாணர் கிலகு பலகையிட்டான் - சேணிற்
சிறந்த வுருவான் றிலுமாக் கெட்டா
நிறைந்த திருவுருவாய் நிற்போன் - கறங்குடனே
சூறைசுழல் வண்டு சுழல்கொள்ளி வட்ட மன
மாறில் கருணையினுன் மாற்றினு - ணீறணிந்த
மெய்ய னமல னிமலனருள் வீடளிக்கு
மையனறி வுக்கறி வாயினுன் - பொய்யாற்பாற்
பொய்மையாய் நின்ருன் புரிந்தவர்தந் நெஞ்சத்துண்
மெய்மையாய் நின்று விளங்கினுன் - கைமழுவா
னத்தன்பால் நீசென் றடையு மிடத்தையெல்லாஞ்

அடையும் இடம்

சித்தஞ்சேர் நெஞ்சமே செப்பக்கேள் - நித்தலுமே
பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி
யாசைதனிற் பட்டின்ப வார்கலிக்கு - ணேசமுற
நின்று திளேக்கு மிதுமுத்தி யல்லதுவே
ரென்று திளேக்கு மதுமுத்தி - யன்றென்
றிகலா விருளலகை போலிகலே பேசு
முலகா யதன்பா லுருதே - பலகாலுந்
தாம்பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண்டாங்கதுவே
நான்பிரம மென்பவர்பா நண்ணுதே - யூன்றனக்குக்
கொன்றிடுவ தெல்லாங் கொலேயல்ல வென்றுகுறித்

தென்றுமற மேதெய்வ மென்றென்று - வென்றிப்
பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன்சொன்
மிறையே விரும்பி விழாதே - நிறைமேவி
வாழ்பவர்போன் மண்ணுடலின் மன்னுமுரோ மம்பறித்துத்
தாழ்வுநினை யாதுதுகில் தானகற்றி - யாழ்விக்கு
மஞ்சு மகற்று மதுமுத்தி யென்றுரைக்கும்
வஞ்சமணன் பாழி மருவாதே - செஞ்சொல்புனை
யாதிமறை யோதி யதன்பயனென் றும்மறியா
வேதியர்சொன் மெய்யென்று மேவாதே - யாதியின்மே
லுற்றதிரு நீருஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையற்பாற் செல்லாதே - நற்றவஞ்சேர்
வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே - நீட
வழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரை பாராதே - விழித்தருளைத்
தந்தெம்மை யாண்டருளுஞ் சம்பந்த மாமுனிவ
னந்தங் கடந்தப்பா லாய்நின்றோ - னெந்தைபிரான்
வீற்றிருக்க மோலக்க மெய்தியடி வீழ்ந்திறைஞ்சிப்
போற்றி சயசய போற்றியென - வார்த்தகரி
யன்றுரித்தாய் நின்பவனி யாதரித்தா ரெல்லாரும்
வென்றிமதன னம்புபட வீழ்வரோ - நின்றிடத்து
நில்லாத செல்வ நிலையென் றுனைநீங்கிப்
பொல்லா நரகம் புகுவரோ - பல்லாருங்
கத்துஞ் சமயக் கணக்கிற் படுவரோ
சித்தம் பலகாற் றிகைப்பரோ - முத்தம்
பொருத நகைமடவார் புன்கலவி யின்ப
மருவி மயங்கி வருவரோ - விருபொழுது
நாளிருபத் தேழு நவக்கிரக மும்நலியுங்
கோளிதுவென் றெண்ணிக் குறிப்பரோ - வேளை
யெரித்த விழியாய்நின் னின்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல் - வருத்தமெலாந்
தீரா யெனவுரைத்துச் செங்கமலப் பூந்திருத்தா
டாரா யெனப்பலகால் தாழ்ந்திறைஞ்சி - யோரும்
பூங்குன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
யீங்கொன்றை வாரா யினி.

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் தார்வாங்கி - அம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினையெல் லாமகல
நெஞ்சமே வாராய் நினைத்து.

முற்றும்.

உ
சிவமயம்

ஸ்ரீகாழி - தத்துவநாதர்

அருளிச்செய்த

13. உண்மைநெறி விளக்கம்

ஸ்ரீதத்துவநாதர் வரலாறு

இவர் ஸ்ரீகாழிப்பதியினர், ஸ்ரீகாழிச் சிற்றம்பலநாடிகளின் மாணுக்கர். இவரே உண்மைநெறி விளக்கம் எனும் நூலே எழுதியவர் ஆவர். மெய்கண்ட நூல்கள் பதினுன்கனுள் இருபாஇருபஃதிற்கு உரையும் இவர் எழுதியுள்ளார்.

"எண்ணும் அருள்நூல் எளிதின் அறிவாருக்கு
உண்மை நெறிவிளக்கம் ஓதினுன் - வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனுர் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவ நாதன்.

இருபா இருபது உரையெழுதி ஞேன்முன்
ஒருவா விகற்பம் உணர்ந்தோன் - அருள்உடம்பாம்
பண்புடைய சிற்றம் பலநாடி தாள்பணிவோன்
சண்பைநகர்த் தத்துவ நாதன்."

எனவரும் பழம் பாடல்களால் இவ்வுண்மை அறியப்படும் ஆயினும் உண்மைநெறி விளக்கம் உமாபதி சிவத்தால் அருளப் பெற்றது என்ற கருத்தே பழைய மரபு வழிக் கூறப்படுவதாகும். உண்மைநெறி என்பதே நூற்பெயர் என்றும், அதனே அருளியவர் உமாபதிசிவம் என்றும், அதற்கு விளக்கந்தந்தவர் ஸ்ரீகாழித் தத்துவநாதரென்றும் 'எண்ணும் அருள்நூல்' எனத் தொடங்கும் பழம் பாடலில் வரும் உண்மைநெறிவிளக்கம் ஓதினுன் என்பதற்கு இதுவே பொருளென்றும் கூறுவாரும் உளர். 1. சில ஏட்டுச் சுவடிகளில் உமாபதி சிவம் அருளிய நூல்களில் ஏழு நூல்களே இடம் பெற்றுள்ளன. இந்நூல் இல்லேயென்பது. 2. உமாபதிசிவம் அருளிய சிவப்பிரகாசத்துள் கூறப்பெறும் தசகாரியத்திற்கும் இந்நூற்கண் உள்ள தசகாரியத்திற்கும் வேறுபாடு காணப்படுவது. 3. ஸ்ரீகாழிச் சிற்றம்பலநாடிகள் செய்த துகளறு போதத்தின் கருத்து இந்நூற்கண் பெரிதும் அமைந்துள்ளது என்பது. ஆதலின், உண்மைநெறிவிளக்கத்தின் ஆசிரியர் ஸ்ரீகாழித் தத்துவநாதரே எனத் தெளிய முடிகின்றது. இவர்களின் காலத்தை அறுதியிடுதற்குத் திருவண்ணுமலேக் கல்வெட்டும், உமாபதிசிவம் அருளிய சங்கற்ப நிராகரணமும் துணேயாகின்றன.

13. உண்மைநெறி விளக்கம்

இது ஆறு பாடல்களை உடையது. விருத்தப்பாவால் இயன்றது. மிகச்சிறிய நூலாயினும் இதன்கண் பத்துப் பொருள்கள் விளக்கப் பெற்றுள்ளன. அவையாவன,

1. **தத்துவரூபம்** : நிலமுதல் சிவம் ஈருக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் நிலையை அறிவது. 2. **தத்துவதரிசனம்** : மேற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களும் அறிவற்றன என அறிவது. 3. **தத்துவ சுத்தி:** உயிர் இவற்றின் வேருகத் தன்னைக் காண்பது. 4. **ஆன்மரூபம்** : ஆணவம் நீங்கப்பெற்ற நிலையில் இறையருளால் மெய்யுணர்வைத் தன்னறிவில் காண்பது. 5. **ஆன்மசுத்தி** : உயிர் திருவருளில் அடங்கித் தான் என வேறின்றி ஒன்றியிருப்பது. 6. **ஆன்மதரிசனம்** : உயிர் தன்செயலற்று நிற்பது. 7. **சிவரூபம்** : யாண்டும் நீக்கமற நிற்கின்ற பரம்பொருள், அருளையே தனது வடிவாகக் கொண்டு உயிர்களின் ஆணவம் நீங்குதற்கு உலகைத் தோற்றுவிப்பதும் ஒடுக்குவதுமாகிய செயல்களைச் செய்கின்றது. இவையனைத்தும் தன்பொருட்டன்று, உயிரின் பொருட்டேயாம். இவ்வாறு செய்பவனும் சிவபெருமானே யாம் என உயிர் தன் அறிவில் காண்பது. 8. **சிவதரிசனம்:** யான் எனதென்னும் செருக்கறத் திருவருள் உயிரின்கண் பொருந்துதலே திருவடியாகும், பார்க்குமிடமெலாம் சிவமாகத் தோன்றலே முகமாகும், சொல்லிறந்து நின்ற பேரின்பமே திருமுடியாகும் எனத்தெளிந்து இவ்வாறு தோன்றும்பொருளை இடையருது நுகர்ந்து கொண்டிருப்பதன் வாயிலாக உலகியல் உணர்வுகள் தூரச் சிவஞானத்தைப் பெறுவதாகும். 9. **சிவயோகம்** : வையத்துள் வாழுங்கால் எதிர்ப்படும் பொருள் 'யாதாயினும் அதன் உண்மை அறிந்து, அதனைப்பற்றும் உயிரின் இயல்பையும் கண்டு, அவ்வுயிர்க்கு மேலாய அருளையும் அதற்கு மேலாய சிவத்தையும் உணர்ந்து, அவ்வொன்றினையே பற்றி, உலகில் காணும் குற்றம், குணம், உணர்வு, நுகர்வு, முதலிய எல்லாவற்றிற்கும் அதுவே மூலமாதல் கண்டு அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் உணர்ச்சியால் அப்பரம்பொருளோடு ஒன்றுவது. 10. **சிவபோகம்** : சிவபரம்பொருளோடு ஒன்றிய பெரியவர்கள் ஊழ்வினை வயத்தால் கொலை, களவு, கள்ளுண்டல் முதலிய பாதகங்களைச் செய்திடினும், நெறியல்லா நெறிச் செல்லினும், தவறுகளே செயினும் அவற்ருல் அவர் தாக்குருர். காரணம், அவர் தமக்கென ஒரு செயலின்றி இறையுணர்வின் வயமாகி நின்று செய்கின்ருர் ஆதலின். இறைவனும் அவ்வுயிரோடு ஒன்றி உண்ணல், உறங்கல், நடத்தல் முதலிய செயல்களைச் செய்து தன்னுடன் அவர் வேறற நிற்குமாறு செய்துவிடுவன். இந்நுகர்ச்சியை உயிர்பெறுவது சிவபோகமாகும். இந்நூல் இறுதியில் உள்ள வெண்பாவால் இந்நூலைச் செய்தவர் தத்துவநாதர் என அறியலாம்.

உ
சிவமயம்

13. உண்மைநெறி விளக்கம்

தசகாரியம்

தத்துவரூபம், தரிசனம், சுத்தி

மண்முதற் சிவம தீருய் வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவம தீருய் மலஞ்சட மென்றல் காட்சி
மண்முதற் சிவம தீருய் வகையதிற் ருனி லாது
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதலாமே. 1

ஆன்ம ரூபம், தரிசனம், சுத்தி

பாயிரு ணீங்கிஞானந் தனைக்காண்ட லான்ம ரூபம்
நீயுநின் செயலொன் றின்றி நிற்றலே தரிச னந்தான்
போயிவன் தன்மை கெட்டுப் பொருளிற்போயங்குத் தோன்ரு
தாயிடி லான்ம சுத்தி யருணூலின் விதித்த வாறே. 2

சிவரூபம்

எவ்வடி வுகளுந் தானு யெழிற்பரை வடிவ தாகிக்
கௌவிய மலத்தான் மாவைக் கருதியே யொடுக்கியாக்கிப்
பௌவம்விண் டகலப் பண்ணிப் பாரிப்பாஞெருவனென்று
செவ்வையேயுயிரிற் காண்டல் சிவரூபமாகுமன்றே. 3

சிவதரிசனம்

பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகு மென்றிவ்
உண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேருென்றின்றித்
தரைமுதலிற் போகாது தன்னிலைநில் லாது
தற்பரையி னின்றழுந்தா தற்புதமே யாகித்
தெரிவரிய பரமாநந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாச் செப்பு நூலே. 4

திருச்சிற்றம்பலம்

சிவயோகம்

எப்பொருள்வந் துற்றிடினு மப்பொருளைப் பார்த்தங்
 கெய்துமுயிர் தனைக்கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா
மொப்பிலருள் கண்டுசிவத் துண்மை கண்டிங்
 குற்றதெல்லா மதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச்செய் வதுமதுவே நினைப்புமது தானே
 தருமுணர்வும் புசிப்புமது தானே யாகும்
எப்பொருளு மசைவில்லை யெனவந்தப் பொருளோ
 டிசைவதுவே சிவயோக மெனுமிறைவன் மொழியே.5

சிவபோகம்

பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப்
 பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ்
சாதிநெறி தப்பிடினுந் தவறுகள்வந் திடினுந்
 தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கின்
நாதனவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து
 நானுபோ கங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
 பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே. 6

பாயிரம்

எண்ணும் அருள்நூல் எளிதின் அறிவாருக்(கு)
உண்மை நெறிவிளக்கம் ஓதினான் - வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனார் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவநா தன்.

உண்மைநெறி விளக்கம் முற்றிற்று.



உ
சிவமயம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

14. சங்கற்ப நிராகரணம்

சங்கற்பம் - கொள்கை; நிராகரணம் - மறுப்பு. பிறரது கொள்கைகளைக் கூறி மறுத்தலின் இப்பெயர் பெறுவதாயிற்று. பதினுன்கு சாத்திரங்களில் இறுதியில் வைத்து எண்ணப்படுவது. சங்கற்ப நிராகரணம் என்பது. இது சிவஞான சித்தியாரின் பரபக்கத்தின் ஒழிபாக உள்ளது. சிவஞான சித்தியார் பரபக்கத்தில் சிவாகமங்களைப் பொருட்படுத்தாத புறச்சமயங்கள் மட்டுமே எடுத்தோதி மறுக்கப்படுகின்றன. சிவாகமங்களை உரையளவையாகக் கொண்டு அவற்றின் உண்மைப் பொருளை விளங்க அறியாத சமயங்களே அகச்சமயங்கள் எனப்படும். அவை சிவஞான போதத்திலும் சிவஞான சித்தியார் சுபக்கத்திலும் சித்தாந்தத்தை வலியுறுத்தும் முகத்தால் குறிப்பாக மறுக்கப்படுகின்றன. ஆயினும் அவற்றின் கொள்கைகளைப் பிற்காலத்தார் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்னும் கருத்துப்பற்றி உமாபதி சிவனுர் மிக அழகாக அவற்றை எடுத்தோதி மறுக்கின்ருர். இந்நூல் காப்பு, பாயிரம், சங்கற்பம், நிராகரணம் என்பவற்றை உள்ளடக்கிய பதின்மூன்று அகவல்களால் அமைந்துள்ளது.

4413-ம் ஆண்டில் தில்லையில் ஆனித் திருமஞ்சன மகோற்சவம் நடைபெறுகின்றது. அதில் 6-ம் நாளில் தேர் மண்டபத்தில் ஆகமங்களை உணர்ந்த சைவ ஆசிரியர்கள் எண்மர் வீற்றிருக்கின்றனர். மாயாவாதியும் ஒருபக்கத்தில் திருநீறணிந்து இருக்கின்ருர். மெய்கண்ட தேவர் திருவருள் பெற்ற ஆசிரியர் ஒருவரும் இருக்கின்ருர். சைவ ஆசிரியர் எண்மரும் முறையே ஐக்கியவாதமும், பாடாணவாதமும், பேதவாதமும், சங்கிராந்த வாதமும், அவிகாரவாதமும், நிமித்தகாரண பரிணுமவாதமும், சுத்த சைவமும் என்னும் இக்கொள்கைகளைத் தாம்கூறும் முத்தி நிலையில் கொண்டுள்ளவர்கள் அவ்விடத்தில் திருவருளை உணர்ந்து கொள்ளவிரும்பும் ஒருவர் வந்து இறைவன் திருவருள் எத் தன்மைத்து என விஞவுகின்ருர். முதற்கண் விடையளிப்பவர் மாயா வாதியே ஆவர். பரம்பொருள் ஒன்றே உள்ளது அவித்தையினுல் அஃது உலகமாகத் தோன்றுகிறது.

உலகம் மித்தை; இப்பி வெள்ளியாகத் தோன்றுவது போலப் பரம்பொருள் உலகமாகத் தோன்றிப் பிறப்பு, இறப்பு, விழிப்பு, உறக்கம், இன்பம், துன்பம் என்பவை உலகத்தில் இருப்பவை

போலத் தோன்றுகின்றன. இத்தோற்றம் அவித்தையால் உண்டாவது. அவித்தை நீங்கித் தத்துவமசி (அது நீ ஆகிருய்) என்னும் வேதாந்த மகாவாக்கியத்தால் நான் பிரம்மம் என்று உணர்ந்தால் உலகிலுள்ள துன்பங்கள் எல்லாம் கனவில் காணும் துன்பம் போலவும் இருட்டில் பாம்பாகத் தோன்றிய கயிறு பின் கயிருகத் தோன்றுவது போலவும் மறைந்து எல்லாம் பிரம்மமே என்பது விளங்கி அச்சமும் துன்பமும் நீங்கிப் பேரின்பம் உளதாகும். இங்ஙனம் பரம்பொருளாகிய ஒருவன் தன்னைத்தானுகவே உணர்ந்து கொள்ளுதல் தான் முத்திநிலை ஆகும் எனக் கூறுகிருர்.

பக்கத்தில் இருந்த ஐக்கியவாத சைவர் இதனை மறுக்கின்ருர். வேதம் பொருள் ஒன்றே என்று மட்டும் சொல்லவில்லை. பசு பாசங்களின் உண்மையினையும் அது கூறுகிறது. சுயம்புவாகிய முதல்வனுல் செய்யப்பட்டமையால் வேதம் சுயம்பு எனப்படும். கடவுள் நூலைத்தனக்காகச் செய்து கொண்டிருக்கமாட்டார். அறியாமையை உடைய உயிர்கள் பொருட்டுத்தான் உயர்ந்த நூலை இறைவன் அருளியிருக்கின்ருர். ஒருவன் தலைநோய் என்று சொல்லி மருந்து கேட்டால் உனக்கு நோயே இல்லை என்று சொல்லி அவனை அனுப்புவதுபோல மாயாவாதியின் கூற்று உள்ளது என மாயாவாதியின் சங்கற்பத்தை மறுத்துத் தம் கொள்கையைக் கூறுகின்ருர். அவர் கொள்கைப்படி கடவுள் இருக்கிருர். உயிர்கள் பல உள்ளன. உயிர்களுக்குத் தனுகரணபுவனபோகங்களைக் கொடுக்கும் மாயை உள்ளது. அவை செய்யும் இருவினைகளும் உள்ளன. இருவினைகளுக்கு ஏற்றபடி உயிர்களுக்கு முதல்வன் உடம்பு முதலியவற்றைக் கொடுத்து இன்பத்துன்பங்களை நுகரவைப்பன். இதுவே பிறப்புநிலை. ஒரு காலத்தில் இருவினை ஒப்பு உண்டாகும். அப்போது இறைவன் ஆசிரியனுக வந்து உயிர்க்கு ஞானத்தை உணர்த்துவான். மேகத்தால் மறைந்திருந்த சூரியன் காற்ருல் மேகம் விலகும் போது ஒளிவிடுவது போல, ஆன்மா ஞானத்தினுல் மாயை கர்மங்களின் நீங்கித் தூய ஞானவடிவேயாகி நீரும் நீரும் கலந்தாற்போல முதல்வனேடு ஏகம் ஆகும். இதுவே முத்திநிலை என்ருர்.

இதனைக்கேட்ட பாடாணவாத சைவர் அவரை மறுக்கின்ருர். இருவினையின்றி உடம்புவாராது. உடம்பு இன்றி இருவினை வரமாட்டா. இவையிரண்டும் சுத்தமாக இருக்கின்ற ஆன்மாவிற்கு எப்படிச் சேர்ந்தன? ஆதலினுல் ஆன்மா அநாதியே மலத்தால் மறைக்கப்பட்ட அசுத்தன் எனக் கொள்ளவேண்டும். ஆன்மா எப்பொழுதும் அறிவுடையதானுல் உறக்கத்தில் ஏன் ஒருவனுக்கு அறிவில்லை என்பதை விளக்கவேண்டும். உறங்குவோன் பக்கத்தில்

பாம்பு சென்ருல் அவன் அஞ்சுவதில்லை நவமணி குவியல் இருந்தால் அதனை எடுத்துக் கொள்வதும் இல்லை. நனவில் அவ்விரண்டில், ஒன்றை அஞ்சியும் மற்றொன்றை விரும்பியும் செயற்படுதலைக் காண்கின்ருேம். இதற்கு உறக்கத்தில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை தொழிற்படாமையினுல் அறிவு விளங்கவில்லை எனக் கூறலாகும். சுத்த அறிவாகிய உயிர்க்கு இவற்றின் உதவி ஏன் வேண்டப்படுகிறது.

இனி நனவு பற்றியே ஆராய்வோம். ஒருவன் தன்னிடம் பொன்மோதிரத்தைக் கொடுத்துவைத்தான். அதனைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லும்போது அதனை யார் கொடுத்தது என்பதில் தெளிவு வரவில்லை. அம்மோதிரத்தைத் தன்னிடமே வைத்துக் கொள்கிருன். பின் கொடுத்தவனே வந்து கேட்கிருன். அப்போது அவனைத் தெளிந்து மோதிரத்தைக் கொடுத்துவிடுகிருன். முன்னே தெளியாமைக்குக் காரணம் யாது? என வினுவினுல் அறிவின்மை தான் என ஐக்கியவாதி சொல்லக்கூடும். ஆனுல் உயர்ந்த பெரியோர்கள் இவ்வாறு நனவிலும், உறக்கத்திலும் ஒருவனது அறிவை மறைத்து நிற்பது மூலமலம் எனப்படும் ஆணவம் என உரைப்பர். இவ்வாணவத்தால்தான் எல்லாத் துன்பமும் வருகிறது. ஆதலினுல் முதல்வன் திருவருளால் மாயை கன்மங்களின் நீங்கி உறக்கத்தில் நிற்கும் நிலைபோல முடிவில் கல்போல் கிடப்பதே முத்தி எனப் பாடாணவாத சைவர் கூறி முடித்தனர்.

இக்கொள்கையை அடுத்துள்ள பேதவாதி மறுக்கின்ருர். இரண்டு கண்ணும் இல்லாதவனுக்கு கண்ணின்மையே துன்பமாவது. அவன் உறங்கிவிட்டால் துன்பம் நீங்கிவிடும் என்பதுபோல உள்ளது பாடாணவாதி கூறும் பரிகாரம். கண் ஒளியைக் கொடுப்பதுபோல இறைவன் ஆணவமல நீக்கத்தை உண்டு பண்ணுதல் வேண்டும். செம்பிலுள்ள களிம்பு குளிகை என்னும் மணிபடும் போது நீங்குதலால் செம்பு பொன்னுக மாறும். அதுபோல முதல்வன் திருவருளைப் பெறும் உயிர் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்றினின்றும் நீங்கிச் சிவத்தைப் போல இருப்பதே முத்தி என்றனர் பேதவாதி.

இந்நிலையில் சிவசமவாதி குறுக்கிடுகின்ருர். வேதாகமங்களில் பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அனுதி என முப்பொருளும் உள்ளன எனக் கூறப்படுகின்றது. ஆதலினுல் உயிர் சிவமாக வேதிக்கப்படும் என்பது பொருந்தாது. முத்தி நிலையில் மலத்தின் நீங்கிய உயிர் தன் அறிவிச்சை செயல்கள் சிவத்தின் அறிவிச்சை செயல்கள் போல விளங்கி முதல்வனது ஐந்தொழிலும்

செய்வதாக இருக்கும். இது குளவியால் எடுக்கப்படும் புழு குளவியாதல் போன்றது எனக் கூறினர்.

இக்கருத்தைச் சங்கிராந்தவாதி மறுத்துரைக்கின்ருர். நெருப்பு ஒரு பொருளில் தங்கித்தான் தன் செயலைச் செய்யும். அதுபோலத் திருஞானசம்பந்தர் முதலிய அருளாசிரியர்கள்பால் நிகழ்ந்த செயல் எல்லாம் முதல்வன் செயலே ஆகும். காய்ச்சப்பட்ட இரும்பு சுடுமேயாளுல் அச்சூடு நெருப்பிற்குரியதே அன்றி இரும்பிற்குரியதன்று. நம்பியாரூரரும், கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே என இறைவனை வேண்டினுரே தவிரத் தாமே முதலையினையும் பிள்ளையினையும் படைக்கவில்லை. நீரில் நெருப்பு கலக்குமேயானுல் அது ஒரு பொருளை எரிக்காது. ஆழ அமுக்கி முகக்கினும் நாழி முகவாது நானாழி, ஊமையைப் பேய்பிடித்தால் அப்பேய் பேசாது. ஆதலினுல் இறைவனது ஆவேசம் பற்றி உயிர் இறைவன் செய்யும் செயல்களைச் செய்யும் எனல் பொருந்தாது. வேதங்களிலும் பேரின்ப நுகர்ச்சி அளவில்தான் முதல்வனுக்கும் உயிர்க்கும் சமத்துவம் சொல்லப்படுகிறது. ஆதலினுல், முத்தியின் இயல்பைப் பின்வருமாறு கொள்ளுதல் வேண்டும். உப்பளத்திற்பட்ட புல்லும் வைக்கோலும் உப்பே ஆமாறு போல உயிர் முத்தி நிலையில் சிவனது எண்குணங்களும் கலந்து சிவானந்த இன்பத்தை அனுபவிக்கும் எனக்கொள்ளுதல் வேண்டும் எனக் கூறினர்.

அடுத்த இருந்த ஈசுவர அவிகாரவாத சைவர் இக்கொள்கையை மறுக்கிருர். உயிரின் கரணங்கள் சிவகரணம் ஆக வேண்டுவது இல்லை. முதல்வனை அனுபவித்தற்கண் கருவிகள் வேண்டுவதில்லை. மன்மதனை எரித்த போதும் திருஞானசம்பந்தரைப் பழித்த புத்தன் தலையை வீழச்செய்த போதும் இறைவனோ சம்பந்த சரணுலயரோ எக்கருவியினையும் பயன்படுத்தவில்லை. வெய்யிலில் வருகின்ற ஒருவன் குளிர்ந்த நிழலை அடையும் போது நிழலின் இன்பத்தை அவன் நுகர்கின்ருன். அதுபோல இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவனுய் யாதொரு விகாரமும் இன்றியே இருப்ப உயிர் அவன் அருளை எய்தி இன்புறும் என்பதே பொருத்தம் என்ருர்.

அப்பொழுது நிமித்தகாரண பரிணுமவாதி எனப்படும் சிவாத்துவித சைவர் குறுக்கிடுகிருர். வெயிலில் இருக்கின் ஒருவனே மரம்வா என்று அழையாத, அவன் எதிரே போயும் நில்லாது, ஆதலினுல் உயிருக்கே முதன்மை கொடுத்து முதல்வனைச் செயலற்றவனுக ஆக்கும் அவிகாரவாதம் பொருந்தாது. உண்மையில் பதிபசு பாசங்களுக்கு அகப்பேதம் இருப்பினும் புறப்பேதம் கிடையாது. உலகம் சத்திமயம், நுகர்பொருளெல்லாம் சத்தியாகவும்

நுகர்வோனைச் சிவனுகவும் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு சுருதிகள் முழங்குகின்றன. ஆதலினுல் வேதாகமங்களில் கூறியபடி சிவோகம்பாவனையால் சிவத்தைத் தலைப்படுகின்றவன் சிவமே யாவான் என முடித்தனர். இக்கருத்தைச் சுத்தசைவர் மறுக்கின்ருர்.

முதல்வன் பொருட்டன்மையால் பசுபாசுங்களின் வேறு ஆயினும், அவற்ருேடு கலந்து ஒன்ருய் அவற்றைச் செலுத்துபவனுய் உளன். ஆதலினுல் முத்தி நிலையில் ஆன்மா சிவமே ஆகும் எனல் பொருந்தாது. முத்திநிலையில் மும்மலமும் நீங்கித் தன்னை உணரும் உணர்வைச் சிவன் அளித்தலால், அச்சிவ ஞானத்தால் தன்னையும் கண்டு சிவத்தையும் கண்டு சிவமே தாருய், தானே சிவமாய் ஒன்ருேடு ஒன்று கலந்து அதனுற் பெறும் பயன் என்பது உணர்வு என்பதும் இன்றி நிற்பதே முத்திநிலை என முடித்தனர்.

இதனை மெய்கண்ட சிவத்தின் அருள்பெற்ற மாணவர் மறுக்கின்ருர். இறுதியாக முத்தியில் இன்பம் இல்லை எனவும் உணர்வில்லை எனவும் கூறுதல் பொருந்தாது மேலும் அதன் நிலையைத் தெளிந்து கொள்ள விரும்பின் எம்மாற் செய்யப்பெற்ற சிவப்பிரகாசம் என்னும் நூலைத் திருவருள் சார்பாகத் தலைநின்று ஆய்ந்து உணர்ந்தால் எல்லாம் இனிது விளங்கும் எனக்கூறி முடிக்கின்ருர். சிவப்பிரகாசத்தில் முத்திநிலையில் ஆன்மாவுக்கு உணர்வு உண்டு என்பதனை ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு உவமை ஆணவத்தோடு ஒன்றே என்னும் பாட்டுத் தெரிவிக்கின்றது.

உலகத்தில் இன்பம் என்பது புறப்பொருள்களைப் பற்றிவந்த புத்தி தத்துவத்தின் பரிணுமத்தான் ஆகிய சத்துவ குணத்தின் விளக்கமே ஆகும். அக்குணம் ஆன்மாவின் வேருகிய மூலப்பகுதியின்கண்ணது. அஃது ஆன்மாவின் மாட்டு மேற்பட்டு விளங்குதலே உலக இன்பம் ஆகும். அதனை ஆன்மா அதுவாய் அழுந்திநின்று அறிதலே அனுபவம் அல்லது உலக போகம் எனப்படும். அதுபோல, ஆன்மாவின் வேருய்ச் சிவன்கண்ணே உள்ளனவாகிய முற்றுணர்தல் முதலிய எண்வகைக் குணங்களும் ஆன்மாவின் மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவானந்த இன்பம், ஆன்மா அவ்விளக்கத்தை அறிதலே சிவானுபவம் எனப்படும் என்றிங்ஙனம் உணர்வதே சுத்தாத்துவித சித்தாந்த முத்தியின் இயல்பு ஆகும்.

சங்கற்பம் என்பது நினைவு அல்லது கருத்து எனப் பொருள்படும். இங்கு அச்சொல் அவ்வச்சமயிகள் பிறப்பு, வீடு என்பவற்றைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்து அல்லது கொள்கையைக் குறிக்கின்றது. நிராகரணம் என்பது மறுத்துத் தள்ளுதல் முடிவாகப் பெறுதற்கு உரிய உயர் நலத்தையும் அதற்கு

திருச்சிற்றம்பலம்

உரிய சாதனத்தையும் ஒருவன் தெளிய உணர்ந்தால் அல்லது தக்க சாதனத்தைக் கடைப்பிடித்தலும் அதுபற்றி அவ்வுயர் நலத்தைப் பெறுதலும் கூடாது. ஆதலினல் வேற்றுச் சமயத்தவர்கள் கூறும்கொள்கைகளை நிராகரிப்பது சற்குரவர்களது கடமை ஆகின்றது.

இந்நூலில் மாயாவாதம், ஐக்கியவாதம் என்னும் இரண்டும் புறச்சமயங்களே ஆகும். ஏனைய ஏழுமே அகச்சமயம் எனப்படும். அவற்றுள் பாடாணவாதமும், பேதவாதமும் தம்முள் வேற்றுமை சிறிதே உடையவை. ஆதலால் அவையிரண்டையும் ஒன்ருக எண்ணி சுத்த சைவம் ஈருக உள்ள ஐந்தையும் கூட்டி அகச்சமயம் ஆறு என்பது ஒருமரபு. இம்மரபு பற்றிச் சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரம் நான்காம் அதிகரணம் முதற்பாட்டில்,

> *"மெய்தரு சைவ மாதி யிருமூன்றும் வித்தையாதி*
> *எய்துதத் துவங்கள் ஏயும்."*

எனக் கூறப்பட்டுள்ளது.

இனி, இறுதிக்கண் உள்ள சுத்த சைவத்தைச் சித்தாந்த சைவத்தின்கண் அடக்கிப் பாடாணவாதம் முதலாக நிமித்த காரண பரிணுமவாதம் வரை உள்ள ஆறனையும் அகச் சமயம் என ஆளுதலும் உண்டு. நிமித்தகாரண பரிணுமவாதம் என்பது சிவாத்துவித சைவம் எனவும் கூறப்படும். இக்கருத்துப் பற்றியே சிவப்பிரகாசத்தில் உண்மை அதிகாரத்து இறுதியில்,

> *"நிலவுல காயதாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்*
> *குலவினர் அளவ ளாவாக் கொள்கையை தாகி."*

எனக் கூறியுள்ளனர் உமாபதி சிவனுர்.

மேலும், சங்கற்பநிராகரணத்தின் சிறப்பு எனில், ஆசிரியர் காலத்தைத் தெரிதற்கு இந்நூல் உறுதுணையாகின்றது. சொல்லுதல் எளிது, அரிது அத்தொழிற்புரிவு எனப் புல்லிய பழமொழி புதுக்கினையன்றே எனவரும் அடிகள் சொல்லுதல் யார்க்கும் எளிய என்னும் திருக்குறளின் கருத்தை முகந்து நிற்பதாகும். சுந்தரர் முதலையுண்ட பாலனை அழைத்த வரலாறும், கயிலைபாதி காளத்திபாதி, திருவாசகம், ஞானசம்பந்தர் நாவுக்கரசரின் தேவாரம், காரைக்கால் அம்மையார் அற்புதத்திருவந்தாதி, கருவூர்த்தேவர் திருவிசைப்பா ஆகிய நூல்களின் கருத்துக்களும் நூலில் ஆங்காங்கு எடுத்தாளப் பெற்றுள்ளன. கரணம் தப்பினுல் மரணம், ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழிமுகவாது நானுழி, எனவரும் பழமொழிகளும் இந்நூற்கண் இடம்பெற்றுள்ளன.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

14. சங்கற்ப நிராகரணம்

காப்பு

திருந்திய அருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சு
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந் தேசுறு மெயிரெண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்கதங் கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே. 1

பாயிரம்

பெருங்கட லுதவுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
லருளிய கலைக ளலகில வாலவை
பலபல சமயப் பான்மைத் தன்றே யஃதா
லந்நூற் றன்மை யுன்னிய மாந்தர்
இதுவே பொருளென் றதனிலை யறைதலின்
வேற்றோர் பனுவ லேற்றோர்க் கிசையா
மாறு பாடு கூறுவ ரதனுற்
புறச்சமய யங்கள் சிறப்பில வாகி
யருளின் மாந்தரை வெருளுற மயக்கி
யலகைத் தேரி னிலையிற் றீரும்

திருச்சிற்றம்பலம்

ஈங்கிவை நிற்க நீங்காச் சமய
மூவிரு தகுதி மேவிய தாமும்
ஒன்றோ டொன்று சென்றுறு நிலையி
லாறும் மாறு வீறுடைத் திவற்று
ளெவ்வ மில்லாச் சைவநற் சமயத்
தலகி லாகம நிலவுத லுளவை
கனக மிரணியங் காஞ்சன மீழந்
தனநிதி யாடகந் தமனிய மென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி
யாசா ஞகி வீசிய சமத்துடன்
ஏழஞ் சிருநூ றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த வற்புத ஞனி
யாரும் விழவிற் பொற்றே ராலயத்
தேரு வெண்மர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட வொருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதிதிகழ்
மெய்கண் டவனருள் கைகண் டவர்களி
லொருவ ரொருதலை மருவி யிருப்ப
வஞ்சப் பிறவிக் கஞ்சிவந் தொருவ
னேதிறை யருளென வீதெனு மாயா
வாதியை யயலினர் மறுதலைத் தருடர
மற்றவ ரயலின ரவருரை மறுத்துச்
சொற்றர வயலின ரவருந் தொலைவுற்
றின்னே யெவரு முன்னே கழியுழி
யாங்கய லிருந்த வருளின ரழகிது
நீங்கள்சங் கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு
வாத செற்ப விதண்டையு மேதுவு
மோது நால்வகை யுவமையுந் திகழ்தர
வருள்சேர் மாந்தர் வெருள்சே ராமற்
றற்கமுங் விடயமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே. 2

திருச்சிற்றம்பலம்

நூல்

1. மாயாவாதி சங்கற்பம்

பெத்தத்தியல்பு

நவிற்றிய நிரையி னவித்தையி னுேனுரை
நித்த னறிவன் சுத்த னகண்டித
னிருவி கற்பனிர்த் தத்துவ னிரஞ்சனன்
சொல்வகை யெவையுந் தொடராத் தூய்மணி
வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள்
சத்தா யெவையுந் தாஞு யவித்தை
தொத்தா துயர்ந்த தொல்சுடர் மூவா
வின்ன தன்மைய னேக னநேகன்
கன்னற் பெருஞ்சுவை தன்னிற் பிறவாப்
பெற்றியி னிருந்து பொற்பணி யியல்பினின்
வான்வளி யனனீர் மண்மருந் தன்ன
மான தாது வாறைங் கோசத்
தொகுதி யாக்கைப் பகுதிய தொருபுடை
சுத்தி வெள்ளி யொத்தென மித்தையிற்
ருனென லாகுந் தன்மைத் துலூதையிற்
சின்னூற் றகைமையின் வேற்றுமை மரீஇய
தென்னப் பன்மைய தெனினிலே பழம்பூத்
தோனுர் வயிரந் தருத்தருந் தொன்மையின்
வானு ரந்திரை நுரைதரு வாய்மையிற்
கூடு மசித்தைச் சித்துத வாதெனி
னெற்பதர் பலாலத் திற்பரந் தருமிது
தன்னியல் பென்றும் விளேயாட் டென்றும்
முன்னுள மறைகண் மொழிதலி னுேருநூற்
பன்மணி நிலேயும் பசுப்பா லெனவும்
பலவக னீரி லலர்கதி ரெனவுங்
கூவ லாழி குளஞ்சிறு குழிகால்
வாவி யாவையுங் வருபுன லெனவு
மவ்வவற் றடங்கி யாடியு ணிழலெனத்
தோன்றி யாக்கைநற் காந்தத் திரும்பும்
கனவிற் றீங்குங் கங்குலிற் கயிறும்
புனலிற் ருேன்றும் பேய்த்தேர்ச் செய்தியு
மன்ன துன்பி நன்னிறப் பளிங்கெனப்
பதிஞற் கரணத் தொருமூன் றவத்தை
நாளு நாளு நயந்துறு மிருபயன்
தன்னிற் சாராத் தொன்மைத் தன்மை
தர்ப்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்றே 1

திருச்சிற்றம்பலம்

சீவன்முத்தியியல்பு

இவ்வியற் பந்தப் பௌவம தகல
விண்முத றந்த கொண்மூப் படலத்
திருளற வுதித்த காறக விவேகந்
தன்னிற் றேன்றிச் சாதக மனேத்தையு
மன்னகப் பிரிப்பு மடியிழை வாங்கலும்
போல ஞானம் பொய்யறக் கழீஇத்
தானே தாஞய்த் தன்னிற் றன்னேத்
தானே கண்டு தன்னல முற்று
வசையி றத்துவ மசிபதத் தெளிவா
லகமே பிரம மாயின னெனவறிந்
தசல ஞகிநற் சலம்சல மதியெனக்
கண்டிடும்

பரமுத்தியியல்பு

உடலம் விண்டகல் கடந்து

மங்குலஃ துடைதர வெங்குமாந் தகைத்தே
இவ்வகை யுணர்ந்து செய்தொழி லருத
மடவோர் தாமுங் கடஞ வியற்றுங்
கன்ம காண்டத் தொன்மைப் புரிவாற்
றேற்றிய வித்தை மேற்கடை யரணியி
லெழுந்தெரி யவற்றை விழுங்கிய தென்னத்
தன்ஞெழிந் துள்ள தாஞ யழியு
மந்நிலே யன்றி யழிவறு முத்தி
யேயா தென்றுதன் னியல்பை
மாயா வாதி வகுத்துரைத் தனனே. 3

2. மாயாவாதி சங்கற்ப நிராகரணம்

பிரமாண மறுப்பு :-

வேதம் சுயம்பன்று

உரைதரு பிரம மொன்றெழு முரைக்கண்
வருபிர மாண மறையெனி லருமறை
யொன்றென்ற தன்றி யிருபொரு ளுரைத்த
னன்றன் றபேத நாடிய பொருளேற்
பேதமு மபேதமு மோத வேண்டா
பேத மெனினு மபேத மெனினும்
பேதா பேத மெனினு மமையுநின்
னேயமி லுரையிற் பையவந் துளதாந்

திருச்சிற்றம்பலம்

திகழ்பிர மாண விகழ்வுமுண் டன்றிப்
பெத்தம் பேத முத்தி யபேதமே
லநவத் திதமா மவையிரு திறனு
மினியப் பழமொழி யிரண்டல வொன்றே
யன்றியும் பெத்தம் பேதத் தறைதலு
மொன்றிய முத்தி யபேதத் துரைத்தலும்
பழுதா மித்திறம் பதையா தாய்கமற்
றெழுதா மறையெனு மிப்பிர மாண
மாருரை தானே யாயின தேலுன
தேக மநேக முறுமியம் பாமற்
சத்த ரூபந் தகாதெனில் வானத்
தொத்தொலி யுறழு மெனில்வறி துதியா
தன்றியும் பதமும் பாழியு மனைத்து
மின்றியோ ரொலியா யெழுந்திடு மதனுக்
கறிவில துருவில தறியா தறையா
தன்றியு மவ்வகை யகண்டித மதுவிது
வென்றது குறிப்ப தெவ்வகை யாவு
மொன்றெனு முரையு மொழிந்தனை யன்றே
யருமறை பிரம வுரையெனி லதற்குத்
தந்த தாலு முதனவில் பொறியில
தென்னிலோ ருடற்கண் மன்னிய வலகை
யறைந்தற் றென்ப தார்சொல தமலத்
திறம்பெற் றின்றே செய்தோர் பெயராற்
சுயம்பு வென்றுல கியம்புமென் றறியினித்
தற்கீட் டலைவரைத் தான்றெழு துரைக்குஞ்
சொற்கேற் புரவல னேவ லமைச்சரை
யடிகண் மற்றெங்குடிமுழு தாண்மினென்
றேத்தி யிறைஞ்சிக் காப்பர்க ளென்ருங்
கீச ஞஞ்செயப் பேசின னன்றி
யினையவை பிறரிற் கனவினு மிலனே
தன்னைத் துதிக்குஞ் சொன்னலந் தானுமத்
துறையறி வாணர்க் கறைவதொன் றன்றியுந்
தனக்குத் தானே தன்னலம் பகரா
தசத்துக் குரையா தார்குரை யுயிர்க்கெனி
லுரைபிர மாண மிறைபிர மேய
நீபிர மாதா நின்பிர மிதியென
நால்வகை யுளதுன தேகநன் றன்றே
நற்பிர மாண நிற்பதொன் றன்று
லப்பிர மேயமு மதனியல் பன்றே

திருச்சிற்றம்பலம்

பிரமேய மறுப்பு :-

பிரமம் பிரமேயமன்று

கன்னற் சுவையி லந்நிய மிலதா
லினிமை தோன்ருத் தனிமைத் தென்றனே
யறிவிற் குவமை யசத்தாங் கட்டி
பிறிவித் தொட்டினும் பேறதுரேதே
தற்பர விரிவு பொற்பணி தகுமெனிற்
செய்வோ ரின்றிச் செய்வினை யின்மையிற்
பொன்பணி யாகை தன்பணி யன்றே
செய்வோர் போலச் செயப்படு பொருண்முதற்
செய்வோ ரேயாச் செய்யவும் படுமே
சுத்தி வெள்ளியிற் ரேன்றிற் ருயினுஞ்
சத்துல கேதுந் தாரா தருமெனி
னுலக மித்தையென் ரேரா துரைத்தனே
நிலவுநின் மரபு நினைந்திலை யாங்கொல்
விவகாரத்தில் வேண்டுவது முலகம்
பரமார்த் தத்திற் பகரா மென்னிற்
பரத்துள தேலிவை யும்பர மார்த்தம்
பரத்தில தேலொழி முன்பகர் மாற்ற
மதன்முதல லிதுவென வுதவுக வன்றியும்
விவகரிக் குங்காற் றிகழ்பர மார்த்த
நிலையது தெரியி னிதுநீ நீயேற்
றெறியா தாயி னஃதுந் தெரியா
துரையா ரளவையு மொழிந்தனை யன்றே
யளவை காண்டல் கருத லுரையென
வுளதவை மூன்றின் மொழிவழி நுழையி
னின்பிர மேய மென்ப தெனுங்கொல்

பிரமிதி மறுப்பு

பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாநின்
றற்பர மசித்தைத் தருமா றென்னெனிற்
சிலம்பி நூறரு நலம்போற் ரேன்று
மென்றனை யதுவ தன்றெழி லன்றியு
மொன்றத னியல்புல கோரியல் பன்றெனப்
பலமிலை பழம்பூப் பாதவந் தருநீர்
திரைநுரை திவலை சிலதரு மிவைபோற்

ருனே பலவா மெனநீ சாற்றினை
சத்தசத் தாகவுஞ் சத்தினி லசத்தின்
கொத்துள தாகவுங் கூறின ரிலரால்
வித்திலை கனிநனி விழுதா றருநெறி
சத்தல தொன்று தான்றர வேண்டு
நெற் பதர் பலாலத் திற்குபா தானமென்
காரண மின்றிக் காரியம் பிறவா
பாரிடை யொருபடம் பண்ணவும் படுமே
யந்தமில் பிரம மவித்தைகா ரணமெனத்
தந்தனை யவித்தை தானெய் துறுத
றன்னியல் பென்னில் வன்னிதன் வெம்மையிற்
சத்தின தியல்புஞ் சத்தே யசத்தெனில்
வைத்தத னியல்பெனும் வழக்கொழி யன்றியு
மிருள்பொதி விளக்கென வருமரு விளக்கிற்
கருமை பயந்த பெருகொளி தகுமெனிற்
றன்னியல் பன்றத னுபாதி வசத்தான்
மன்னிய தன்றிமை தான்றனின் மாயா
தொன்று னசுத்த னன்று மன்றே
யாங்கொரு காலத் தோங்கிய தாயி
னந்தமி லவித்தை வந்தணை வதற்கோ
ரேது வேண்டும் புயலியல் பென்னின்வீ
டோத வேண்டா வொழிந்தோ ரினுமுறுங்
களங்கம துறவுறு மவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட் டாயி
னவித்தை யென்பதொன் றன்னியந் தன்னி
லுதிக்கு மென்றமுன் னுரையு மறந்தனை
நுண்ணூற் குடம்பை நுந்துழி போலுட்
படுநெறி யதனுல் விடுநெறி யிலதாற்
தலைமையு மறிவு மிலதென வித்தையை
விடுத்தெடுத் தாணரும் வேற்ரே ரன்றே
யொளிகொ டாமிரங் குளிகைபெற் ருங்கத
னவித்தையை வித்தை தவிர்க்குமென றுரைக்கி
னித்த னறிவன் சுத்தனென் றுரைத்த
வித்தக மென்னீ வித்தையும் வேருென்
றெம்ம ஞேரி லொருவ னின்னிறை
யம்ம சைவந் தவனீ யன்றே

திருச்சிற்றம்பலம்

பிரமாதா மறுப்பு : - பெத்தம்

பன்மணி பசுநற் பாத்திர மெனவு
நன்னூல் பானீர் நற்கதி ரெனவு
முடலையு முணர்வையு முவமித் தனையேற்
றடமணி சரடொடு தாங்கூ டலவே
யுணர்வுணர் வொழியி னுலகுணர் வுறினின்
பாலும் பசுவுஞ் சாலுஞ் சாலக்
கலம்பல வன்றிச் சலம்பல விலதெனக்
காணுந ரின்றி வீணின் விளம்பினை
யாடியு ணிழல்போற் கூடுதல் கூறிற்
றன்னிழல் கொண்டு தற்பணஞ் சலிக்கின்
மன்னிழல் கொண்டுடல் வந்தகன் றிடுமே.
மன்னயக் காந்த மென்னவுடல் பிரம
சன்னிதி யளவிற் சலித்திடு மாயி
னகண்டிதன் சன்னிதி யலதில தெவையு
நடந்திட வேண்டுங் கிடந்திடப் பெருவே
காந்தத் திரும்பு காட்டுநர்ப் பொறிலயஞ்
சேர்ந்திடு நீக்குஞ் செயலதற் கிலதே
கனுத்துயர் கயிற்றர வெனுச்சில தொடுத்தனை
கனவின் பயனு நனவின் பயனும்
வினையின் பயனவை பொய்யென வேண்டா
வுடன்மா ருட்டக் கடனது கருதுக
வுற்ற புற்று மற்றதிற் கயிறு
முடலுங் கூடச் சடமென வறிதி
யறிவு கயிறென் றறியா தன்றே
யச்சம தடைதல் கொச்சமை யுடைத்தே
யின்னுமக் கனவி லிருளுறு கயிற்றிற்
பின்னுநின் பிரமம் பிரமித் திடுமே
துன்னிய வினையிற் செம்மலர்ப் பளிங்கெனத்
தானுந் தகைமை யானுன் மலரென
வொருபய னன்றிப் பலபயன் மரீஇய
திருவினை தருபய னெனநனி வேண்டி
லாண்ட வித்தையு மவித்தைகொ டாக்கையு
மீண்டிரு வினையு மியம்பினை பரத்தைக்
கள்வரைப் பிணிக்குங் காவல ரெனமுய
றெல்வினைத் தொடக்கிற் றேன்றுடற் சிறையிட்
டிருவினை யூட்டு மெம்மா னம்மா
னருவினை யுடற்க ணவத்தைக ளுரைத்தனை
யாருறு பவர்பர மகண்டித மடங்கா

தோர்வில துடல்சட முறுநெறி யாதெனின்
மன்னிய கரண மாருட் டத்திற்
பன்னின மென்னி னிவையோ பரமோ
முதலிய தாயி னிவைபிறழ் வெய்தா
திவையெனி லுனது மொழிபழு துளதே
யுடற்படு பிரம முறுமெனிற் சாளரத்
திடத்தகு முறுவிர னுதியளி யெறிதுய
ரங்குலி தானே யருந்திடி லுடற்கட்
டங்கிய வறிவு தனித்துறு மன்றே
தற்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்ரு
னற்கணிற் றுயர நணுகாத் தகைத்தெனி
னின்மொழி விரோதமுங் காட்சி விரோதத்
தன்மையு முறுமவை தவறில வாகா
யாமுடைப் பதிவகை யாவரும் பலகலை
சொல்லுத லெளிதரி தத்தொழில் புரிவெனப்
புல்லிய பழமொழி புதுக்கினை யன்றே
யகண்டித மெனநீ பகர்ந்தமை தனக்குப்
பந்த மிதுவெனத் தந்தமை கருதில்
வானி னடக்குங் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட வொருவனீ யன்றே

சீவன்முத்தி மறுப்பு

பந்தம தகல வுந்து விவேகம்
வான்வளி யெனத்தனிற் ருனே தோன்றின்
முன்புள தாயின் மயங்கா திலதெனிற்
பின்புள தாகா திலதுள தெனின்வெளி
மலரது தருமனல் மரக்கணின் ருகித்
தருவது தகுமெனிற் ருனே தோன்ரு
விறகி னுதித்த கனறகு மாயி
னவித்தையி னுதித்த வித்தை யம்மரத்
துதித்த விவேகம் வித்தையென் றுரைத்த
வெந்தழ லனைய விவேக முதித்த
திந்தன மனைய திறையிலன் றற்றே
யிற்படப் பிரிப்பின் மெய்ப்படு மெவற்றையு
மிதுவன் றிதுவன் றெனக்கழி காலை
யதுவே தானே யாயின தென்றனை
வித்தை முன்ன ரவித்தையு மவித்தைமுன்
வித்தையு நில்லா வியனெளி யிருளென
விருளல வொளிக்கு மொளியல விருட்கு

மொருகா லத்து மொருபய னிலதா
லிரண்டையு நுகரு முரண்டரு விழியென
வித்தையு மவித்தையு முய்த்ததொன் றுளதே
தானே தானு மானுற் பயனென்
றன்னிற் றன்னைத் தானே காணிற்
கண்ணிற் கண்ணைக் காணவும் படுமே
தன்னல மதனைத் தானே நுகரு
மென்னின் முன்னல மெய்தா திருந்ததென்
கட்டி போலெனக் கதறினை யின்பம்வந்
தொட்டிடும் வித்தை யுடையயா யிடினே
தத்துவ மசியென வைத்தமுப் பதத்திற்
கொன்றே பொருளென் றன்றே பகர்வது
நீபுலி யாயினை யென்றுங் குணரி
லாயினை யென்றது மாகுவ மைத்தா
ஞேயா யினமே லாயா யென்று
லகமே பிரம மாயின தென்றுற்
சகமே யறியத் தான்வே றன்றே
யுண்மையிற் சலமில வுடற்சஞ் சலமுறும்
வெண்மதி போல விளங்கிடு மென்றனை
யசல ஞகிச் சஞ்சல சலத்துச்
சலன மேவின மெனமதி காண
வேண்டும தன்றிக் காண்பவர் பிறரே
லீண்டுன தேக மென்செய்த தியம்புக

பரமுத்தி மறுப்பு

உடல்விடக் கடத்துட் படுவெளி போலெனில்
விட்டென் பெறவுடற் பட்டென் படமெற்
றிகலற வொருவ னிவ்வகை தெளியி
லகிலமு முத்தி யடைந்திட வேண்டு
மறிந்தோர் முத்தி யடைந்தோ ராயின்
பிறிந்தோ ருயிர்பல பேதத் தன்றே

பிரமஞானம் வாரா தென்றது

கன்ம காண்டங் காரண மாக
மன்னும் விவேக மென்னி லவித்தைக்
கேது காரண மோதினை யில்லை
யிதற்குங் காரணம் விதித்தல்வேண் டின்றே
யரணியி லுதித்த கனலவை கவர்வென
விரதத் துதித்த விவேக மழித்தல்

வருந்தி யாயினுந் திருந்திய வேத
நீதி யெல்லா நீத்துப் போதமொன்
றறியார் தாமு மவ்வழி நடத்தல்
பொறியோ போத நெறியோ விதுபவ
நீங்கிடு நெறிதரு பாங்கினைப் பழித்த
னன்றி கொன்ற லன்றே யன்றியு
ஞால நீதியு நான்மறை நீதியும்
பாலருன் மத்தர் பசாசரி லெனவு
முறங்கி னேன்கை வெறும்பாக் கெனவுந்
தானே தவிரா தானுற் புரியா
தொழிந்திடி னிரயத் தழுத்துத றிடமே
யுய்த்தோ னன்றி முத்தி யுரைத்தல்
பித்தோ பிரமஞ் செத்தோ பெறுவ
துடலையு நீயே சடமெனச் சாற்றுனை
வையினும் வாழ்த்தினும் கொய்யினும் கொளுத்தினும்
வணங்கினும் முதைப்பினும் பிணங்குதல் செய்யாப்
பிரமத் தன்மை பெறுவதெக் கால
மிருக்கு நாள்சில வெண்ணினுல் கதறித்
தருக்கம் பேசித் தலைபறி யுற்றுக்
கண்டோ ரீந்த பிண்டமுண் டலறிப்
பன்னுே யாக்கை தன்னுே யுற்றுடல்
விடவரு மென்று நடுநடு நடுங்கி
விட்டோர் தெய்வத் தொட்டின் றன்றியும்
யானே யெவரு மானே னென்றலி
னவ்வவர் சீறி யவ்வவர் வாணுட்
செவ்விதி னிரயஞ் சேர்த்துவ ரதனுல்
மாயா வாதப் பேயா வுனக்குத்
தேவரி லொருவருண் டாக
மேவரு நரகம் விடுத்தலோ வரிதே. 4

ஐக்கியவாதி சங்கற்பம்

பெத்தநிலை

அரிதேர்ந் துணராப் பெரியோ னுரைத்த
பதிபசு பாச விதிமுறை கிளக்கில்
ஈச னேக னெண்ணிலி பசுக்கள்
பாச மிருவகைப் பரிசின துலகத்
தாயவ னுயிர்க்கு மாயையி னருளால்
இருவினைத் தொகையி லுருவினைத் தருமாற்

திருச்சிற்றம்பலம்

கருமுகி லடர விரிதரு கதிர்போன்
றறிவா முயிரிற் பிறியா தேயு
மீட்டு மிருபய னூட்டிடு நியதிக்

முத்தி நிலை

கொருபொழுது திருபயனுகர்வுற மருவுத
லின்மை யாதன் முன்னிய காலைச்
சத்தி நிபாத முற்றிறை யருளா
லுருவுகொ டுலகு தெரிவுற மருவி
மாசுறுந் தூசு தேசுற விளக்குந்
தன்மையி னுணர்த்தும் புன்மைக ணீங்கி
நீரு நீருஞ் சேருஞ் தகைமையி
னறிவினே டறிவு செறிவுறப் பொருந்தி
யொன்று மென்பதை யுலகோர்
நன்று முத்தி யென நவின் றனரே. 5

ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம்

பெத்தநிலை மறுப்பு

முத்தி யென்ப தெவனே சுத்த
வறிவெனிற் பாசஞ் செறியா மாயை
யுருவிரு வினையால் வருமிரு வினையு
முருவா லன்றி மருவா திவற்றின்
முந்திய தேதோ வந்தணை வதற்கோ
ரேது வேண்டுந் தானியல் பென்னின்
வீடுற் றவரினுங் கூடக் கூடு
மீங்கிவை நிற்க நீங்காக் கருவிகள்
கொண்டறி வறியக் கண்டது மன்றி
மருவிய வுருவு துயில்பெறுங் காலைச்
சிறுபொறித் தறுகட் கறையணற் சுடிகைத்
துத்திக் கடுவுட் டுளையெயிற் றுரகக்
கொத்தயல் கிடப்பினுங் குவைதரு நவமணி
யொருபாற் றுதையினும் பெருகார் வத்தினே
டச்சமு மணுகாக் கொச்சமை யென்னே
கருவி யாவும் பிரிவுறு நிலையேற்
பொறிபுல னுதி குறைவற நிறைந்து
காட்சிய தளிக்கு மூட்சியின் முன்னர்க்
கொடுத்தோ ராழி விடுத்தவர் நாடிக்
கொள்வோர்க் காணு துள்கி மீண்டுழித்
தந்தவர் கண்டாங் கந்தமி லதனைத்

தருக வென்னும் பெருமதி பிறக்கும
தறிவி லாமையென் றணையது மலமாக்
குறிகொ ளாள ரறைகுவ ரன்றே

முத்தி நிலை மறுப்பு

அறிவிற் கறிவு செறியவேண் டின்றே
யுண்மையி லிருமையு மொளியே யெனிலொரு
தன்மை யாகமுன் சாற்றின ரிலரே
முன்பு நன்றுட ஞென்றிய காலை
யின்ப மெய்துதற் கிலதுயி ராதலி
னீயலை பொருத மாயா வாதி
யாயினை யமையு மருணிலை கேண்மதி

பாடாணவாதி சங்கற்பம்
பெத்த நிலை

மூல மலத்தாற் சாலு மாயை
கருமத் தளவிற் றருமுரு விறைவன்
செறிந்தி பயனு நுகர்ந்திடு முயிர்க
ளிருளுறு மலத்திற் பருவரற் படுதலி
னிடையிரு நோக்குந் தடைபட் டோரிற்
றுயருறு மதனுற் செயிருறு துன்பம்

முத்த நிலை

கொத்தை மாந்த ருய்த்துறுந் துயில்போற்
காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் தனரே. 6

பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்

வகுத்துரை பெருகத் தொகுத்திடு முத்தி
நன்று நன்றிரு ளொன்றிய மலத்தா
முளத்திற் குறுபொறி செறிபுல னுகர்தல்
விளக்கிற் றிகழு மேன்மைய தன்றே
கருவிக ளகல்வுழி மருவிய துயரமு
நன்றென லாகுந் துன்றிய படலத்
திடைதடைப் பட்ட சுடர்விழி மாந்தர்
படல நீங்குதல் கடனு தலினே
காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் துரைக்கிற்

கரணு பாவ மரணங் கருமர
மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவ ரன்றே
யனைய கதிக்கோர் முனைவரும் வேண்டா
தனிதரு துயர மெனுமிது திடமே
பாடாணத்திற் கூடா முத்தி

பேதவாதி சங்கற்பம்

ஈசன தருளாற் பாசத் தொகுதி
செறிவுறு செம்பிற் களிம்பு
குளிகை தாக்க வொளிபெற் ருங்கு
நித்த சுத்த முத்த ராக
வைத்தன ருலகின் மறைவல் லோரே. 7

பேதவாதி சங்கற்ப நிராகரணம்

மறைக ளாகமத் துறைகண்மற் றெவையு
நாசமில் பதிபசு பாசமென் றுரைத்த
லயர்த்தோர் குளிகைச் சயத்தாற் ரும்பிரக்
காளித நாசம் பாசத் தேய்த்தல்
கூடா தன்றியுங் குளிகை சீருண
நீடா தழித்த நிலைநிலை யாதலிற்
பேத வாத மோதுதல் பிழையே
யின்னு மின்னுயி ரேமங் குளிகை
தன்னி லந்நியந் தருவது திடமே
வீடித் திறத்தினிற் கூடக் கூடா

சிவசமவாதி சங்கற்பம்

பாசமும் பசுவு மீசனு மென்றிம்
மூவகை யுணர்வுந் தான்முதன் மையவாய்ப்
பாச வைம்புலன் றேசுற வுணர்த்தப்
பசுத்தனி ஞானம் புசித்திடு மன்றே
யினைய ஞானம் பிரிவுற வெரியாச்
செந்தழ றகுநெறி யந்தமி லுயிரு
மறிவா யொன்று மறியா தன்றே
யிவ்வா றெழுகு மேனை யுயிர்க்கு
முன்னோன் றனது முதிரொளி ஞான
மறியாப் பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த
வண்டென வுயிரைக் கொண்டிடு முயிரது
தன்னை நோக்கித் தானது வாகி

யைவகைத் தொழிலு மெய்வகை யுணர்வும்
பிரியா வாறு பெற்றுத்
திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந் திடுமே. 8

சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்

பெத்த நிலே மறுப்பு

சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமு
மொருகா லன்றித் தெரிவுற நிற்கி
லொண்பொருள் காணும் பண்பினுக் கொருகாற்
பரிதியு மதியு மெரிதரு விளக்கும்
வேண்ட லின்றே காண்டகு காலே
யொன்ருென் ருக நின்றறி வுறுமெனி
லந்திய மறியாமன்னுயிர் பொறிபுலன்
ருனே வறியா தலேவர்க் குலகினே
யாஞு வறிவா லறிய வேண் டின்றே
கொழுந்தழ றகுமெனி லழுந்திடு மவத்தையிற்
றிரியாத் தலேவர் தெரியாத் தன்மைவந்
தெய்தலாகா மெய்யுறு பொருட்கு
முன்னர்க் கீடந் தன்னென வெடுத்த
வேட்டுவ னியல்பு கூட்டல் பெருதே
வண்டிறும் பெடாவுட் கொண்டது தனக்கு
மந்திர வாதந் தந்தது மிலதே
யெடுத்திடு மதஞு லடுத்ததென் றறையிற்
கருமயிர்க் குட்டி யிருசிறைப் பறவை
யாயின தெடுத்த தாயர்சாற் றிலரே
பிறவிப் பேதத் துறையிவை கிடக்க
வேயு மித்திற ஞயுங் காலே
யோகத் தகுதி யாகத் தகுமே
ஞான மின்மையென் ருேதுவ தெவனெனில்
உயிரு முணர்வும் பயிலுத லின்றி
வேட்டுவ னுருவ மென்புழு வுணர்வு
கூட்டுத லாலுருக் கூடுத லானு
முத்தியி லிறையிற் பற்றுத லின்றித்
தன்னுரு வணேந்த பின்னதை னுணர்வு
மாறுத லானு மூறுடைத் தன்றே
யீசன தியல்பரு ளெய்துயி ரியற்றல்
பேசுத றவறெனப் பெருமறை யறைய
வைந்தொழி லுயிருந் தந்திட றகுமோ

திருச்சிற்றம்பலம்

யாவதென் முன்னு ணுவலர் பெருமான்
பண்டொரு முதலை யுண்டமைந் தனைவர
வழைத்தன னென்றுய் பிழைப்பில தரூஉந்
தந்திட வேண்டு மென்றன ரன்றே
யின்னவை கிடக்க முன்னவன் றன்மை
யெய்தின ரெல்லாச் செய்தியுஞ் செய்வ
ரிரும்பெரி யெய்தித் தருஞ்செய றகவெனிற்
பொருணிலை கிடக்க வொருதிட் டாந்தப்
பேறே யாயிற் சீருக் கதுவிய
புனலொரு புடைசேர் கனறகு மாயினும்
வேறொரு பொருளை நீருக் கிலதே
நெருப்பெனு மிதனி னுருத்தனி காட்டுக
வங்கியு மொன்றிற் றங்கிநின் றல்லது
தன்றொழி னடத்தா தென்றறி யினிநீ
யிரும்பனற் செய்தி தரும்பரி சுளதோ
வதுவெனு ரலகை பொதிதருங் காலை
யதன்செய லனைத்து மிவன்செய லாமா
லவனிவ னாகி லிவனவன் செய்திக்
கென்னவை யென்னிற் பின்னுறு செயலு
மதன்செயலன்றி யிவன்செய லாகி
லிவன்செயல் பேயின் றன்செய லாகி
யிருந்த வாவெனத் தெரிந்திட வேண்டும்
தெரியா தாகிற் புரியிற் கடுங்கன
லெரிந்த தென்னு மிதுதகு மன்றியு
மவனிவ னாகி லிவனவன் செய்தி
யென்று செய்வா னென்றிய மதத்தா
யெல்லா மறிதல் செல்லா துயிர்கள்
சிற்றறி வெனுமிச் சொற்றவ ருகு
மென்பதெ னலகை தன்பத மடைந்தோர்
கொண்ட வாறு கண்டன மென்னின்
மூங்கை யந்தருற் றேங்கிய குணங்குறி
செய்வதெ னின்னும் பௌவமுற் றழுந்தினு
நாழி கொள்ளா தாழியி னலைபுன
நானுழி என்னுஞ் செய்யுள்
லதனுற் கருத்து முதலுள தாக
வேண்டு மன்றே யீண்டினி யமையு
மெல்லா மெனுமிச் சொல்லாற் படும்பொரு
ளனைத்துந் தாக்காத் தனிப்பரத் துற்றவர்க்
கெவ்வகை யுணர்வு செய்வதென் செப்புக

திருச்சிற்றம்பலம்

வொன்றி ஞென்ரு மொன்ரு துலகி
னின்ற போதுயிர் நேரா மன்றே
முத்தி யுற்ற நற்றவ ரவையிடைச்
சேர்வ ரென்றனை சார்தரு முத்தி
சாலோக் கியமோ சாயுச் சியமெனிற்
பந்த முற்ற கந்தல கழித்த
வறிவினே டறிவு பிறியாப் பெற்றி
வேண்டு மென்றதற் கீண்டிவ ரிவ்வா
றிருப்ப ரென்பதற் குருத்தான் வேண்டு
மண்ணல தருளி னண்ணி யிருப்பினுஞ்
சீவன் முத்தரென் ருேதின ரகன்று
நீங்கியு முருவ நீங்கா தாயி
ஞேங்கிய முத்தி யாவதென் னுரைக்க
செடியுட லணுகாக் குடிலை கொடுக்குமென்
ருேதினை நீயே பேதாய் பகட்டுர
லொளிர்சினை முச்சித் தளிரெனு மிதுதகு
மிச்சா ரூப நச்சின ரென்னின்
மும்மலத் தேது மின்மைய தன்றே
யிதுவளர் முத்திப் பதமென வியம்புவ
ரீங்கிவை நிற்க

சங்கிராந்தவாதி சங்கற்பம்

நீங்கா தொளிருயிர்
விளக்கென நிற்கு மளப்புறு மறிவின்
றிறைவர்க் கேது மறியவேண்டின்றே
மன்னு மான்ம சந்நிதி யளவிற்
காந்த பசாசத் தேய்ப்ப வாய்ந்த
வுயிருட லியக்குஞ் செயலுறு பூட்டைப்
பலவகை யுறுப்பு மிலகிய தொழில்போ
லைம்பொறி புலன்க ளின்புறு மன்றே
யினைய வாய்தலி னிகழ்தரு பயனவை
யந்தக் கரண முந்தி யுணர்ந்திடு
மிவையகல் வுழியைம் பொறிபுல னிகழா
வுயிர்நீங் கிடிலுடல் செயலில தன்றே
யிவ்வகை வினையின் செவ்விதி நடத்தும்
பழமல நீங்க நிகழும் காலை
யேற்ருேர் முகவொளி தோற்றுங் கலனெனத்
தலைவன தருளுயிர் நிலவிடு நிலவக்
காட்டத் தங்கி மாட்டத் தங்கிய

திருச்சிற்றம்பலம்

தன்மையு மளத்துப் புல்வையி னீப்பும்
போன்றது வாகித் தோன்றிடி மதனுற்
பசுகர ணங்கள் சிவகர ணங்க
ளாக மாறி யறிவு
மேக மாமுயி ரியானென தின்றே. 9

சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்

இன்றுன துரையி னன்றி யுயிரொளிர்
தீபம் போலத் தாபந் தரினிருள்
செறியுந் தன்மையெ னறிவில தாகி
லொளியென வுரைத்த தெளிவதற் கேதாஞ்
சந்நிதி யளவின் மன்னுஞ் செயலுடல்
காந்தம் போல வாய்ந்த தென்ற
தன்மையு முணராப் புன்மைய தன்றே
யுயிருட லியக்கிற் றுயில்பெறுங் காலைச்
செய்ததென் மனுதி யெய்துயிர் பொறிபுல
னடத்த வாவியுஞ் சடத்தன வாயிற்
பூட்டையிற் பூணி கூட்டல் பெருதே
புலனும் பொறியி னிலவிடு மென்றனே
யஞ்சு மொருகாற் றுஞ்சா தறிதற்
கழிவென் றருச்செழு மலரிலை யொடுபலங்
கனிதரு வதுபோ லினையவை யைந்து
மொன்ருென் ருக நின்றறி வுறுமெனி
லொன்றின் பயனளி யொன்றறி யாதா
லிதுவே யல்லது கதுமென விருசெவி
யிருகூற் றெருகாற் றெரியாத் தன்மைவந்
தெய்து மனுதியு மெய்யுயிர்ச் செயலுந்
தனக்கில தொருவற் கெனத்தெளி கிலையே
நோக்கு முகவொளி நீக்கா தானெனக்
கவருந் தன்மை முகுரம் போலக்
கொடுத்தது கோடற் கடுத்து துண் டன்றே
காட்டத் தங்கி கூட்டக் கூடு
மிந்தனத் தியற்கை வெந்தழ ருங்கா
வுப்பளத் தடுத்த புற்பலா லங்கள்
சடத்த வேனுங் கொடுத்தது கொள்ளுந்
தன்மை யுண்டுனக் கின்மைய தன்றே
யவமுறு கருவி சிவமய மாமெனக்
கூறினை யாகம் வேறுருக் கவரா
தென்பதே னவைமுற் றுன்பந் துடைக்குந்

திருவருண் மருவ வுரியன வென்னி
லருளுரு மாயா விருளின தாங்கொல்
சத்த பரிச ரூப ரசநறை
யெத்திறத் தினதரு ளியம்புக வன்றியு
நிறைந்து நீயாய் நின்றனை யேனு
மறைந்தைம் புலனுய் வாரா யென்றுங்
கரண மெல்லங் கடந்தனை யென்றும்
மரணமை யைந்தி னப்புறத் தென்றும்
முன்னருட் டலைவர் பன்னின ரெனவு
மினையவை யொழிய வறிகுவ தெவ்வா
றென்ற நிற்கலிக் கொன்றிய வின்பங்
கூறுத றகுமருட் பேறினை யன்றே
யேக முயிரறி வாக மொழிந்தனை
யிருபொரு ளொருமை மருவிய திலதே
யிவ்வகை கிடக்க மெய்வகை கேண்மதி

ஈசுவர வவிகாரவாதி சங்கற்பம்

பஃறுளைக் குடத்தி னுள்விளக் கேய்ப்ப
வறிவுள தாகு முருவுறு முயிர்கள்
கண்ணு லோசையுங் கந்தமுங் கருத
வொண்ணு தென்னு முணர்வுடை மையினு
லவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகள்
செவ்விதி னிறுவிச் சேர்ந்தவை நுகரு
மூல மலத்தின் பாகம்வந் துதவுழீஇ
யிருடரு மிற்புக் கொருபொருள் கவரத்
தீபம் வேண்டு மானவா போல
மோக மாமலம் போக ஞான
விளக்கர னருளாற் றுளக்கறப் பொருந்தி
நீர்நிழ லனைய சீர்பெறு கடவுளைச்
சலமில ஞகிச் சார்ந்தவர்க் கென்று
நலமிக நல்கு நாதனை யணைந்து
பூழி வெம்மை பொருந்தா துயர்ந்த
நீழல் வாழு நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுரு துயரங் களைந்திருந் திடுமே. 10

ஈசுவர வவிகாரவாதி சங்கற்ப நிராகரணம்

இருந்ததுன் கேள்வி திருந்திடு முயிர்க
ளறிவெனில் வாயிற் பொறிபுல னென்னை

திருச்சிற்றம்பலம்

மற்றவை பற்றி யுற்றறிந் திடுதலி
னறிவென வழங்கு முயிரென வுரைத்தல்
காணுங் கண்ணினன் கைகொடு தடவிப்
பூணும் பொருளின் பெயர்பல புகற
லென்னுங் கிளவி தன்னொடு தகுமே
யவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகளைச்
செவ்விதி னிருவலி னறிவெனச் செப்பினை
யறிவி லாமைகண் டனமனை புலற்குப்
பொறிக ளேவலி னறிவொடு பொருந்திற்
கண்டதோர் பொறியாற் கொண்டிட வேண்டு
முதவிய தொன்றுற் கதுமென வியற்றின
ருண்டோ வென்னிற் கண்டன மேனுட்
கடவுளிற் கடிமலர் முடுகிய மதன
னங்க மனங்கந் தங்கிடக் கிடந்தது
வையின் றிரளிற் செய்ய சிறுபொறி
மாட்டி மூட்டின தன்றே மீட்டுந்
தேனமர் தவிசி ஞன்முக னுச்சி
யறுத்ததுங் கருவி பொறுத்தோ வன்றே
யீசன தியல்பு பேசுத றவிர்க
காழி மாநகர்க் கவுணியர் கடவுண்
ஞான மாகிய நற்பதி கங்க
ளெழுதுறு மன்பர்த மின்புறு மொழியாற்
களிறென வணைந்த கன்மப் புத்தன்
முருட்டுச் சிரமொன் றுருட்டின ரன்றி
வாய்ந்த வாளொன் றேந்தின ரிலரே
யென்றது மீர்வாள் கொன்றதென் பதுபோற்
றனித்துணை யருளாற் றுணித்தன ரென்ப
வாதலின் வாயி லளவினி லறிதலி
லேதமி லறிவுயிர்க் கெய்துத லிலதே
யிருட்கு விளக்கொன் றேந்தினர் போல
மருட்கு ஞான மன்னுத லுளதே
யென்றனை கருவிக ளியாவு மசேதனந்
துன்றிய வுயிருந் துரியத் தன்மைய
ஞதலி னந்த ரனைவருங் கூடித்
தீதற வருநெறி தெரியுமென் றற்றே
நீர்நிழ லனைய சீர்பெறு கடவுளைச்
சேர்ந்தவர்க் கின்பம் வாய்ந்திடு மென்றனை
பாதவ மென்றுஞ் சேதன மின்மையின்
இளைத்தோர் வம்மி னென்பதுந் துன்பம்

விளைத்தோர் தம்மில் வெறுப்புமொன் றிலதே
பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியி னுள்ளுற வழுங்கி
யாற்றுத லின்றி யாறியங் கினர்முன்
ரேற்றிடு மென்று சொல்லவு மிலதா
லிவ்வகை கடவுட் கியம்புதல் தவறே
பாச ஞானப் பழிவழி யொழிக
வீசன தருள்வழி யியம்புவன் கேண்மதி

நிமித்த காரண பரிணமவாதி சங்கற்பம்

புவன மியாவையும் புனிதன துருவாஞ்
சிவமுஞ் சத்தியு மெனத்தெளி யவற்று
ளசேதன மென்றுரன் றறைதற் கிலதது
சேதந னுகர்பொழு திரண்டுமோர் திறத்தே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையி னிற்கும் போதமென் றறிக
பொற்பணி பேதம் புரைவழி யொருவழி
நற்பொனிற் றிகழ்வென நயப்பதொன் றன்று
லாவது மாகா தொழிவது மெனுமிப்
பாவக முண்மை பாரா தோர்க்கே
பாரா தோரெனப் பல்லுயிர் பகர்தலி
ஞராய்ந் துரைக்கி னவைபிற வல்ல
பலபல பேத மிலவென் போருமில்
கண்ணின தொளியைக் கண்ணின தெனிலது
திண்ணிய விருளிற் செறிபொரு டெரித்தலு
மின்மை மின்மினி யெனவிரு கண்மணித்
தன்மை தானுந் தாவில ததனூற்
கண்ணின துருவு மதிற்கதி ரொளியும்
நண்ணருஞ் சத்தி சத்தர்க ணடிப்பே
யுலகே ழெனத்திசை பத்தென வொருவன்
பலவாய் நின்ற படியிது வென்றும்
ஊனு யுயிரா யுணர்வா யென்றும்
மானக் கண்ணே மணியே யென்றுந்
தாமே தாமாய்ச் செய்தன ரென்றும்
நாமே சிவமாய் நண்ணின மென்றுங்
காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வு
மோயா துண்போன் றுனே யென்றும்
அறிவோன் றுனு மறிவிப் போனும்
அறிவா யறிகின் றேனு மறிவுறு

திருச்சிற்றம்பலம்

மெய்பொரு டானும் வியந்திது வெனப்படு
மப்பொரு ளியாவு மவனே யென்றுந்
தாய்தலைப் பட்டங் கொன்ருய்த் தென்றும்
ஏதம தறநான் கெட்டே னென்றும்
மின்னு மின்னு மிறையோ னளித்தவை
பன்னி லென்னரும் பான்மைத் தாதலிற்
றருபொருள் கொள்பொரு டருவோன் கொள்வோன்
ஒருபொரு ளிவ்விய லுவப்பென வுணர்க
நுகர்பொருள் சத்தி நுகர்வோன் சத்தனென்
றிகலறு முணர்வுவந் தெய்துத லரிதே
நானவ நெனுமிது நவைவழி நல்வழி
தானவ ளுகை யிதுசா யுச்சிய
மித்திறன் றெளிய வுய்த்திடு மளவு
மியாதொரு வகையி னீதிய தாகத்
தானறி வழியே தலைநின் றென்று
மூனுயிர் சிவத்தி லொடுங்கிட நடத்தி
மூடு முழுமலம் வீடுங் காலைக்
கருவிக ளளவிற் புரிதரு மறிவு
சாக்கிரங் கனவு நீக்கமில் சுழுனை
துரிய மென்றவை பயிறரு மறிவு
துரியா தீதந் திரியாத் தன்மையி
லிறையரு ளுதவுங் கறையற மாறி
யறிவே யாகும் பிறியாக் கருவிக
ணிறைமுத லவத்தையி லறிவில தாகத்
துரியா தீதத் தோற்றந்
திரியா ததுநற் சிவகதித் திறனே. 11

நிமித்தகாரண பரிணமவாதி சங்கற்ப நிராகரணம்

திறம் பெற நீயிங் கறைந்தமை கருதிற்
புவன மியாவையும் புனிதன துருவெனி
லவன்முதற் காரண மன்ரு மென்னி
நிமித்த காரண நிகழ்த்துக வெனநீ
யவனே காரண மனைத்துமென் றறைந்தனை
மண்டனிக் குலாலன் றண்டசக்க ராதி
காரண மூன்று மோர்பே ரணைந்ததித்
தாரணி யதனிற் கண்டது சாற்றுக
வத்த னியற்று மித்தொழில் பிறர்க்கோ
தனக்கோ வீணே வெனக்கீ தியம்புக

திருச்சிற்றம்பலம்

வீணெனிற் பித்தர் மாண்பறுந் தொழில்போற்
றலைமையு மறிவு மிலதென விகழ்வர்
தனக்கெனி லஃதுமு நிற்பதொன் றன்றே
தன்போ லறிஞருந் தலைவரு மிலரான்
மின்போ னிலைமையை வேண்டலும் பழுதே
பிறர்கெனிற் பிறரும் பிறர்க்காம் பொருளும்
பொருட்கமை கருவியு மதற்குபா தானமுஞ்
செய்கையு மென்றூ ரைவகைத் தானொடு
மாறுச் சைவர் கூறு ரென்று
னின்சித் தாந்த மவசித் தாந்த
மென்சித் தான்ற வசித்தைமற் றீறு
தசித்தில தென்னி லசித்ததென் னுலகி
லுலகா யதனும் பூதக் கூட்டஞ்
சலமேற் கொப்புட் டகுமெனச் சாற்றினன்
தீய கருமச் சீனர்சா வகர்பிறர்
நேய மில்லென நிகழ்த்தின ரிலரே
காண்டல் விரோத நிற்பிறர் கணித்தில
ரீண்டுன துரைக்குமற் றியார்கரி யுடலுஞ்
சித்தோ சித்தின் சேர்வாற் சித்தெனிற்
கடப டாதியு முடற்கட் சிதைவென்
தாபர வுயிர்போற் றநுவொழிந் திவற்றின்
மேவிய வுணர்வு விரவிடு மென்னிற்
சடத்துயிர் போலெனச் சாற்றினை யாகலி
னுடற்குயி ரிறையை யொழிந்தின் டன்றே
தருதிட் டாந்தமுந் தாட்டாந் திகமும்
ஒருபொரு ளாகி லுவமை பெறுதே
யொன்றே யாகி லுடற்கிறை தாபரத்
தொன்றிய நிலையில் விசேடமென் னுரைக்க
பூதச் சேர்வைப் பேதமென் றறையிற்
சேர்வைப் பேத மென்கொடு செப்புக
கருமத் தளவில் வருமெனிற் பித்த
ருரையிற் றிகழு முணர்வொழிந் தனையே
கருமஞ் செய்வோன் கடவுளன் றுடலு
மருவி நின் றிருவினை வளரா நுகரா
கடவுளு முடலின் கண்பட றுஞ்ச
லிடர்நல முறுத லிறங்குத லேறுத
லெவ்வகை யேனுஞ் செய்கையின் றுதலும்
பலகலை யுலகி னிலவுத லானு
மெண்ணரும் பொருளு மிரவியு மொழியக்

திருச்சிற்றம்பலம்

கண்ணென வொன்று காண்கையி னாலும்
பாசப் பகுதியு மீசனு மொழியப்
பசுவு முண்டென் றிசையவேண் டின்றே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையி னிற்கு மாயையின் பொற்பெனப்
பொற்பணி யாவும் பொன்னாந் தன்மையி
னிட்கள சகளத் திருவுரு நிலையு
மீச னேயெனப் பேசுவ ரன்றி
யருவுரு வாகி வருமுல கென்னி
லனைத்து மாயை யெனத்தெளி கிலையே
யாவது மாகா தொழிவது மிலதெனும்
பாவக முலகா யதனது பான்மை
கட்கொலை வெகுளி காமங் களவுக
ளுட்படு மிவைவிட மொழியா தாரிலர்
சோம பானஞ் சுராபா னங்க
ளாமென மறைக ளார்செவிப் பறைந்தன
மறையோன் புலைச்சியை மருவு மென்பது
முறையோ வெனிலது புனைமொழி யென்னிற்
சாதி பேத நீதிநீ தவறினு
மேதியை யேறு விழையா விரும்புங்
கண்ணின துருவு மதிற்கதி ரொளியு
நண்ணருஞ் சத்தி நாடக மெனிலதற்
கேதுவும் பயனு மோத வேண்டும்
நின்மொழி விரோதமு நீடுல கியற்கையுந்
தன்மசாத் திரமுஞ் சகலமு மென்செயும்
உலகே ழெனவிறை பலவாந் தன்மை
கடமொடு சாரவங் கலச மாதிக
ளடலுறு குயவ னுயின னென்றாற்
றானே யாகா வவைதா னாகா
னுயின னென்ப தாக்கின னெனவே
யானு யென்ப தனைத்தி மவ்வகை
தானு காமையைச் சாற்றிடு மென்க
தாமே யெனுமித் தனியே காரம்
அழிந்தில ரதுவே யாய்த்தில ரதுவிட்
டொழிந்திலர் பிரிவில ரெனுமிவை யுணர்த்துங்
காயும் பழமுஞ் சுவையு நுகர்வ
தாயவன் றானு மவன்முதற் றென்னும்
அகிலமுந் தெளிய வறிவோன் றானும்
அகிலமு மறிஞரை யறிவிப் போனும்

திருச்சிற்றம்பலம்

அறிஞர்க் கறிவா யறிகின் ரேனும்
அறிவிற் கறிபொரு ளாவோன்ருனு
மகிலமு மேனி யானவ னென்னுந்
தருபொருள் கொள்பொருள் தருவோன் கொள்வோ
ஞெருபொரு ளாயி னுவப்புண் டென்க
நுகர்வோன் தனக்கு நுகர்பொருள் வேண்டிற்
றிகலறக் கிடையா திருந்ததெ னிரையமும்
வேண்டா ராயினு மெய்யுறு வியாதிக
ளீண்டா தொழியா திறைக்கவை யீடல
சத்தியுஞ் சிவமுந் தாமே நுகருமென்
றித்திற னுணர்வுவந் தெய்துவ தெவர்க்கோ
மமைப்பற வுணர்தலு மவர்க்கடை வன்றே
நானு மவனு நவையு நலனுந்
தானவ னுகையு நின்சா தனத்தில்
சகயோ கத்தைச் சாயுச் சியமெனப்
பகர்வது பதிபசு பாசத் தவர்க்கே
யாதொரு வகையென வோதிய திறை நூல்
சொன்னவற் றென்றன் றென்னில்வீ டெளிதே
தானறி வழியே தலைப்பொருள் பிடித்து
மேனிகழ் பலமும் வீடளித் திடுமே
நிலையாக் கருவியை நிலையாக் கருதிப்
புலையா டுதலு முலகா யதன்பொருள்
குட்டிய மின்றிநற் கோல மெழுதுத
லிட்டம தாயிற் கருவியு மிடங்களுங்
கருத்துற வுரைக்கத் தெரித்திடு மதீதத்
தறிவொன் றில்லோர்க் கிறையரு ளுதவுதல்
பிறிவறி வரிய செறியிரு ளிடத்தோ
ரந்தகர்க் காண வந்தோ ரெம்மை
நீவிருங் காண வேண்டு மென்ருங்
கெடுத்தோர் தீபங் கொடுத்ததை யொக்கும்
இச்செயற் கிறைவன் கொச்சைய னன்றே
கருவி வசத்திற் றெரிவுறக் காண
வேண்டுந ரிலரா லீண்டறி வியாவுஞ்
சிவமே யென்று செப்பினை யவமுறு
பொறிபுல னறியா வறிவது பிரம
மென்ருேர்க் குன்போ லிடர்ப்பட லிலதே
யேற்றங் கருவி யிருபதோ டிரண்டும்
போற்றுமைந் தவத்தையும் புகறிரி மலமு
மீசனு முயிரும் பேசினை யஃதொழிந்

திருச்சிற்றம்பலம்

தொன்றே யாகு மென்றநின் னியல்பு
தாயர் மனைவியர் தாதியர் தவ்வைய
ராயவ ரெவரையு மோர்மையிற் காணுங்
கோகழி தூர்த்தர் கொடுந்தொழி றகுமே
யாக மற்றத னருணிலை தன்னிலை
யேக நாயக னாகிய விறைநிலை
நாசமில் பாசம் வீசிய வியனிலை
யினையவை யொன்று நினைவினு மின்றி
யுண்டெனு முணர்விற் கண்டது கருதி
விழுக்கெனும் புலன்வழி யொழுக்கமு மதுவாக்
கொண்டு பண்டையி லெண்டரு மடங்கு
வந்தவர் செய்த தந்தையை யன்றே
புன்மைக ணீங்க வுண்மை கேண்மதி.

சைவவாதி சங்கற்பம்

அறிவா யறியு மறிவுயிர் கேவலத்
தறிவில னிருளொடும் பிரிவில னண்ணல்
கலைமுத லாக நிலவிய கருவிகள்
விளக்கென வுதவுந் துளக்கறப் பொருந்தி
இருவினை நுகர்வில் வருவினை செய்து
மாறிப் பிறந்து வருநெடுங் காலத்
திருண்மல பாகமுஞ் சத்தி நிபாதமு
மருவுழி யருளுரு மன்னவ னணைந்து
செல்கதி யாய்ந்து பல்பணி படுத்திக்
கருவியு மலமும் பிரிவுறப் பிரியா
ஞான நல்கலுந் தானது நோக்கித்
தன்னையு மதனையுந் தன்முதற் பொருளையு
மின்னவென் றறியா விருவரு முயங்கி
யொன்ரு யுறுபய னுவப்பு
மின்ருய் நிற்கு மிதுசிவ கதியே. 12

சைவவாதி சங்கற்ப நிராகரணம்

இதுகதி யாக முதலறி வுயிரேற்
பொறிபுல னீங்க வறிவுயி ரன்றே
யடைகாய் நூறி னிடைசேர் சிவப்பென
விந்தியத் தொகையின் வந்தறி வொன்றுநின்
றின்ரு மென்ற லன்றே யெந்தை
யறிவில னதீதச் செறிவிலென் றுரைத்த
நின்மொழி விரோதமும் பின்முன் மலைவு

திருச்சிற்றம்பலம்

மன்வயி னிகழா மலமிரு ளிறையொளி
யான்மா விளக்கிற் றகுமருட் கலாதிக
ளீனமி லிவனிடத் தெவ்வா றிசைந்தன
விசைந்த தாயினு மிசையா தாயினு
மசைந்திடு முத்தி சாதன மவமே
சத்தி நிபாதமோ தகுமல பாகமோ
வுய்த்த காரண காரிய மோதுக
பாகங் காரண மாகின் மற்றது
காலா வதியிற் காயா வதியின்
மேலா மென்னும் வினையுறு மவதியிற்
றுயரென வுயிர்க்குத் தோன்றிடு மவதியி
னயமிகு மிறைவ னல்கிடு மவதியி
லேதிற் கூடு மோதுக விருவினை
யொத்த வெல்லையில் வைத்தன ரென்னி
லருவினை தூக்க வருவினை நில்லா
வொருவினை புரிகா லிருவினை யாகா
வொப்புறு மாறு செப்புக தேசிக
னருளுரு வென்ற பொருளினை யாயின்
மாயா வொருவன் மாயா வுருவினை
யேயா னேய்ந்தவ ரெம்ம னோரே
பல்பணி ஞான காரண மென்னிற்
றெல்பணி தொறும்பயன் றெடுப்பத னாலு
மொருபணி செய்யாச் சிரபுரச் சிறுவரு
மரச ராய தருணத் தலைவரு
முதிர்பர சமயத் திதமுறு மரசரு
ஞானம் பெற்ற நன்மையி னாலு
மீனமில் பணியருட் கேதுவன் றென்றான்
ஞானேற் பத்தி நிமித்தமித் தொழிலென
வேனோர்க் கிறைநூ லியம்பிற் றென்னுங்
கருவியு மலமும் பிரிவுற வருடரு
மென்றனை கேவலத் தேது மறிவிலன்
றுன்றிய சகலத் தருணிலை தோன்று
வெவ்வ வத்தையி லிறையருள் பெறுகுவஞ்
செவ்விய ஞான தரிசந மாவது
நால்வகை மாயைப் பால்வரு ஞானம்
பண்டை ஞான மிதுவறி தாவரக்
கண்ட ஞான மிதுவரக் காணி

லீன ஞானிக ளென்போர் யாருமின்
ஞான வேற்றுமை நாடலு மரிதே
தானு ஞானமுந் தலைவனு மென்றனை
ஆனபி னிவனு மிவனது ஞானமும்
பாசமும் பாச ஞானமு மென்றிவை
பேசுவ ரொன்ருப் பெற்றிய வாகலின்
மும்மைப் பொருட்கு மும்மைத் தன்மை
செம்மைத் தென்னிற் செலவுக ளெழுதுக
இருவருங் கூடி யொருபய ஞய்த்தென்
றருளினை யிவ்வா றபேதிக ணிலையே

சித்தாந்த சைவாசாரியர் அநுக்கிரகம்

பதிபசு பாச முதிரறி வுகளுட
ஞரு முன்னர்க் கூருப் பின்ன
ரிருபொரு ணீத்துமற் ரெருநால் வகையு
மீனமின் ஞாதுரு ஞான ஞேயமென்
றிசைய மூன்ருய்ப் பசுபதி யென்றவற்
றிரண்டா யிரண்டு மொன்றினென் ருகத்
திரண்டாம் பயனெனுந் திருவரு டெளியிற்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ரு
மென்றிறை யியற்கை யியம்புதல் தகுமே
ஒன்ரு மென்ற லன்றியு முவப்பு
மின்ரு மென்ரு லென்பய னியம்பிக
வென்றனை வினவு மியாவும் விளங்க
வென்றிகொள் கருத்தின் விரும்பினை யாயி
னதிக்கரை யானெனக் கொதித்தல மந்து
வெண்ணையம் பதிதிகழ் மெய்கண்ட வனரு
ளுண்ணிலை யுடையோ ரொருவ னுரைத்த
தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசத் செழுந்தமி ழுண்மையை
யருளுட ஞய்ந்து கொள்ளத்
திருவருள் வினவ றிருந்திடு மன்றே. 13

சங்கற்ப நிராகரணம் முற்றும்.

உ

பாட்டு முதற் குறிப்பகராதி

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்


திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சோமங்கலம் **சதுரா பதிப்பகம்** வழங்கும்



மாணிக்கவாசக சுவாமிகள்
அருளிச்செய்த
திருவாசகம்
மூலம் மட்டும்

பக்கம் : 160 விலை: ரூ. 30/-


மாணிக்கவாசக சுவாமிகளின் முழு வரலாறு, திருவாசக தலங்கள் விபரம், உள்ளுறை. அகராதியுடன் சீர்பிரித்து எளிதில் படிக்கக் கூடிய பெரிய எழுத்துக்கள் மிகவும் உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டுள்ளது.



அகத்தியர் தேவாரத் திரட்டு
25 திருப்பதிகங்களின் மூலமும் உரையும்

பக்கம் : 112 விலை: ரூ. 30/-

இந்நூலில் திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள் 10, திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் 8, சுந்தரர் திருப்பதிகங்கள் 7 என அகத்தியர் தேவாரத் திரட்டிலுள்ள 25 பதிகங்களும் நாள்தோறும் பாராயணம் செய்வோர் பன்னிரு திருமுறையும் முழுவதையும் பாராயணம் செய்த பலனை பெறுவர்.



அற்புதத் திருப்புகழ்

பக்கம் : 160 விலை: ரூ. 30/-

இந்நூலில் ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களின் மூலமும் உரையுடன் கூடிய தொகுப்பு. நாள்தோறும் பாராயணம் செய்வோர். இம்மையில் எல்லா நலன்களையும் பெறுவர்.

மேலும் விபரங்களுக்கு :

சதுரா ஜி.ச. முரளி ☎: 98941 90999